த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—501

கூட்டாட்சி அரசாங்கம்

ஆசிரியர்

ச. வெங்கடேசன், எம்.ஏ.,

வரலாற்றுப் பேராசிரியர்,

அரசினர் கல்லூரி,

தருமபுரி.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—September, 1973

T.N.T.B.S. (C.P.) No. 501

© Tamil Nadu Text Book Society

FEDERAL GOVERNMENT

C. VENKATESAN

PRICE Rs. 3-80

❖ பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை 2016-2017 மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு எண்.6இன்படி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிட்ட ஆவணப் பதிப்பு ஆகஸ்டு 2017.

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
Society Printers,
Madras-14

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள், கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான 'கூட்டாட்சி அரசாங்கம்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 501 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 536 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனங்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	கூட்டாட்சிக் கொள்கை	...	1
2.	கூட்டாட்சியின் பண்புகள்	...	12
3.	கூட்டாட்சி அரசியலமைப்பும் கூட்டாட்சி அரசாங்கங்களும்	...	31
4.	கூட்டாட்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்	...	46
5.	கூட்டாட்சியும் பொதுநிதியும்	...	57
6.	கூட்டாட்சியும் பொருளாதார அலுவல்களும்	...	70
7.	கூட்டாட்சியும் சமுகப் பணிகளும்	...	82
8.	கூட்டாட்சியும் வெளிநாட்டு அலுவல்களும்	...	95
9.	கூட்டாட்சியும் போர்களும்	...	109
10.	கூட்டாட்சி அரசியலமைப்புகள் உண்மையில் நெகிழாதவையா?	...	125
11.	கூட்டாட்சியின் போக்கும் எதிர்காலமும்	...	145
	மேற்கோள் நூற்பட்டியல்	...	153
	கலைச்சொற்கள்	...	154

1. கூட்டாட்சிக் கொள்கை

(1) கூட்டாட்சி—பொருள்; (2) ஒற்றை ஆட்சியிலிருந்து வேறானது; (3) மத்திய மாநில அரசாங்கங்கள் சரிசமமானவை; (4) அமெரிக்க அரசியலமைப்பும் கூட்டாட்சியும்; (5) மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்குக் கட்டுப்பட்டதல்ல; (6) மாநிலங்கள் மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவையல்ல; (7) கூட்டாட்சிக்குக் கூறப்படும் வேறு சில விளக்கங்கள்

1. கூட்டாட்சி—பொருள்

மைய அரசாங்கம் ஒன்றையும் மாநில அரசாங்கங்கள் சிலவற்றையும் கொண்டு இயங்கும் அரசை கூட்டாட்சி என அழைப்பது வழக்கம். இவ்விரு அரசாங்கங்களும் ஒன்றை மற்றொன்று சார்ந்திராமல் அததற்கு வரையறுக்கப்பட்டிருக்கும் வரம்பிற்குள் செயல்படுகின்றன மைய அரசாங்கத்திற்கென சில பொறுப்புகளையும் உரிமைகளையும் வழங்கி, மாநில அரசாங்கங்களுக்கென வேறு சில பொறுப்புகளையும் உரிமைகளையும் வழங்கி, இவ்விரு அரசாங்கங்களும் ஒன்றை நம்பி மற்றொன்று இயங்க வேண்டிய தேவையில்லாத சுயேச்சை நிலையை உருவாக்கும் அரசியலமைப்பை கூட்டாட்சி அரசியலமைப்பு எனக் கருதுகிறோம், கூட்டாட்சி அரசியலமைப்பு மைய அரசாங்கத்தையும் மாநில அரசாங்கங்களையும் அதன் இரு கண்களாகப் போற்றிக் காக்கும் இயல்புடையதாகும். ஆஸ்திரிய-ஹங்கேரியப் பேரரசின் (Austro—Hungarian, Empire 1867) அரசியலமைப்பிலும், ஜெர்மானியப் பேரரசின் (German Empire1871) அரசியலமைப்பிலும் மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கியதும், இந்திய அரசியலமைப்பிலும் (1919) தென் ஆப்பிரிக்க (South Africa) அரசியலமைப்பிலும் (1961) மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு இயங்கியதும் கூட்டாட்சிக் கொள்கைக்கு எதிரான முறைகளாகும். எந்தக் கூட்டாட்சி அரசியலமைப்பு அதன் இருவகை

அரசாங்கங்களுக்கிடையே உயர்வ தாழ்வு பாராட்டாமல் இரண்டையும் சரிசமமாகப் பாவிக்கிறதோ, அதுவே மாசு மறுவற்ற கூட்டாட்சியாக மதிக்கப்படும் சிறப்பினைப் பெறும். 1789ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (United States of America) கூட்டாட்சி, இன்று உலகில் இயங்கும் கூட்டாட்சிகளுள் மிகப் பழமையானதென்றும் மிக முழுமையானதென்றும் மிகச் சிறந்ததென்றும் போற்றிப் புகழப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்றால் கூட்டாட்சி, கூட்டாட்சி என்றால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்று எண்ணக் கூடிய அளவிற்கு அமெரிக்க அரசியலமைப்புக் கூட்டாட்சி அரசியலமைப்பிற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகவும் இலக்கணமாகவும் விளங்குகிறது. அமெரிக்க அரசியலமைப்புக் கூட்டாட்சி அரசியலமைப்புகளுக்குத் தாய் என அழைக்கப்படுவதிலிருந்து அது உலகின் மற்ற கூட்டாட்சிகளின் வளர்ச்சிக்கு எந்த அளவிற்கு வழிகாட்டியிருக்கிறது என்பதை உணரலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளை ஒரு 'கூட்டாட்சி' என்பதாக அதன் அரசியலமைப்போ பின்வந்த திருத்தங்களோ அறிவிக்கவில்லை என்றாலும் அது ஒரு நல்ல கூட்டாட்சி என்ற கருத்தை எவரும் மறுக்க இயலாது.

2. ஒற்றை ஆட்சியிலிருந்து வேறானது

கூட்டாட்சி அரசானது ஒற்றை ஆட்சியிலிருந்து (Unitary State) வேறாக விளங்கும் விதத்தை அறிவோமானால் அவை இரண்டும் வெவ்வேறான இனத்தைச் சேர்ந்த ஆட்சி முறைகள் என்பது தெரியவரும். மாநில அரசாங்கங்கள் எதுவுமின்றி மைய அரசாங்கம் ஒன்றைக் கொண்டு இயங்கும் அரசை ஒற்றை ஆட்சி என அழைப்பது வழக்கம். ஒற்றை ஆட்சியில் மைய அரசாங்கம் ஒன்று மட்டுமே நிறுவப்பட்டு அந்த அரசாங்கத்திற்கே அரசின் அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்படும். எந்த அரசியலமைப்பு மைய அரசாங்கத்தை மட்டும் அங்கீகரித்து, ஆட்சிப்பொறுப்பை அதன் ஏகபோக உரிமையாக்குகிறதோ அதையே ஒற்றை ஆட்சி அரசியலமைப்பு எனக் கருதுகிறோம். உலகில் பல நாடுகளில் ஒற்றை ஆட்சி இயங்கி வந்தாலும் பிரான்சே (France) அதற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. கூட்டாட்சி நாடுகளில் அரசின் அதிகாரங்களை மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் அவைகளுக்கிடையே பகிர்ந்து கொள்கின்றன; ஆனால் ஒற்றை ஆட்சி நாடுகளில் 'அதிகாரப் பகிர்வு' என்ற கருத்துக்குக் கடுகளவேனும் இடமில்லை. பிரான்சு, பிரிட்டன் போன்ற ஒற்றை ஆட்சி நாடுகளில், அரசியலமைப்பால் அர

சாங்கத்திற்கென அனுமதிக்கப்படும் அதிகாரங்கள் அனைத்தும் மைய அரசாங்கத்திற்கே உரியன.

ஒற்றை ஆட்சி அரசியலமைப்பு மைய அரசாங்க ஒன்றை மட்டுமே நிறுவுகிறது என்பது உண்மையானாலும், அந்த மைய அரசாங்கமானது அதன் ஆட்சி சீராகவும் செம்மையாகவும் நடைபெற வேண்டும் என்பதற்காக நாட்டைப் பல வட்டங்களாகப் (regions) பிரித்து, அவற்றின் வளர்ச்சிக்கென ஆங்காங்கே வட்டார அரசாங்கங்களை நிறுவி, அவற்றிற்குச் சில அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்குவது வழக்கமாகும். வட்டார அரசுகளின் எல்லைகளை நிர்ணயிக்கிற உரிமையும், அவற்றில் எவ்வகை அரசியல் நிறுவனங்கள் இயங்க வேண்டும் எனத் தீர்மானிக்கிற உரிமையும், அவற்றின் அதிகாரங்களை வரையறை செய்கின்ற உரிமையும் மைய அரசாங்கத்திற்கே உண்டு. அவ்வகை அரசுகளை ஆக்கவும் அழிக்கவும், அவற்றின் அரசாங்கங்களின் அதிகாரங்களைக் கூட்டவும் குறைக்கவும் மைய அரசாங்கத்தினால் முடியும். ஒற்றை ஆட்சியிலுள்ள வட்டார அரசாங்கங்கள் மைய அரசாங்கத்தின் நிழலில் வாழ்கின்றன; அவற்றின் உயர்வும் தாழ்வும், பெருமையும் சிறுமையும் மைய அரசாங்கத்தின் தயவைப் பொறுத்தவையாய் இருக்கும். பிரான்சில் இன்று இயங்கும் டிபார்டுமெண்டுகள் (departments) அர்ரண்டைஸ்மெண்டுகள் (arrondisements), கம்யூன்கள் (communes) ஆகிய மாவட்ட, வட்ட, சிறுவட்ட ஆட்சிப் பிரிவுகள் மைய அரசாங்கத்தினால் நிறுவப்பட்டு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மேற்கண்ட கூற்றிற்குச் சான்றாகக் காட்டலாம்.

3. மத்திய மாநில அரசாங்கங்கள் சரிசமமானவை

கூட்டாட்சியில் இருக்கும் மாநில அரசாங்கங்களை ஒற்றை ஆட்சியிலிருக்கும் வட்டார அரசாங்கங்களோடு ஒப்பிடுவது முறையல்ல; அவை இரண்டும் வெவ்வேறான அடிப்படையில் அமைந்தவை; கூட்டாட்சியும் ஒற்றை ஆட்சியும் மாறுபட்ட அரசியல் மரபுகளால் வளர்க்கப் பட்ட ஆட்சி முறைகளாகும். கூட்டாட்சியில் இருக்கும் மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கம் போன்றே அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்படும் பெருமையுடையவை; அவற்றின் அதிகாரங்கள் அனைத்தும் மைய அரசாங்கத்தின் அதிகாரங்களைப் போன்று அரசியலமைப்பிலிருந்து நேரடியாகப் பிறந்தவையாகும். மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் ஆகிய இரண்டுமே அரசியலமைப்பால் தோற்றுவிக்கப்பட்டவை; ஒன்றால் மற்றொன்று ஆக்கப்படுவதில்லை: எனவே ஒன்றுக்

மற்றொன்றை அழிக்கவும் முடியாது; ஒன்றை நம்பி மற்றொன்று இயங்க வேண்டிய அவசியமுமில்லை; மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் ஆகிய இரண்டுமே சரிசமமானவை; ஒன்றின் சுதந்திரத்தில் மற்றொன்று தலையிடுவதென்பது இயலாத காரியமாகும்; இரு தரப்பிலுள்ள அரசாங்கங்களுக்கிடையே அரசியலமைப்பு உயர்வு தாழ்வு பாராட்டுவது கிடையாது. ஆனால் ஒற்றை ஆட்சியில் இருக்கும் வட்டார அரசாங்கங்கள் அரசியலமைப்பிற்குத் தெரியாத படைப்புகள்; மைய அரசாங்கத்தினால் நிறுவப்படும் அவ்வரசாங்கங்கள் அதனால் நீக்கவும் படலாம். வட்டார அரசாங்கங்களுக்கு அதிகாரங்களைக் கொடுக்கவோ, மறுக்கவோ, கூட்டவோ, குறைக்கவோ மைய அரசாங்கத்திற்கு முழு உரிமையுண்டு. இரு அரசாங்கங்களும் சரிசமமானவை அல்ல என்பதும், மைய அரசாங்கம் உயர்ந்தது, வட்டார அரசாங்கங்கள் தாழ்ந்தவை என்பதும் நினைவில் வைக்கவேண்டிய செய்திகளாகும்.

கூட்டாட்சியில் மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நாட்டின் இறைமையைத் (sovereignty) தங்களுக்கிடையே பகிர்ந்து கொள்கின்றன. ஆனால், ஒற்றை ஆட்சியில் மைய அரசாங்கம் ஒன்றே இறைமையின் உறைவிடமாகக் கருதப்படுகிறது; அங்கே வட்டார அரசாங்கங்களுக்கு இறைமைப் பண்பு அணுவளவேனும் இல்லை. நாட்டின் இறைமையையும், மாநிலங்களின் இறைமையையும் ஏற்று, அவை இரண்டிற்குமிடையே ஓர் இணக்கத்தைத் தோற்றுவிப்பதுதான் கூட்டாட்சி அரசின் கொள்கையாகும். தேசிய ஒற்றுமைக்கும் மாநிலங்களின் உரிமைக்கும் ஒரே சமயத்தில் இடமளிக்கும் அரசியல் ஏற்பாடே கூட்டாட்சி என்பது பேராசிரியர் டைசியின் (A.V. Dicey) தேர்ந்த கருத்தாகும்.

4. அமெரிக்க அரசியலமைப்பும் கூட்டாட்சியும்

அரசியல் பண்டிதர்கள் கூட்டாட்சிக்குக் கூறும் பொருளை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்போடு தொடர்புபடுத்திப் பார்த்தால் அது ஒரு சிறந்த கூட்டாட்சி அரசியலமைப்பு என்பது தெளிவாகத் தோன்றும். உலகில் மற்ற நாடுகளில் செயல்படும் கூட்டாட்சிகளை அவை முழுமையான கூட்டாட்சிகளா இல்லையா என்பதைக் கண்டறிய அமெரிக்கக் கூட்டாட்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கமாய்விட்டது; அந்த அளவிற்கு அமெரிக்க அரசியலமைப்பு கூட்டாட்சித் தத்துவத்தைப் பிரதிபலிப்பாக்க கருதப்படுகிறது. தற்கால உலகில் நிலவும் கூட்டாட்சிகளுள் அமெரிக்கக் கூட்டாட்சி முதலாவதாகத் தோன்றிய போதிலும் கூட்டாட்சிக் கொள்கையில் அதை மிஞ்சுகிற அள

விற்கு எந்த அரசும் இன்னும் தோன்றவில்லை என்ற உண்மை அமெரிக்க அரசியலமைப்பை நிறுவியத் தலைவர்களின் அரசியல் அறிவிற்குச் சான்றாக அமைகிறது. 1787-88-ல் அலெக்சாந்தர் ஹாமில்டன் (Alexander Hamilton), ஜான் ஜே (John Jay), ஜேம்ஸ் மாடிசன் (James Modison) ஆகிய மூன்று அமெரிக்க அரசியல் மெய்ஞ்ஞானிகள் 'கூட்டாட்சியாளர்' (The Federalist) என்ற தலைப்பில், கூட்டாட்சி அரசு முறைக்கு ஆதரவாக வெளியிட்ட கட்டுரைகள் அதன் பெருமைகளை எடுத்துரைக்கின்றன. அமெரிக்க அரசியல் இலக்கியத் துறையில் அக்கட்டுரைத் தொடர் ஈடு இணையற்ற படைப்பாக விளங்குவதாக இன்றும் பாராட்டப்பட்டு வருகிறது. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் சென்ற பிறகும் அந்நூல் போற்றிப் புகழப்படுவதிலிருந்து அதன் அருமை பெருமைகளை உணர்ந்து கொள்ளலாம்.

மைய அரசாங்கத்தையும் மாநில அரசாங்கங்களையும் கொண்டு இயங்கும் ஆட்சிகள் உலகின் பல பகுதிகளில் காணப்பட்டபோதிலும் அவை அனைத்தையும் கூட்டாட்சிகள் என எண்ணுவதற்கில்லை. கூட்டாட்சிகள் போலத் 'தோன்றும்' அரசுகள் எல்லாம் கூட்டாட்சிகளாகிவிட முடியாது. இன்றைய உலகில் உண்மையான கூட்டாட்சிகளின் எண்ணிக்கையைவிட கூட்டாட்சிகளைப் போலத் தோன்றும் கூட்டாட்சிகளின் எண்ணிக்கையே அதிகம் என்பது அறியத்தக்கது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா (Australia), சுவிட்சர்லாந்து (Switzerland), கனடா (Canada) ஆகிய நான்கு நாடுகளில் மட்டுமே நிறைவான கூட்டாட்சி இயங்குவதாகக் கூறலாம். மைய அரசாங்கத்தையும் மாநில அரசாங்கங்களையும் ஒத்த உரிமையுள்ள அரசாங்கங்களாகக் கருதி, ஒன்றின் ஆணைக்கு மற்றொன்று அடங்கி நடக்கவேண்டிய அவசியமில்லாத சுயேச்சை நிலையை இரு அரசாங்கங்களுக்கும் அளிக்கும் ஆட்சியே கூட்டாட்சியாகும் என்ற இலக்கணத்தை கருத்தில் கொண்டு கவனித்தால், கூட்டாட்சி எனக் கருதப்படக்கூடியத் தகுதியை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளைத் தவிர வேறெந்த நாடும் பெறுவதாகக் கூறுவதற்கில்லை.

கூட்டாட்சியில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் ஆகிய இரண்டும் ஒத்த தரமுடையனவாய் இருப்பது அதன் இன்றியமையாத இயல்பாகும். மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படியாக இருந்தால் அந்த ஆட்சி 'நாடுகளின் கூட்டமாக' (confederation) அமையும். மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு

நடக்கும்படியாக இருந்தால் அந்த ஆட்சி ஒற்றை ஆட்சியாக அமையும். எனவே, ஓர் அரசில் மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் ஆகிய இரு வகை அரசாங்கங்கள் இயங்கினால் மட்டும் அது கூட்டாட்சியாகிவிட முடியாது. மைய அரசாங்கத்தைச் சுதந்திரமான அரசாங்கமாக ஏற்று, மாநில் அரசாங்கங்களையும் சுதந்திரமான அரசாங்கங்களாக ஏற்று, இரண்டிற்கும் தனித்தனி ஆட்சிப் பொறுப்புகளை ஒதுக்கி, ஒன்றின் எல்லையில் மற்றொன்று தலையிடாமல் காக்கும் ஆட்சியே கூட்டாட்சியாகும் என்பதை நினைவில் நிறுத்த அரசியல் மாணவர்கள் கடமைப் பட்டவர்களாவார்கள்.

3. மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்குக் கட்டுப்பட்டதல்ல

1789 ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு தோன்றுவதற்கு முன்பாக அமெரிக்காவிலிருந்த பதின் மூன்று அரசுகளும் நாட்டுக் கூட்டமொன்றில் இணைந்து வாழ்ந்தன. 1777-லிருந்து 1787 வரை நீடித்த அக்கூட்டமைப்பு ஒரு கூட்டாட்சி போலத் தோன்றியபோதிலும், உண்மையில் அது கூட்டாட்சிக்குரிய அடிப்படை இயல்பு இன்றியே இயங்கி வந்தது. கூட்டமைப்பிலிருந்த மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குப் பணிந்து நடக்க வேண்டியிருந்தது. நாட்டுக் கூட்டத்தின் மைய அரசாங்கம் மாநிலங்களின் பிரதிநிதிகள் அடங்கிய 'காங்கிரஸ்' (congress) என்ற பெயர் தாங்கிய பேரவை ஒன்றின் மூலமாக இயங்கியது. போர், சமாதானம், அயலரசு அலுவல்கள், உடன்படிக்கைகள், நாணயச் செலாவணி ஆகிய இனங்கள் காங்கிரசின் ஆட்சிப் பொறுப்பில் விடப் பட்டன. போர் அல்லது சமாதானத்திற்காகப் பொருள் செலவு செய்ய வேண்டியதைத் தீர்மானிக்கும் உரிமை காங்கிரசுக்கு உண்டென்றாலும், செலவிற்குரிய பொருளுக்காக அது மாநிலங்களை நம்பி இருந்தது; காங்கிரஸ் மாநிலங்களைப் பண உதவி வேண்டுமென்று கேட்க முடிந்ததேயல்லாது கட்டாயப்படுத்த முடியவில்லை; வரி வசூல் செய்யும் உரிமை மாநிலங்களின் உரிமையாகவே இருந்து வந்தது. படைவீரர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் உரிமை காங்கிரசுக்கு உண்டென்றாலும் படைகளைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்ல அது மாநிலங்களை நம்பி இருந்தது; வீரர்களைத் திரட்டி, அவர்களுக்குப் படைக்கலங்களைக் கொடுத்து இராணுவத்திற்கு அனுப்புவது மாநிலங்களின் உரிமையாகவே இருந்துவந்தது. மாநிலங்களுக்கிடையே எழுந்த பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்குக்கூட பொது அரசிற்கு அதிகாரம் இருக்கவில்லை. நாட்டுக் கூட்டத்தின்

விதிகள் (Articles of confederation) மைய அரசாங்கம் ஒன்றைத் தோற்றுவித்தனவே யொழிய, அது தனித்தியங்க வகை செய்யத் தவறிவிட்டன. எனவே, மைய அரசாங்கம் அதன் இயக்கத்திற்கு மாநில அரசாங்கங்களை நம்பி வாழவேண்டிய சூழ்நிலை இருந்தது. மைய அரசாங்கம் அதன் முக்கியமான பணி ஒவ்வொன்றையும் செய்துமுடிக்க பதின்மூன்று இறைமை பொருந்திய அரசுகளின் இணக்கம் தேவையாயிருந்தது என அலெக்சாந்தர் ஹாமில்டன் கூறியது இங்கே குறிப்பிடத் தக்கதாகும். மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் தனித் தனியாகவும், ஒன்றிற்கு மற்றொன்று கட்டுப்படாமல் சுதந்திரமாகவும் வாழ வகை செய்யாத அரசியலமைப்புகள் கூட்டாட்சி அரசியலமைப்புகளாகமாட்டா என்ற கருத்தோடு 1777-லிருந்து 1787 வரை அமெரிக்காவில் இயங்கிய ஆட்சி முறையை நோக்குவோமானால், அவ்வாட்சியின் அரசியலமைப்பாக விளங்கிய நாட்டுக்கூட்டத்தின் விதிகளுக்குக் கூட்டாட்சி அரசியலமைப்பு என்ற பெயர் பொருந்தாது என்பது எளிதில் விளங்கும்.

1871-லிருந்து 1918 வரை நிலவிய ஜெர்மானியப் பேரரசையும் கூட்டாட்சி என அழைப்பது மரபாகிவிட்டது. பெருமைக்குரிய ஜேம்ஸ் பிரைஸ் (James Bryce) கூட அவருடைய 'புனித உரோமானியப் பேரரசு' (Holy Roman Empire) என்னும் நூலில் ஜெர்மானியக் கூட்டாட்சி என்றே குறிப்பிடுகிறார். ஜெர்மனியில் இருந்த இருபத்தைந்து சிற்றரசுகளும் பேரரசில் இணைந்து வாழ்ந்தபோதிலும், இணைந்த அரசுகளில் ஒன்றாகிய பிரஷ்யா (Prussia) ஈடு இணையற்ற வலுவோடு இயங்கி வந்தது. மூன்று கோடியே முப்பது லட்சம் மக்களைக் கொண்டிருந்த பிரஷ்யாவுக்கு பேரரசில் தனிச்சலுகை இருந்ததில் வியப்பில்லை. பிரஷ்யாவின் அரசர் ஜெர்மனியின் பேரரசர் என்றும், பிரஷ்யாவின் முதலமைச்சர் ஜெர்மனியின் முதலமைச்சர் என்றும் கருதப்பட்டது இயல்பே. பேரரசின் சட்டமன்றத்தில் பெரும்பாலான அரசுகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கே அளிக்கப்பட்டிருந்தபோதிலும் பிரஷ்யாவிற்குமட்டும் பதினேழு வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. பிரஷ்யா, அதன் வலு, செல்வாக்கு ஆகியவற்றின் காரணமாக, பேரரசின் ஆட்சியில் அத்துமீறிய ஆதிக்கம் செலுத்தி வந்தது. மேலும், பேரரசின் சட்டமன்றத்தின் அங்கத்தினர்கள் சிற்றரசுகளின் அரசாங்கங்களால் அனுப்பப்பட்டனர்; அதன் விளைவாக அவர்கள் தங்கள் அரசாங்கங்களின் ஆணைப்படி வாக்களிக்க வேண்டியிருந்தது. பேரரசின் சட்டமன்றம் அதன் அங்கத்தினர்களின் விருப்பம்போல இயங்கமுடியாமல்

அங்க நாடுகளின் அரசாங்கங்களின் விருப்பம்போல இயங்கி வந்தது. ஜெர்மானியப் பேரரசில் மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களை நம்பி வாழ்ந்த காரணத்தால் அப்பேரரசைக் கூட்டாட்சி எனக் கூறுவது பொருந்தாது.

6. மாநிலங்கள் மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவையல்ல

அமெரிக்க நாட்டுக் கூட்டமும் ஜெர்மானியப் பேரரசும் பின்பற்றிய முறைக்கு நேர் எதிர்மாறான முறையைத் தென் ஆப்பிரிக்காவும் (1909) இந்தியாவும் (1919) பின்பற்றின. 1909 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தென் ஆப்பிரிக்கக் கூட்டரசு கேப் குடியேற்றம் (Cape Colony), நேட்டால் (Natal), டிரான்ஸ்வால் (Transvaal), ஆரஞ்சு நதிக் குடியேற்றம் (Orange River Colony) ஆகிய நான்கு மாநிலங்களும் இணைந்த கூட்டமைப்பு என்றாலும், அதை ஒரு கூட்டாட்சி எனக் கருதுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை. நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு மைய அரசை ஏற்படுத்தும் அரசியலமைப்பு, நான்கு மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மாநில அரசாங்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. கல்வி, விவசாயம், மருத்துவமனைகள், நகராட்சி நிறுவனங்கள், சாலைகள் ஆகிய இனங்கள் மீது சட்டமியற்றக்கூடிய உரிமை மாநிலங்களுக்கு உண்டென்பதாக அரசியலமைப்பு அறிவித்தது; ஆனால் மாநிலங்கள் இயற்றும் சட்டங்களை மைய அரசாங்கம் ஏற்க மறுத்தால் அவை செல்லாதவையாகிவிடும். மாநிலங்களின் அதிகாரங்களைக் கூட்டவோ குறைக்கவோ, அல்லது முழுதும் நீக்கிவிடவோ மைய அரசாங்கத்திற்கு அதிகாரமிருந்தது. அரசியலமைப்பானது இரு அரசாங்கங்களை நிறுவியதேயொழிய, அவை இரண்டும் தனித்தியங்கக்கூடிய வழியை வகுக்கவில்லை. ஒற்றை ஆட்சியில் வட்டார அரசாங்கங்களை எவ்வாறு மைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டப் படைப்புகளாகக் கருதுகிறோமோ, அவ்வாறே தென் ஆப்பிரிக்காவிலும் மாநில அரசுகளை மைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டப் படைப்புகளாகக் கருதவேண்டும். தென் ஆப்பிரிக்காவிலுள்ள மாநில அரசாங்கங்கள் ஒருவகை; அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளிலுள்ள மாநிலங்கள் மற்றொரு வகை. முந்தியவை மைய அரசாங்கத்திற்குத் தாழ்ந்தவை; பிந்தியவை அதோடு சரிசமமாக இயங்குபவை. தென் ஆப்பிரிக்காவின் நான்கு பிரிவுகளை மாநிலங்கள் என அழைப்பதைவிட மாவட்டங்கள் என அழைப்பதே பொருத்தமாகும் என்பது பேராசிரியர் C. F. ஸ்ட்ராங்கின் (C. F. Strong) கருத்தாகும். தென் ஆப்பிரிக்கா தன்னைக் குடியரசு என அறிவித்துக்கொண்டு 1961 ஆம்

ஆண்டில் ஒரு புதிய அரசியலமைப்பைத் தழுவிய பிறகும், மைய மாநில அரசாங்கங்களுக்கிடையேயான உறவுகள் பழைய 1909 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் இருந்ததுபோலவே இருக்கின்றன. கூட்டாட்சியின் அடிப்படை இயல்பை ஏற்றுக் கொள்ள மறுக்கும் தென் ஆப்பிரிக்காவைக் கூட்டாட்சிகளின் வரிசையில் வைத்தெண்ண அரசியல் மாணவர்கள் உடன்படமாட்டார்கள்.

மான்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் (Montagu-Chelmsford Reforms) என அழைக்கப்படும் 1919ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் (Government of India Act), 1919 லிருந்து 1935 வரை இந்தியாவின் அரசியலமைப்பாய் விளங்கிய காலத்தில் இந்நாட்டில் மைய அரசாங்கத்தையும் மாநில அரசாங்கங்களையும் ஏற்படுத்திய போதிலும் அது நிறுவிய ஆட்சியைக் கூட்டாட்சி என எண்ணுவதற்கில்லை. ஊராட்சி, பொதுச் சுகாதாரம், கல்வி, விவசாயம், நிலவரி, சட்டம் ஒழுங்கு ஆகிய இனங்கள் மீது மாநில அரசாங்கம் சட்டமியற்றலாமெனினும் அவற்றை ஏற்கவோ மறுக்கவோ மைய அரசாங்கத்திற்கு அதிகாரமிருந்தது. மேலும், மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்ட இனங்கள் மீது மைய அரசாங்கம் சட்டமியற்ற அவ்வரசியலமைப்பு அனுமதித்தது. மாநிலங்களுக்கு அரசாங்கங்களிருந்த போதிலும், அவை மைய அரசாங்கத்தின் தயவில் இயங்கி வந்த காரணத்தால் 1919ஆம் ஆண்டின் சட்டம் நிறுவிய ஆட்சியைக் கூட்டாட்சி எனக் கருதுவதற்கில்லை.

இதுவரை காட்டப்பட்ட உதாரணங்களிலிருந்து மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கவேண்டி இருந்தாலோ, மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு இயங்கவேண்டி இருந்தாலோ அந்த ஆட்சியைக் கூட்டாட்சி என எண்ணுவது முறையாகாது என்ற கருத்து நம் நெஞ்சில் நிலைத்திருக்கும். நாட்டில் இயங்கும் இரு அரசாங்கங்களில் ஒன்று மேலானது மற்றொன்று கீழானது என்ற வேறுபாடில்லாமல் இரண்டும் சரிசமமானவையாய் செயல்பட வாய்ப்பளிக்கும் ஆட்சியே கூட்டாட்சி எனக் கூறுவோமானால், கூட்டாட்சியாய் மதிக்கப்படுவதற்குரிய முழுத் தகுதி அமெரிக்க ஐக்கிய நாடுகளையே சாரும் என்பதில் ஐயமில்லை.

7. கூட்டாட்சிக்குக் கூறப்படும் வேறு சில விளக்கங்கள்

அரசியல் ஆசிரியர்களில் சிலர் ஓர் ஆட்சியானது கூட்டாட்சியா இல்லையா என்பதைக் கண்டறிய வேறு சில முறைகளைக் கையாள்கின்றனர். அவற்றில் முக்கியமானவை என மூன்றைக் குறிப்பிடலாம்.

(1) மைய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கு மிடையே அரசின் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொடுக்கும் பொழுது அரசியலமைப்பானது மைய அரசாங்கத்தின் அதிகாரங்கள் எவை எவை எனக் குறிப்பிட்டு, எஞ்சியுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் மாநில அரசாங்கங்களுக்கு உரிமையாக்கினால் அது தான் உண்மையான கூட்டாட்சியாகும்என்பது சிலரின் வாதமாகும். இருவகை அரசாங்கங்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டால் மட்டும் போதாது; அவற்றை ஒரு குறிப்பிட்ட முறையில் பகிர்ந்து கொள்வது அவசியம். எஞ்சியுள்ள அதிகாரங்கள் (residuary powers) எங்கே உறைகின்றன என்பதைப் பொருத்தே ஓர் அரசைக் கூட்டாட்சியா இல்லையா என்பதை முடிவு செய்ய முடியும். எஞ்சியுள்ள அதிகாரங்களை எந்த அரசாங்கம் அனுபவிக்கிறது என்ற அடிப்படையில் ஓர் ஆட்சி கூட்டாட்சியா இல்லையா எனத் தீர்மானிக்கத் துணிவோமானால் நாம் கூட்டாட்சியை மேற்போக்காக மட்டும் புரிந்துகொண்டவர்களாகக் கருதப்படுவோம். எஞ்சியுள்ள அதிகாரங்கள் எந்த அரசாங்கத்திடம் அளிக்கப் பட்டிருந்தாலும், இரு அரசாங்கங்களும் தனித்தனியாக இயங்கக் கூடிய சுதந்திரமுடைய அரசாங்கங்களாக இருத்தல் மட்டுமே ஓர் அரசைக் கூட்டாட்சியாக்கும் என்பதில் ஐயமில்லை.

(2) மாநிலங்கள் ஒன்றுகூடி அவை அனைத்திற்கும் பொதுவான அரசாங்கமொன்றை அமைக்கும் பொழுது, மாநிலங்கள் அவற்றின் பழைய அரசியலமைப்புக்களைத் தொடர்ந்து பின்பற்றி வரும் ஆட்சி முறையே கூட்டாட்சி யாகும் என்பது சிலரின் வாதமாகும். இணையும் மாநிலங்கள் அவற்றின் பழைய அரசியலமைப்புகளைத் துறந்து புதிய அரசியலமைப்புகளை மேற்கொள்ளுமானால் அந்த ஆட்சிமுறை கூட்டாட்சி அல்லவாம். ஹால்டேன் பிரபு (Lord Haldane) 1914 ஆம் ஆண்டில் வழக்கொன்றிற்கு தீர்ப்பளிக்கும்பொழுது, புதிய அரசியலமைப்புகளைத் தழுவும் மாநிலங்களின் கூட்டமைப்பைக் கூட்டாட்சி என அழைப்பது பொருந்தாது எனத் தெரிவித்தார். ஹால்டேன் கூறும் இலக்கணப்படி அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் மட்டுமே கூட்டாட்சிகளாகக் கருதப்படக்கூடிய தகுதியைப் பெறுகின்றன; கனடாவைக் கூட்டாட்சி என ஏற்பதற்கில்லை. ஒன்றுசேரும் மாநிலங்கள் அவற்றின் பழைய அரசியலமைப்புகளைப் பின்பற்றுகின்றனவா, அல்லது புதிய அரசியலமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டனவா என்ற அடிப்படையில்ஓர் அரசைக் கூட்டாட்சியா இல்லையா எனத் தீர்மானிப்பது ஒரு தேர்ந்த முடிவாகாது. மாநில அரசுகள் தேசிய அரசோடு சுதந்திரமாக இயங்குவதொன்றே ஓர்

அரசைக் கூட்டாட்சியாக்கும். அவற்றின் அரசியலமைப்புகள் பழையனவா புதியனவா என்பது முக்கியமல்ல; அவை மைய அரசாங்கத்திற்குப் பணிந்து போக வேண்டிய அவசியமில்லாமை மட்டுமே முக்கியமாகும்.

(3) மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் இரண்டுமே கூட்டாக மக்கள்மீதுநேரடியாக ஆதிக்கம் செலுத்தக்கூடிய அரசே கூட்டாட்சியாகும் என்பது சிலர் கருத்தாகும். மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதும், மாநில அரசாங்கங்கள் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதுமாக இருக்கக்கூடிய அரசு கூட்டாட்சியாகாது என்ற கருத்தில் ஓரளவுக்கு உண்மை இருப்பதாகத் தோன்றுகிறது. அமெரிக்கா நாட்டுக் கூட்டமாக (1777—1787) இயங்கிவந்த காலத்தில் அதன் மைய அரசாங்கத்தின் முதன்மையான நிறுவனமான காங்கிரஸ் மாநில அரசாங்கங்களுக்குச் சட்டமியற்ற முடிந்ததேயல்லாது மாநிலங்களில் வாழ்ந்தமக்கள் மீது நேரடியாக சட்டமியற்ற முடியவில்லை என்பது நினைவில் வைக்கத்தக்கது. ஆனால் மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் மக்கள் மீது நேரடியாக இயங்க முடிவதொன்றே ஓர் ஆட்சியைக் கூட்டாட்சியாக்கிவிடாது. தென் ஆப்பிரிக்கக் குடியரசில் இரு அரசாங்கங்களும் நேரடியாகத்தான் இயங்குகின்றன. ஆனாலும் அது கூட்டாட்சியாக ஏற்கப்படுவதில்லையே. அங்கே மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவையாய் இருப்பதன் காரணமாக அதைக் கூட்டாட்சிகளின் வரிசையில் சேர்க்காததை முன்பே கண்டோம்.

எந்த ஓர் அரசில் மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நாட்டின் இறைமையைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு, ஒன்றை மற்றொன்று கட்டுப்படுத்தாமல், இரண்டும் சரிசமமாக நின்று, அதற்கு அரசியலமைப்பால் வகுக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் சுயேச்சையாக இயங்குகின்றனவோ அதுவே கூட்டாட்சியாகும் என்பது E. A. ஃப்ரீமேனும் (E. A. Freeman), அவரைத் தழுவி K. C. வியரும் (K. C. Wheare) தெரிவிக்கும் கருத்தாகும். கூட்டாட்சியின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் அனைவரும் E. A. ஃப்ரீமேன் எழுதியிருக்கும் 'கிரீஸிலும் இத்தாலியிலும் கூட்டாட்சி அரசாங்கத்தின் வரலாறு' (A History of Federal Government in Greece and Italy) என்ற நூலையும், K. C. வியர் எழுதி இருக்கும் 'கூட்டாட்சி' அரசாங்கம் (Federal Government) என்ற நூலையும் படித்தறிவது அவர்கள் முதற் கடமையாகும்.

2. கூட்டாட்சியின் பண்புகள்

(1) அதிகாரப் பங்கீடு; (2) அரசியலமைப்பின் இறைமை; (3) எழுதப்பெற்ற அரசியலமைப்பு; (4) நெகிழா அரசியலமைப்பு; (5) தலைமை நீதிமன்றம்; (6) மேலும் சில பண்புகள்: அ. அதிகாரப் பிரிவினை, ஆ. மேலவையில் சமமான பிரதிநிதித்துவம், இ. விலக்கவோ விலகவோ இடமில்லாதிருத்தல், ஈ. இரு கட்சி ஆட்சி முறை.

கூட்டாட்சி, தனித்தன்மைகள் பொருந்திய அரசு முறையாக விளங்குவதால் அதன் சிறப்பியல்புகளை அறிந்துகொள்வது நலப் பயக்கும். கூட்டாட்சியை மற்ற ஆட்சிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் பண்புகளைப் பேராசிரியர் A. V. டைசியும், அவரைத் தழுவிப் பேராசிரியர் K. C. வியரும் தெளிவாக விளக்கியுள்ளனர். இன்றைய உலகில் உண்மையான கூட்டாட்சிகள் எனப்போற்றப் படும் அரசுகளின் பண்புகளை ஆராய்ந்தால், அவற்றின் பொதுத் தன்மை நமக்குத் தெளிவாகத் தென்படும். அவை எவை என விளக்கிக் கூறுவதே இங்கு நம் நோக்கமாகும்.

1. அதிகாரப் பங்கீடு

கூட்டாட்சி அரசில் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பங்கிடப்படுகின்றன. இவ்வகையான அதிகாரப் பங்கீடே (division of powers) கூட்டாட்சியின் அடிப்படை என எண்ணப்படுகிறது. மைய அரசிற்கென சில பொறுப்புகளையும், மாநில அரசுகளுக்கென சில பொறுப்புகளையும் ஒதுக்கத் தவறும் ஆட்சியைக் கூட்டாட்சி என யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தேசிய அரசுக்கென சில இனங்களும், மாநில அரசுகளுக்கென சில இனங்களும் உரிமையாக்கப்படுவதே கூட்டாட்சியின் சிறப்பியல்பாகும். 'நாடு முழுவதும் சார்புடையனவற்றைத் தேசிய அரசின் கட்டுப்பாட்டில்

வைக்கவேண்டும் ; பொது நலன்களைப் பாதிக்காத பொருட்கள் அனைத்தும் மாநிலங்களிடம் இருக்க வேண்டும்' என்ற A. V. டைசியின் கருத்தைத் தழுவியே கூட்டாட்சிகளில் அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. நாடு முழுவதற்கும் பொதுவான காரியங்களான தற்காப்பு, முப்படைகள், வெளிநாட்டு விவகாரங்கள், நாணயச் செலாவணி, தபால் தந்தி, பன்னாட்டு வாணிபம் போன்ற இனங்கள் பொது அரசாங்கத்தின் பொறுப்பிலும், எல்லோருக்கும் பொது என்று கூறமுடியாத வகையில் மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடக்கூடிய காரியங்களான கல்வி, விவசாயம், பொதுச் சுகாதாரம், ஊராட்சி, மாநிலத்துக்குள் வாணிகம், நீதி, நிர்வாகம் போன்ற இனங்கள் மாநில அரசாங்கங்களின் பொறுப்பிலும் இருப்பதை இன்றைய கூட்டாட்சிகளில் காணலாம். பொது அரசுக்கென வழங்கப்பட்டிருக்கும் பொருட்கள் மீது சட்டமியற்றும் உரிமை பொது அரசுக்கு மட்டுமே உண்டென்பதும், மாநில அரசுகளுக்கென வழங்கப்பட்டிருக்கும் பொருட்கள் மீது சட்டமியற்றும் உரிமை மாநில அரசுகளுக்கு மட்டுமே உண்டென்பதும், ஒன்றின் பொருட்களில் மற்றொன்று தலையிட உரிமையில்லை என்பதும், அதிகாரப் பங்கீடானது கூட்டாட்சிக்கு அடிகோலும் அம்சமாக விளங்குவதை உணர்த்துகின்றன.

அரசியலமைப்பானது, அமெரிக்காவைப் போன்று, மத்திய அரசின் அதிகாரங்களை மட்டும் வரையறுத்துக் கூறி (enumerated powers) எஞ்சியவற்றை (residuary powers) மாநில அரசுகளுக்கு ஒதுக்கியோ, அல்லது கனடாவைப் போன்று, மாநில அரசுகளின் அதிகாரங்களை மட்டும் வரையறுத்துக் கூறி எஞ்சியவற்றை மத்திய அரசிற்கு ஒதுக்கியோ, அதிகாரப் பங்கீட்டினைச் செய்யலாம். இருதரப்பு அரசுகளுக்கும் உரிய இனங்களை அரசியலமைப்பு தனித்தனியாக விவரிக்க வேண்டிய அவசியமில்லை. அது ஓர் அரசின் அதிகாரங்களை மட்டுமே கூறுவது போதுமானதாகும் ; அவற்றில் அடங்காத அதிகாரங்கள் அனைத்தும் மற்ற அரசுக்கு உரியனவாகிவிடும். அரசியலமைப்பானது மத்திய அரசின் இனங்களைப் பற்றி கூற வேண்டுமா, மாநில அரசுகளின் இனங்களைப்பற்றிக் கூற வேண்டுமா என்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நாட்டின் எல்லா இனங்களும் ஒரே அரசுக்கு ஒதுக்கப்படாமலிருப்பதொன்றே கூட்டாட்சிக்குச் சிறந்த காப்பாக அமையும். இந்திய அரசியலமைப்பு, மத்திய அரசு சட்டம் செய்யக்கூடிய இனங்களையும், மாநில அரசுகள் சட்டம் செய்யக்கூடிய இனங்களையும் இரு தனி பட்டியல்களில் (Union list and State list) கூறுகிறது.

சில இனங்கள் மீது சட்டமியற்றக்கூடிய அதிகாரம் மத்திய, மாநில அரசுகள் இரண்டிற்கும் பொதுவானதாகக் கொடுக்கப்பட்டிருப்பதை

எல்லாக் கூட்டாட்சிகளிலும் காணலாம். இது போன்று இரு அரசுகளுக்கும் பொதுவானவை என ஒதுக்கப்பட்டிருக்கும் இனமொன்றின் மீது மத்திய அரசும் மாநில அரசொன்றும் சட்டங்களியற்றுமானால், அவைகளுக்கிடையே முரண்பாடு காணப்பட்டால், மாநில அரசின் சட்டத்தை நீக்கி மத்திய அரசின் சட்டத்தை ஏற்க வேண்டுமென்று கூட்டாட்சி அரசியலமைப்புகள் கோருகின்றன. இரு அரசுகளுக்கும் பொதுவான இனங்கள் (concurrent subieets) என சில அறிவிக்கப்பட்டாலும், அவற்றை அனுபவிக்கும் உரிமை இரு அரசுகளுக்கும் தரப்பட்டாலும், அவற்றில் மத்திய அரசு தலையிடாது இருக்கும்வரைதான் அவற்றின் மீது மாநில அரசுகள் உரிமை பாராட்டலாம் என்கிற நிலை இருப்பதால், அந்த இனங்கள் உண்மையில் மத்திய அரசின் ஆட்சிக்கு உட்பட்ட இனங்களாக இருப்பதைப் பார்க்கிறோம். பொதுப் பொருட்களாகக் கனடாவில் 2 இனங்களும் இந்தியாவில் 47 இனங்களும் ஒதுக்கப்படுவதிலிருந்து அவற்றின் எண்ணிக்கை கூட்டாட்சிக்குக் கூட்டாட்சி மாறுபடலாம் என்பது தெரிகிறது. இந்திய அரசியலமைப்பைப் போன்றே மலேயாவின் (Malaya) அரசியலமைப்பிலும் ஒரு தேசியப் பட்டியலும், ஒரு மாநிலப் பட்டியலும், ஒரு பொதுப் பட்டிலும் காணப்படுகின்றன.

மூன்று பட்டியல்களைக் கொண்டிருக்கும் கூட்டாட்சியில் மத்திய மாநில அரசுகளுக்கிடையே அததற்குரிய அதிகாரங்களின் எல்லைகுறித்து அடிக்கடி சச்சரவு எழ வாய்ப்புகள் அதிகம்எனக்கூறப்படுகிறது. எனவே மத்திய அரசுக்குரிய இனங்களை மட்டுமோ அல்லது மாநில அரசுகளுக்குரிய இனங்களை மட்டுமோ கூறும் ஒரே ஒரு பட்டியலைக் கொண்ட அரசியலமைப்பே சிறந்தது எனக் கூறலாம். மூன்று பட்டியல்கள் இருக்குமானால் அவற்றில் சேர்க்கப்பட்டிருக்கும் பல்வேறு இனங்களுக்கு அவ்வப்பொழுது பொருள் கூற வேண்டியது நீதி மன்றங்களின் பொறுப்பாய் இருப்பதால் அதன் சுமை அதிகமாயிருக்கும் என நினைப்பதும், ஒரே பட்டியல் இருக்குமானல் அதன் வேலை எளிதாயிருக்கும் என நினைப்பதும் நியாயமென்றே தோன்றுகிறது. தேசிய அரசுக்கென 18 இனங்களைக் கூறி எஞ்சியவை அனைத்தும் மாநிலங்களுக்கு உரியன எனக் கூறும் அமெரிக்க அரசியலமைப்பு அதிகாரப் பங்கீட்டை மிக எளிய முறையில் செய்திருக்கிறது என்ற செய்தி நம் கவனத்துக்குரியதாகும். பொதுவாகக் கூறுமிடத்து கூட்டாட்சியில் அதிகாரப் பங்கீடு என்பது சிக்கல் நிறைந்த செயல் என்பதும், அது குறித்து இரு அரசுகளுக்கிடையேயும் போட்டியும் பொருமையும் தோன்றுவது இயல்பு என்பதும் கூட்டாட்சிகளின் அனுபவங்களாகும். இரு அரசுகளுக்கும் பொதுவானவற்றின் சில

இனங்களை ஒதுக்குவது விரும்பத்தக்கதல்ல என்றாலும், அவ்வாறு செய்வது செயல்முறையில் தவிர்க்க முடியாததாகிறது என்பதைத் தற்காலக் கூட்டாட்சிகள் உணர்த்துகின்றன.

சுதந்திரமாக வாழ்ந்த நாடுகள் கூட்டாட்சியில் சேரும் பொழுது அவை புதிதாக நிறுவப்படும் தேசிய அரசின் இனங்கள் வரையறை செய்யப்படுவதையே விரும்பும். அப்பொழுதுதான் பொது அரசு எதைச் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது என்பது அங்க நாடுகளுக்குத் தெரியும். இது போன்ற ஏற்பாட்டில் அரசியலமைப்புத் தோன்றிய காலத்தில் தேசிய அரசின் நிலை எவ்வாறு இருந்ததோ அவ்வாறுதான் பிற்காலத்திலும் இருக்கும் என நம்பலாம். தேசிய அரசு சட்டம் செய்யக்கூடிய இனங்கள் திட்டவட்டமாகக் கூறப்பட்டு விடுவதால், எஞ்சியிருக்கும் எல்லா இனங்கள் மீதும் சட்டம் செய்யக்கூடிய உரிமையை மாநில அரசுகள் அடைகின்றன. எஞ்சிய இனங்கள் அனைத்தும் மாநிலங்களுக்கு உரியனவாகிவிடுவதால் அரசியலமைப்பு தோன்றிய காலத்திற்குப் பிறகு தோன்றும் இனங்களும் மாநிலங்களுக்கே உரியனவாகிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக் காட்டாக, அமெரிக்க அரசியலமைப்பு தோன்றிய காலத்தில் 1789-இல்லாது, நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் கழித்துத் தோன்றியது வான் போக்குவரத்து (aviation). அது தற்காப்பு, மாநிலங்களுக்கிடையே வாணிபம் ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தப்படும் பொழுது, தேசிய அரசின் கண்காணிப்பிற்கு உட்பட்டிருந்தாலும், இன்றளவிலும் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது என்பது அறியத்தக்கது. ஆஸ்திரேலியக் கூட்டாட்சியில் வான் போக்குவரத்தைத் தேசிய அரசின் இனமாக அறிவிக்க 1937 ஆம் ஆண்டிலும், 1944 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் தோற்றன. வான் போக்குவரத்தானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனம் என்பதிலும், அதைக் கண்காணிக்க மாநில அரசுகளைக் காட்டிலும் மத்திய அரசே தகுதியுடையது என்பதிலும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எனினும், மத்திய அரசிற்கென ஒதுக்கப்படாத இனங்கள் மாநில அரசுகளுக்கு உரியன என சில கூட்டாட்சி அரசியலமைப்புகள் அறிவிப்பதால், புதிதாகத் தோன்றும் இனங்கள், அவை எவ்வளவு முக்கியமானவையாய் இருப்பினும், மாநில அரசுகளின் உடைமையாகி விடுகின்றன. இது கூட்டாட்சியின் வளர்ச்சிக்கு நல்ல ஏற்பாடாய் அமையாது என எண்ணுவோர் பலர் இருப்பதில் வியப்பில்லை.

2. அரசியலமைப்பின் இறைமை

2. கூட்டாட்சியில், மைய அரசாங்கமானது மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்குவதோ, அல்லது மாநில அரசாங்கங்களானவை மைய அரசாங்கத்திற்கு அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்குவதோ அதன் தன்மைக்கு மாறான முறைகளாகும். அரசியலமைப்பே மைய அரசாங்கத்தையும் மாநில அரசாங்கங்களையும் நிறுவி, அதற்குரிய அதிகார எல்லையைத் தீர்மானிப்பதால், கூட்டாட்சியில் மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களைச் சார்ந்திருக்கவோ அல்லது மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்தைச் சார்ந்திருக்கவோ அவசியமில்லை. ஒரு தரப்பிலுள்ள அரசாங்கம் மறுதரப்பிலுள்ள அரசாங்கத்தின் அதிகாரங்களை தீர்மானிப்பதில்லை என்றாலும், இரு தரப்பிலுமுள்ள அரசாங்கங்களின் அதிகாரங்கள் அரசியலமைப்பால் நேரடியாக நிர்ணயிக்கப்படுவதால், இரு அரசாங்கங்களும் அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை (Supremacy of the constitution) ஒப்புக் கொள்கின்ற தன்மை புலனாகிறது. மத்திய அரசும் மாநில அரசுகளும் அரசியலமைப்பின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு அதனால் வகுக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் இயங்குவதனால், அரசியலமைப்பின் உயர்நிலை என்பது கூட்டாட்சியின் முதன்மையான பண்புகளில் ஒன்றென்பதை உணர்கிறோம்.

அமெரிக்க அரசியலமைப்பின் உயர்நிலை அதன் ஆறாவது விதி இரண்டாவது பிரிவால் அறிவிக்கப்படுகிறது: 'ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பும், அதைப் பின்பற்றி இயற்றப்படும் சட்டங்களும் இந்நாட்டின் தலையாய சட்டங்களாகும்', நாட்டிலுள்ள எல்லா நீதிபதிகளும் அவற்றை நிறைவேற்றக் கடமைப்பட்டவராவார்கள். கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய கூட்டாட்சிகளில் அமெரிக்க அரசியலமைப்பில் காணப்படும் பிரகடனம் போன்ற அறிவிப்புகள் இல்லையென்றாலும், அங்கேயும் அரசியலமைப்பின் மேலான நிலை ஒப்புக்கொள்ளப்படுகிறது. அரசியலமைப்பின் 'எல்லாப் பகுதிகளும்' மத்திய மாநில அரசாங்கங்களின் சட்டதிட்டங்களை விட மேலானவையாய் கருதப்பட வேண்டும் என்பதை விட, அதில் 'அதிகாரப்பங்கீட்டிற்கு வகை செய்யும் பகுதி' மட்டும் இரு தரப்பு அரசாங்கங்களின் சட்டதிட்டங்களை விட மேலானதாய் இருப்பது மட்டுமே கூட்டாட்சிக்குப் போதுமானதாகும். கூட்டாட்சி அரசியலமைப்பில் அதிகாரப் பங்கீட்டைத் தவிர வேறு பல செய்திகள் இடம் பெறும்; அவை மத்திய அரசாலோ மாநில அரசுகளாலோ மாற்றப்பட அனுமதிக்கப்படலாம். ஆனால் அதிகாரப் பங்கீட்டை [illegible] ஒரு ஆட்சியைக் கூட்டாட்சியாக்குவதாகும்.

2. அரசியலமைப்பின் திறமை

2. கூட்டாட்சியில், மைய அரசாங்கமானது மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்குவதோ, அல்லது மாநில அரசாங்கங்களானவை மைய அரசாங்கத்திற்கு அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்குவதோ அதன் தன்மைக்கு மாறான முறைகளாகும். அரசியலமைப்பே மைய அரசாங்கத்தையும் மாநில அரசாங்கங்களையும் நிறுவி, அதற்குரிய அதிகார எல்லையைத் தீர்மானிப்பதால் கூட்டாட்சியில் மைய அரசாங்கம் மாநில அரசாங்கங்களைச் சார்ந்திருக்கவோ, அல்லது மாநில அரசாங்கங்கள் மைய அரசாங்கத்தைச் சார்ந்திருக்கவோ அவசியமில்லை. ஒரு தரப்பிலுள்ள அரசாங்கம் மறுதரப்பிலுள்ள அரசாங்கத்தின் அதிகாரங்களை தீர்மானிப்பதில்லை என்றாலும், இரு தரப்பிலுமுள்ள அரசாங்கங்களின் அதிகாரங்கள் அரசியலமைப்பால் நேரடியாக நிர்ணயிக்கப்படுவதால், இரு அரசாங்கங்களும் அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை (Supremacy of the constitution) ஒப்புக்கொள்கின்ற தன்மை புலனாகிறது. மத்திய அரசும் மாநில அரசுகளும் அரசியலமைப்பின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு அதனால் வகுக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள் இயங்குவதனால், அரசியலமைப்பின் உயர்நிலை என்பது கூட்டாட்சியின் முதன்மையான பண்புகளில் ஒன்றென்பதை உணர்கிறோம்.

அமெரிக்க அரசியலமைப்பின் உயர்நிலை அதன் ஆறாவது விதி இரண்டாவது பிரிவால் அறிவிக்கப்படுகிறது: 'ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பும், அதைப் பின்பற்றி இயற்றப்படும் சட்டங்களும் இந்நாட்டின் தலையாய சட்டங்களாகும்'. நாட்டிலுள்ள எல்லா நீதிபதிகளும் அவற்றை நிறைவேற்றக் கடமைப்பட்டவராவார்கள். கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய கூட்டாட்சிகளில் அமெரிக்க அரசியலமைப்பில் காணப்படும் பிரகடனம் போன்ற அறிவிப்புகள் இல்லையென்றாலும் அங்கேயும் அரசியலமைப்பின் மேலான நிலை ஒப்புக்கொள்ளப் படுகிறது. அரசியலமைப்பின் 'எல்லாப் பகுதிகளும்' மத்திய மாநில அரசாங்கங்களின் சட்டதிட்டங்களைவிட மேலானவையாய் கருதப்பட வேண்டும் என்பதைவிட, அதில் 'அதிகாரப் பங்கீட்டிற்கு வகை செய்யும் பகுதி' மட்டும் இரு தரப்பு அரசாங்கங்களின் சட்டதிட்டங்களைவிட மேலானதாய் இருப்பது மட்டுமே கூட்டாட்சிக்குப் போதுமானதாகும். கூட்டாட்சி அரசியலமைப்பில் அதிகாரப் பங்கீட்டைத் தவிர வேறு பல செய்திகள் இடம் பெறும்; அவை மத்திய அரசாலோ மாநில அரசுகளாலோ மாற்றப்பட

அனுமதிக்கப்படலாம். ஆனால் அதிகாரப் பங்கீடாகிய அம்சமே ஒரு ஆட்சியைக் கூட்டாட்டாட்சி யாக்குவதால், மத்திய அரசின் செயல்களாலோ மாநில அரசுகளின் செயல்களாலோ அதை அததற்கு சாதகமாக மாற்றி அமைத்துவிட முடியாதிருக்க அதன் உயர் நிலை ஒப்புக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

3. எழுதப்பெற்ற அரசியலமைப்பு

8. கூட்டாட்சியானது அரசுகளுக்கிடையே எழும் உடன்பாட்டின் விளைவாக தோன்றுவதால் அதை ஒரு உடன்பாடு (pact) அல்லது ஒப்பந்தத்திற்கு (Contract) நிகரானதாகக் கருதலாம். அரசுகள் ஒன்று கூடி பொது அரசின் அலுவல்களும் மாநில அரசுகளின் அலுவல்களும் எப்படி அமைய வேண்டும் என்று முடிவு செய்து கொள்வதின் அடிப்படையில்தானே கூட்டாட்சி மலர்கிறது! மத்திய மாநில அரசுகள் அவைகளுக்கிடையே அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ளும்பொழுது அததற்கு உரிய அதிகாரங்களை எழுதப்பெற்ற அரசியலமைப்பில் (Written constitution) தெளிவாக எழுதிவைத்துக் கொள்வதென்பது அவசியமாகிறது. வாய் மொழியாக 'நமக்குள் அதிகாரங்களை இப்படி இப்படி பகிர்ந்து கொள்வோம்' என்ற ஏற்பாட்டின்படி கூட்டாட்சி நிறுவப்படுமானால்அது மண்மேல் கட்டப்பட்ட கோட்டை போல விரைவில் சரியும். எந்தெந்த அரசாங்கத்திற்கு எந்தெந்த அதிகாரங்கள் உரியன என்பதைத் திட்டவட்டமாக எழுதிவைத்துக் கொண்டிருக்கும் பொழுதே இரு அரசுகளுக்கிடையே பூசல்கள் எழும் இக்காலத்தில், வெறும் பேச்சு வார்த்தைகள் அளவில் அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டால் அதன் விளைவாக எழும் சச்சரவுகள் எல்லையற்றனவாக இருக்கும் எனக் கூறத் தேவையில்லை. கூட்டாட்சிக்கு எழுதப் பெற்ற அரசியலமைப்பு ஒரு இன்றியமையாத தேவை எனக் கூறுவது பொருத்தமில்லை யெனினும், அக்கூட்டாட்சி செம்மையாகச் செயல்பட எழுதப் பெற்ற அரசியலமைப்பு நிச்சயம் தேவை எனக் கூறத்தான் வேண்டும். இன்று உலகில் காணப்படும் எல்லாக் கூட்டாட்சிகளிலும், அரைக் கூட்டாட்சிகளிலும் எழுதப் பெற்ற அரசியலமைப்புகள் இருப்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

எழுதப்பெற்ற அரசியலமைப்பின் விதிகள் மத்திய மாநில அரசுகளுக்கிடையே நிலவ வேண்டிய தொடர்புகளை என்னதான் விவரமாக நிர்ணயித்தாலும், வழக்காறுகளும், மரபுகளும் அத்தொடர்புகளை மேலும் சுமுகமானவையாய் ஆக்கத் துணை செய்கின்றன. எடுத்துக்காட்டாக, ஆஸ்த்திரேலிய தேசிய அமைச்

சரவையில் கூடுமானவரை அதன் ஆறு மாநிலங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்றும், சுவிஸ் கூட்டாட்சிக் குழுவில் (Federal council) பெர்ன் (Berne), ஸூரிச் (Zurich), வாட் (Vaud) ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்றும் (அரசியலமைப்புகள் இவைபற்றி ஒன்றும் கூறவிட்டாலும்) வழக்காறுகளும் மரபுகளும் வற்புறுத்துகின்றன.

4. நெகிழா அரசியலமைப்பு

4. கூட்டாட்சியின் அரசியலமைப்பு மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் பொதுவான சட்டமாக இருப்பதால் அதை திருத்துவதற்கு சிறப்பான ஏற்பாடு தேவை என்பதில் ஐயமில்லை. மத்திய அரசு மட்டுமோ மாநில அரசுகள் மட்டுமோ அரசியலமைப்பைத் திருத்தக்கூடும் என்றால் அவை ஒன்றையொன்று பாதிக்கின்ற வகையில் அரசியலமைப்பை மாற்ற முயலலாம். ஒரு தரப்பிலுள்ள அரசு மறுதரப்பிலுள்ள அரசின் இசைவைப் பெறாமல் அரசியலமைப்பைத் திருத்தலாம் என்ற நிலை இருந்தால் கூட்டாட்சி விரைவில் கலையும் எனக் கருத இடமுண்டு. இரு அரசுகளும் அரசியலமைப்பிலிருந்து நேரடியாக அவற்றின் அதிகாரங்களையும் உரிமைகளையும் பெறுவதால் அவற்றில் எதாவது மாற்றம் தேவை எனத் தோன்றினால் அதைப்பற்றி இரு தரப்பு அரசுகளும் சேர்ந்து ஒரு முடிவிற்கு வருவதுதானே நியாயம். இதனால்தான் நிறை கூட்டாட்சிகளாக விளங்கும் எல்லா அரசுகளின் அரசியலமைப்புகளும் நெகிழா அரசியலமைப்புகளாக (Rigid Constitutions) இருப்பதைக் காண்கிறோம். அரசியலமைப்பைத் திருத்தும் நிறுவனத்தில் மத்திய அரசு மாநில அரசுகள் ஆகிய இரண்டையும் தொடர்பு படுத்துவதே இன்றைய கூட்டாட்சிகள் பின்பற்றும் வழக்கமாகும்.

அமெரிக்காவில் காங்கிரசின் மூன்றில் இருபங்கு உறுப்பினர்களாவது, அல்லது மூன்றில் இருபங்கு மாநிலங்களின் வேண்டுகோளுக்கிணங்கக் கூட்டப்படும் பேரவையின் (Convention) உறுப்பினர்களாவது திருத்தங்களை முன் மொழியலாம் (Propose). அவை முக்கால் பங்கு மாநிலங்களின் சட்டமன்றங்களாலாவது, அல்லது முக்கால்பங்கு மாநிலங்களில் கூட்டப்படும் பேரவைகளாலாவது, உறுதி செய்யப்பட்டால்தான் (Ratify) செல்லுபடியாகும். மேலும், ஒரு மாநிலத்தின் எல்லைக்குள் புதிய மாநிலம் ஒன்றை நிறுவவோ, அல்லது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்களை ஒன்றாக இணைத்து ஒரு மாநிலத்தை அமைக்

கவோ, பாதிக்கப்படும் மாநிலங்கள் மற்றும் காங்கிரஸ் ஆகிய வற்றின் ஒப்புதல் தேவை என்பது அறியத்தக்கது. ஆஸ்திரேலி யாவில் தேசியப் பாராளுமன்றத்தின் சரிபாதிக்கு மேலான பெரும் பான்மை உறுப்பினர்களால் திருத்தங்கள் முன்மொழியப்படலாம். அவை மக்கள் தீர்ப்புக்கு விடப்பட்டு பெரும்பாலான வாக்காளர் களாலும் பெரும்பாலான மாநிலங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகே சட்டங்களாகும். தேசியப் பாராளுமன்றத்தின் இரு அவை களிலும் மாநிலங்களுக்குரிய விகிதப் பிரதிநிதித்துவத்தைக் (Proportionate Representation) குறைக்கவோ, அல்லது அவற் றின் பரப்பளவைக் கூட்டவோ குறைக்கவோ அல்லது வேறுவகை யில் மாற்றவோ, பாதிக்கப்படும் மாநிலத்தின் வாக்காளர்களில் பெரும்பாலோரின் இணக்கம் தேவையாகும். கனடாவின் அரசிய லமை பைத் திருத்தும் முறை புதுமையான தொன்றாகும். அரசிய லமைப்பின் பெரும்பாலான விதிகளைத் திருத்தும் அதிகாரத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றமானது கனடிய அரசாங்கத்திற்கு 1949 ஆம் ஆண்டில் மாற்றிக்கொடுத்து விட்ட போதிலும், அதிகாரப் பங்கீட்டைத் திருத்தும் உரிமை இன்றளவிலும் பிரிட்டிஷ் அரசாங் கத்திடமே இருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும். பிரிட்டிஷ் பாராளுமன்றமானது கனடாவின் தேசிய அரசு, மாநில அரசுகள் ஆகிய இரண்டுக்குமே பொதுவானது என்பதில் ஐயமில்லை. அந்தக் கடல் கடந்த பாராளுமன்றம் அதிகாரப் பங்கீட்டினைப் பற்றியத் திருத்தங்களைச் செய்யும்பொழுது இரு தரப்பிலுமுள்ள அரசுகளின் இணக்கத்தோடு செய்வதே முறையான செயலாகும். இதுவரை கனடாவிற்காக இயற்றப்பட்டிருக்கும் திருத்தங்களை ஆராய்வோமானல், பிரிட்டிஷ் அரசாங்கமானது கனடாவின் மத்திய அரசின் விருப்பத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத் திருப்பதாகத் தோன்றுகிறது. இந்தப் போக்கு திருப்திகரமானதல்ல என்பதில் ஐயமில்லை. சுவிட்சர்லாந்தில் தேசியப் பாராளுமன்றமோ அல்லது 50,000 வாக்காளர்களோ திருத்தங்களை முன்மொழியலாம். அவை வாக்காளர்கள் முன்வைக்கப்பட்டு பெரும்பாலான வாக் காளர்களாலும், பெரும்பாலான மாநிலங்களாலும் உறுதி செய்யப் பட்ட பிறகே முறையான திருத்தங்களாய் அமையும்.

தலைமை நீதிமன்றம்

5. கூட்டாட்சியில் மைய அரசு மாநில அரசுகளின் அலுவல் களில் தலையிடாமலும், மாநில அரசுகள் மைய அரசின் அலுவல் களில் தலையிடாமலும் பார்த்து, அரசியலமைப்பால் நிர்ணயிக்கப் பட்டிருக்கும் சக்திச் சமநிலையைக் காக்க நடுநிலை தவறாத ஒரு தலைமை நீதிமன்றம் (Supreme Court) தேவை. அரசியலமைப்

யின் ஐயப்பாட்டுக்குரிய பகுதிகளுக்குப் பொருள் விளக்கம் (Interpretation) கூறுவதும், மைய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்கங்களுக்கு மிடையே எழும் வழக்குகளைத் தீர்த்து வைப்பதும், மாநில அரசாங்கங்களுக் கிடையே தோன்றும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதும் இத்தலைமை நீதி மன்றத்தின் முக்கிய பொறுப்புகளில் அடங்கும். மத்திய பாராளுமன்றமோ, மாநிலச் சட்டமன்றங்களோ, அல்லது அரசின் எந்த நிறுவனமோ நாட்டின் அடிப்படைச் சட்டமென ஏற்கப்படும். தேசிய அரசியலமைப்பிற்கு மாறான சட்டங்களையோ, செயல்களையோ செய்தால் அவை செல்லத்தக்கன அல்ல (Invalid) என அறிவிக்கிற மேலான அதிகாரம் தலைமை நீதி மன்றத்திற்கே பொதுவாகத் தரப்படுகிறது. எனவே கூட்டாட்சி சீராக செயல் படுவதற்கு மேற்கண்ட அதிகாரங்களுடைய தலைமை நீதி மன்றமொன்று நிறுவப்படுவது இன்றியமையாதது என்பது தெளிவாகிறது.

கூட்டாட்சியில் செயல்படும் அரசாங்கங்களின் பல் வேறு அங்கங்களை அதற்குரிய இடத்தில் இயங்கும்படிச் செய்ய எல்லா அரசுகளுக்கும் பொதுவான பெரு நீதிமன்றமொன்று தேவை என்பதை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் முழு அளவுக்கும், சுவிட்சர்லாந்து ஓரளவுக்கும் ஒப்புக் கொள்கின்றன. அரசியலமைப்பில் காணப்படும் அதிகாரப் பங்கீட்டைப் பொருத்த எல்லா வழக்குகளையும் இறுதியாகத் தீர்த்து வைக்கும் அதிகாரம் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய மூன்று கூட்டாட்சிகளிலும் தலைமை நீதி மன்றங்களுக்கேத் தரப்பட்டிருக்கின்றன; ஆனால் சுவிட்சர்லாந்தில் தேசிய அரசியலமைப்பிற்கு மாறான மாநில அரசுகளின் செயல்களைச் சட்ட விரோதமானவை என அறிவிக்கும் அதிகாரம் பெற்றிருக்கும் தலைமை நீதி மன்றம், மைய அரசின் செயல்களை (அவை அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டவையாக இருந்தாலும் கூட) அவ்வாறு அறிவிக்க முடியாது. மைய அரசுக்கு மாநில அரசுகளின் செயல்களிலிருந்து காப்பளிக்கும் அரசியலமைப்பு, மாநில அரசுகளுக்கு மைய அரசின் செயல்களிலிருந்து காப்பளிக்கத் தவறியது ஒருகுறையே. எனினும் இக்குறையைத் தவிர்ப்பதற்கு அரசியலமைப்பு வேறொரு வழியை வகுத்திருக்கிறது. 30,000 வாக்காளர்களோ அல்லது 8 மாநிலங்களோ மைய அரசாங்கத்தின் எந்தச் சட்டத்தையும் குடியொப்பத்திற்கு (Referendum) விடவேண்டுமெனக் கேட்க முடியுமாதலால், அரசியலமைப்புக்கு முரணானவையாய் தோன்றும் சட்டங்களை வாக்காளர்களே நிராகரிக்கலாம்.

அதிகாரப் பங்கீட்டினைப்பற்றிய பிணக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கும் நீதிமன்றமானது மைய அரசையோ மாநில அரசுகளையோ சார்ந்திராமல், இரண்டுக்கும் பொதுவானதாக அமைவதே நியாயமானதாகும். ஆனால் இன்றைய கூட்டாட்சிகள் அனைத்திலும் தலைமை நீதி மன்றங்களின் நீதிபதிகளை நியமிப்பதும் நீக்குவதும் மைய அரசின் தனி உரிமையாக இருப்பதைக் காணலாம். அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் செனட் சபையின் இணக்கத்தோடு நீதிபதிகளை நியமிக்கிறார்; அவர்களுக்கெதிராக பிரதிநிதிகள் சபையால் கொண்டுவரப்படும் குற்றச்சாட்டுகள், செனட் சபையில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர்கள் பதவியிலிருந்து விலக்கப்படுவர்கள்; சுவிட்சர்லாந்தில் நீதிபதிகள் தேசீயப் பாராளுமன்றத்தால் ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் நாட்டின் தலைவர்களான கவர்னர்-ஜெனரல்களே நீதிபதிகளை நியமிக்கிறார்கள்; மையப் பாராளுமன்றம் அவர்களுக்கெதிராக தீர்மானங்கள் நிறைவேற்றினால் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள். இவ்வாறு நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரமும். நீக்கும் அதிகாரமும் மத்திய அரசின் உரிமையாக இருப்பதால், தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள் மத்திய அரசுபால் தனிப்பற்றுடையவர்களாக இருப்பார்கள் என சந்தேகிக்க இடமுண்டு. மத்திய அரசின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என எண்ணுவோரையே அவ்வரசு நீதிபதிகளாக நியமிக்கிறது எனக் குற்றம் சாட்டுவோரும் உண்டு. ஆனால் இன்றைய கூட்டாட்சிகளில் நீதிமன்றங்கள் செயல்படும் விதத்தைப் பற்றிக் குறைபட்டுக்கொள்ள அதிகம் வாய்ப்பு இருப்பதாகக் கூறுவதற்கில்லை. ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் தலைமை நீதி மன்றத்தின் நீதிபதிகள் எவரும் இதுவரை பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. அமெரிக்காவில் 1804-05இல் நீதிபதி ஒருவரை நீக்க காங்கிரஸ் மேற்கொண்ட ஒரே முயற்சியும் தோற்றது. சுவிட்சர்லாந்தில் நீதிபதிகளின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், பழைய நீதிபதிகளே, அவர்கள் விரும்பும்வரை, மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஏட்டளவில் நீதிபதிகள் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றாலும், நடைமுறையில் அவர்கள் எந்த அரசையும் சார்ந்திராமல் ஒர வஞ்சனையில்லாது நடப்பதே மரபாகும். இங்கிலாந்திலும், அதனுடைய பாரம்பரியத்தை மதித்து நடக்கும் நாடுகளிலும் நீதிபதிகள் விருப்பு வெறுப்பு இல்லாமல் நடந்து கொள்கின்றனர் என்பதும் அவர்களின் நேர்மையைப்பற்றி யாரும் ஐயப்பட வேண்டிய அவசியமில்லை என்பதும் அறியத்தக்கது.

அரசியலமைப்புக்கு மாறுன ஆணைகளையும் சட்டங்களையும் செல்லத்தக்கனவல்ல என அறிவிக்கும் அதிகாரம் தலைமை நீதி மன்றத்திடம் இருப்பது கூட்டாட்சியின் இயல்புக்கு ஏற்றதாகும். அரசியலமைப்பின் விதிகளை அத்துமீறிய நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்கக்கூடிய நிறுவனமொன்று கூட்டாட்சியில் இல்லாவிட்டால் அந்த அரசியலமைப்பால் என்ன பயன்? அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அந்நாட்டு அரசியலமைப்பின் காவல் தெய்வமாகப் போற்றப்படுவதற்குக் காரணம் அது அரசியலமைப்பை யாரும் சிதைத்துக் குலைத்துவிடாமல் அக்கறையோடு கண்காணித்துக் கொள்வதேயாம். அரசியலமைப்புக்கு எதிரான செயல்களை செல்லத்தக்கனவல்ல என அறிவிக்கவேண்டிய கடமை தலைமை நீதிமன்றத்தினுடையதாகும் என்பதாக அமெரிக்க அரசியலமைப்பு தெளிவாகத் தெரிவிக்கவில்லை என்பது உண்மையே; ஆனால் அரசியலமைப்பை உருவாக்கிய பேரவையில் (The great convention) தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்தால், அரசியலமைப்பை காக்கவேண்டிய பொறுப்பு தலைமை நீதிமன்றத்தை யேச்சாரும் என அச்சபையினர் நினைத்ததை நாம் அறியலாம். அமெரிக்க அரசியலமைப்பின் சிற்பிகளில் ஒருவரான அலெக்சாந்தர் ஹேமில்டன், கூட்ட ாட்சியைப்பற்றிய கட்டுரைத் தொகுப்பொன்றில், அரசியலமைப்பின் விதிகளுக்கும் அதனுல் நிறுவப்பட்ட நிறுவனங்களின் சட்டங்களுக்கும் இடையே மாறுபாடு இருக்குமேயானுல், முந்தியதை ஏற்று பிந்தியதை மறுக்க வேண்டியது நீதிமன்றங்களின் கடமை எனக் கூறினுர். 1803ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தலைமை நீதிபதியாக இருந்த ஜான் மார்ஷல் (John Marshall) மார்பரிக்கு எதிராக மாடிசன் (Marbury vs. Madison) என்ற வழக்கில் தீர்ப்பளித்தபொழுது ஹேமில்டனின் கருத்தைத் தழுவியே, நீதி மறு ஆய்வின் (Judicial review) மூலம் அரசியலமைப்பைக் காப்பது நீதி மன்றங்களின் உரிமையாகும் எனத் தெரிவித்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அடங்கிய மன்றங்கள் இயற்றும் சட்டங்களை நீதிமன்றங்கள் நிராகரிப்பதென்பது குடியாட்சித் தத்துவத்தையே அவமதிப்பதாகிறது எனக்காரணம் காட்டி, நீதி மன்றங்களுக்கு இவ்வதிகாரத்தைக் கொடுப்பது முறையற்றதாகு எனக் கூறுவோரும் சிலர் இருக்கின்றனர். நூறு ஆண்டுகட்கு மேலாக நீதி மறுஆய்வு அதிகாரத்தை அனுபவித்துவரும் அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தின் நிர்வாகத்தில் குறைகாண்போர் இல்லாமலில்லை. அரசியலமைப்புக்கு முரணுனவை என நீதி மன்றங்களால் நிராகரிக்கப்படும் சட்டங்கள், காங்கிரசின் அங்கத்

தினர்களால் மறு பரிசீலனை செய்யப்பட்டு மூன்றில் இருபங்கு பெரும்பான்மையோடு ஏற்றுக்கொள்ளப்பட்டாலோ, அல்லது பொதுத்தேர்தலுக்குப் பிறகு மறுமுறையும் காங்கிரசால் இயற்றப் பட்டாலோ, அவை சட்டங்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டு மென சிலர் கூறுகின்றனர். ஆனால் இங்கு நம் நோக்கம் அரசிய லமைப்பைக் காப்பது எப்படி என்பதேயல்லாமல் நீதி மன்றங்களை அடக்குவது எப்படி என்பதல்ல. மேலே கூறப்பட்ட ஏற்பாடுகளை ஏற்றால் அரசியலமைப்பால் அனுமதிக்கப்படாத பல செயல்களை சட்டமன்றங்கள் எந்தவிதமான தடையுமின்றி செய்து கொண்டே போகலாமே! இந்த நிலை எந்தக் கூட்டாட்சியிலும் தோன்றக் கூடாது. அவ்வாறு தோன்றினால் அந்தக் கூட்டாட்சி அழியும் என்பதில் ஐயமில்லை. நீதி மன்றங்கள் சட்டங்களையும் ஆணை களையும் மறு ஆய்வு செய்வதில் குறைகள் இருக்கலாம்; ஆனால் அரசியலமைப்பைக் காக்க இதைவிட சிறந்த முறை இருப்பதாகத் தோன்றவில்லை.

இதுவரை விளக்கப்பட்ட பண்புகள் கூட்டாட்சி அரசுக்கு இன்றியமையாதவை என ஒப்புக்கொள்ளப்படுகின்றன. மேலே கூறப்பட்ட இயல்புகளில் எதாவது ஒன்றுகூட இல்லையென்றாலும், அல்லது சில குறைபாடுகளோடு காணப்பட்டாலும், அந்த அளவுக்கு அக்கூட்டாட்சி குறையுள்ளதாகும். கூட்டாட்சி மேலும் செம்மையாகவும் சிறப்பாகவும் செயல் பட வேறு சில தன்மைகள் இருப்பது நல்லதாகும். அவற்றை இனி ஆராய் வோம்.

6. மேலும் சில பண்புகள்: அ. அதிகாரப் பிரிவினை

1. அதிகாரப் பிரிவினை (Separation of powers) என்னும் கொள்கையின் அடிப்படையில் கூட்டாட்சியின் மைய அரசாங்கம் அமைவது, கூட்டாட்சி அரசை இன்னும் சிறக்கச் செய்யும் என நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கையே அமெரிக்க அரசியலமைப் பில் மாண்டெஸ்க்யூவின் (Montesquieu) அதிகாரப் பிரிவினை கொள்கைக்கு இடமளித்திருக்கிறது. அரசியலமைப்பின் முத லாவது விதி சட்டமியற்றும் அதிகாரத்தை காங்கிரசிடமும், இரண் டாவது விதி ஆட்சித்துறை அதிகாரத்தை குடியரசுத் தலைவரிட மும், மூன்றாவது விதி நீதி நிர்வாக அதிகாரத்தை நீதி மன்றங்களி டமும் ஒப்படைத்திருப்பது அறியத்தக்கது. இது தற்செயலாக நிகழ்ந்துவிட்ட நிகழ்ச்சியாக இருக்க முடியாது என்பதும், திட்ட மிட்டு செய்யப்பட்ட ஏற்பாடாக இருக்கவேண்டும் என்பதும் தெளிவு. சட்டத்துறை, ஆட்சித் துறை, நீதித் துறை ஆகிய

மூன்றிற்குமிடையே சிலத் தொடர்புகள் இருப்பது உண்மையென்றாலும், அதிகாரப் பிரிவினை அங்கு ஓரளவுக்கேனும் பின்பற்றப்படுகிறது என்பதை அரசியல் மாணவர்கள் மறுப்பதற்கில்லை. அதிகாரப் பிரிவினை இருப்பது மட்டுமே ஒரு அரசை நேரடியாகக் கூட்டாட்சியாக்க முடியாது; ஆனால் அது மறைமுகமாக கூட்டாட்சியின் வளர்ச்சிக்கு உதவி செய்ய முடியும். எந்த அரசாங்கம் அதிகாரப் பிரிவினையின் அடிப்படையில் அமைந்திருக்கிறதோ, அது சற்று வலுக் குறைந்த அரசாங்கமாக (Weak government) இயங்குமென்பது நாம் அரசியலில் அனுபவ பூர்வமாக உணர்ந்த உண்மையாகும். கூட்டாட்சியில் சேரும் நாடுகள், புதிதாக உருவாக்கப்படும் மைய அரசாங்கம் வலுக் குறைந்த அரசாங்கமாக இருப்பதை மிகவும் விரும்பும். அமெரிக்கக் கூட்டாட்சியில் இணைந்த பதின்மூன்று நாடுகளும் புதிய தேசீய அரசாங்கத்தை வேண்டுமென்றே வலிமையற்ற அரசாங்கமாக அமைத்தன. மாநிலங்களை மீறி நடந்துவிடக்கூடிய மைய அரசாங்கத்தை அவை வரவேற்கத் தயங்கின; அதிகாரப் பிரிவினைத் தத்துவமானது ஓரளவுக்கு மைய அரசாங்கத்தின் கை கட்டு கால் கட்டாக அமையும் என்று அமெரிக்காவில் நம்பப்பட்டதால் அதன் அடிப்படையில் அரசாங்க நிறுவனங்கள் எழுப்பப்பட்டன. பேராசிரியர் லாஸ்க்கி (H. J. Laski) 'அமெரிக்க அரசாங்க முறையின் அடிப்டைகள், வலுமைற்ற அரசாங்கத்தின் பால் உள்ள நம்பிக்கையின் மீது எழுப்பட்டவையே' எனக் குறிப்பிடுகிறார்.

அமெரிக்காவில் மைய அரசாங்கத்தின் இயக்கத்தை பலவிதமான தடைகள் கட்டுப்படுத்துகின்றன. மாநில அரசாங்கங்களின் விருப்பத்திற்கு மாறாக மத்திய அரசாங்கம் நடக்காமலிருக்கவே இத்தடைகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. அக்காலத்து அமெரிக்க மாநிலங்கள் மைய அரசுமொன்று வேண்டுமென்று விரும்பினவேயல்லாது, அது வலுவுள்ள அரசாங்கமாக இருப்பதை விரும்பவில்லை. வலுவுள்ள மைய அரசாங்கம்தான் வேண்டுமென்று தலைவர்கள் வற்புறுத்தி யிருப்பார்களானால், அமெரிக்காவில் கூட்டாட்சியே தோன்றியிருக்க முடியாது. தேசீய அரசாங்கம் அதிகாரப் பிரிவினையின் அடிப்படையில் அமைக்கப்பட்டதென்பதும், அவ்வதிகாரப் பிரிவினையே அதைக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட அரசாங்கமாக ஆக்கிய தென்பதும், அதன் விளைவாகவே கூட்டாட்சியில் இணைய விழைந்த நாடுகள் தயக்கமும் அச்சமுமின்றி இணைந்தன என்பதும் அமெரிக்கக் கூட்டாட்சியின் தோற்றத்திற்கு அதிகாரப் பிரிவினை எந்த அளவுக்கு துணை செய்திருக்கிறது என்பதை அறிவுறுத்துகின்றன.

மேலும் கூட்டாட்சியில் நீதித் துறையானது, சட்டத் துறை, ஆட்சித்துறை ஆகியவைகளிலிருந்து பிரிந்திருப்பது அவசியமாகும். நீதித் துறையானது அவ்வாறு பிரிந்திருந்தால்தான், மற்றத் துறைகளின் செயல்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டவையா, அப்பாற்பட்டவையா என்பதை நடுநிலைநின்று தீர்மானிக்க முடியும். அரசாங்கத்தின் மூன்று துறைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திராது; குறிப்பாக நீதித்துறை மற்றத் துறைகளின் கைப் பாவையாக இராமலிருக்க அதிகாரப் பிரிவினை வகை செய்வதால், அது கூட்டாட்சியை சிறக்கச் செய்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆ. மேலவையில் சமமானப் பிரதிநிதித்துவம்

2. பொதுப் பாராளுமன்றத்தின் மேலவையில் கூட்டாட்சியின் அங்கநாடுகள் அனைத்திற்கும் சரிசமமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டால், கூட்டாட்சியானது சிறக்கும் எனக் கருதப்படுகிறது. மாநிலங்களுக்கு அவற்றின் மக்கள் தொகையின் அடிப்படையில் கூடுதல் குறைவாக பிரதிநிதித்துவம் வழங்குவதை கீழவையோடு நிறுத்திக்கொண்டு, மேலவையை பொறுத்தவரை எல்லா மாநிலங்களையும் சரிசமமாக பாவிப்பதே நியாயமானது என்ற ஏற்பாட்டை செய்துகொண்ட பிறகே அமெரிக்க அரசியலமைப்பை துவக்கிவைக்க முடிந்தது. அமெரிக்க மேல் சபையான செனட் சபையில் (Senate) ஒவ்வொரு மாநிலமும் இரண்டு பிரதிநிதிகளையும் சுவிஸ் மேலவையான மாநிலங்கள் குழுவில் (Council of States) ஒவ்வொரு மாநிலமும் இரண்டு பிரதிநிதிகளையும், ஆஸ்திரேலியாவின் மேலவையான செனட் சபையில் ஒவ்வொரு மாநிலமும் பத்து பிரதிநிதிகளையும் அனுப்புகின்றன என்பதிலிருந்து, மேற்கண்ட கூட்டாட்சிகள் ஒவ்வொன்றிலும் எல்லா மாநிலங்களும் ஏற்றத் தாழ்வின்றி ஒரே சீராக நடத்தப்படுகின்றன என்பது தெளிவாகிறது. மாநிலங்கள் அனைத்தும் ஒத்த முக்கியத்துவமுள்ளனவாய் கருதப்படும் என்ற உத்தரவாதம் இல்லாதுபோனால் அவை கூட்டமைப்பில் சேர மறுத்தாலும் மறுக்கலாம். கீழ்ச்சபையில் ஒவ்வொரு மாநிலமும் அதன் மக்கள் தொகையின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் பெறுவதால், அங்கு மக்கள் தொகை அதிகமுடைய மாநிலங்களே வலுவுள்ள நிலையில் இருக்கும்; மக்கள் தொகை குறைவாகவுடைய மாநிலங்களைப் பாதிக்கும் வகையில் பெரிய மாநிலங்கள் நடந்துகொள்ள அங்கு வாய்ப்புண்டு. இந்தக் குறையைத் தவிர்க்கவே மேலவையிலாவது எல்லா மாநிலங்களுக்கும் ஒத்த பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கீழ்ச் சபையிலுள்ள 487 பிரதிநிதிகளில், இல்லினாய் (Illinois), இண்டியானா (Indiana), மிச்சிகன் (Michigan), நியூ ஜெர்சி (New Jersey), நியூ யார்க் (New York), ஒகியோ (Ohio) பென்சில்வேனியா (Pennsylvania) ஆகிய ஏழு தொழில் மாநிலங்கள் 174 பிரதிநிதிகளை அனுப்புகின்றன; ஆனால் அயோவா (Iowa) கான்ஸாஸ் (Kansas), மின்னிசோட்டா (Minnesota), நெப்ராஸ்கா (Nebraska), வட டகோடா (North Dakota) ஒக்லஹோமா (Oklahoma), தென்டகோடா (South Dakota), விஸ்கான்சின் (Wisconsin) ஆகிய எட்டு விவசாய மாநிலங்கள் 47 பிரதிநிதிகளையே அனுப்புகின்றன. சுவிட்சர்லாந்தில் கீழ்ச் சபையான தேசியக் குழுவிலுள்ள (National Council) 200 உறுப்பினர்களில், பெர்ன் (Bern) ஸூரிச் (Zurich) ஆகிய இரண்டு மாநிலங்கள் மட்டும் மொத்த உறுப்பினர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களை அனுப்புகின்றன. ஆனால் யூரி (Uri), ஷ்விஷ் (Schwyz), அண்ட்டர்வால்டன் (Unterwalden), க்ளாரஸ் (Glarus), ஸக் (Zug), அப்பென்ஸல் (Appenzell), ஷாப்ஹாஸன் (Schaffhausen) ஆகிய ஏழு மாநிலங்கள் 14 உறுப்பினர்களையே அனுப்புகின்றன. ஆஸ்திரேலியாவின் கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையிலுள்ள 124 அங்கத்தினர்களில், நியூ சௌத் வேல்ஸ் (New South Wales), விக்டோரியா (Vicloria) ஆகிய இரு மாநிலங்கள் மட்டும் 79 அங்கத்தினர்களை அனுப்புகின்றன. மேற் கூறப்பட்ட விவரங்களிலிருந்து, கீழ்ச் சபைகள் மக்கள் தொகை அதிகம் பெற்றிருக்கும் மாநிலங்களை செல்வாக்கோடு விளங்க முடியும் என்ற கருத்து உறுதியடைகிறது. பெரும்பான்மையோர் ஆட்சி என்பது, கூட்டாட்சியைப் பொருத்தவரை, பெரும்பான்மை மக்களின் ஆட்சியாக மட்டுமிருந்தால் போதாது. அது பெரும்பான்மை மாநிலங்களின் ஆட்சியாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகவே மாநிலங்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது என்பது நினைவில் வைக்கத்தக்க செய்தியாகும்.

மாநிலங்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அமெரிக்க செனட்டு ஈடு இணையற்ற நிறுவனமாக இயங்கி வருகிறது; மற்ற நாடுகளின் மேலவைகளுக்கு அது நல்ல வழிகாட்டியாக விளங்குகிறது என்றுகூடக் கூறலாம். அதன் செல்வாக்குக்குரிய பல காரணங்களில், அது எல்லா மாநிலங்களுக்கும் ஒத்த பிரதிநிதித்துவம் அளிப்பதை முக்கியமானதொன்றாகக் குறிப்பிடலாம். மலைப் பகுதி மாநிலங்களான அரிஸோனா (Arizona), இடாஹோ (Idaho), மோண்ட்டானா (Montana), நிவாடா (Nevada), நியூ மெக்சிகோ

(New Mexico), உட்டா (Utah), வியோமிங் (Wyoming) ஆகிய ஏழு மாநிலங்களுக்குக் கீழ்ச் சபையில் 12 பிரதிநிதிகளே இருந்தாலும், மேல் சபையில் 14 செனட்டர்கள் இருக்கின்றனர். எனவே, இதிலிருந்து சிறிய மாநிலங்கள் கீழ்ச் சபையைவிட மேல் சபையில் சற்று வலுவுள்ள நிலையில் இருப்பது புலனாகிறது. ஆனால் மேலவையில் மாநிலங்களுக்கு ஒத்த பிரதிநிதித்துவம் வழங்குதல் மட்டுமே அவைகளின் நலன்களைப் பாதுகாப்பதற்குரிய ஒரே வழி எனக்கூறி விட முடியாது. ஒத்த பிரதிநிதித்துவம் மறுக்கப்படும் கனடாவில் மாநிலங்கள் புறக்கணிக்கப் படுவதாகக் கூறுவதற்கில்லை. கனடாவின் மேலவையான செனட் சபைக்கு ஒண்டாரியோவிலிருந்து பேரும்க்வெபெக்கிலிருந்து (Quebec) 24பேரும், நோவாஸ்கோஷியோ (Nowa Scotio), நியூ பிரன்ஸ்விக் (New Brunswick) ஆகியவை ஒவ்வொன்றிலிருந்தும் 10 பேரும், பிரின்ஸ் எட்வர்டு தீவிலிருந்து (Prince Edward Island) 4 பேரும், நியூ பவுண்டுலாந்திலிருந்து (Newfoundland) 6 பேரும், மானிடோபா (Manitoba), ஆல்பர்ட்டா (Alberta), சஸ் கட்ச்வான் (Saskatchawan), பிரிட்டிஷ் கொலம்பியா (British Columbia) ஆகியவை ஒவ்வொன்றிலிருந்தும் 6 பேரும் செல்வதால், அங்கு மாநிலத்துக்கு மாநிலம் பிரதிநிதித்துவம் வேறுபடுகிறதென்பது உண்மையே; இருப்பினும், அந்நாட்டின் இரு பெரும் அரசியல் கட்சிகளான கன்சர்வேடிவ் (Conservative) கட்சியும், லிபரல் (Liberal) கட்சியும் மாநிலங்களின் நலன்களைப் பேணுவதிலும், உரிமைகளைக் காப்பதிலும் பெரிதும் அக்கறை காட்டி வருவதால், அம்மாநிலங்கள் மற்றக் கூட்டாட்சிகளிலுள்ள மாநிலங்களுக்கு நிகரான சிறப்புகளோடு இயங்கி வருவதைக் காண்கிறோம்.

இ. விலக்கவோ விலகவோ இடமில்லாதிருத்தல்

8. கூட்டாட்சியானது தோன்றிய பிறகு, தேசிய அரசு மாநில அரசொன்றை அதிலிருந்து விலக்கவோ (Expulsion), அல்லது மாநில அரசொன்று அதிலிருந்து தானாகவே விலகவோ (Secession) முடியாத நிலை இருப்பது கூட்டாட்சி சிறப்பாக இயங்குவதற்குரிய பண்புகளில் ஒன்றெனக் கருதப்படுகிறது. கூட்டமைப்பிலிருந்து தேசிய அரசானது மாநில அரசொன்றை நீக்க முடியுமென்றால் அங்கு தேசிய அரசுக்கு மாநில அரசுகள் அடங்கி நடக்க வேண்டியதும், மாநில அரசொன்று தானாகவே அதிலிருந்து நீங்க முடியுமென்றால், மாநில அரசுகளுக்கு தேசிய அரசு அடங்கி நடக்க வேண்டியதும் அவசியமாகிவிடும். மத்திய மாநில அரசுகளுக்குள், அவை ஒன்றுக் கொன்று பணிந்து நடக்க வேண்டிய ஏற்பாடு எதுவும் கூட்டாட்சிக் கொள்கைக்கு மாறானது.

என்பது முன்னரே கூறப்பட்ட கருத்தாகும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நான்கு கூட்டாட்சிகளிலும் விலக்குதலுக்கோ, விலகுவதற்கோ சிறிதும் இடமில்லை.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் மாநிலங்களுக்குப் பிரிவினை உரிமை உண்டா இல்லையா என்பது நூறு ஆண்டுகளுக்கு முன்பே வாதத்துக்குரிய தலைப்பாக இருந்தது. ஆனால் 1861-லிருந்து 1865-வரை நடந்த உள்நாட்டுப் போரில் பிரிவினை கோரிய தென் மாநிலங்கள் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக எந்த மாநிலமும் கூட்டாட்சியிலிருந்து விலகிக் கொள்வதென்பது இயலாத காரியமாகும் என்பது தெளிவாக்கப்பட்டது. அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் 1868ஆம் ஆண்டில் டெக்சாசுக்கு எதிராக வொயிட் (Texas V. White) என்ற வழக்கில் தீர்ப்பளிக்கிற பொழுது, அரசியலமைப்பானது 'அழிக்க முடியாத மாநிலங்களைக் கொண்ட அழிக்க முடியாத கூட்டரசை' (an indestrwctillep union...of indestructille states) நிறுவுகிறது என அறிவித்தது. கூட்டாட்சியில் மாநிலமொன்று நீக்கப்படவோ அல்லது நீங்கவோ வேண்டுமென்றால், அரசியலமைப்பைத் திருத்துவதன் வாயிலாகத்தான் அது நிகழமுடியுமே யொழிய வேறு எவ்வகையிலும் அது நிகழமுடியாது; அப்பொழுது கூட பாதிக்கப்படும் மாநிலத்தின் இணக்கத்தைப் பெற்றே அதை விலக்குவது சாத்தியமாகும். அரைக் கூட்டாட்சியான சோவியத்துக் குடியரசில், கூட்டாட்சியிலிருந்து விலக விரும்பும் மாநிலங்களுக்கு அவ்வாறு விலகிக் கொள்ளும் உரிமையை அரசியலமைப்பின் 35ஆவது விதி வழங்குகிறது. ஆனால் இன்றுவரை எந்த மாநிலமும் அந்த உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டாட்சியிலிருந்து விலக முற்பட்டதில்லை.

ஈ. இரு கட்சி ஆட்சி முறை

4. இன்றைய அரசியலின் இன்றியமையாத அம்சமாகிவிட்ட அரசியல் கட்சிகளும் கூட்டாட்சீராக இயங்குவதற்கு துணை செய்வதாக நம்பப்படுகிறது. அமெரிக்காவில் நிலவும் இரு கட்சிகள் அந்நாட்டின் அரசாங்கத்தில் ஒரு நிலையானத் தன்மையைத் தோற்றுவித்திருக்கின்றன. கணக்கற்ற கட்சிகள் தோன்றி வளர்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கும் அமெரிக்காவில், இன்றும் இரண்டே இரண்டு கட்சிகள் மட்டும் இயங்கி வருவது விந்தையே. ஆனால் அங்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் குடியரசுத் தலைவரின் தேர்தலில் போட்டியிட

பழைய கட்சிகளான குடியரசுக் கட்சி (Republicans), மக்களாட்சிக் கட்சி (Democrats) ஆகியவைகளோடு புதிய கட்சிகள் போட்டியிடுவது எளிதான செயலல்ல என்பதாலும், அரசியலில் புதிய கட்சிகளின் தோற்றம் தலைவர் தேர்தலை சிக்கலுள்ளதாக்கும் என்பதாலும், அங்கு இரு கட்சிகளே இயங்கி வருகின்றன. குடியரசுக் கட்சியும் மக்களாட்சிக் கட்சியும் ஒன்றோடொன்று கீரியும் பாம்புமாய் நடந்து கொண்டாலும், புதிய கட்சிகள் தோன்றும் பொழுது அவற்றை நசுக்க இவை இரண்டும் ஒன்று சேரத் தயங்கியதில்லை. அமெரிக்கா உலகிலேயே தலைச்சிறந்த கூட்டாட்சியாக விளங்குவதற்குத் தனிப்பட்ட காரணம் எதையாவது காட்ட வேண்டுமென்றால் அங்குள்ள இரு கட்சி முறையையேக் (two-Party System) காட்ட வேண்டும் என்பது பேராசிரியர் K. C. வியரின் கருத்தாகும்.

இதுவரைக் கூறப்பட்ட விவரங்களிலிருந்து, ஒரு அரசு கூட்டாட்சியாக இருக்க சில இன்றியமையாத பண்புகள் தேவையென்றும், அது சிறப்பாக இயங்க வேறுசில புண்கள் உதவி செய்கின்றன என்றும் அறிந்து கொண்டோம். அரசின் அதிகாரங்கள் தேசீய அரசு மாநில அரசுகள் ஆகியவற்றிடையே பங்கிடப்படுவதும், இரு தரப்பு அரசாங்கங்களும் அரசியலமைப்பின் எல்லைகளுக்குள் இயங்கி அதன் தலைமைத் தன்மையை ஏற்று நடப்பதும், எழுதப் பெற்ற அரசியலமைப்பொன்றை நிறுவி அதன் தெளிவான சட்டதிட்டங்கள்படி அரசியல் நிறுவனங்கள் செயல்படுவதும், அரசியலமைப்பை நெகிழாத ஆவணமாக்கி அதைத் திருத்தும் முறையில் மத்திய மாநில அரசுகள் இரண்டையும் தொடர்பு படுத்துவதும், அரசாங்கங்களுக்கிடையே தோன்றும் பிணக்குகளைத் தீர்த்துவைக்க தலைமை நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருப்பதும் கூட்டாட்சியின் முக்கியமானப் பண்புகளாகும். அதிகாரப் பிரிவினையின் அடிப்படையில் தேசீய அரசு அமைவதும் அங்க நாடுகள் அனைத்தும் மேலவையில் சமப் பிரதிநிதித்துவம் பெறுவதும், எந்த மாநிலமும் அதன் விருப்பப்படி கூட்டமைப்பிலிருந்து விலகிவிட முடியாதத் தடை இருப்பதும், இருகட்சி ஆட்சிமுறை இயங்குவதும், கூட்டாட்சியை மேலும் சிறந்ததாக்கும் இயல்புகளாகும்.

3. கூட்டாட்சி அரசியலமைப்பும் கூட்டாசி அரசாங்கங்களும்

(1) சட்டத்திலும் நடைமுறையிலும் கூட்டாட்சி (2) ஆஸ்திரேலியா—ஒரு நல்ல கூட்டாட்சி (3) சுவிட்சர்லாந்தில் கூட்டாட்சி (4) கனடா—அரைக் கூட்டாட்சி அரசியலமைப்பையும், கூட்டாட்சி அரசாங்கத்தையும் கொண்டிருத்தல் (5) கூட்டாட்சி அரசியலமைப்புகளும், கூட்டாட்சிக்கு மாறான அரசாங்கங்களும்—தென்அமெரிக்க நாடுகள் (6) அரைக் கூட்டாட்சி அரசியலமைப்புகளும், கூட்டாட்சியோடு தொடர்பற்ற அரசாங்கங்களும் : அ. வெய்மார்க் குடியரசு ஆ. சோவியத்துக் குடியரசு இ. மேற்கு ஜெர்மனி (7) கூட்டாட்சிப் பண்புகளைக் கொண்டிருக்கும ஒற்றை ஆட்சி-இந்தியா (8) நாட்டுக் கூட்டம் [9] தளர்ந்த ஒற்றை ஆட்சி.

1. சட்டத்திலும் நடைமுறையிலும் கூட்டாட்சி

கூட்டாட்சி அரசியலமைப்புகள் இருக்கின்ற நாடுகளிலெல்லாம் கூட்டாட்சி அரசாங்கங்கள் இருக்கின்றன எனக்கூற முடியாது. அரசியலமைப்பின் சட்டதிட்டங்கள் ஒரு மாதிரியாகவும், அரசாங்கத்தின் பழக்க வழக்கங்கள் வேறு மாதிரியாகவும் இருப்பதை பல நாடுகளில் பார்க்கலாம். அரசியலமைப்பின் விதிகள் கூட்டாட்சியை நிறுவியிருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்வதைவிட, அரசாங்கத்தின் நடைமுறைகள் கூட்டாட்சிக் கொள்கையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்வதே முக்கியமாகும். அரசியலமைப்பானது கூட்டாட்சியை நிறுவினாலும், நடைமுறையில் கூட்டாட்சி இயங்காமலிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை ஏராளமாகும். ஏட்டளவில் உட்டாட்சிக்கு வகை செய்யப்பட்டிருந்தால் மட்டும் போதாது; செயலளவிலும் அது கூட்டாட்சியாக நிலவ வேண்டும்.

அரசியலமைப்பின் சட்டத்துக்கும் அரசாங்கத்தின் பழக்கத்துக்கும் தொடர்பில்லாமலிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி வருவதைப் பார்த்தால், அரசியலமைப்பைத் தழுவி அரசாங்கம் அமையும் வழக்கம் மறைந்து வருவதாகத் தோன்றுகிறது. இந்தப் போக்கு அரசியலின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

கூட்டாட்சி அரசின் இயல்புகள் என விளக்கப்பட்ட பண்புகள் அனைத்தும் பொருந்தி இருக்கும் அரசைக் காண்பது கடினம். அமெரிக்க அரசியலமைப்பில் கூட நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கூட்டாட்சிக் கொள்கைக்கு ஒவ்வாத ஒரு குறை இருந்து வந்ததே! 1913 ஆம் ஆண்டுவரை செனட் சபையின் உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களின் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இந்த முறையால் மத்திய அரசின் இயக்கம் ஓரளவுக்கு மாநில அரசுகளால் பாதிக்கப்படக்கூடிய நிலை இருந்தது. செனட்டர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையானது மாநில அரசாங்கத்திடமிருந்து மாநில மக்களுக்கு 1913-ல் தான், அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தப்படி மாற்றிக் கொடுக்கப்பட்டது. ஆனால் அமெரிக்காவானது 1789-லிருந்து 1913-வரை கூட்டாட்சியாகக் கருதப்படுவதற்கில்லை என இதுவரை யாரும் கூறியதில்லை. ஆரம்ப காலத்திலிருந்தே அதன் பண்புகளில் கூட்டாட்சித் தத்துவமே மிக மேலானதாக இருந்தது. ஒரு அரசியலமைப்பானது நூற்றுக்கு நூறு பங்கு கூட்டாட்சியின் எல்லாப் பண்புகளையும் கொண்டிருந்தால்தான் அதைக் கூட்டாட்சி அரசியலமைப்பு என அழைக்கலாம் என நினைக்கக்கூடாது; கூட்டாட்சிப் பண்புகள் மிகுந்து காணப்படும் எந்த அரசியலமைப்பையும் கூட்டாட்சி என அழைப்பதில் தவறில்லை.

2. ஆஸ்திரேலியா—ஒரு நல்ல கூட்டாட்சி

இன்றிருக்கும் கூட்டாட்சி அரசியலமைப்புகளை ஆராய்ந்தால், ஆஸ்திரேலியாவின் அரசியலமைப்பு (1900) சிறந்த கூட்டாட்சி அரசியலமைப்புக்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குவதைக் காணலாம். அது மத்திய அரசையும் மாநில அரசுகளையும் நிறுவி, இரு அரசுகளும் தனித்தனியே இயங்க அவற்றின் ஆட்சிப்பரப்பை வரையறுத்து, ஒவ்வொன்றும் அததற்குரிய எல்லைக்குள் சுயேச்சையாக இயங்க வழிசெய்கிறது. மத்திய அரசு மட்டுமோ அல்லது மாநில அரசுகள் மட்டுமோ அரசியலமைப்பை மாற்றி, ஒன்றின் அதிகாரங்களை மற்றொன்று தனதாக்கிக் கொள்ள முடியாதவாறு அரசியலமைப்பு நெகிழாத் தன்மையுடையதாகவும் இருக்கிறது. தேசிய அரசும் மாநிலங்களும் இணைந்தே அதைத் திருத்தக்கூடும்.

மத்தியப் பாராளுமன்றம் போன்றே மாநில சட்டமன்றங்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. மத்தியப் பாராளு மன்றம் மாநில சட்டமன்றங்களை அடக்கி ஆளவோ, மாநில சட்ட மன்றங்கள் மத்தியப் பாராளுமன்றத்தை அடக்கி ஆளவோ, அரசியலமைப்பு அனுமதிக்கவில்லை. ஆனால் இரண்டும் அரசியலமைப்பின் மேல் நிலையை ஏற்று, அதற்கு உட்பட்டு நடப்பது அவசியமாக்கப்படுகிறது. மத்திய அரசோ மாநில அரசுகளோ அரசியலமைப்புக்கு அப்பாற்பட்ட செயல்களைச் செய்தால், அவற்றை அத்துமீறிய செயல்கள் என்றும், எனவே அவை செல்லாதென்றும் அறிவிக்கக்கூடிய அதிகாரமுடைய பெருநீதி மன்றம் ஒன்றையும் அரசியலமைப்பு நிறுவுகிறது. இவ்வளவுக்கும் மேலாக, அரசியலமைப்பு அது ஒரு 'பொதுநலக் கூட்டாட்சியை' அல்லது 'பொதுவுரிமைக் கூட்டரசை' (Federal Commonwealth) நிறுவுவதாக அறிவிக்கிறது. எனவே, நல்லக் கூட்டாட்சி அரசியலமைப்புக்கு ஆஸ்திரேலியாவைவிட சிறந்ததொரு கூட்டாட்சி அரசியலமைப்பைக் காட்டுவது கடினம்.

3. சுவிட்சர்லாந்தில் கூட்டாட்சி

சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய அரசுகள் கூட்டாட்சிகளாகக் கருதப்பட்டாலும், அவற்றின் அரசியலமைப்புகளை அமெரிக்க ஆஸ்திரேலிய அரசியலமைப்புகளைப்போல குற்றங் குறையற்ற கூட்டாட்சி அரசியலமைப்புகள் எனக் கருதுவதற்கில்லை. முதலாவதாக சுவிஸ் அரசியலமைப்பை ஆராயலாம். அதில் கூட்டாட்சிக்கு முரணான கொள்கைகள் இரண்டு இருப்பதாகத் தோன்றுகிறது. முதலாவதாக, தேசீயப் பாராளுமன்றத்தின் மேலவையான மாநிலங்கள் சபையின் அமைப்பு கூட்டாட்சிக்குப் பொருத்தமான வகையில் அமையவில்லை. இச்சபைக்கு ஒவ்வொரு மாநிலமும் இரண்டு உறுப்பினர்களை அனுப்புகின்றன; ஆனால் அவர்கள் தேர்த்தெடுக்கப்படும் விதமும், பதவிக் காலமும், அந்தந்த மாநிலத்தால் தீர்மானிக்கப் படுகின்றன; அவர்களுக்குரிய ஊதியமும் மாநிலங்களால்தான் தரப்படுகின்றன. பல மாநிலங்களின் பிரதிநிதிகள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், சில மாநிலங்களின் பிரதிநிதிகள் அவற்றின் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இந்த முறையானது மத்திய அரசை ஓரளவுக்கு மாநில அரசுகளைச் சார்ந்திருக்கும்படி செய்கிறது. நல்ல காலமாக நான்கு மாநிலங்களின் பெர்ன் (Berne), ப்ரிபர்க் (Fribourg), செண்ட் கேலன் (St. Gallen), நியூ சேட்டல் (New Chatel)—பிரதிநிதிகள் மட்டுமே அவற்றின் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப் படுவதாலும், மாநிலங்கள்

சபை சிறப்பான செல்வாக்கு எதுவுமில்லாமல் மிகச் சாதாரண மானதொரு நிறுவனமாக இயங்குவதாலும், இச்சபையின் அமைப்பு சுவிஸ் கூட்டாட்சி முறையைப் பாதிப்பதில்லை.

இரண்டாவதாக, சுவிஸ் நீதிமன்றங்கள் தேசியப் பாராளு மன்றம் இயற்றும் சட்டங்கள் அனைத்தையும் செல்லத்தக்கவை என ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அரசியலமைப்பு வற்புறுத்து கிறது. அச்சட்டங்கள் அரசியலமைப்பால் வகுக்கப்பட்டிருக்கும் எல்லைகளை மீறக் கூடியனவாய் இருப்பினும், மாநிலங்களைப் பாதிக் கக்கூடிய வகையில் அவற்றிற்குரிய இனங்கள் மீது இயற்றப்பட் டிருந்தாலும், அவை செல்லாது என அறிவிக்கப்பட முடியாது. ஆனால் நீதிமன்றங்களுக்கு மாநிலங்களின் சட்டங்களை அரசிய லமைப்புக்கு முரணானவை எனக்கூறி அவற்றை செல்லாதவை என அறிவிக்கக்கூடிய அதிகாரம் உண்டு. மத்திய அரசை மாநிலங்களின் செயல்களிலிருந்து காக்கும் நீதிமன்றங்களுக்கு மாநிலங்களை மத்திய அரசின் செயல்களிலிருந்து காக்கக்கூடிய அதிகாரமில்லாமலிருப்பது ஒரு குறைதான்; அமெரிக்க ஆஸ்தி ரேலிய அரசியலமைப்புகளில் இந்தக் குறைக்கு இடமில்லை. ஆனால் சுவிட்சர்லாந்தில் மத்திய அரசு, அதிகாரப் பங்கீட்டைப் பொருட்படுத்தாமல், மாநிலங்களைப் பாதிக்கக்கூடிய சட்டங்களை இயற்றுவதென்பது நடைமுறையில் சாத்தியமல்ல; நீதிமன்றங்கள் அவற்றை நிராகரிக்க முடியாதென்றாலும், வாக்காளர்களாகப் பார்த்து வேண்டாமென்று நீக்க முடியும். எட்டு மாநிலங்களோ அல்லது 30,000 வாக்காளர்களோ மத்திய அரசின் சட்ட மொன்றைக் குடியொப்பத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கோரினால், அது உடனடியாக மக்கள் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும்; வாக்காளர்களின் தீர்ப்பே இறுதியான தீர்ப்பாகும் எனவே, சுவிட்சர்லாந்தில் அரசியலமைப்பானது அதிகாரப பங் கீட்டைக் காப்பதற்குத் தவறிவிட்டது எனக் குற்றஞ் சாட்டுவதில் பொருளில்லை. இதுவரைக் கூறப்பட்டவையிலிருந்து சுவிஸ் அரசியலமைப்பில் ஓரிரு குறைகள் இருப்பதாகத் தோன்றினாலும், அவை அரசியலமைப்பின் கூட்டாட்சி பண்பைப் பாதிக்கவில்லை என்பது தெரியவரும்.

4. கனடா—அரைக்கூட்டாட்சி அரசியலமைப்பையும் கூட்டாட்சி அரசாங்கத்தையும் கொண்டிருத்தல்

அடுத்து, கனடாவின் அரசியலமைப்பும் கூட்டாட்சி அரசிய லமைப்பா இல்லையா என்பதை ஆராய்வோம். அரசின் அதிகா ரங்கள் மத்திய மாநில அரசுகளிடையே [illegible]

கின்றன. எந்தெந்த இனங்கள் மாநிலங்களுக்கு உரியவை எனக் கூறும் அரசியலமைப்பு, எஞ்சியவற்றை மத்திய அரசுக்கு உரிமையாக்குகிறது. அரசியலமைப்பை மத்திய அரசோ மாநில அரசுகளோ மாற்றமுடியாது; அவ்வதிகாரம், குறிப்பாக அதிகாரப் பங்கீட்டைத் திருத்தும் அதிகாரம், இன்றும் தாய்நாட்டுப் பாராளு மன்றமான பிரிட்டிஷ் பாராளுமன்றத்திடம் இருக்கிறது. மத்திய அரசானது மாநிலங்களின் இனத்தின்மீது சட்டம் இயற்றிவிடாமலும், மாநில அரசுகளானவை மத்திய அரசின் இனங்கள்மீது சட்டம் இயற்றிவிடாமலும், நீதிமன்றங்கள் பார்த்துக்கொள் கின்றன. நல்ல கூட்டாட்சி ஒன்றை நிறுவ அரசியலமைப்பு முயன்றிருந்த போதிலும், கூட்டாட்சிக்கு முரணான சில செயல் களுக்கு அது இடம் கொடுக்கிறது. அமெரிக்காவில் தென் வட மாநிலங்களிடையே உள் நாட்டுப் போர் (1861—1865) நடை பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் கனடாவின் அரசியலமைப்பு தீர்மானிக்கப்பட்டது, அதை மிகவும் பாதித்திருக்கிறது; பிரிவினைப் பேச்சுக்கு இடங் கொடுக்காத வகையில் மாநிலங்களின் அதி காரங்கள் அமையவேண்டும் என விருடபப்பட்டதில் வியப்பில்லை. நாடுகள் தங்கள் சொந்த வரலாற்றின் அனுபவங்களுக்கு ஏற்ற மாதிரி அரசியலமைப்புகளை அமைத்துக் கொளவது வழக்கம்; அக்கம் பக்கத்திலுள்ள நாடுகளின் அனுபவங்களுக்கு ஏற்ற மாதி ரியும் அரசியலமைப்புகள் அமைக்கப்படுவதுண்டு என்பதற்குக் கனடாவை உதாரணமாகக் காட்டலாம். கனடாவில் மாநில சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களை, மத்திய அரசு தள்ளிவிடலாம்; மாநிலங்கள் அவற்றிற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்கள் மீது சட்டம் இயற்றியிருந்தாலும், அது அரசியலமைப் பால் வகுக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் இருந்தாலும், அவற்றை மத்திய அரசு தடை செய்ய முடியும். மாநிலங்கள் அவற்றின் கவர்னர்களுக்கு அனுப்பும் மசோதாக்களை, மத்திய அரசு அதன் பரிசிலனைக்கு அனுப்பும்படி கவர்னர்களைக் கேட்கலாம்; அவ்வாறு அனுப்பப்படும் மசோதாக்களை மத்திய அரசு ஏற்கவோ மறுக் கவோ செய்யலாம். மாநிலங்களின் உயர் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரமும் மத்திய அரசிடம்தான் இருக்கிறது மேலே கூறப் பட்ட செய்திகளிலிருந்து, கனடாவில் மத்திய அரசும் மாநில அரசுகளும் சம அந்தஸ்துடையவையாய் நிறுவப்படவில்லை என் பதும், அரசியலமைப்பு மத்திய அரசை உயர்வாகவும், மாநில அரசுகளைத் தாழ்வாகவும் நடத்துகிறது என்பதும் தெரிகிறது.

ஆனால் கனடாவின் அரசாங்கமோ அரசியலமைப்பின் சட்ட திட்ட [illegible]

சற்று மாறி அமைந்திருப்பதைப் பார்க்கலாம். அரசியலமைப்பை வேண்டுமென்றால் முழுக்கூட்டாட்சி யல்ல, அரைக் கூட்டாட்சி (Quasi-federation) எனக் கூறலாம். ஆனால் அரசாங்கத்தையும் அவ்வாறு கூறுவது பொருத்தமல்ல. அரசாங்கத்தின் பழக்க வழக்கங்களைப் பார்த்தால், அது ஒரு நல்ல கூட்டாட்சியாக இயங்கி வருகிறது என்பதை ஒப்புக்கொள்ளத் தயங்க மாட்டோம். மாநிலங்களின் சட்டங்களைத் தடை செய்யும் அதிகாரத்தையும், அவற்றின் மசோதாக்களை ஏற்க மறுக்கும் அதிகாரத்தையும் மத்திய ஆட்சி அடிக்கடிப் பயன்படுத்துவதில்லை. இவ்வதிகாரங்கள் வழக்கற்றுப்போன அதிகாரங்கள் எனக்கூற முடியாவிட்டாலும், இவை மாநிலங்களின் வெறுப்பைத் தேடிக்கொள்ளும் வகையில் பயன்படுத்தப்படுவதில்லை என்பது அறியத்தக்கது; ஏட்டளவில் இவை பயங்கரமானவையாய் தோன்றினாலும் நடைமுறையில் மாநிலங்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற அளவுக்கு மட்டுமீறி கையாளப்படுவதில்லை. அரசியலமைப்புப்படி மாநிலங்களின் கவர்னர்களை மத்திய அரசே நியமிக்கும்; மாநிலங்களின் அமைச்சர்களை அவற்றின் கவர்னர்களே நியமிப்பார்கள்; இதன் விளைவாக மத்திய அரசின் செல்வாக்கு மாநிலங்களில் பரவ இடமிருக்கும். ஆனால் உண்மையில் நடைமுறை வேறு; எந்த மாநில கவர்னரும் மத்திய அரசின் விருப்பப்படியோ, அல்லது அவர் சொந்த விருப்பப்படியோ அமைச்சர்களை நியமிப்பதில்லை. யார் யார் அமைச்சரவையில் இடம் பெறுவது என்பது சட்டமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சித் தலைவரின் முடிவுக்கு விடப்படுகிறது; அவர் முடிவே இறுதியான முடிவாகும். மாநிலங்களின் முக்கியமான நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை அரசியலமைப்பு மத்திய அரசுக்கு அளிக்கிறது; ஆனால் மத்திய அரசு அதற்குச் சாதமாகத் தீர்ப்பளிக்கக்கூடிய நீதிபதிகளைத்தான் நியமிக்கிறது எனக் கூறுவதற்கில்லை. கனடாவின் அனுபவங்களைக் கவனித்தால், தேசிய அரசு அதன் அதிகாரங்களைக் கூடுமானவரைக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதிக்காத வகையில் பயன்படுத்திவருவதை உணரலாம். எனவே K. C. வியர் கனடாவின் அரசியலமைப்பை அரைக் கூட்டாட்சி எனவும், அரசாங்கத்தைக் கூட்டாட்சி எனவும் வருணிக்கிறார்.

5. கூட்டாட்சி அரசியலமைப்புகளும் கூட்டாட்சிக்கு மாறான அரசாங்கங்களும்: தென் அமெரிக்க நாடுகள்

தென் அமெரிக்கக் குடியரசுகள் பலவற்றில், அரசியலமைப்புகள் கூட்டாட்சி அரசியலமைப்புகளாகத் தோன்றினாலும்,

அவற்றின் அரசாங்கங்கள் கூட்டாட்சிகளாகத் தோன்றவில்லை. பிரேஸிலின் (Brazil) அரசியலமைப்பு (1891) ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பாகக் காட்சியளிக்கிறது. மத்திய அரசின் அதிகாரங்களை வரையறுத்துக்கூறும் அரசியலமைப்பு எஞ்சியவற்றை மாநிலங்களுக்கு அளிக்கிறது. பொதுப் பாராளுமன்றத்தின் இரு அவைகளில் ஒன்றை மாநிலங்கள் அவை என்றும், மற்றொன்றை மக்கள் அவை என்றும் அழைக்கும்படி அமைந்திருக்கின்றன. ஆனால் அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் மட்டும் மத்திய அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது; இது ஓரளவுக்கு மாநில அரசுகளை மத்திய அரசின் தயவில் வைத்திருப்பதாகக் கூறலாம். ஆனால் அரசியலமைப்பு எப்படி இருந்தபோதிலும், அரசாங்கத்தின் நடைமுறை கூட்டாட்சிக்கு ஒத்ததாக இல்லை என நம்பப்படுகிறது. மாநிலங்களை மைய ஆட்சிக்கு உட்படுத்தும் போக்கு நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது என்று கூறப்படுவதால், பிரேஸிலை கூட்டாட்சி அரசாங்கமென எண்ணுவதற்கில்லை. அர்ஜெண்டினா (Argentina) நாட்டின் அரசியலமைப்பும் (1853) கூட்டாட்சியலமைப்பாகத் தோற்றமளித்தது. அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் அதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பேரவையிடம் (Convention) இருந்தது. ஆனால் நடைமுறையில் அரசாங்கத்தின் பழக்கவழக்கங்கள் கூட்டாட்சியைச் சிதைக்கும் வகையில் அமைந்திருந்தன. மத்திய அரசு மாநிலங்களின் அலுவல்களில் அடிக்கடி தலையிட்டு வந்தது, மாநில அரசாங்கங்களைப் பயனற்றவையாக்கினவாம். எனவே அர்ஜெண்டினா அரசாங்கத்திற்கும் கூட்டாட்சி என்ற பெயர் பொருத்தமற்றதாகும். அமெரிக்க அரசியலமைப்பைத் தழுவி எழுதப்பெற்ற மெக்ஸிகோவின் (Mexico) அரசியலமைப்பும் (1917) கூட்டாட்சிக்குத்தான் வகை செய்கிறது; வெனிசூலாவின் (Venezuhela) அரசியலமைப்பும் (1936) கூட்டாட்சி அரசியலமைப்பு என்றே அழைக்கப்படுகிறது. ஆனால் மெக்சிகோவிலோ, வெனிசூலாவிலோ அரசாங்க நடைமுறைகள் கூட்டாட்சிக்குச் சாதகமாக அமையவில்லை எனக்கூறப்படுகிறது. மேலே கூறப்பட்ட விவரங்களிலிருந்து பிரேஸில், அர்ஜெண்டினா, மெக்ஸிகோ, வெனிசூலா ஆகிய நாடுகளின் அரசியலமைப்புகள் கூட்டாட்சி அரசியலமைப்புகள் என அழைக்கப்படக்கூடிய தகுதியைப் பெற்றாலும், அவற்றின் அரசாங்கங்கள் கூட்டாட்சிக் கொள்கைக்கு மாறான பழக்கவழக்கங்களுக்கு இடம் கொடுப்பதால், அவற்றை உண்மையானக் கூட்டாட்சிகள் என ஏற்றுக்கொள்வதற்கில்லை.

6. அரைக் கூட்டாட்சி அரசியலமைப்புகளும், கூட்டாட்சியோடு தொடர்பற்ற அரசாங்கங்களும்: அ. வெய்மார்க் குடியரசு

அடுத்து, பழைய ஜெர்மானியக் குடியரசின் அரசியலமைப்பும் 1919-33 சோவியத்துக் குடியரசின் அரசியலமைப்பும் (1936) எப்படிக் கருதப்படலாம் என்பதை ஆராயலாம். 'வெய்மார் அரசியலமைப்பு' (Weimar Consttution) என அழைக்கப்படும் ஜெர்மானிய அரசியலமைப்பு ஓரளவுக்குக் கூட்டாட்சி அரசியலமைப்பாகத் தோன்றுகிறது. அதிகாரங்களைப் பங்கிடும் அரசியலமைப்பு, மத்திய அரசின் அதிகாரங்கள் எவை எவை எனக் கூறி, எஞ்சியவற்றை மாநிலங்களுக்கு அளித்தது. இரு அரசாங்கங்களுக்கிடையே எழும் பூசல்களைத் தீர்த்துவைக்கத் தலைமை நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டிருந்தது. ஆனால் கூட்டாட்சிக் கொள்கைக்குப் புறம்பான பழக்க வழக்கங்கள் சில அவ்வரசாங்கத்தில் காணப்பட்டன. முதலாவதாக, தேசியப் பாராளுமன்றத்தின் மேலவையான ரெய்ச் ஸ்ரட்டில் (Reichsrat) உறுப்பினர்கள் மாநில அரசாங்கங்களால் நியமிக்கப்பட்டனர். ஆனால் இந்த மேலவை அதிகமான அதிகாரங்களற்ற நிறுவனமாக இருந்ததாலும், அதன் உறுப்பினர்கள் அவர்களை அனுப்பிய மாநிலங்களின் ஆணைப்படி வாக்களிக்கும்படி வற்புறுத்தப்படாமல் சொந்த விருப்பப்படி வாக்களிக்க முடிந்ததாலும், இது கூட்டாட்சி முறையை மிகுதியாகப் பாதிக்கவில்லை. இரண்டாவதாக, அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உரிமையாக்கப்பட்டிருக்கிறது; இருந்தாலும் இதைக்கூட ஒரு பெரிய குறையாகக் கருதுவதற்கில்லை. அரசியலமைப்பின் திருத்தங்களுக்கு மேலவையின் இணக்கமும் தேவைப்பட்டது; கீழவை முன்மொழியும் திருத்தங்களை அது ஏற்கத் தயாராக இல்லை என்றால், அவற்றை மக்கள் தீர்ப்புக்கு வைக்க வேண்டுமென அது கேட்க முடிந்தது; திருத்தங்கள் மாநிலங்களைப் பாதிக்கக்கூடியவையாய் இருந்தால், அதற்றை மேல்சபை ஏற்க மறுத்து குடியொப்பத்திற்கு விடப்பட வேண்டுமெனக் கேட்கக் கூடிய அதிகாரம் மாநிலங்களுக்கு இருந்தது. எனவே அரசியலமைப்பைத் திருத்தும் முறையைக் கூட்டாட்சிக்கு முரணானதாகக் கருதுவதற்கு இடமில்லை. ஆனால் அடுத்துக் கூறப்படும் குறைகளுக்கு சமாதானம் கூறமுடியாத நிலையில் இருக்கிறோம். மாநிலங்களின் வருவாய் மூலங்களை மத்திய அரசே நிர்ணயிருந்தது; இவ்வதிகாரத்தின் பயனாக மாநிலங்களின் இயக்கத்தை எத்திசையில் வேண்டுமென்றாலும் திருப்பக்கூடிய நிலையில் மத்திய அரசு இருந்தது மாநிலங்களுக்கு நிதித்துறையில் சுதந்திரமில்லாதிருந்தது ஒரு பெரிய குறை என்பதில் ஐயமில்லை. மேலும் அரசின் அதிகாரங்களில் பெரும்பாலானவை மத்திய அரசுக்கே ஒதுக்கப்பட்டிருந்தனவாம். மத்திய அரசின் சட்டங்கள் மாநில அரசுகளின் சட்டங்களோடு

முரண்பட்டால, மத்திய அரசின் சட்டங்களே செல்லும் என அரசியலமைப்பு அறிவித்ததால், மாநிலங்களின் சட்டமியற்றும் அதிகாரம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. எனவே வெய்மார் அரசியலமைப்பை ஒரு அரைக் கூட்டாட்சி அரசியலமைப்பு என அழைக்கலாம் என்றாலும், அதன் அரசாங்கத்தைக் கூட்டாட்சியோடு தொடர்புபடுத்துவதற்கு ஆதாரமில்லை. மத்திய அரசு மாநில அரசுகளை விழுங்கிவிடக்கூடிய நிலையில் இருந்தது கூட்டாட்சிக் கொள்கையின் அடிப்படைக்கே விரோதமானதாகும்.

ஆ. சோவியத்துக் குடியரசு

சோவியத்துக் குடியரசின் அரசியலமைப்பு, வெய்மார் குடியரசின் அரசியலமைப்பைப் போன்றே ஒரு அரைக் கூட்டாட்சிக்குத்தான் வகை செய்கிறது. பெயருக்கு அதிகாரங்கள் பங்கிடப்பட்டிருக்கின்றன; முக்கியமான பல பொருள்கள் மத்திய அரசின் பொறுப்பில் இருக்கின்றன. அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரமும் தேசியப் பாராளுமன்றத்துக்கே (Supreme Soviet) தரப்பட்டிருக்கிறது. நீதித் துறையிலும் மத்திய அரசு மாநிலங்களைக் கட்டுப்படுத்துகிறது. வரிப் பணத்தை மத்திய, மாநில, தல அரசுகள் எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதை மத்திய அரசே தீர்மானிக்கலாம். 1944ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தமொன்று மாநிலங்களின் அதிகாரங்களை அதிகரிப்பதாகத் தோன்றும். ஆனால் உண்மையில் அவ்வாறு இல்லை. ஒவ்வொரு மாநிலமும் படைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது; ஆனால் அப்படைகள் இயங்க வேண்டிய முறை பற்றி மத்திய அரசு சட்டம் செய்யலாம். ஒவ்வொரு மாநிலத்திற்கும் அயல்நாடுகளோடு நேரடித் தொடர்புகள் வைத்துக்கொள்ளவும், உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும், தூதர்களைப் பரிமாறிக் கொள்ளவும் அதிகாரமுண்டு; ஆனால் மத்திய அரசு மாநில அரசுகளின் வெளிநாட்டு அலுவல்களை ஒழுங்கு படுத்தலாம். மாநிலங்களுக்குச் சிறப்பான அதிகாரங்கள் தரப்பட்டிருப்பதில் சந்தேகமில்லை; ஆனால் அவை மத்திய அரசின் விருப்பத்திற்கு மாறாகப் பயன்படுத்தப்பட முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. எனவே சோவியத்துக் குடியரசின் அரசாங்கத்தைக் கூட்டாட்சி என அழைக்க முடியாது; அதை அரைக் கூட்டாட்சி எனக் கருதலாமா என்பதுகூட சந்தேகத்துக்குரியதாகும். போரிலும், போருக்குத் தன்னைத் தயாராக்கிக் கொள்ளும் செயல்களிலும் சதா சர்வ காலமும் ஈடுபட்டிருக்கும் எந்த நாட்டிலும் கூட்டாட்சி தழைக்க முடியாது.

6. மேற்கு ஜெர்மனி

இன்றைய மேற்கு ஜெர்மனியின் அரசியலமைப்பான (1950) 'அடிப்படைச் சட்டத்தில் (Basic Law) சில கூட்டாட்சி கூறுகள் தென்படுகின்றன; அதை அரைக் கூட்டாட்சி என அழைக்கலாம். மத்திய அரசு தனியாகவும், மாநில அரசுகளோடு பொதுவாகவும் அனுபவிப்பதற்கென ஏராளமான இனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய சட்டங்களை நிறைவேற்றுவது மாநிலங்களுக்கு விடப்பட்டிருந்தாலும் அவற்றை எவ்வாறு நிறைவேற்றவேண்டும் என நிர்ணயிக்கவும், அவை சரியாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கவும் மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. பொதுப் பாராளுமன்றத்தின் மேலவையின் (Bundesrat) அமைப்பும் கூட்டாட்சிக்குச் சாதகமாக இல்லை. மேலவையை மாநிலங்களின் அவை எனக் கூறுவதைவிட, மாநில அரசாங்கங்களின் அவை எனக்கூறுவதே பொருத்தமாகும். ஒவ்வொரு மாநிலத்துக்குமுரிய பிரதிநிதிகளை அந்தந்த மாநில அரசாங்கமே நியமிக்கிறது; அதன் விருப்பப்படித்தான் அவர்கள் வாக்களிக்க வேண்டும்; அவர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளவும் (Recall), பதிலாகப் புதிய பிரதிநிதிகளை அனுப்பவும், அதற்கு அதிகாரமுண்டு; இந்த அளவிற்கு மாநில அரசாங்கங்கள் மத்தியப் பாராளுமன்றத்தின் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இருப்பது கூட்டாட்சிக்கு உகந்ததல்ல. எனவே மேற்கு ஜெர்மனியின் அரசியலமைப்பை அரைக் கூட்டாட்சி எனக் கூறினாலும், அதன் அரசாங்கத்தை அந்தப் பெயரால் அழைப்பதுகூடப் பொருந்தாதாகையால், அதைக் கூட்டாட்சியே அல்ல என ஒதுக்கிவிடுவதான் முறையாகும்.

7. கூட்டாட்சிப் பண்புகளைக் கொண்டிருக்கும் ஒற்றை ஆட்சி—இந்தியா

இந்தியக் குடியரசின் அரசியலமைப்பை (1950) ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு எனக் கருதமுடியாது; அது தன்னைக் கூட்டாட்சி என்பதாக அறிவித்துக்கொள்ளவும் இல்லை; ஆனால் கூட்டாட்சி அரசியலமைப்பின் பண்புகளில் சில அதில் காணப்படுகின்றன. அதிகாரப் பங்கீட்டை விவரிக்கும் அட்டவணையில் மைய அரசுப் பட்டியல் ஒன்றும், மாநில அரசுகள் பட்டியல் ஒன்றும், இரண்டிற்கும் பொதுவானப் பட்டியல் ஒன்றும் இருக்கின்றன. அதிகாரப் பங்கீட்டைத் திருத்தி அமைக்க மத்தியப் பாராளுமன்றத்தின் இசைவும், மாநிலப் பாராளுமன்றங்களில் பெரும்பாலானவற்றின் இசைவும் இன்றியமையாததாகும். இரு

அரசுகளுக்கிடையே தோன்றும் தகராறுகளைத் தீர்த்துவைக்க மேலான அதிகாரமுடையத் தலைமை நீதிமன்றம் ஒன்றையும் அரசியலமைப்பு நிறுவியிருக்கிறது. இவ்வளவு ஏற்பாடுகளையும் அரசியலமைப்பு செய்திருந்தாலும், அதில் கூட்டாட்சிக்குப் பாதகமான சில ஏற்பாடுகளும் இடம் பெற்றிருக்கின்றன. அரசியலமைப்பு அனேகமாக முக்கியமான இனங்கள் அனைத்தையும் மத்திய அரசின் ஆட்சிக்கு உட்படுத்தி இருக்கிறது. மேலும், மத்திய அரசாங்கம் மாநிலங்களின் அலுவல்களில் தலையிடுவதற்கு அரசியலமைப்பு இடமளிக்கிறது; இது கூட்டாட்சி முறைக்கு ஏற்றதல்ல. இந்தியப் பாராளுமன்றமானது, இருக்கின்ற மாநிலங்களின் பகுதிகளை வெட்டியும் ஒட்டியும் புதிய மாநில மொன்றை உருவாக்கவும், அவற்றின் நிலப்பரப்பைக் கூட்டவும் குறைக்கவும், எல்லைகளை மாற்றி அமைக்கவும், பெயர்களைக்கூட மாற்றவும் செய்யலாம். பாதிக்க படும் மாநிலங்களின் கருத்துக்களைத் தெரிந்து கொண்ட பிறகே மேற்கண்ட மசோதக்கள் தேசியப் பாராளுமன்றத்தில் முன் மொழியப்படலாம்; ஆனல் அம்மாநிலங்களின் இசைவைப் பெறவேண்டியது அவசியமில்லை. மாநிலங்கள் இருப்பதும் இல்லாதிருப்பதும் மத்திய அரசின் தயவைப் பொருத்ததாக இருப்பது கூட்டாட்சி முறைக்கு முற்றிலும் எதிரான முறை என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. மேலும், நெருக்கடி காலங்களில் இந்தியக் கூட்டாட்சி ஒற்றை ஆட்சியாக மாற்றப்படுவதற்கு அரசியலமைப்பு வகை செய்கிறது. போராலோ, அன்னிய ஆக்கிரமிப்பாலோ, உள்நாட்டுக் குழப்பத்தாலோ இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து விளையக்கூடிய நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாகக் குடியரசுத் தலைவர் அறிவித்தால், மாநிலங்கள் பட்டியலிலுள்ள இனங்கள் மீது சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசு பெறும். அதிகாரப் பங்கீட்டையே தற்காலிகமாகத் தள்ளிவைக்கக் கூடிய நிலை விரும்பத்தக்கதல்ல. மேலும், மாநிலமொன்றின் அரசாங்கம் அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்டு இயங்க முடியாத சூழ்நிலை தோன்றி யிருப்பதாகக் குடியரசுத் தலைவர் கருதினல், அம்மாநில அரசாங்கத்தின் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கு மாற்றப்படலாம். நிதித்துறையில் நெருக்கடி நிலவுவதாக அறிவிக்கப்படும்காலங்களில், மாநிலங்களில் பணமசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கோரப்படலாம். மத்திய அரசுமாநிலங்களின் அலுவல்களில்இது போன்றுதலையிடக்கூடிய அதிகாரமளிக்கும் எந்த அரசியலமைப்பையும் கூட்டாட்சி அரசியலமைப்பெனக் கூறமுடியாது. நடைமுறையில், மத்திய அரசின் நெருக்கடி அதிகாரங்கள் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. K. C. வியர் இந்திய அரசியலமைப்பானது

கூட்டாட்சிப் பண்புகளைக் கொண்டிருக்கும் ஒற்றை ஆட்சியைத் தோற்றுவிக்கிறதே ஒழிய, ஒற்றை ஆட்சிப் பண்புகளைக் கொண்டிருக்கும் கூட்டாட்சியைத் தோற்றுவிக்கவில்லை என்று கூறியிருப்பது சிந்திக்கத் தக்கது.

1957-ல் தோன்றிய மலேயாவின் (Malaya) அரசியலமைப்பில் இந்திய அரசியலமைப்பின் செல்வாக்கைப் பார்க்க முடிகிறது. அரசியலமைப்பு மத்திய மத்திய அரசுக்கு ஏராளமான அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறது. நெருக்கடி சமயங்களில் கூட்டாட்சியானது ஒற்றை ஆட்சியாக மாற்றப்படுவதற்கு அது இடமளிக்கிறது. எனவே, மலேயாவின் அரசியலமைப்பை ஒரு அரைக் கூட்டாட்சி அரசியலமைப்பு என்றும், அதன் அரசாங்கத்தை ஒரு அரைக் கூட்டாட்சி அரசாங்கம் என்றும் கருதலாம். 1960-ல் தோன்றிய நைஜீரியாவின் (Nigeria) அரசியலமைப்பில் கூட்டாட்சியின் இயல்புகளில் சில காணப்படுகின்றன. அதிகாரப் பங்கீட்டை செய்யும் அரசியலமைப்பு, நெருக்கடி காலங்களில் அதை நீக்கி வைக்க அனுமதிக்கிறது. மலேயாவைப் போன்றே நைஜீரியாவிலும் அரசியலமைப்பும் அரசாங்கமும் அரைக் கூட்டாட்சியைத்தான் நிறுவி இருக்கின்றன. தெற்கு ரொடீசியா, வடக்கு ரொடீசியா, நியாசாலாந்து ஆகிய மூன்று மாநிலங்களைக் கொண்டு 1953-ல் நிறுவப்பட்ட ரொடீசியா-நியாசாலாந்து (Rhodesia and Nyasaland) அரசியலமைப்பும் அரசாங்கமும் நல்லக் கூட்டாட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன ஆனால் ஆப்பிரிக்க மக்களும் ஐரோப்பிய மக்களும் ஒரே கூட்டாட்சியில் சேர்ந்து வாழ்வது இயலாத காரியமாய் இருந்ததாலும், ஐரோப்பியர்களிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பதை ஆப்பிரிக்கர்கள் விரும்பாததாலும், இக்கூட்டாட்சி பத்து ஆண்டுகளுக்குப் பிறகு கலைந்தது. 1957-ல் நிறுவப்பட்ட மேற்கு இந்தியத் தீவுகளின் (West Indies) கூட்டாட்சியும் ஆறு ஆண்டுகளே நீடித்தது. அதன் அரசியலமைப்பு நல்ல கூட்டாட்சி அரசியலமைப்புக்கு உதாரணமாக விளங்கியது; ஆனால் மத்திய அரசு சட்ட ரீதியாகவோ நடைமுறையிலோ போதுமான அதிகாரங்களை அனுபவிக்காததனால், அதுவும் விரைவில் கலைந்தது.

8. நாட்டுக் கூட்டம்

மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒன்றை மற்றொன்று சார்ந்திராமல் சுதந்திரமாக இயங்கக்கூடிய அரசு முறையே கூட்டாட்சியாகும் என்பது முன்பே கூறப்பட்டது. மத்திய அரசானது மாநில அரசுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் முறையை என்ன என்று

அழைப்பது? அதை ஒரு 'நாட்டுக் கூட்டம்' (Confederation) என அழைக்கலாம் என்கிருர்கள். ஐக்கிய நாட்டின் நாட்டுக் கூட்டத்தின் விதிகள் (Articles of Confederation of the United States, 1777), ஆஸ்த்திரிய—ஹங்கேரி உடன்பாடு (Anstro-Hungarion Compromise, 1867), ஜெர்மானியப் பேரரசின் அரசியலமைப்பு (German Imperial Constitution, 1871), சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தம் (Covenant of the League of Notions, 1919), ஆகியவற்றை நாட்டுக்கூட்ட அரசியலமைப்புகளுக்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.) (இவை அனைத்திலும் மைய அரசுகள் அங்கநாடுகளின் தயவை நம்பி யிருந்தன. 1579-ல் தோன்றிய ஐக்கிய நெதர்லாந்தின் (United Netherlands) அரசியலமைப்பை E. A. ப்ரீமேன் ஒரு கூட்டாட்சியாகக் கருதலாம் என்று கூறினாலும், அது நாட்டுக் கூட்டத்தின் அரசியலமைப்பாகவே தோன்றுகிறது. நெதர்லாந்தின் நாட்டுப் பேரவையின் (States-General) அமைப்பை ஆராய்ந்தால் அது ஒரு கூட்டாட்சி அல்ல என்பது தெரியும். முக்கியமான முடிவுகள் அனைத்தும் அங்க நாடுகளான ஏழு நாடுகளின் ஒருமித்த இசைவைப் பெற்ற பிறகே எடுக்க முடிந்தது. அங்கநாடுகள் விரும்பிய திசையில்தான் அரசாங்கம் திரும்பியது. மைய அரசோ, அதன் சொந்தப் பொறுப்பில் எதையும் செய்ய முடியாமல், மாநிலங்களுக்கு அடங்கிக் கிடந்தது நாட்டுக் கூட்டத்துக்கு இதைவிட நல்ல உதாரணத்தைக் காட்டுவது கடினம்.

நாட்டுக் கூட்டம் என்ற தொடர் சில சமயங்களில் கூட்டாட்சியைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. 1874-ஆம் ஆண்டின் சுவிஸ் அரசியலமைப்பு, அதை 'சுவிஸ் நாட்டுக் கூட்டத்தின் கூட்டாட்சி அரசியலமைப்பு' (The Federal Constitution of the Swiss Confederation) எனக் கூறிக்கொள்கிறது. அப்படியென்றுல் அது ஒரு நாட்டுக் கூட்டமா, கூட்டாட்சியா? அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து 1861-ல் பிரிந்து சென்ற மாநிலங்கள்-அவைகளின் புதிய அமைப்பை 'அமெரிக்காவின் நாட்டுக் கூட்டத்தில் இணைந்த மாநிலங்கள்' (Confederate States of America) என அழைத்தாலும், கூட்டாட்சி அரசாங்க மொன்றை நிறுவுவதே அவற்றின் நோக்கம் என்பதாக அறிவித்தன. பெயர் ஒன்றும், நோக்கம் வேறொன்றுமாக இருக்கின்றதே! ஒற்றை ஆட்சியை நினைவுபடுத்தும் கனடாவின் அரசியலமைப்புகூட, அது நிறுவும் அரசாங்கத்தை நாட்டுக் கூட்டம் எனக் குறிப்பிடுவது வேடிக்கையாக இருக்கிறது. 'கூட்டாட்சியாளர்' (The Federalist) என்னும் கட்டுரைக் கோவை ஐக்கிய நெதர்லாந்தை நாட்டுக் கூட்ட

மென்றும் கூட்டாட்சியென்றும் விவரிக்கிறது. நாட்டுக் கூட்டம் கூட்டாட்சி ஆகமுடியாது; இரண்டின் இயல்புகளும் வெவ்வேருனவை. சில நாடுகள் ஒன்று சேர்வது மட்டுமே இவ்விரு அரசு முறைகளுக்கும் பொதுவானதாகும்; அங்க நாடுகளுக்கும் பொது அரசுக்குமிடையே நிலவ வேண்டிய தொடர்புகள் இவ்விரண்டிலும், வெவ்வேருன அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே, நாட்டுக்கூட்டம் கூட்டாட்சி ஆகிய இரு சொற்கள் ஒரே அரசு முறையைக் குறிக்கும் வெவ்வேறு பெயர்கள் என்று கருதுவதற்கில்லை; இரண்டும் ஒன்றே என்ற மயக்கத்திலிருந்து நாம் இப்பொழுதாவது விடுபடுவது நல்லது.

9. தளர்ந்த ஒற்றை ஆட்சி

மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் முறையை என்ன என்று அழைப்பது? 1919ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்பில், மத்திய அரசு மாநில அரசுகளுக்கு சில இனங்கள் மீது சட்டமியற்றும் உரிமையைத் தர இடமளித்தது. ஆனால் மாநிலங்கள் இந்த அதிகாரத்தை மத்திய அரசிடமிருந்து பெற்றனவே தவிர அரசியலமைப்பிலிருந்து நேரடியாகப் பெறவில்லை என்பது அறியத்தக்கது. 1962ஆம் ஆண்டின் தென்ஆப்பிரிக்க அரசியலமைப்பு, மாநிலங்கள் தேசிய அரசுக்கு அடங்கி நடக்க வேண்டிய நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. மாநிலங்கள் அனுபவிக்கும் அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசால் எந்த சமயத்திலும் குறைக்கவோ நீக்கவோப் படலாம். வடக்கு அயர்லாந்து (Northern Ireland) இன்று ஐக்கிய அரசின் (United Kingdom) ஒரு பகுதியாக விளங்குகிறது; 1920ஆம் ஆண்டின் வடக்கு அயர்லாந்துச் சட்டம் (Government of Ireland Act) அதன் அரசியலமைப்பாக விளங்குகிறது; இருப்பினும் இதை ஒரு சுயேச்சையான மாநிலமென்று கருதுவதற்கில்லை. சில இனங்கள் மீது சட்டமியற்றும் உரிமை வடக்கு அயர்லாந்துக்குத் தரப்பட்டிருப்பது உண்மைதான்; ஆனால் ஐக்கிய அரசின் பாராளுமன்றம் வட அயர்லாந்தின் அலுவல்களில் தலையிட்டு, அதன் உரிமைகள் ஒன்றுவிடாமல் அத்தனையும் பறித்துக் கொள்ளலாம். ஐக்கிய அரசின் உள்துறை அமைச்சர் (Home Secretary) வட அயர்லாந்தின் சட்டங்களை ஏற்க மறுத்து, அவற்றைத் தடை செய்யலாம். எனவே ஐக்கிய அரசுக்கும் வட அயர்லாந்துக்கும் இருக்கும் உறவைக் கூட்டாட்சி உறவு என எண்ணுவதற்கு இடமில்லை. இது போன்று மத்திய அரசை உயர்வாக மதிக்கும் அரசு முறையைத் *'தளர்ந்த ஒற்றை ஆட்சி'* (Devolution) என அழைக்கலாம்.

அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளிலும் கூட்டாட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை இனி வரும் அத்தியாயங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். முழுமையான கூட்டாட்சிகளாக இல்லாவிட்டாலும், கூட்டாட்சியின் தன்மைகளில் ஒன்றிரண்டைக் கொண்டு இயங்கும் அரசுகள் பல இருக்கின்றன. முழுக் கூட்டாட்சியே சிறந்தது, அரைக் கூட்டாட்சி குறையுடையது என்ற முடிவுக்கு வருவது சரியல்ல. ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் அதனதன் சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் அமைவதே நல்லதாகும். எனவே ஒரு நாட்டின் அரசியலமைப்பையோ அரசாங்கத்தையோ கூட்டாட்சி அல்ல என வருணித்தால், அது அதைப் பழிப்பதாக அமையாது; அது கூட்டாட்சியிலிருந்து வேறுபட்டது என்பதைக் காட்டுவதற்காகவே அவ்வாறு கூறுகிறோம்.

4. கூட்டாட்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்

(1) முன்னுரை (2) சேர்ந்து வாழவேண்டுமென்ற விருப்பம் (3) தனித்தும் இயங்கவேண்டுமென்ற விருப்பம் (4) தலைவர்களின் முயற்சி (5) அமெரிக்கக் கூட்டாட்சியைப் பின்பற்ற விழைந்தமை (6) இணைந்தும் தனித்தும் இயங்குவதற்கான ஆற்றல் (7) அங்கநாடுகளிடையே அளவுக்கு மீறிய ஏற்றத் தாழ்வு இல்லாதிருத்தல் (8) பொருளாதார வசதி.

முன்னுரை

கூட்டாட்சி அரும் பொருளாகக் காணப்படும் அரசாகும், உலக நாடுகளில் ஒற்றை ஆட்சி மலிந்து காணப்படுவது போன்று கூட்டாட்சி காணப்படுவதில்லை. கூட்டாட்சி அரசை நுண்ணிய பயிரோடு ஒப்பிடலாம்; அது எல்லா மண்ணிலும் வேரூன்றாது. அதற்கென சில தனிச்சிறப்பான சூழ்நிலைகள் தேவை; அச்சூழ்நிலைகள் அனைத்தும் ஒருங்கே அமைவதென்பது அரிதாகும். தகுந்த சூழ்நிலைகள் தற்செயலாய் வாய்க்கப்பெற்ற நாடுகளில் மட்டுமே கூட்டாட்சிகள் தழைத்து வளர முடியும் என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

2. சேர்ந்து வாழவேண்டுமென்ற விருப்பம்

முதலாவதாக, அடுத்தடுத்துள்ள நிலப் பரப்புகளில் தனித்து வாழ்ந்துகொண்டிருக்கும் சின்னஞ்சிறு நாடுகளிடையே அவை ஒன்றுகக் கூடி வாழவேண்டுமென்ற வேட்கை (Desire for union) தோன்ற வேண்டும். கூட்டாட்சியின் அடிப்படையே இணைந்து வாழவேண்டுமென்ற இச்சையில்தான் அடங்கியிருக்கிறது. 1957 ஆம் ஆண்டில் தோன்றிய மேற்கிந்தியத் தீவுகள் (West Indies) கூட்டாட்சி 1962 ஆம் ஆண்டில் மறைந்ததற்கும், லத்தீன் அமெரிக்காவில் (Latin America) பொலிவார் (Bolivar) [illegible]

நிறுவப்பட்ட அகண்ட கொலம்பியா (Great Columbia) கூட்டாட்சி, விரைவில் ஈக்வெடார் (Equador), கொலம்பியா, வெனிசூலா (Venezuela) என்ற மூன்று நாடுகளாக சிதைந்ததற்கும் 1823ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மத்திய அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் நாட்டுக் கூட்டம் (Confederation of the United Provinces of Central America) 1838ஆம் ஆண்டிலேயே குவாடிமேலா (Guatemela), சால்வடார் (Salvador), ஹோண்டுராஸ் (Honduras), கோஸ்டா ரிகா (Costa Rica), நிகாரகுவா (Nicaragua) என்று ஐந்து நாடுகளாகப் பிரிந்ததற்கும் அடிப்படைக் காரணம் கூட்டு சேர்ந்த நாடுகளிடையே கூடி வாழவேண்டுமென்ற விருப்பம் வேரூன்றாமையேயாகும்.

அடுத்து, நாடுகளைக் கூட்டாட்சியில் கூடி வாழத் தூண்டும் சக்திகள் எவை என்பதை ஆராய்வோம். (1) அருகருகே அமைந்திருக்கும் சிறு நாடுகள் அவற்றின் இராணுவப் பாதுகாப்பிற்காகவும், அவற்றைச் சூழ்ந்துள்ள பெரும் வல்லரசுகளின் ஏகாதிபத்தியப் போக்கிலிருந்து தங்கள் சுதந்திரத்தைக் காத்துக்கொள்வதற்காகவும், கூட்டாட்சியில் சேர விழையும். ஒவ்வொரு நாடும் தனித்தியங்குவதைவிட, சில நாடுகள் ஒன்று சேர்ந்து இயங்குவது அவற்றின் நிலையை வலுவுள்ளதாக்கும் என்பது தெளிவு. (2) பொருளாதாரத் துறையிலும் மேம்பாடு அடைய விரும்பும் நாடுகள் இணைந்து வாழ விரும்புவது இயற்கையே; தனித்து வாழ்வதைவிட சேர்ந்து வாழ்வதால் அவைகளிடையே உள்நாட்டு வாணிகம் தடையில்லாமல் நடைபெறுவதற்கும், அயல் நாடுகளோடு ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தை வளர்த்துக் கொள்வதற்குமுரிய வாய்ப்புகள் அதிகம் என நாடுகள் நம்புகின்றன. (3) தங்களுக்கிடையே சில அரசியல் தொடர்புகளை கொண்டிருக்கும் நாடுகள் அத் தொடர்புகளை மேலும் வளர்த்துக்கொள்ள தங்களை ஒன்று சேர்க்கும் கூட்டாட்சியை அமைக்க ஆசைப்படும். 1777ஆம் ஆண்டிலிருந்து 1787ஆம் ஆண்டுவரை அமெரிக்க நாட்டுக் கூட்டத்தில் அங்கம் வகித்த பதின்மூன்று அரசுகளும், 1789ஆம் ஆண்டில், அவைகளுக்கிடையே அந்த பத்தாண்டு காலத்தில் வளர்ந்திருந்த உறவுகளை மேலும் வளர்த்துக்கொள்ள, கூட்டாட்சி ஒன்றில் சேர்ந்ததை முன்பே கண்டோம். (4) ஏறத்தாழ ஒரே வகையான அரசியல் சமுதாய நிறுவனங்களைக் கொண்டிருக்கும் நாடுகளிடமும் அவைகளுக்கிடையே பொதுவானதொரு அரசைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற வேட்கைபிறக்கும். மாறுன அரசியல் மரபுகளைக் கொண்டிருக்கும் நாடுகளிடையே வேற்றுமை உணர்ச்சி [illegible] ஒற்றுமை உணர்ச்சி

வளராது என்பதில் ஐயமில்லை. அமெரிக்கக் கூட்டாட்சியை உருவாக்கிய அரசுகள் அனைத்தும் ஒரே மாதிரியான அரசியல் அனுபவங்கள் உடையவையே என்பது குறிப்பிடத்தக்கதாகும். (5) கூட்டாட்சியில் சேருகின்ற மக்கள் ஒரே மொழி, ஒரே சமயம், ஒரே இனம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாயிருப்பின் அவர்களை ஒரு குடும்பப் பாசம் ஆட்கொண்டு, கூடி வாழவேண்டுமென்ற எண்ணத்தை அவர்களிடையே மேலும் வலுப்படுத்தும். மக்களிடையே தேசிய மனப்பான்மையையும், ஒருமைப்பாட்டு உணர்வுகளையும் வளர்க்க மேற்கண்ட சாதனங்களைவிட சிறந்த சக்திகள் இல்லை என்பதைப்பற்றி கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

நாடுகளிடையே அவை ஒன்றாகச் சேர்ந்து வாழவேண்டுமென்ற விருப்பத்தை இராணுவப் பாதுகாப்பு, பொருளாதாரத் துறையில் முன்னேற்றம், ஒரே மாதிரியான அரசியல் அனுபவங்கள், பொதுவானதொரு சமுதாயப் பாரம்பரியம், மொழி, இனம், சமயம் ஆகியப் பிணைப்புகளால் தோன்றும் உறவு ஆகியவை ஊக்குவிக்கின்றன என்பதை இதுவரைக் கண்டோம். மேற்கண்ட காரணக்கூறுகள் இல்லை யென்றால் அங்கே கூடி வாழ வேண்டுமென்ற விருப்பம் தோன்றாது எனக் கூற முடியாது என்றாலும், இச் சக்திகளே அவ்விருப்பத்தைத் தோற்றுவிப்பதிலும், வளர்ப்பதிலும் பெரும் பங்கேற்கின்றன என்பதில் ஐயமில்லை.

3. தனித்தும் இயங்க வேண்டுமென்ற விருப்பம்

நாடுகளுக்கு சேர்ந்து வாழ வேண்டுமென்ற விருப்பத்தோடு கூட, அவற்றின் சுதந்திரத்தைக் காத்துக் கொள்ளவேண்டுமென்ற விருப்பமும் (desire for independence) இருந்தால்தான் கூட்டாட்சி தோன்ற முடியும். சேரும் நாடுகள் அனைத்தும் அவை பொதுவான காரியங்களுக்கு மட்டும்கூடி வாழ்ந்தால் போதுமென்ற எண்ணமும், பொதுத்தன்மையற்ற தனிக்காரியங்களுக்குத் தனித்தே வாழவேண்டுமென்ற எண்ணமும் உடையனவாய் இருத்தல் வேண்டும். கூட்டாட்சி ஒற்றுமையை (union) விரும்புகிற நாடுகளுக்குத்தான் ஏற்ற அரசே தவிர ஒருமையை (unity) விரும்புகிற நாடுகளுக்கு ஏற்ற அரசல்ல என்பது A. V. டைசியின் கருத்தாகும். தங்களுக்கென சில தனித்தன்மைகள் உண்டென்று கருதி அவற்றைக் காக்கவேண்டுமென்ற எண்ணமில்லாத நாடுகள் ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் மைய அரசாங்கத்தின் உரிமையாக்க உடன்பட்டால், அதன் விளைவு ஒற்றை ஆட்சியாகவே அமையும். எனவே, ஓரளவுக்கு சுயேச்சையாக இயங்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட நாடுகளிடையேதான் கூட்

டாட்சி மலர முடியும். தென் ஆப்பிரிக்க மக்கள் சுதந்திரமாக இயங்கக்கூடிய மைய அரசாங்கமொன்றை விரும்பினார்களே யல்லாது, அவ்வாறே இயங்கக்கூடிய மாநில அரசாங்கங்களை விரும்பவில்லை; ஆகவே அங்கு மாநில அரசாங்கங்கள் தங்களின் விருப்பங்களை மைய அரசாங்கத்தின் விருப்பங்களுக்கு உகந்த வகையில் அமைத்துக் கொள்வது சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

அடுத்து, நாடுகளை சுயேச்சையாய் வாழத்தூண்டும் சக்திகள் எவை என்பதை ஆராய்வோம். (1) சேர விழையும் நாடுகள் தனி அரசுகளாகவோ குடியேற்ற நாடுகளாகவோ வாழ்ந்து பழக்கப்பட்டவையாய் இருப்பின் அவை தங்களின் தன்னாட்சி உரிமையை (Autonomy) புதிய அமைப்பிலும் ஓரளவுக்காவது தொடர்ந்து அனுபவிக்க விரும்பும். அமெரிக்கா, ஆஸ்திரேலியா சுவிட்சர்லாந்து ஆகியகூட்டாட்சிகளை உருவாக்கிய மாநிலங்கள் கூட்டாட்சியில் சேர்வதற்கு முன்பு தங்களுக்கென தனியான அரசாங்கங்களோடு இயங்கி வந்தன. சுயஆட்சி நிறுவனங்கள் மூலமாக தங்களை ஆண்டுகொண்ட அனுபவமுடைய நாடுகள், கூட்டு சேரும்பொழுது அவற்றின் சுதந்திரத்தை முற்றிலும் துறந்துவிட ஒரு பொழுதும் உடன்பட மாட்டா என்பது உணரத்தக்கது. (2) கூடும் நாடுகளின் வரலாற்றுப் பின்னணி ஒன்றிற்கொன்று மாறுபட்டதாய் இருந்தால், அவற்றின் பொருளாதார நலன்களுக்குரிய காரணங்களும் மாநிலத்துக்கு மாநிலம் மாறுபவையாய் இருப்பது இயல்பு. நாடுகள் அவற்றின் தனித் தன்மையை இழக்கின்ற அளவுக்குகூட்டு சேர்ந்தால், அக்கூட்டமைப்பில் ஒவ்வொரு நாடும் அதன் பொருளாதார மேம்பாட்டின் முழுப் பயனையும் அது அனுபவிக்கமுடியாத நிலை ஏற்படலாம் என அஞ்சக்கூடும். தங்கள் பொருளாதார வளங்களின் இலாபத்தை முழு அளவிற்கு இல்லாவிட்டாலும் பெருமளவிற்காவது தாங்களே துய்க்க வேண்டும் என்ற எண்ணமும் மாநிலங்களைச் சுதந்திரமாக இருக்கத் தூண்டும். (3) புவியியல் கூறுகளும் (Geographical factors) கூட்டாட்சியில் சேரும் நாடுகளிடையே சுயேச்சைத் தன்மையை வளர்க்கின்றன. ஆயிரக் கணக்கான சதுர மைல்களில் பரந்து கிடக்கும் அமெரிக்காவில் கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலும் உள்ள பல்வேறு மாநிலங்கள் ஒருவிதமான 'வட்டார உணர்வுக்கு' (Regional Consciousness) அடிமையாய் இருப்பதை இன்றும் காண்கிறோம். ஒவ்வொரு குடிமகனிடமும் தான் ஒரு அமெரிக்கக் குடிமகன் என்ற நினைவோடு, தான் ஒரு மாநிலத்தின் குடிமகனாய் இருக்கும் நினைவும் இருப்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். சுவிட்சர்லாந்திலுள்ள மாநிலங்கள், காடுகளாலும் மலைகளாலும் ஆறுகளாலும்

பிரிக்கப்பட்டிருப்பதால், ஒவ்வொரு மாநிலத்திலும் அதற்கே உரிய தனிப்பண்புகளும், தனி மரபுகளும் வளர்ந்துவிட்டன. அப்பண்புகளை மாநிலங்கள் காத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல் போற்றி வளர்க்கவும் முயல்வது இயல்பே. (4) சேருகின்ற நாடுகள் வெவ்வேறான தேசிய இனத்தைச் சார்ந்த மக்களைக் கொண்ட நாடுகளாக இருந்தால், அவை தங்களின் தன்னாட்சி உரிமையை முற்றிலும் விட்டுக்கொடுக்கத் தயங்கும். நாடுகள் எதைத் தியாகம் செய்யத் தயாராயிருந்தாலும் தங்கள் தேசியத்தை மட்டும் தியாகம் செய்ய ஒருபொழுதும் உடன்படமாட்டா. இந்தியத் துணைகண்டம் இந்தியா-பாக்கிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிந்ததற்குத் தேசியப் பற்றைத்தான் அடிப்படைக் காரணமாகக் காட்டவேண்டும். சோவியத்துக் குடியரசிலுள்ள பதினைந்து மாநிலங்களின் பெயர்களும் அவைகளில் வாழும் பெரும்பான்மை தேசிய இனத்தின் பெயரையே தழுவி அமைந்திருப்பது அறியத்தக்கதாகும். சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய கூட்டாட்சிகள் தோன்றுவதற்கு கூட்டு சேர்ந்த நாடுகளிடையே இருந்த தேசிய வேறுபாடுதான் பெரிதும் காரணமாய் அமைந்தது. மொழி, இனம், சமயம் ஆகிய சக்திகள் தூண்டும் பிரிவினை உணர்வுகளை விட, தேசியம் தூண்டும் பிரிவினை உணர்வுகள் மிகுதியாய் இருக்குமென நம்பப்படுகிறது. (5) கூட்டாட்சியில் இணைகின்ற நாடுகள் வெவ்வேறான அரசியல் சமுதாய நிறுவனங்களைக்கொண்டவையாய் இருப்பின், அவற்றையெல்லாம் காத்துக் கொள்ள அவை விரும்பும்; அவ்விருப்பம் அவைகளிடையே சுய ஆட்சி உணர்வுகளை வளர்த்து, அவை மைய அரசாங்கத்திற்கு முழுதும் அடிமையாகிவிடாமல் காக்கின்றது. அமெரிக்காவில் அடிமைமுறை (Slavery) வேண்டுமென்ற மாநிலங்களும் அது வேண்டாமென்ற மாநிலங்களும் இரு கட்சிகளாகப் பிரிந்து, அதனதன் கொள்கையை நிலைநாட்ட உள்நாட்டுப் போர் ஒன்றில் (1861-65) ஈடுபட்டது உலகறிந்த செய்தியாகும். தங்களுடைய நிறுவனங்கள் தனித்தன்மை வாய்ந்தவை, அவற்றை போற்றிப் பாதுகாப்பது பெருமைக்குரிய செயல், அவற்றினால் விளையும் பயன்கள் சிறந்தவை என்ற எண்ணமுடைய நாடுகள் ஒரே அமைப்பில் கூட்டு சேருகின்றபொழுது, ஒவ்வொன்றும் அதன் தனி இயல்பையும் பாரம்பரியத்தையும் வளர்க்க முயலும்பொழுதும் அந்த முயற்சியை நமக்கு வரவேற்கத் தோன்றுகிறது.

4. தலைவர்களின் முயற்சி

சில காரியங்களுக்காகச் சேர்ந்தும், சில காரியங்களுக்காகத் தனித்தும் வாழவேண்டுமென்ற விருப்பம்மட்டும் இருந்தால்

போதாது. மக்களின் விருப்பு வெறுப்புகளை புரிந்துகொண்டு அவற்றை நடைமுறையில் நிறைவேற்றக்கூடிய தகுந்த தலைவர்கள் தக்க தருணத்தில் தோன்றினால்தான் கூட்டாட்சி உதயமாக முடியும். வாஷிங்டன் (Washington), ஹேமில்டன், ஜே (Jay), மேடிசன் பிராங்ளின் (Franklin) ஆகிய ஒப்பற்ற தலைவர்களின் திறமையே அமெரிக்கக் கூட்டாட்சியை உருவாக்கியது என்ற உண்மையை யாரும் மறக்கமுடியாது. அரசியல் தலைவர்கள் தங்கள் பேச்சாலும்எழுத்தாலும் கூட்டாட்சியின் அருமை பெருமைகளை நாட்டு மக்கள் உணரும்படிச் செய்து, அவர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினால், அங்கே கூட்டாட்சி மலர்வது எளிதான செயலாக இருக்கும். கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் கூட்டாட்சி தோன்றுவதற்கான நல்ல சூழ்நிலையைத் தோற்றுவித்த பெருமை, முறையே மெக்டனல்டு (Macdonald), பார்க்ஸ் (Parks) ஆகியத் தலைவர்களைச் சாரும். சுதந்திர இந்தியாவில் ஒரு கூட்டாட்சியை நிறுவ சர்தார் படேல் எடுத்துக்கொண்ட முயற்சியை இந்திய மக்கள் எப்பொழுதும் மறக்கமாட்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலையடைந்த மாகாணங்களையும், அறுநூறுக்கும் மேற்பட்ட சுதேச இராச்சியங்களையும் இந்தியக் கூட்டாட்சியில் இணைந்து வாழும்படி அவற்றை நயத்தாலும் பயத்தாலும் ஒன்று திரட்டிய செயலை மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு அசுர சாதனை எனக் கூறுவதுகூட பொருந்தும்.

5. அமெரிக்கக் கூட்டாட்சியை பின்பற்ற விழைந்தமை

மனிதர்களில் ஒருவரின் நடை உடை பாவனைகளை மற்றொருவர் பின்பற்றுவதுபோல, அரசுகளிலும் ஒன்றின் நிறுவனங்களை மற்றொன்று பின்பற்றுவது வழக்கமாய் இருப்பதை வரலாற்று மாணவர்கள் அறிவார்கள். வெகு காலம்வரை கூட்டாட்சியைப்பற்றி நினைத்துக்கூட பார்க்காத நாடுகளில் பல, 1789ஆம் ஆண்டில் அமெரிக்கக் கூட்டாட்சி தோன்றியதையடுத்து, தங்கள் நாடுகளையும் கூட்டாட்சிகளாக மாற்றிக்கொண்டன. சுவிட்சர்லாந்தில் 1848ஆம் ஆண்டிலும், கனடாவில் 1867ஆம் ஆண்டிலும், ஆஸ்திரேலியாவில் 1901ஆம் ஆண்டிலும் கூட்டாட்சி அரசியலமைப்புகள் தோன்றுவதற்கு, அமெரிக்கக் கூட்டாட்சி அரசியலமைப்பின் தோற்றம் ஒரு முக்கிய காரணமாய் அமைந்தது என்ற கருத்து மறுக்க முடியாததொன்றாகும். கனடியக் கூட்டாட்சி அரசியலமைப்பே இந்தியக் கூட்டாட்சியின் அரசியலமைப்புக்கு முன்மாதிரியாக அமைந்தது என்ற செய்தியும் இங்கே குறிப்பிடத்தக்க

தாகுர். மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் இயங்கும் கூட்டாட்சிகள் அனைத்தும் அமெரிக்கக் கூட்டாட்சியைப் பின்பற்றவேண்டும் என்ற ஆர்வத்தின் அடிப்படையில் பிறந்தவையே.

கூட்டாட்சி, தோன்றுவதற்கு இயல்பாக அடைய வேண்டிய சூழ்நிலைகள் இல்லாதிருந்தும் 'அமெரிக்காவில் கூட்டாட்சி நிறுவப்பட்டிருக்கிறதே, நாமும் அத்தகைய ஆட்சியை நிறுவுவோமே' என்ற தத்துவத்தையொட்டி மத்திய, தென் அமெரிக்கக் குடியரசுகள் தங்கள் நாடுகளில் கூட்டாட்சியைத் தோற்றுவித்திருப்பதாகத் தோன்றுகிறது. அரசியல் நிறுவனங்கள், செடி, கொடிகள் போன்றவை; குறிப்பிட்ட நிறுவனங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில்தான் வளரும்; எல்லா நாடுகளிலும் எல்லா ஆட்சி முறைகளையும் மலரச் செய்ய முடியாது. மேற்கண்ட உண்மையைக் கருத்தில்கொண்டு கூட்டாட்சி அமைப்பதா வேண்டாமா என்று முடிவு செய்வதே அரசியல் விவேகமாகும். மத்திய, தென் அமெரிக்கக் குடியரசுகள் நல்ல கூட்டாட்சிகளாக இயங்க முடியாமல் பல தொல்லைகளில் சிக்கித் தவிப்பதற்குக் காரணம், காண விழைவோர்க்கு மேற்கண்ட விளக்கத்தையே விடையாகக் கூறவேண்டும். அமெரிக்கக் கூட்டாட்சியைப் போன்றதொரு சிறந்த கூட்டாட்சியை தங்கள் நாடுகளில் அமைத்துக்கொள்ள மற்ற நாடுகள் விரும்புவதில் நாம் குற்றம் காண முயலவில்லை. ஆனால் நாடுகள் அவற்றின் அரசியல், பொருளாதார, சமுதாய வரலாற்றுப் பின்னணியை மறந்து தங்களுக்குப் பொருந்தாத கூட்டாட்சியைத் தழுவ முயல்வதைத்தான் தவறு என சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

6. இணைந்தும் தனித்தும் இயங்குவதற்கான ஆற்றல்

கூட்டாட்சி வேண்டுமென்று விரும்பினால்மட்டும் அங்கே கூட்டாட்சி வெற்றிகரமாக செயல்படும் என உறுதியாகக் கூற முடியாது. அதை இயக்குவதற்கான ஆற்றலும் திறமையும் அந்நாட்டில் இருந்தால்தான் அது செயல்பட முடியும். கூட்டாட்சி ஒன்றில் கூடி வாழ வேண்டுமென்ற விருப்பமே, அதை இயக்கக் கூடிய திறமையை மக்களிடையே வளர்க்கும். எந்த சக்திகள் கூடி வாழ வேண்டுமென்ற உணர்வை வளர்க்கின்றனவோ, அதே சக்திகள் கூட்டமைப்பை இயக்குவதற்கான ஆற்றலையும் உருவாக்கும். இராணுவ பாதுகாப்பு வேண்டுமென்ற விருப்பம், பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்ற வேட்கை, ஒரே மொழி, இனம், சமயம் ஆகிய தன்மைகளால் ஏற்படும் உறவு, ஒத்த

அரசியல் சமுதாய நிறுவனங்களைக் கொண்டிருப்பதால் தோன்றும் தொடர்பு ஆகிய சக்திகள், அவை நிலவும் சமுதாயத்தில் ஒற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதுபோல, அந்த ஒற்றுமை உணர்ச்சியை செயலாற்றுவதற்கான ஆற்றலையும் வளர்க்கின்றன. கூடும் நாடுகள் ஒத்த அரசியல் நிறுவனங்களை உடையனவாக இருப்பது கூட்டாட்சியின் சீரான இயக்கத்திற்கு இன்றியமையாததென வற்புறுத்தப்படுகிறது. அமெரிக்க அரசியலமைப்பும், சுவிஸ் அரசியலமைப்பும், அவற்றின் மாநிலங்கள் அனைத்தும் குடியரசுகளாய் இருக்க வேண்டுமெனக் கோருவதும், கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் எல்லா மாநிலங்களிலும் அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி (Constitutional Monarchy) இயங்குவதும், இந்திய அரசியலமைப்பு இந்நாட்டு மாநிலங்களில் ஒரேமாதிரியான அரசியல் நிறுவனங்கள் நிலவவேண்டும் என்பதற்காக அவை எம்மாதிரியானவையாய் இருக்க வேண்டும் என்பதை அரசியலமைப்பிலேயே விளக்கமாகக் கூறுவதும், எந்த அளவுக்கு ஒவ்வொரு கூட்டாட்சியும் அதன் மாநிலங்களில் ஒத்த அரசியல் நிறுவனங்களை, தோற்றுவிக்க முயல்கிறது என்பதைக் காட்டுகிறது. கூட்டாட்சி ஒன்றின் மாநிலங்களில் ஒத்த தன்மையுடைய அரசு முறைகள் இருப்பதோடு, அவை குடியாட்சி அரசுகளாகவும் இருப்பதே கூட்டாட்சியை செம்மையானதாக்கும். மைய அரசிலோ, மாநில அரசுகளிலோ வல்லாட்சி நடைபெறுமானால், அங்கு கூட்டாட்சி நீடித்து நிற்க முடியாது. கூட்டரசுக் கோட்பாடு என்பது குடியாட்சியில் மட்டும் வளருமேயல்லாது, வல்லாட்சியில் ஒருபொழுதும் வளராது என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

ஒருங்கிணையும் மாநிலங்களின் சமுதாய நிறுவனங்களும் ஒரே மாதிரியானவையாய் இருப்பது விரும்பத்தக்கது. அமெரிக்காவில் அடிமைமுறை வேண்டுமென்று கோரிய மாநிலங்களும், வேண்டாமென்று கோரிய மாநிலங்களும், ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்க இணங்காததால், அங்கே கூட்டாட்சியானது சிதைந்துவிடக் கூடிய கட்டத்தை நெருங்கியது. 'தனக்கெதிராகப் பிளவுபட்டிருக்கும் எந்த நாடும் நிலைத்து நிற்கமுடியாது. பாதி அடிமையாகவும், பாதி சுதந்திரமாகவும் எந்த அரசாங்கமும் நீடித்திருக்க இயலாதென நான் நம்புகிறேன். அது முழுதும் ஒன்றாகவோ அல்லது மற்றொன்றாகவோ ஆகிவிடும்' என 1858 ஆம் ஆண்டில் லிங்கன் (Lincoln) கூறிய கருத்து இன்றும் பொருந்தும். உள்நாட்டுப் போரை அடுத்து அமெரிக்க அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் (Civil war amendments) அந்நாட்டில் [illegible]

நீக்கி, எல்லா மாநிலங்களையும் சுதந்திர மாநிலங்களாக மாற்றி, அமெரிக்க சமுதாயத்தில் ஒருவிதமான ஐக்கியத்தை உருவாக்கின என்ற செய்தி நினைவில் வைக்கத்தக்கதாகும்.

எந்த சக்திகள், கூடும் மாநிலங்களிடையே அவற்றின் தனித் தன்மையைக் காத்துக்கொள்ள வேண்டுமென்ற உணர்வை வளர்க்கின்றனவோ, அதே சக்திகள் அவை சுதந்திரமாக இயங்குவதற்கான ஆற்றலையும் உருவாக்கும். கூட்டமைப்பில் பங்கேற்கும் நாடுகள், அதற்கு முன்பே தனி அரசுகளாக இயங்கி வந்திருப்பின், அந்த அனுபவமும் பயிற்சியும் அவைகளுக்குத் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை. நாடுகள் கூட்டாட்சியில் சேர்கின்ற பொழுது தங்களின் ஆட்சி நிறுவனங்களைப்பற்றிக் கவலைப்படாமல், புதிதாக அமைக்க வேண்டிய மைய அரசாங்கத்தின்மீது அவற்றின் முழு கவனத்தை செலுத்த முடியும். லத்தீன் அமெரிக்கக் குடியரசுகளில் கூட்டாட்சிகள் நிறுவப்பட்ட பொழுது, அவற்றில் எந்தக் குடியரசிலும் சுய ஆட்சி நிறுவனங்களோடு வாழ்ந்து பழக்கப்பட்ட மாநிலங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக மெக்சிகோ (Mexico), பிரேசில் (Brazil), அர்ஜெண்டினா (Arzentina), வெனிஸுலா (Venezuela) ஆகிய நாடுகளில் தன்னாட்சி இயல்புகளை வளர்த்துக்கொண்ட மாநிலங்கள் இருந்தனவெனக் கூறமுடியாது. எனவேதான் இக்குடியரசுகளில் கூட்டாட்சி முறை சீராகச் செயல்படுவதைப் பார்க்க முடியவில்லை. ஆனால், நெடுங்காலமாகத் தன்னாட்சி உரிமையோடு வாழ்ந்த மக்கள் கூட்டாட்சியில் ஒன்றாக இணையும் பொழுது, தங்கள் மாநிலங்களுக்கே தங்கள் நாட்டுப் பற்று முழுவதும் உரிமையாகும் என நினைப்பார்களானால், அது கூட்டாட்சியை வலுவற்றதாக்கிவிடும். மாநிலப் பற்று (State Patriotism) ஓரளவோடு நின்று, நாட்டுப்பற்றும் (National Patriotism) வளர வேண்டும். அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய கூட்டாட்சிகள் தோன்றிய காலத்தில், அந்நாட்டு மக்களிடையே நாட்டுப் பற்றைவிட மாநிலப்பற்றே அதிகமிருந்த போதிலும், காலப்போக்கில் அவர்கள் தேச பக்தியை வளர்த்துக்கொண்ட பாங்கினை நாம் பாராட்டக் கடமைப்பட்டவர்களாவோம்.

7. அங்க நாடுகளிடையே அளவுக்கு மீறிய ஏற்றத் தாழ்வு இல்லா திருத்தல்.

கூட்டாட்சியில் சேர்ந்து வாழ விரும்பும் மாநிலங்களுக்கிடையே மக்கள் தொகையிலும், நிலப்பரப்பிலும், பொருள் வளத்திலும் அளவுக்கு மீறிய ஏற்றத் தாழ்வுகள் இல்லாத சமநிலை இருக்க

வேண்டும். மிகப் பெரிய நாடுகளையும் மிகச்சிறிய நாடுகளையும் ஒன்றாகச் சேர்த்து உருவாக்கப்படும் கூட்டாட்சி, சக்தி சமநிலை இல்லாத காரணத்தால் நெடுங்காலம் நீடிக்காது. பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்களைத் தங்கள் போக்கிற்கு இழுக்க முயல்வதே இயல்பாகிவிடும். 1871 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஜெர்மானியப் பேரரசாகிய கூட்டாட்சி அழிந்ததற்குக் காரணம் அதன் உறுப்பு நாடுகளில் ஒன்றாகிய பிரஷ்யாவின் எல்லை மீறியவலுவும் செல்வாக்குமேயாகும். நாட்டுக் கூட்டாட்சியாக இயங்கவேண்டிய ஜெர்மானியப் பேரரசு, உண்மையில் ஒரு ஒற்றை ஆட்சியாக இயங்கியதற்கு, பிரஷ்யாதான் காரணமாக இருந்தது எனக் கூறலாம். 'கூட்டாட்சியில் மற்ற மாநிலங்கள் பல ஒன்று சேர்ந்தால், அவற்றின் ஆற்றலை விஞ்சக்கூடிய ஆற்றலுடைய எந்த மாநிலமும் இருக்கக்கூடாது. அது போன்ற மாநிலம் ஒன்று இருக்குமானால், அது ஒன்றே ஒன்றாய் இருக்குமானால், கூட்டாக எடுக்க வேண்டிய முடிவுகளில் அது தானே ஆதிக்கம் செலுத்துமென வற்புறுத்தும்; அது போன்ற மாநிலங்கள் இரண்டு இருக்குமானால் அவை ஒத்துப் போகிறபொழுது எவராலும் தடுத்து நிறுத்த முடியாத வலிமை வாய்ந்தவையாய் இருக்கும்; அவை கருத்து வேறுபாடு கொள்கிற பொழுது, எல்லாமே, அவைகளுக்கிடையே எழும் ஆதிக்கப் போராட்டத்தினால் முடிவு செய்யப்படும்' என J. S. மில் (J. S. Mill) கூறியது இங்கு நினைவு கூறத்தக்கதாகும். கூட்டு சேரும் நாடுகள் அனைத்தும், ஒரே அச்சிலிட்டு செய்யப்பட்டது போன்று நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும், பொருளாதாரத்திலும் ஒரே மாதிரியானவையாய் இருக்கமுடியாது என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அவற்றில் மிகப் பெரியவையாய் சில நாடுகளும், மிகச் சிறியவையாய் சில நாடுகளும் இருக்கக்கூடாது என்பதை வற்புறுத்துகிறோம்.

8. பொருளாதார வசதி

மைய அரசு, மாநில அரசுகள் ஆகிய இரண்டு வகையான அரசுகளின் சுமையை தாங்கக்கூடிய பொருளாதார வசதி இருக்கும் நாடுகளுக்கு மட்டுமே, கூட்டாட்சி பொருத்தமான ஆட்சி முறையாகும். கூட்டாட்சித் தோன்றுவதற்கான எல்லாவித சூழ்நிலைகள் இருந்தாலும், போதுமான பொருளாதாரம் இல்லாவிடில் அங்கே கூட்டாட்சியைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. மைய அரசுக்கென சில வருவாய் மூலங்களையும், மாநில அரசுகளுக்கென சில வருவாய் மூலங்களையும், ஒதுக்கக்கூடிய பொருளாதார வசதியுள்ள நாடுகளில் மட்டுமே, கூட்டாட்சி சாத்

தியமாகும். கூட்டாட்சி முறையானது செலவு பிடிக்கும் அரசு முறையாக இருப்பதனால்தான், பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நிலையில் இருக்கும் தென் ஆப்பிரிக்கா அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் போயிற்று. தென் அமெரிக்கக் குடியரசுகளில் கூட்டாட்சி சரியாக செயல்படாமல் இருப்பதற்குக் காரணம் அக் குடியரசுகளின் ஏழ்மை நிலைதான் என்பது K. C. வியரின் கருத்தாகும். இரு அரசாங்கங்களைப் பராமரிப்பதற்கான செலவுகளைத் தாங்கக்கூடிய வருவாய் இருந்தால் மட்டும் போகாது. அதை மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நியாயமான வகையில் பகிர்ந்து கொள்வதும் இன்றியமையாததாகும். ஒரு அரசாங்கம் அதனுடைய செலவுகளுக்காக மற்றொரு அரசாங்கத்தை எதிர்பார்க்கக்கூடிய நிலை தவிர்க்கப்பட்டால்தான் கூட்டாட்சியானது உண்மையான கூட்டாட்சியாக இயங்கும்.

5. கூட்டாட்சியும் பொதுநிதியும்

(1) முன்னுரை (2) மத்திய மாநில அரசாங்கங்களின் வருவாய் இனங்கள்: அ. நாணயச் செலாவணி ஆ. சுங்கமும் ஆயமும் இ. சொத்துக்களும் தொழில்களும் ஈ. மானியங்கள் உ. கடன் திரட்டுதல் ஊ. வரி விதித்தல்; (3) வரி வசூலும் போர்களும் (4) வரி வசூலில் மத்திய மாநில அரசுகளின் நிலை (5) மானியங்களும் மத்திய மாநில உறவுகளும் (6) மத்திய மாநில நிதித் தொடர்புகள் இன்று எங்ஙனம் ஒழுங்கு படுத்தப்படுகின்றன என்பது.

1. முன்னுரை

பொது நிதி பற்றிய ஏற்பாடுகளை குற்றங்குறையற்ற வகையில் செய்வதென்பது எந்த அரசிலும் எளிதான காரியமாய் இருப்பதில்லை; அதிலும் கூட்டாட்சி அரசுகளில் இரு அரசாங்கங்களுக்கும் மன நிறைவளிக்கின்ற வகையில் அவ்விதிகளை வகுப்பதில் எவ்வளவு இடர்ப்பாடுகள் இருக்கும் என கூறத் தேவையில்லை. மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் ஒன்றை மற்றொன்று சார்ந்திராமல், ஒத்தத் தரமுடைய அரசாங்கங்களாய் இயங்குவதையே கூட்டாட்சி என கொள்ளவேண்டும் என்ற விளக்கத்தை ஏற்கும் நாம், நிதித்துறையிலும் இரு அரசாங்கங்களும் தனித்தியங்கக்கூடிய தன்மை யுடையனவாய் இருக்க வேண்டும் என்ற கருத்தையும் ஏற்பதே முறையாகும். அரசின் பணிகளை இரு அரசாங்கங்களிடையே பகிர்ந்தளிப்பது என்பது கடினமான காரியமாகும்; அதன் வருவாய் வாய்ப்புகளையும் அவ்வாறே பகிர்ந்தளிப்பது என்பது, அதைவிடக் கடினமான காரியமாகும். ஒவ்வொரு அரசாங்கமும் மேற்கொண்டிருக்கும் பொறுப்புகளுக்குத் தக்க வகையில் வருவாய்க்கு வழி இருந்தால்தான் கூட்டாட்சி சீராகச் செயல்பட முடியும்.

2. மத்திய மாநில அரசாங்கங்களின் வருவாய் இனங்கள்
அ. நாணயச் செலாவணி ஆ. சுங்கமும் ஆயமும்

நிதித் துறையில் சுய ஆட்சி (Financial autonomy) என்ற கருத்தை பெரும்பாலும் எல்லாக் கூட்டாட்சிகளும் ஏற்றுக்கொள்கின்ற போதிலும், அவை இரு இனங்களை மைய அரசின் தனி உரிமைகளாக வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முதலாவதாக, நாணயச் செலாவணியானது மைய அரசாங்கத்தின் கவனத்துக்கு மட்டுமுரிய பொருளாக ஒதுக்கப்படுகிறது. பணத்தை—அது தாள் பணமாக (Paper Currency) இருந்தாலும் சரி, உலோகப் பணமாக (Metallic Currency) இருந்தாலும் சரி—வெளியிடக்கூடிய அதிகாரத்தை எல்லாக் கூட்டாட்சிகளிலும் மைய அரசாங்கமே அனுபவிப்பதைக் காண்கிறோம். இரண்டாவதாக சுங்க வரியும் ஆயத்தீர்வையும் (Customs and Excise) மைய அரசாங்கமொன்றின் கவனத்துக்கு மட்டுமே உரிய பொருளாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. ஏற்றுமதி இறக்குமதி வரியையும், உள்நாட்டுத் தீர்வையையும் திரட்டுவதோடு அதைச் செலவு செய்யக்கூடிய அதிகாரமும் மைய அரசாங்கத்திற்கு இருப்பதைப் பார்க்கலாம். மேற்கண்ட இரண்டு வழிகளைத் தவிர மற்ற வழிகள் வாயிலாகப் பொருளீட்டக்கூடிய வாய்ப்புகள் மைய அரசாங்கத்தைப் போலவே மாநில அரசாங்களுக்கும் உண்டு.

இ. சொத்துக்களும் தொழில்களும்

இருவகை அரசாங்கங்களும் சில சொத்துக்கள் உடையனவாக இருப்பதோடல்லாமல் சில தொழில்களையும் நடத்துகின்றன. எல்லாக் கூட்டாட்சிகளிலும் பொது அரசுக்குச் சொந்தமான நிலங்களும் கட்டிடங்களும் உண்டு. மேலும் அஞ்சல் துறையின் நிருவாகமும் அதன் பொறுப்பில் இருப்பதே வழக்கம். பெரும்பாலானக் கூட்டாட்சிகளில் இருப்புப்பாதை நிறுவனங்களின் வரவு செலவை மத்திய அரசு மேற்கொள்வதைக் காண்கிறோம். சுவிட்சர்லாந்தில், வெடி மருந்து, உப்பு ஆகிய பொருள்களின் உற்பத்தியும் விற்பனையும் மைய அரசின் தனி உரிமையாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மைய அரசுக்கு இருப்பதைப் போன்று, மாநில அரசுகளுக்கும் சொந்தமாக நிலங்களும் கட்டிடங்களும் உண்டு. அவை பல தொழில் நிறுவனங்களை நடத்தி, அவற்றின் மூலமாகமிகுதியாக இலாபமடைகின்றன. ஆஸ்திரேலிய மாநிலங்கள் அவற்றின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேலாகவே அவை மேற்கொண்டிருக்கும் தொழில்களிலிருந்து பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய மாநில அரசாங்கங்கள் ஒன்றின் அனுமதி

களில் மற்றொன்று தலையிடாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கனடா ஆஸ்திரேலியா ஆகியவற்றின் அரசியலமைப்புகள், ஒரு அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் மீது மற்றைய அரசாங்கம் வரி விதிக்கக்கூடாது எனத் தடை செய்கின்றன.

ஈ. மானியங்கள்

கூட்டாட்சியில் மத்திய மாநில அரசாங்கங்கள் மானியங்கள் மூலமாகவும் அவற்றின் வருவாயினை பெருக்கிக் கொள்கின்றன. மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியம் அளிப்பதும், மாநில அரசுகள் மத்திய அரசுக்கு மானியம் அளிப்பதும் சாத்தியம் எனினும், பொதுவாக மத்திய அரசே மாநில அரசுகளுக்கு மானியம் வழங்குவதைக் கூட்டாட்சிகளில் பார்க்கிறோம். சுவிட்சர்லாந்தில் மத்திய அரசு மாநில அரசுகளை அதற்கு மானியத் தொகை அளிக்கும்படிக் கட்டாயப்படுத்தலாம்; இந்த அதிகாரத்தை அரசியலமைப்பே தருகிறது; இருந்தாலும் 1849ஆம் ஆண்டிற்குப் பிறகு மத்திய அரசாங்கம் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. மத்திய அரசு மாநிலங்களுக்கு மானியம் வழங்குவது இன்றையக் கூட்டாட்சிகளில் சாதாரண நிகழ்ச்சியாகவிட்டது. சுவிட்சர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளிலும் மாநிலங்களுக்கு மானியம் கொடுக்கப்படுவது மத்திய அரசின் கடமை என்பதாக அரசியலமைப்புகள் குறிப்பிடுகின்றன. கொடுக்கின்றவரின் விருப்பு வெறுப்பைப் பொறுத்து மானியம் அமையுமானால், பெறுகின்றவர் அதை ஒரு நிலையான வருவாயாகக் கருதமுடியாது. சுவிட்சர்லாந்தில், வடித்த மதுவகைகளிலிருந்து (distilled beverages) மத்திய அரசாங்கம் வசூலிக்கும் வரிகளில் பாதித்தொகையை அது மாநில அரசாங்கங்களுக்கு மானியமாக அளிக்க வேண்டுமென அரசியலமைப்பு வற்புறுத்துவது, அங்கே மாநிலங்கள் பெறும் மானியத் தொகையானது தேசிய அரசின் தயவைப் பொறுத்ததல்ல என்பதை எடுத்துக் காட்டுகிறது. மைய அரசாங்கம், அது விரும்புகிற சமயங்களில் அதுவிரும்புகிற இனங்களுக்கு மாநிலங்களுக்கு மானியம் வழங்குகிற வழக்கத்தை எல்லாக் கூட்டாட்சிகளிலும் காணலாம். அமெரிக்க மாநிலங்கள் பெறுகின்ற மானியங்கள் அனைத்தும், மைய அரசாங்கத்தின் விருப்பத்திற்கு உட்பட்டவையே யாகும். சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கூட, மாநிலங்கள் பெறும் மானியங்களில் பெரும்பகுதி மத்திய அரசு அதன் விருப்பப்படி அளிக்கும் தொகையேயாம்.

ஈ. கடன் திரட்டுதல்

எல்லாக் கூட்டாட்சி அரசியலமைப்புகளும் கடன் திரட்டக் கூடிய அதிகாரத்தை இரு அரசாங்கங்களுக்கும் தருகின்றன. பணத்தட்டுப்பாடு ஏற்படுகின்ற காலங்களில் அரசாங்கங்கள் திருப்பித்தரக்கூடிய கடனுகை தொகை திரட்டுவது ஆட்சித் துறை வரலாற்றில் புதிய பழக்கமல்ல. ஆஸ்திரேலியாவில், மத்திய மாநில அரசுகள் ஒன்றொடொன்று போட்டி போட்டுக் கொண்டு கடன் வாங்குவதைத் தடுக்க, 1927ஆம் ஆண்டில் 'கடன் குழு' (Loan Council) என்ற அமைப்பு நிறுவப்பட்டது. மத்திய அரசின் சார்பாக ஒரு பிரதிநிதியையும், ஆறு மாநிலங் களின் சார்பாக ஆறு பிரதிநிதிகளையும் கொண்டு இங்கும் இக் குழுவே பொதுக் கடன்களை (Public Debts) பற்றிய விதிகளைத் தீர் மானிக்கிறது. மத்திய மாநில அரசுகளின் நிதி உறவுகளை ஒழுங்கு படுத்தவும், அவைகளுக்கிடையே கூட்டுறவை வளர்க்கவும் நிறு வப்பட்டிருக்கும் கடன் குழு ஒரு புதிய முயற்சி எனப் பாராட்டப் படுகிறது.

உ. வரி விதித்தல்

தற்கால அரசாங்கங்கள் அவற்றின் வருவாய்க்கு வரிப் பணத்தையே பெரிதும் நம்பியிருக்கின்றன. கூட்டாட்சியில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் இரண்டும் வரிப்பணத்தையே அவற்றின் பொருளாதாரத்தின் முதுகெலும்பென நம்பியிருக்கின் றன. இரு அரசாங்கங்களும் ஒன்றுல் மற்றொன்று கட்டுப்படுத்தப் படாமல், தனித்தனியாக வரி வசூலிக்கக்கூடிய தன்மையைப் பெற் றிருக்குமாயின், அது சிறந்த கூட்டாட்சியாக அமையும். கன டாவின் அரசியலமைப்பு அதன் தேசியப் பாராளுமன்றம் எந்த வரியையும் வசூலிக்கலாம் என்றும், மாநில அரசாங்கங்கள் மாநில அலுவல்களுக்கென நேர்முக வரியை (Direct Taxation) வசூலிக்க லாம் என்றும் கூறுகிறது. இங்கு மத்திய அரசாங்கம் மாநில அர சாங்கங்களைவிட வலுவுள்ள நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆஸ்திரேலிய அரசியலமைப்பு, அதன் மையப் பாராளுமன்றம் வரி விதிப்புச் சட்டங்களை இயற்றலாம் எனக் கூறினும், அவை மாநிலங்களுக்கிடையே வேறுபாடு காட்டுகின்றனவாய் அமையக் கூடாது என அறிவிக்கிறது. கூட்டாட்சியில் சேருவதற்கு முன்பு மாநிலங்கள் வசூலித்த வரிகளில் சிலவற்றைத் தவிர மற்ற வரிகளைத் தொடர்ந்து அவை வசூலிக்க அரசியலமைப்பு அனுமதிக்கிறது. அமெரிக்காவின் கடன்களைத் தீர்க்கவும், நாட்டின் பாதுகாப்பிற் காகவும், பொது நலனுக்காகவும் வரி வசூல் செய்ய காங்கிரஸுக்கு

அனுமதியளிக்கும் அமெரிக்க அரசியலமைப்பு, அதுபோன்ற வரிகள் நாடு முழுதும் ஒரே மாதிரியானவையாய் இருக்கவேண்டும் என்று கூறுகிறது. மேலும், அதன் நேர்முக வரிகள் மாநிலங்களின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு வசூலிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. சுவிஸ் அரசியலமைப்பு முதலில் சுங்கவரி வசூல் செய்யும் அதிகாரத்தை மட்டும் தேசிய அரசுக்கு அளித்து, எஞ்சிய மறைமுக வரிகளையும் (Indirect Taxations), எல்லா நேர்முக வரிகளையும் வசூலிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு அளித்தது; ஆனால் காலப்போக்கில் அரசியலமைப்புத் திருத்தங்கள் மூலமாக மாநிலங்களின் நிதி நிலை மேலும் வலுவடைந்தது.

சாதாரணச் சட்டங்களியற்றும் அதிகாரத்தின் வாயிலாகக் கட்டுப்படுத்த முடியாத அலுவல்களை, அரசாங்கங்கள் அவற்றின் நிதி அதிகாரத்தின் வாயிலாகக் கட்டுப்படுத்தலாமா? உண்மையில் கூறப்போனால் அவ்வாறு செய்வது கூட்டாட்சிக் கொள்கைக்கு மாறான செயலாகும். ஒரு இனத்தின்மீது ஒரு அரசாங்கத்தால் சட்டமியற்ற முடியாதென்றால், அது தன் நிதி அதிகாரத்தை பயன்படுத்தி அவ்வினத்தில் தலையிடுவது அனுமதிக்கப்பட்டால், அரசியலமைப்பின் பல பகுதிகள் பயனற்றவையாய்ப் போகலாம். ஆனால் அமெரிக்கத் தலைமை நீதி மன்றமானது வேறுவிதமாகத் தீர்மானித்திருக்கிறது. 'பொது நலத்துக்காக' அமெரிக்கத் தேசிய அரசு வரவு செலவு செய்யக்கூடிய அதிகாரத்தின் அடிப்படையில், அது மாநிலங்களின் இனமான விவசாயத்தைப்பற்றி செய்த சட்டங்கள் சரியானவையே என்று 1936ல் அறிவித்தது. ஆனால் கனடாவில் இதுபோன்ற மைய அரசாங்கமானது மாநில அரசாங்கங்களின் அலுவல்களை அபகரிக்க முயல்வது நியாயமாகாது என பிரிவி கவுன்சலின் நீதிக் குழு அறிவித்தது.

3. வரி வசூலும் போர்களும்

வரி வசூலிப்புத் துறையில் மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் அனுபவித்து வந்த அதிகாரங்களை இருபதாம் நூற்றாண்டின் இரு பெரும் உலகப் போர்களும் மாற்றியமைத்தன. போர்க்காலத் தேவைகளுக்குத் தகுந்த வகையில் பொது நிதிக் கொள்கையைத் திருத்தி அமைத்துக் கொள்வது தவிர்க்க முடியாததாயிற்று; முதல் உலகப் போரில் (1914-18) சுவிட்சர்லாந்து சண்டையில் கலந்துகொள்ளவில்லை என்றாலும், அதனுடைய படைகள் நான்கு ஆண்டுகளுக்குமேல் போருக்கு ஆயத்தமான நிலையில் இருந்தன. நாளுக்கு நாள் அரசின் வருமானம் குறைந்ததோ-

டல்லாமல் செலவும் அதிகரித்தது. தேசிய அரசு நேர்முக வரிகள் சிலவற்றை வசூலிக்க அதிகாரமளிக்கப்பட்டு அரசியலமைப்புத் திருத்தப்பட்டது. வருமானம், சொத்து, இலாபம், புகையிலை ஆகியவற்றின்மீது விதிக்கப்பட்ட வரிகள் பொது அரசாங்கத்தின் பொருளாதாரத்திற்கு சற்று வலுவூட்டியது. இரண்டாவது உலகப் போரின் பொழுதும் (1939-45) பாதுகாப்பு செலவுக்கென மேலும் சில வரிகளை விதிக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்குத் தரப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் தேசிய அரசு வருமான வரி திரட்டுவதை முதன்முதலாக முதலாவது உலகப்போரின்பொழுதுதான் மேற்கொண்டது. இதற்கு முன்பே மாநில அரசுகள் வருமான வரி வாங்கிவந்தன. இரண்டாவது உலகப் போரின்பொழுது மாநிலங்களும் தொடர்ந்து வருமான வரி திரட்டுவதை விரும்பாத தேசிய அரசு, அத்துறையைத் தனக்குஒதுக்கி விடும்படி மாநிலங்களை கேட்டுக்கொண்டது. ஆஸ்திரேலியாவில் தோன்றிய நிலை, கனடாவிலும் தோன்றியது. மாநிலங்களோடு தானும் வருமான வரி வசூலித்துவந்த தேசிய அரசு, இரண்டாவது உலகப் போரின்பொழுது மாநிலங்கள் அத்துறையிலிருந்து விலகிக்கொள்ளச் செய்து, அவ் வருவாய் முழுவதையும் தானே அனுபவித்தது.

அமெரிக்க ஐக்கியநாடு வெகு காலம்வரை அதன் வருமானத்திற்கு சுங்க வரியையும், ஆயத் தீர்வையுமே நம்பி யிருந்தது. 1890 ஆம் ஆண்டில், சுங்கமும் ஆயமும் தேசிய அரசாங்கத்தின் வருமானத்தில் 99 சத விகிதமாக இருந்தது. இரண்டாவது உலகப் போரின்பொழுது ஏற்கப்பட்ட செலவுகளை ஈடுகட்ட, மத்திய அரசு ஏராளமான நேர்முக வரிகளை விதித்தது. 1961 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, தேசிய அரசின் வருமானத்தில் 87 சதவிகிதம் வருமான வரியிலிருந்து வந்த தொகை என கணக்கிடப்பட்டிருக்கிறது, ஆனால் சுங்கம், ஆயம் ஆகியவற்றிலிருந்து திரட்டப்பட்ட வரியோ தேசிய அரசின் வருமானத்தில் 1 சத விகிதமாகத்தான் இருந்ததாகக் கூறப்படுகிறது. தங்கள் வருவாய்க்கு வருமான வரியைப் பெரிதும் நம்பியிருந்த அமெரிக்க மாநிலங்கள், அத்துறையில் மத்திய அரசு முழு மூச்சோடு இறங்குவதைக் கண்டு, தங்கள் கவனத்தை விற்பனை வரிப் (Sales tax) பக்கமாகத் திருப்பிவிட்டன. 1961 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, மாநிலங்களின் வருமானத்தில் 19 சதவிகிதம் வருமான வரியிலிருந்தும், 60 சத விகிதம் விற்பனை வரியிலிருந்தும் வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

4. வரிவசூலில் மத்திய மாநில அரசுகளின் நிலை

வரி விதிக்கக்கூடிய உரிமை இரு அரசாங்கங்களுக்கும் உண்டென்றாலும், அந்த உரிமையை முழுவதும் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலை இரு அரசாங்கங்களுக்கும் ஒரே மாதிரியாக இருப்பதாகத் தோன்றவில்லை. கூட்டாட்சி ஒன்றில் மத்திய அரசு மாநில அரசுகள் இரண்டுமே வரிகளை விதிக்கின்றன. வரி செலுத்தும் குடிமக்கள், இரு அரசுகளும் கோரும் வரித்தொகையை கொடுக்க முடியாத நிலையில் இருந்தால், எந்த அரசின் கோரிக்கைகளை முதலில் ஏற்கவேண்டும்? கூட்டாட்சிக் கோட்பாடு உண்மையாக மதிக்கப்படும் நாடுகளில், வரிப் பணத்தை இரு அரசுகளும் அவற்றின் கோரிக்கைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொள்வதே முறையான ஏற்பாடாகும். இரு அரசுகளில் ஒன்றிற்குச் சேர வேண்டியதை முதலில் செலுத்தவேண்டும், மற்றொன்றிற்கு சேர வேண்டியதை பிறகு செலுத்தலாம் என்ற எண்ணத்திற்குச் சிறிதும் இடமிருக்கக் கூடாது. ஆனால் கனடா, ஆஸ்திரேலியா ஆகியக் கூட்டாட்சி களில், மத்திய அரசு அதன் வரி பாக்கியை வசூலித்த பிறகே மாநில அரசுகள் அவற்றின் வரிபாக்கியை வசூலிக்கமுடியும்; இந் நாடுகளின் தலைமை நீதிமன்றங்கள் மேற்கண்ட ஏற்பாடு நியாய மான ஏற்பாடாகும் எனத் தீர்மானித்திருக்கின்றன.

இரண்டாம் உலகப் போரின் பொழுது, 1942ஆம் ஆண்டில், போர்ச் செலவுகளை மேற்கொள்வதற்குப் போதுமான பொருள் திரட்ட, ஆஸ்திரேலியாவில் மத்திய அரசாங்கம் வருமான வரி ஒன்றை விதித்தது. மாநிலங்களும் வருமான வரி வசூலித்து வந்த தால், மத்திய அரசு அவற்றோடு போட்டி போட்டுக்கொண்டு வரி வசூலிக்க வேண்டியதாயிற்று. மத்திய அரசாங்கம் அதற்குச் சேர வேண்டிய வரி பாக்கி முதலில் செலுத்தப்பட வேண்டுமென்றும், மாநிலங்கள் அவற்றிற்குச் சேர வேண்டிய வரி பாக்கியை அதன் பிறகே வசூலிக்க வேண்டுமென்றும் கூறி தேசிய அரசு சட்டமி யற்றியது. குடிமக்களில் பலர், மத்திய அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வருமான வரித்தொகை மிகுதியாக இருந்ததால், அதையும் செலுத்தி, மாநில அரசாங்கத்திற்கும் வருமான வரி செலுத்த முடியாத நிலையில் இருந்தனர். நாட்டின் சட்டமோ, வருமான வரிமீது மத்திய அரசின் கடன் தீர்க்கப்பட்ட பிறகே மாநில அரசுகளின் கடன், தீர்க்கப்பட வேண்டும் என அறிவித்த தால், மாநிலங்கள் வரி விதிக்க முடிந்தாலும் அவற்றை வசூலிக்க முடியவில்லை என்பது தெளிவாகிறது.

ஆஸ்திரேலியாவில் மைய அரசு மாநில அரசுகள் இரண்டுமே வரி விதித்து சட்டங்கள் இயற்றும் பொழுது, அச்சட்டங்கள் ஒன்றிற்கொன்று முரணானவையாய் இருப்பின், எதை ஏற்றுக்கொள்வது என்ற வினவிற்கு அரசியலமைப்பே விடை தருகிறது. 'மாநில அரசொன்றின், சட்டமானது தேசிய அரசின் சட்டமொன்றோடு முரண்பட்டால், பிந்தியதே ஏற்றுக் கொள்ளப்படும்' என அதன் 109-வது விதி கூறுகிறது. இரு அரசாங்கங்களும் ஒரே சமயத்தில் வரி விதிப்பதில் தவறொன்றுமில்லை. ஆனால், அவற்றை வசூலிக்கும் பொழுது சிக்கல்கள் தோன்றினால் முதலில் மத்திய அரசின் கடன் தீர்க்கப்பட்ட பிறகே மாநில அரசின் கடன் தீர்க்கப்படவேண்டும் என்ற கருத்தில்தான் தவறு இருப்பதாகத் தோன்றுகிறது. 1932ஆம் ஆண்டில் பிரிவி கவுன்சிலில் நீதிக் குழு, கனடாவிலிருந்து சென்ற வழக்கொன்றிற்குத் தீர்ப்பளிக்கும் பொழுது, ஆஸ்திரேலிய முறையை உறுதிப்படுத்தும் வகையில், இரு அரசுகளின் வரி வசூல் உரிமைகள் மோதிக் கொள்ளும் பொழுது மத்திய அரசுக்கே முதல் சலுகைக் காட்டப்படவேண்டும் என்பதாக அறிவித்தது. வரி வசூல் துறையில் கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தேசிய அரசு அனுபவிக்கும் முந்துரிமை, அங்கு மாநில அரசுகளைப் பாதிக்கக்கூடிய தன்மையுடையது என்பதில் ஐயமில்லை; எனவே அது கூட்டாட்சித் தத்துவத்துக்கு முரணானது என்ற முடிவுக்கு வருவது தவிர்க்கமுடியாததாகும்.

கூட்டாட்சியில் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சுதந்திரமாக இயங்கவேண்டும் என்பதற்காகத்தானே அரசின் அதிகாரங்களை இரண்டாகப் பிரித்துச் சிலவற்றை மத்திய அரசாங்கத்திற்கும், சிலவற்றை மாநில அரசாங்கங்களுக்கும் தருகின்றோம். மாநில அரசாங்கங்களின் வரி விதிப்புகள் மத்திய அரசாங்கத்தின் வரி விதிப்புக்கு வழிவிடவேண்டும் எனக் கூறினால், மாநிலங்கள் அவற்றின் உரிமைகளைப் பொது அரசுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் எனக் கூறுவதற்குச் சமமாகிறதே! வரி வசூல் செய்யும் அதிகாரம்தானே அரசாங்கங்களுக்கு உயிரூட்டுகின்றன; பணமிருந்தால்தான் அவைகளின் கொள்கைகள் நிறைவேற முடியும். மத்திய அரசு போன்றே மாநில அரசுகளும் தங்களின் இயக்கத்திற்கு வரிப்பணத்தையே நம்பியிருக்கின்றன. மாநில அரசுகள் வரி வசூல் செய்ய முடியாத நிலையை மத்திய அரசு தோற்றுவிப்பது என்பது, கூட்டாட்சி கொள்கையைக் குழி தோண்டிப் புதைப்பதற்குச் சமமாகும். மாநிலங்களின் நியாயமான சுதந்திரத்தைப் பாதிக்கக்கூடிய எந்த ஏற்பாட்டிற்கும், கூட்டாட்சி அரசியலமைப்புகள் இடமளிக்கக் கூடாது.

ஆரம்ப காலத்திலிருந்தே அமெரிக்கத் தலைமை நீதி மன்ற மானது, காங்கிரசின் வரிவிதிப்புக் கொள்கை மாநிலங்களைப் பாதிக் காமல் பார்த்துக்கொண்டு வருகிறது. 1819ஆம் ஆண்டில் மெக்குல் லாவுக்கு எதிராக மேடிசன் (Meculloch V. Madison) என்ற வழக் கிற்குத் தீர் பளிக்கும் பொழுது, தலைமை நீதிபதி மார்ஷல், 'வரி விதிக்கும் அதிகாரத்தில் அழிக்கும் அதிகாரமும் இணைந்திருக் கிறது' எனக் கூறினர். அமெரிக்காவைப் பொருத்த வரை வரி விதிப்புத் துறையில் மாநிலங்களின் உரிமையைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் வளர்ந்து விட்டதாகக் கூற முடியாது; அது போன்ற வளர்ச்சியைத் தலைமை நீதி மன்றம் அவ்வளவு எளிதாக அனுமதித்து விடாது.

இது வரை கூறப்பட்ட செய்திகளிலிருந்து கூட்டாட்சியில் வரிவிதிப்பு அதிகாரங்கள் மத்திய அரசுக்கு இருக்கின்ற அள வுக்கு மாநில அரசுகளுக்கு இல்லை என்பது தெரிகிறது. அமெ ரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நான்கு நாடுகளிலும் மத்திய அரசு தலையிடமுடியாத அதிகாரம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. இன்றையக் கூட்டாட்சிகளில் இரு அரசாங்கங்களின் நிதி நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், மத்திய அரசாங்கம் உயர்ந்த நிலையில் இருப்பதையும் மாநில அரசாங் கங்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதையும் காணலாம். மத்திய அரசாங்கத்தின் மானியங்களைப் பெற்றுதானே பல நாடுகளில் மாநில அரசாங்கங்கள் செயல்படுகின்றன. மத்திய அரசாங்கத்தை நம்பி மாநில அரசாங்கம் இருப்பது, அதுவும் குறிப்பாக நிதித் துறையில் அவ்வாறு இருப்பது, கூட்டாட்சிக் கொள்கைக்கு முற் றிலும் முரணானதாகும்.

5. மானியங்களும் மத்திய மாநில உறவுகளும்

1939-ஆம் ஆண்டில் அமெரிக்க மாநிலங்களின் வருமானத் தில் 15 சதவிகிதமும், ஆஸ்திரேலிய மாநிலங்களின் வருமானத் தில் 12 சதவிகிதமும், சுவிஸ் மாநிலங்களின் வருமானத்தில் 25 சதவிகிதமும், கனடிய மாநிலங்களின் வருமானத்தில் 10 சதவிகி தமும் மத்திய அரசாங்கத்திடமிருந்து மானியமாகப் பெறப்பட்ட வையாகும். மாநிலங்களின் வருவாயில் மானியங்களின் விகிதாச் சாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்கைப் பார்க்கலாம்; இவ்வாறு மானியங்கள் அதிகரிக்கப்படுவதைப் போர்க்காலத் தேவைகள் அவசியமாக்கின. 1960இல் அமெரிக்க மாநிலங் களின் வருமானத்தில் 23 சதவிகிதமும், 1959—60இல் ஆஸ்தி

ரேலிய மாநிலங்களின் வருமானத்தில் 38சத விகிதமும், 1958இல் கனடிய மாநிலங்களின் வருமானத்தில் 22 சத விகிதமும் மத்திய அரசாங்கங்கள் மானியங்களாக வழங்கியத் தொகையாகும்.

மாநில அரசுகள் அவைகளின் பொறுப்புகளைச் செய்ய பெரும் பொருள் செலவு செய்ய வேண்டியிருப்பதால், அவை மத்திய அரசிடமிருந்து நிரந்தரமாக நிதி உதவி எதிர்பார்க்கின்றன. கல்வி, காவல் (Police), பொதுச் சுகாதாரம், வயோதிகர்க்கு ஓய்வுச் சம்பளம் (Old age Pension), வறியோர்க்கு உதவி (Poor Relief), தாய், சேய் நலம் போன்ற சமூகப் பணிகளை பொதுவாக மாநில அரசுகளே மேற்கொள்கின்றன. ஏழை எளியவர்கள் நல்வாழ்க்கை வாழ மேற்கண்ட பணிகளையே நம்பியிருப்பதால், அவற்றை இலவசமாக செய்துகொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். பெருஞ் செலவு பிடிக்கும் பணிகளை மாநில அரசுகள் அவற்றின் குறைந்த வருமானத்தைக்கொண்டு செய்ய முடியாமல் போவதால், மத்திய அரசு தரும் மானியத்தை எதிர்பார்க்கின்றன. கூட்டாட்சியிலுள்ள மாநிலங்கள் அனைத்தும் ஒத்த வருமானமுடையவாய் இருப்பதில்லை; சில மாநிலங்களுக்கு அதிகமாகவும், சில மாநிலங்களுக்கு குறைவாகவும் நிதிவசதி இருப்பது இயல்பு. வருமான வாய்ப்புகள் அதிகமில்லாத மாநிலங்கள் தேசிய அரசின் துணையில்லாமல் மக்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்க முடியாத நிலையில் இருக்கின்றன. அமெரிக்காவில் தெற்கு கரோலினு (Soulh Carolina), தெற்கு டகோடா (Soulh Dakota), ஆஸ்திரேலியாவில் மேற்கு ஆஸ்திரேலியா (Western Australia), டாஸ்மானியா (Tosmania), கனடாவில் நோவா ஸ்கோஷியா, நியூ ப்ரன்ஸ்விக், பிரின்ஸ் எட்வேர்டு தீவு போன்ற பின்தங்கிய மாநிலங்கள் வறுமையின் காரணமாக மைய அரசின் மானியத்தை நம்பி இயங்குகின்றன. சாதாரண சமயங்களிலேயே தனித்தியங்க முடியாத நிலையிலிருந்த அவை, 1930ஆம் ஆண்டிற்குப் பிறகு தோன்றிய பொருளாதாரத் தொய்வின் பொழுது அவற்றின் இன்றியமையாதத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்யமுடியாத நிலையை அடைந்தன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நான்கு கூட்டாட்சிகளிலும், மேலே கூறப்பட்ட பொருளாதார மந்தம் மத்திய மாநில அரசுகளின் உறவுகளில் ஒருபுதிய அத்தியாயத்தையே தோற்றுவித்தது எனக்கூறலாம். மைய அரசானது அதன் வருமானத்திலிருந்து மாநிலங்களுக்கு மானியம் வழங்கியதோடல்லாமல், வளமான மாநிலங்களின் வருமானத்தில் ஒரு பங்கை வளமற்ற மாநிலங்களின் நலனுக்காக செலவிடும் வழக்கத்தையும் மேற்கொண்டது. நாட்டின் மொத்த வருமானத்தை அதன்

பல்வேறு மாநிலங்கள் அதனதன் தேவைகளைத் தகுந்த வகையில் பகிர்ந்து கொள்வது சமதரும சமுதாயத்தை உருவாக்க உதவும் என நம்பலாம்.

1933ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் F. D. ரூஸ்வெல்ட் (F. D. Roosevelt) வகுத்த சமூகப் பொருளாதாரத் திட்டத்தை (New Deal) இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும். தேசிய அரசு திட்டமிட்ட சமூகப் பொருளாதார ஏற்பாடுகளை எற்றுக்கொண்ட மாநிலங்களுக்கு தாராளமான நிதி உதவி அளிக்கப்பட்டதால், மாநில அரசுகள் அந்த உதவியைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கவில்லை. 1930இல் 13,50,00,000 டாலர்களை மாநிலங்களுக்கு மானியமாக வழங்கிய தேசிய அரசு, 1940இல் 58, 25, 29, 318 டாலர்களை மானியமாக வழங்கிய செய்தி அறியத்தக்கதாகும். 1930-க்கும் 1940-க்கும் இடைப்பட்ட பத்து ஆண்டு காலத்தில் அங்கு மானியத் தொகை அதிகரித்த மாதிரி வேறு எந்தக்காலத்திலும் அதிகரித்ததில்லை எனக் கூறப்படுகிறது. இம் மானியத்தில் பெரும்பங்கு சமூகப் பணிகளுக்காகத் தரப்பட்டன. 1940இல், அப்பொழுதிருந்த நாற்பத்தெட்டு மாநிலங்களுக்கு தேசிய அரசு 36,00,00,000 டாலர்களை மானியத் தொகையாக வழங்கியது. இது போன்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியை மற்ற கூட்டாட்சிகளிலும் நாம் பார்க்கலாம். கனடாவில், 1930 இல் மாநிலங்கள் வழங்கிய முதியோர் ஓய்வுச் சம்பளத்தில் 75 சத விகிதமும், 1937இல் மாநிலங்களும் ஊராட்சிகளும் வறியோர் உதவி நிதியில் 83 சத விகிதமும் தேசிய அரசின் நன்கொடையே யாகும். சுவிட்சர்லாந்தில் கல்வி, பொதுச் சுகாதாரம், பொறியியற் பணிகள் போன்ற வற்றிற்காகவும், ஆஸ்திரேலியாவில் சமுதாயக் காப்பீடு, விவசாயம் போன்ற வற்றிற்காகவும் மானியங்கள் அளிக்கப்பட்டன. மேலும் ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் சில சமூகப் பணிகள் குறித்து சட்டமியற்றக்கூடிய அதிகாரத்தையே மாநிலங்கள் மத்திய அரசுக்கு மாற்றிக் கொடுத்தன.

6. மத்திய மாநில நிதித்தொடர்புகள் இன்று எவ்வாறு ஒழுங்கு படுத்தப்படுகின்றன என்பது

தற்கால கூட்டாட்சிகளில் பொது நிதி செயல்படும் முறையை ஆராய்ந்தால், அரசியலமைப்புகளில் மத்திய மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்படும் வருவாய் வாய்ப்புகள், அவற்றின் பணிகளை அவை முழுமையாகச் செய்வதற்கேற்ற வகையில் அமையவில்லை

என்பது தெளிவாகத்தோன்றும். மேலும், எந்தக் கூட்டாட்சியிலும் மத்திய மாநில அரசாங்கங்களில் எவை எவை எந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுபற்றி நிரந்தரமான ஏற்பாடு எதுவும் இருக்கமுடியாது என்பதும் புலனாகிறது. மத்திய அரசுக் கென ஒதுக்கப்பட்ட பணிகள் மாநிலங்களின் பணிகளாய் மாறி விடுவதும், மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகள் மத்திய அரசின் பணிகளாய் மாறிவிடுவதும், கூட்டாட்சியில் சாதாரண நிகழ்ச்சிகளாய் கருதப்படுகின்றன. நாட்டின் வருவாயை இரு வகை அரசுகளும் அவ்வப்பொழுது தோன்றும் சூழ்நிலைகளுக்குத் தக்க வகையில் பகிர்ந்துகொள்ள வகை செய்வதற்கு பல கூட் டாட்சிகளில் பல விதமான முறைகள் கையாளப்படுகின்றன. (1) சுவிட்சர்லாந்தில் மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப அரசியலமைப்பை முறைப்படி திருத்துவதன் மூலம் மைய மாநில அரசாங்கங்களின் பணிகளும் அவற்றின் வருவாயும் மாற்றி அமைக்கப்படுகின்றன. அரசியலமைப்பை காலப் போக்கில் பலமுறை திருத்தியே, சுவிஸ் மாநிலங்கள் அவைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பணிகள் பல வற்றையும், அவற்றை செய்வதற்குரிய வருவாய் மூலங்களையும் தேசிய அரசுக்கு மாற்றிக் கொடுத்திருக்கின்றன. (2) ஆனால் அமெரிக்காவில் அரசியலமைப்புத் திருத்தங்கள் வாயிலாக மத்திய மாநில அரசுகளுக்குரிய பணிகளில் மாற்றங்கள் உண்டாவதாகத் தோன்றவில்லை. மத்திய அரசு வழங்கும் மானியங்களை மாநிலங்கள் நம்பி இருந்தாலும், மானியங்கள் எந்தக் கொள் கையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது பற்றி நிரந்தரமான ஏற்பாடு எதுவுமில்லை. மானியத்தைத்தரும் அரசாங்கத்திற்கும் அதைப் பெருகின்ற அரசாங்கங்களுக்கு மிடையே நிகழும் பேரத்தின் விளைவே பொதுவாக மானியத் தொகையை முடிவு செய்கிறது. இரு அரசுகளுக்கு மிடையே நிலவ வேண்டிய நிதி உறவுகளை நிர்ணயிக்க நியாயமான முறை எதுவும் பின்பற்றப்படாமலிருப்பது அமெரிக்கக் கூட்டாட்சியின் குறையாகும். (3) மத்திய மாநில அரசுகளின் நிதித் தேவைகளை நிவர்த்தி செய்ய ஆஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் நம் கவனத்துக்குரியனவாகும். அங்கு இயங்கும் கடன் குழு, மத்திய மாநில அரசாங்கங்கள் எழுப்பும் கடன்களைப் பற்றிய விதிகளைத் தீர்மானிக்கிறது என்பதை முன்னர் பார்த் தோம். மேலும் காமன்வெல்த்து மானியக் குழு (Common-wealth Grants Commission) என்னும் ஒரு புதிய நிறுவனமும் அங்கு இயங்கி வருகிறது. மானியம் வேண்டும் மாநிலங்கள், இக்குழு வுக்கு விண்ணப்பித்துக் கொள்வதும், இதன் சிபாரிசின் பேரில் தேசிய அரசு மானியம் வழங்குவதும், சில சமயங்களில் சில

மாநிலங்களின் எதிர்பாராத தேவைகளைப் பூர்த்திசெய்ய பெருந் தொகைகளை அளிக்க இக்குழு முன்வருவதும் அறியத்தக்க செய்திகளாகும். மானியங்களைப் பற்றி மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்க இந்திய அரசியலமைப்பு நிதிக் குழு (Finance Commission) ஒன்றையும், மலேயா அரசியலமைப்பு தேசிய நிதிக் குழு (National Finance Council) ஒன்றையும், ரொடிசியா—நியாசாலாந்தின் (Rhodesia and Nyasaland) அரசியலமைப்பு ஆஸ்திரேலியாவிலுள்ள கடன் குழுவை ஒத்த அமைப்பொன்றையும் நிறுவி யிருக்கின்றன.

இன்றையக் கூட்டாட்சிகளில் நிலவும் நிதி உறவுகளைக் காண்போர், அவற்றில் கூட்டாட்சி கோட்பாடு நாளுக்கு நாள் நலிந்து வருவதை மறுக்க மாட்டார்கள். அரசாங்கம் வெறும் கூட்டாட்சி அரசாங்கமாக இருப்பதைவிட நல்லாட்சி அரசாங்கமாக இருப்பதுதான் முக்கியம் எனத் தற்காலத்தில் உணரப்படுவதால், மாநில அரசுகள் மத்திய அரசுக்கு ஓரளவுக்குக் கட்டுப்பட்டு இயங்குவதில் தவறொன்றுமில்லை என்பதே மத்திய மாநில நிதித் தொடர்புகளைப் பற்றிய இன்றையக் கருத்தாகும். இந்தக் கருத்தின் வலிமையே, கூட்டாட்சிகள் தோன்றிய காலத்திலிருந்த நிதிப் பங்கீடு காலம் செல்லச் செல்ல மத்திய அரசுக்குச் சாதகமாகவும், மாநில அரசுகளுக்குப் பாதகமாகவும் மாறியதற்குக் காரணமாக அமைந்தது எனக் கூறவேண்டும். கொள்கையை விட நடைமுறைத் தேவைகளே அரசாங்கங்களின் இயக்கத்திற்கு வழிகாட்டும் என்பதற்குக் கூட்டாட்சியில் பொது நிதி செயல்படும் முறையை சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதுவது பொருந்தும்.

6. கூட்டாட்சியும் பொருளாதார அலுவல்களும்

(1) முன்னுரை (2) அயல்நாடுகளோடு வியாபாரம் (3) முக்கியமான இனங்கள் சிலவற்றின் நிருவாகம் (4) பொருளாதார அதிகாரப் பங்கீட்டில் மாற்றங்கள்: அ. சுவிட்சர்லாந்து ஆ. கனடா இ. அமெரிக்கா ஈ. ஆஸ்திரேலியா (5) பொருளாதார நிருவாகத்தில் குறைபாடுகள்.

1. முன்னுரை

கூட்டாட்சியில் பொருளாதார விவகாரங்களை நிருவாகம் செய்வதென்பது எளிதான காரியமல்ல. எடுத்துக் காட்டாக, சுங்க வரிக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. மாநிலங்களில், ஏற்றுமதி இறக்குமதிகளை நம்பி வாழும் மாநிலங்களும், உள்நாட்டுப் பொருள்களையே நம்பி வாழும் மாநிலங்களும் எதிர் மாறான காப்புவரிக் கொள்கைகளை விரும்பும். மாநிலங்களின் தேவைகள் மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுவதால், ஒரே விதமான பொருளாதாரக் கொள்கையை அவைகளிடையே புகுத்துவது மனக் கசப்பைை உண்டாக்கும்.

2. அயல் நாடுகளோடு வாணிகம்.

அயல நாடுகளோடு வியாபாரம் செய்வதை ஒழுங்குபடுத்தும் அதிகாரம், எல்லாக் கூட்டாட்சிகளிலும் பொது அரசாங்கத்திற்கே தரப்பட்டிருக்கிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நான்கு கூட்டமைப்புகளிலும், உலக நாடுகளோடு வாணிபத் தொடர்புகளைப் பற்றிய விதிகளை நிர்ணயிக்கும் உரிமையை தேசிய அரசாங்கமே அனுபவிக்கிறது ஆனல் மாநில அரசாங்கங்கள் அவ்வளவு எளிதாக இந்த உரிமையை மைய அரசாங்கத்துக்கு விட்டுக்கொடுத்துவிட்டதாகக்

கருதமுடியாது. காங்கிரஸ் வசூலிக்கும் சுங்க வரியானது அமெரிக்கா முழுவதும் ஒரே மாதிரியானதாய் இருக்கவேண்டுமென அரசியலமைப்பு அறிவித்ததற்கு மாநிலங்களின் அச்சமே பின்னணியாய் அமைந்தது. ஆஸ்திரேலியாவிலும் அதன் பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்றுமதி வியாபாரத்தைப் பெரிதும் நம்பியிருந்த மேற்கு ஆஸ்திரேலியாவைக் கூட்டாட்சியில் சேரும்படிச் செய்ய, அதற்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தனிப்பட்ட சலுகைகள் தரவேண்டியிருந்தது. சுவிட்சர்லாந்தில் 1848ஆம் ஆண்டில் கூட்டாட்சி நிறுவப்பட்ட பொழுதும், பின்னர் அவ்வரசியல் அமைப்பு 1874ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்ட பொழுதும், சில மாநிலங்கள் இறக்குமதியான மதுவகைகள் மீது தொடர்ந்து சுங்கவரிவசூலிக்க அனுமதிக்கப்பட்டன; 1890ஆம் ஆண்டில்தான் அவை அவ்வுரிமையை இழந்தன. எனவே, கூட்டாட்சியில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் மீது வரி வசூலிக்கும் உரிமையைத் தேசீய அரசாங்கம் எதிர்ப்பில்லாமல் எளிதாகப் பெற்றுவிட்டதாக எண்ணுவதற்கில்லை.

(1816ஆம் ஆண்டுவரை வருவாய்க்காகக் காப்பு வரி வசூலித்து வந்த அமெரிக்கக் காங்கிரஸ், பிறகு ஏற்றுமதி இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு வரிவசூல் செய்ய ஆரம்பித்ததை சில மாநிலங்கள் எதிர்த்தன. சுங்கவரிக் கொள்கைகையினால் எந்தவிதப் பயனையும் பெறாது, பலவிதமான இழப்புக்களை அனுபவிக்க வேண்டியிருந்த தெற்கு கரோலினா (South Carolina), 1832ஆம் ஆண்டில் சுங்கவரிச் சட்டங்களை அது செயல்படுத்தப் போவதில்லை என்பதாக அறிவித்தது. தென் கரோலினாவைச் சேர்ந்த அமெரிக்கக் குடியரசின் துணைத் தலைவரான கால்ஹூன் (John C. Calhoun) இச் சட்ட மறுப்பு இயக்கத்தை முன்னின்று நடத்தினர். காங்கிரஸ் அதன் வரிவசூல் அதிகாரத்தைத் தவறான வழியில் பயன் படுத்துகிறது என்றும், தென் கரோலினாவிற்கு அதை மறுக்க உரிமை உண்டு என்றும் அவர் வாதாடினர். காங்கிரஸ் 1816ஆம் ஆண்டில் இருந்த நிலைக்கே மீண்டும் செல்ல சம்மதம் தெரிவித்ததன் பேரில், சட்ட மறுப்பு இயக்கம் கைவிடப்பட்டது. ஆஸ்திரேலியாவில் சுங்கவரிக் கொள்கையானது தொழில் மாநிலங்களுக்குச் சாதமாகவும் விவசாய மாநிலங்களுக்குப் பாதகமாகவும் இருந்தது, மேற்கு ஆஸ்திரேலியாவிற்குப் பெரும் மனக் குறையை உண்டாக்கியது. சுங்கவரிச் சுமையை அது தாங்கவேண்டியிருப்பது அக்கிரமமான செயல் என்றும், அதனின்றும் விடுபட அது கூட்டாட்சியிலிருந்து விலகிக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்றும்

மேற்கு ஆஸ்திரேலியா பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டது. பிறகு சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலமாகவும், சலுகைகள் மூலமாகவும், சமரசம் உண்டாயிற்று. கனடாவில் கூட தொழில் மாநிலங்களான க்விபெக், ஒண்டாரியோ ஆகியவையே காப்புவரிக் கொள்கையினால் இலாபம் அடைவதாக மற்ற மாநிலங்கள் கருதுகின்றன. 1940ஆம் ஆண்டில் அரசுக் குழு ஒன்றால் சமர்ப்பிக்கப்பட்ட 'மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையேயான தொடர்புகள் பற்றிய அறிக்கையில்' (Canadian Royal Commission on Dominion-Provincial Relations), மாநிலங்கள் அவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதைக் கூறியிருப்பதைப் பார்க்கலாம்.

கூட்டாட்சியில் தேசிய அரசின் காப்புவரிக் கொள்கை, பல மாநிலங்களைப் பல விதமாகப் பாதிப்பதைப் பார்க்கிறோம். மாநிலங்களின் மக்கள் தொகை, பரப்பளவு, பொருளாதாரம் போன்றவை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுவதால், எல்லா மாநிலங்களுக்கும் ஏற்ற வரிக் கொள்கை ஒன்றை வகுப்பது என்பது கடினமான காரியமாகும். ஏற்றுமதி இறக்குமதி வரிக் கொள்கையானது சில மாநிலங்களிடையேத் தோற்றுவிக்கும் மனக்குறையைத் தவிர்க்க, இன்றையக் கூட்டாட்சிகள் சில முறைகளைக் கையாளுகின்றன. முதலாவதாக, என்னதான் சுங்கவரி வசூலிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக இருந்தாலும், அது தன் உரிமையை மிதமான அளவோடுதான் பயன்படுத்தி வருகிறது. தேசிய அரசாங்கத்தின் நிதானமான போக்கு, மாநிலங்களிடையே பிரிவினை சட்ட மறுப்பு போன்ற இயக்கங்களின் வளர்ச்சியை ஓரளவுக்குத் தடுக்கத் துணைசெய்யும் என நம்பலாம். இரண்டாவதாக, கூட்டாட்சியில் எல்லா மாநிலங்களுக்கும் சமமானப் பிரதிநிதித்துவம் தரப்படுவது, சிறிய மாநிலங்களுக்குப் பாதுகாப்பாய் அமைகிறது. சிறிய மாநிலங்கள் பொதுவாக விவசாய மாநிலங்களாக இருப்பதால், அவை காப்புவரிகளிலிருந்து எந்த நன்மையும் பெறுவதில்லை. பெரிய மாநிலங்கள் கீழவையில் தங்கள் விருப்பம்போல நடந்துகொள்ள முடியுமென்றாலும், மேலவையில் சிறிய மாநிலங்கள் பல ஒன்று சேர்ந்தால், அவற்றின் கருத்துக்கு மாறான முடிவெடுப்பது கடினமான செயலாகும். மூன்றாவதாக, சுங்கத் தீர்வையினால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு, சுங்கவரிப் பணத்திலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மானியம் அளிக்கப்பட்டு, அவற்றின் இழப்பு ஓரளவுக்கு ஈடுசெய்யப்படுகிறது. மானியம் பெறுகின்ற மாநிலங்கள், அவை

காப்புவரி கட்டுவதால் அவற்றின் பொருளாதாரம் சீர்குலைகிறது எனக் குறைப்பட்டுக் கொள்ள வழியில்லை.

3. முக்கியமான இனங்கள் சிலவற்றின் நிருவாகம்

கூட்டாட்சிக்குள் நிகழும் பொருளாதார அலுவல்களைக் கவனித்தால், அவற்றின் மீதான ஆதிக்கம் எல்லாக் கூட்டாட்சிகளிலும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை என்பது விளங்கும். கூட்டாட்சிகளில் எந்த ஒரு பொதுவானக் கொள்கையின் அடிப்படையிலும் மத்திய மாநில அரசுகள் பொருளாதார இனங்களை அவைகளுக்குள்ளே பகிர்ந்து கொள்வதாகக் கூறமுடியாது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நான்கு கூட்டாட்சிகளிலும் மத்திய அரசின் மேற்பார்வைக்குரிய பொருள்கள் என சிலவற்றையே கூறமுடியும்; அவை நாணயச் செலாவணி, எடையும் அளவும், பதிப்புரிமையும் காப்புரிமையும், நொடிப்பு (Bankruptcy), குடியேறுதல், தேசிய அரசின் பொறுப்பில் கடன் திரட்டுதல் ஆகிய இனங்களாகும். எல்லாக் கூட்டாட்சிகளிலும் மத்திய அரசின் ஆட்சிக்கு உட்பட்டவை என வேறு எந்தப் பொருளையும் கூறுவதற்கில்லை.

வங்கித் தொழில், கப்பல் போக்குவரத்து, இருப்புப்பாதை, வானப் பயணம் போன்றவற்றின் நிருவாகம் பல கூட்டாட்சிகளில் பல மாதிரியாக மேற்கொள்ளப்படுகின்றன. (1) வங்கித் தொழிலானது கனடாவிலும் சுவிட்சர்லாந்திலும் தேசிய அரசின் முழுக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கிறது. ஆனாலும் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் அதைத் தேசிய அரசுகள், மாநில அரசுகள் இரண்டுமே கட்டுப்படுத்துகின்றன. இவ்விரு கூட்டாட்சிகளிலும் மத்திய வங்கிகள் என்ற பெயரிலும் மாநில வங்கிகள் என்ற பெயரிலும் தனித்தனி வங்கிகள் இயங்கி வருகின்றன. (2) கப்பல் போக்குவரத்தானது சுவிட்சர்லாந்தில் மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகும். ஆனால் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் அதன்மீது இரு அரசுகளும் அதிகாரம் செலுத்துகின்றன. அயல்நாடுகளோடும் மாநிலங்களுக் கிடையேயும் நிகழும் கப்பல் போக்குவரத்தை மத்திய அரசும், மாநிலத்தின் எல்லைக்குள் நடைபெறும் கப்பல் போக்குவரத்தை மாநில அரசும் கண்காணிப்பதே இவ்விரண்டு நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஏற்பாடாகும். (3) இருப்புப் பாதைகளின் நிர்வாகம் சுவிட்சர்லாந்தில் மத்திய அரசின் ஆட்சியின் கீழ் இருக்கிறது. ஆனால் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய

நாடுகளில் இருப்புப் பாதைகளின் மேற்பார்வை இரு அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. (4) வானப் பயணம் சுவிட்சர்லாந்திலும் கனடாவிலும் தேசிய அரசின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாகும். ஆனுல் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் அதை இரு அரசுகளும் பங்கிட்டுக்கொள்கின்றன. (5) தொழிலாளர்களின் வேலை நேரம் கூலி நிர்ணயம் ஆகியவை சுவிட்சர்லாந்தில் மத்திய அரசாலும், அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மத்திய அரசு மாநில அரசுகள் ஆகிய இரண்டாலும், கனடாவில் மாநில அரசுகளாலும் கவனித்துக் கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட உதாரணங்களிலிருந்து கூட்டாட்சிகளில் பொருளாதார அலுவல்கள் ஒரே மாதிரியாக நிர்வகிக்கப்படுவதில்லை என்பது தெரிய வருகிறது.

4. பொருளாதார அதிகாரப் பங்கீட்டில் மாற்றங்கள்:
அ. சுவிட்சர்லாந்து

அரசியலமைப்புகள் தோன்றிய காலங்களில் அவை பொருளாதார இனங்களை மத்திய மாநில அரசுகளிடையே எவ்வாறு பங்கிட்டளித்தனவோ, அதேப் பங்கீடு கூடுதல் குறைவில்லாமல் பிற் காலத்திலும் நீடிக்கும் என எண்ணுவதற்கு ஆதாரமில்லை. சில கூட்டாட்சிகளில் மத்திய அரசின் அதிகாரங்கள் கூடுவதையும், சில கூட்டாட்சிகளில் அவை குறைவதையும், கூட்டாட்சிகளின் வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது. சுவிட்சர்லாந்திலும் கனடாவிலும் தேசிய அரசின் வளர்ச்சி வெவ்வேறுன சக்திகளால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அறியத்தக்க செய்தியாகும். சுவிட்சர்லாந்தில் 1848ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் பொருளாதார அதிகாரங்கள் படிப்படியாக அதிகரித்து வந்திருக்கின்றன. அரசியலமைப்பு தோன்றிய காலத்தில் மத்திய அரசு வலுவற்ற நிலையில் இருந்தது, காலப்போக்கில் மாறி, இன்று வலிவுள்ள நிலைக்கு வந்திருப்பதற்கு அங்கே மேற்கொள்ளப் பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களே காரணமாகும். 1848ஆம் ஆண்டில் நாணயங்கள் அடித்தல், அஞ்சல்துறை, சுங்கத் தீர்வை, எடையும் அளவும் போன்ற சில அலுவல்கள் மீது மட்டும் அதிகாரம் செலுத்திய மத்திய அரசின் ஆதிக்க எல்லை 1874ஆம் ஆண்டில் விரிவு படுத்தப்பட்டது. வங்கிகள், இருப்புப் பாதைகள், தொழிலாளர் நலன் ஆகிய இனங்கள் மீதான அதிகாரம் 1874-ல் மத்திய அரசுக்கு உரிமையாக்கப்பட்டன; 1874-க்குப் பிறகும் அதன் அதிகாரங்கள் அதிகரித்த வண்ணமிருந்தன. 1885-ல் மது வகைகள்

மீதும், 1917-ல் வர்த்தகப் பத்திரங்கள் மீதும், 1919-ல் கப்பல் போக்குவரத்துமீதும், 1925-ல் புகையிலை மீதும் வரிவிதிக்கும் அதிகாரத்தை மத்திய அரசு பெற்றது. 1929-ல் தானியம் மாவு, ரொட்டி ஆகியவைத் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்ய அவற்றின் பங்கீட்டை ஒழுங்குபடுத்தவும், 1947-ல் போர் போன்ற நெருக்கடி காலங்களில் தோன்றும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும், மத்திய அரசுக்குப் புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இது வரை கூறப்பட்ட விவரங்களிலிருந்து, சுவிட்சர்லாந்தில் நாட்டின் தேவைகளுக்கேற்ற வகையில் மத்திய அரசின் கரங்கள் கடந்த நூறு ஆண்டுகளாகப் பலப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்பது தெளிவாகிறது. குடியொப்பத்தின் வாயிலாக சுவிஸ் மக்கள் அவர்களுடைய தேசிய அரசின் பொருளாதார அதிகாரங்களை அதிகரித்த வேகத்தைக் கவனிப்போமானால், அவர்கள் பழமையில் பற்றுள்ளவர்கள் எனக் கூறப்படும் கருத்தானது பொருந்தாது என எண்ணத் தோன்றும்.

ஆ. கனடா

கனடாவின் அரசியலமைப்புச் சட்டங்களை ஆராய்ந்தால், மத்திய அரசாங்கத்தை நல்ல ஆற்றலுள்ள அரசாங்கமாக ஆக்க அந்நாட்டவர் முயன்றிருப்பதை அறியலாம். தொழிலையும் வாணிகத்தையும் ஒழுங்குபடுத்த மத்திய அரசுக்குக் கட்டுப்பாடற்ற அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. சொத்துக்கள், சிவில் உரிமைகள் ஆகிய இனங்கள் மாநில அரசுகளின் ஆட்சிக்கு உட்பட்டவையாய் அறிவிக்கப்பட்ட போதிலும், மத்திய அரசானது அது தொழிலையும் வாணிபத்தையும் ஒழுங்குபடுத்தக்கூடிய அதிகாரம் பெற்றிருக்கும் அடிப்படையில், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இனங்கள்மீதுகூட தலையிட ஆரம்பித்தது. பிரிவி கவுன்சிலின் நீதிக் குழுவானது, மத்திய அரசிற்குக் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை அளிப்பது கூட்டாட்சியைச் சிதைத்து விடும் என எண்ணி, அது தன் அதிகாரத்தை அயல் நாடுகளோடும் மாநிலங்களுக்கு இடையேயும் நிகழும் தொழில் வர்த்தகத் தொடர்புகளை ஒழுங்கு படுத்துவதோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும், மற்றபடி மாநிலங்களுக்குள் நடைபெறும் தொழிலையும் வியாபாரத்தையும் கட்டுப்படுத்தும் உரிமை மாநில அரசுகளுக்கே உரியதென்றும் முடிவு செய்தது. எனவே, கனடிய அரசியலமைப்பின் தொழில் வர்த்தக விதியின் அடிப்படையில் மத்திய அரசு குறிப்பிடத்தக்க அதிகாரம் எதையும் அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிறது. தொழிலும் வர்த்தகமும் என்பதற்கு எவ்வளவு

குறுகிய பொருள் கூறமுடியுமோ, அவ்வாறு கூறுவதையே நீதிக் குழு செய்து வந்திருக்கிறது.

கனடாவில் 'அமைதி, ஒழுங்கு, நல்ல அரசாங்கம்' (Peace, order and good Government) ஆகியவற்றிற்கான சட்டங்களை இயற்றும் உரிமை மத்திய அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அதிகாரத்தை, மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பாதிக்கும் வகையில் மத்திய அரசு செயல்படுத்தக்கூடாது என நீதிக்குழு தீர்ப்பளித்திருக்கிறது. 1930-ல் தோன்றிய பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க பென்னட்டின் (Bennett) அரசாங்கம் கொண்டுவந்த பொருளாதாரச் சீரமைப்புத் திட்டத்தை, அது மத்திய அரசின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டதாகும் எனக் காரணம் கூறி, நீதிக் குழு நிராகரித்தது முதலாவது உலகப் போர் போன்ற சில சமயங்களில் மட்டுமே மத்திய அரசு அமைதி, ஒழுங்கு, நல்ல அரசாங்கம் ஆகியவற்றைக் காக்க, அதன் அதிகாரத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

கனடாவில் தேசிய அரசானது அயல் நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்து கொள்ளக்கூடிய உரிமையைப் பயன்படுத்தி, அதன் பொருளாதார அதிகாரங்களை அதிகரிக்க முயன்றதும் உண்டு. தொழிலகங்களில் வாராந்திர விடுமுறை விடப்பட வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும், அவர்களின் வேலை நேரம் வரையறுக்கப்பட வேண்டுமென்றும் பென்னட் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், கனடா சர்வதேசத் தொழிற் சங்கத்தின் (International Labour Organisation) தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு கொண்டு வரப்பட்டவையாகும் என தேசிய அரசின் தரப்பில் கூறப்பட்டதை நீதிக் குழு ஏற்க மறுத்துவிட்டது. உடன்படிக்கைகள் பிரிட்டிஷ் பேரரசின் நிருவாகத்தால் செய்து கொள்ளப்பட்டால் மட்டுமே, அவற்றின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கானச் சட்டங்களை கனடிய அரசாங்கம் இயற்ற முடியும் என்றும், மேலே கண்ட தொழிற் சட்டங்கள் அது போன்றவை அல்ல என்றும், எனவே அவை செல்லாதவை ஆகும் என்றும் அம்மன்றம் முடிவு செய்தது.

இதுவரை கூறப்பட்ட செய்திகளிலிருந்து கனடாவில் தொழிலையும் வர்த்தகத்தையும் ஒழுங்குபடுத்துவது என்ற பெயரிலும், அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது என்ற பெயரிலும், அயல் நாடுகளோடு ஒப்பந்தங்கள் செய்துகொள்வது என்ற பெயரிலும், மத்திய அரசு மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்பட்ட இனங்

களில் தலையிடுவதை பிரிவி கவுன்சிலின் நீதிக்குழு தடை செய்திருக்கிறது என்பது விளங்குகிறது. சுவிட்சர்லாந்தில் பொது அரசின் அதிகாரங்களை விரிவு படுத்தவேண்டுமென மக்கள் விரும்புவதுபோல கனடாவில் விரும்பவில்லை எனக் கூறலாம். 1935ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பென்னட்டின் அரசாங்கம் தோற்றதற்குக் காரணம், அது தேசிய அரசின் அதிகாரங்களை அதிகரிக்க முயன்றதேயாகும். மேலும் க்விபெக், ஒண்டாரியோ போன்ற தொழில் மாநிலங்கள் மத்திய அரசின் பொருளியல் அதிகாரங்கள் அதிகரிப்பதை எதிர்த்து வருகின்றன; அவற்றின் எண்ணத்திற்கு மாருக மத்திய அரசின் அதிகாரங்களைக் கூட்டுவது என்பது இயலாத காரியமாகும்.

இ. அமெரிக்கா

அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய இரு கூட்டாட்சிகளின் அரசியலமைப்புகளும் மத்திய அரசிற்குத் தொழில் வாணிகத்துறையில் குறைவான அதிகாரங்களையே கொடுத்திருக்கின்றன. அயல் நாடுகளோடும் மாநிலங்களுக்கிடையேயும் நடைபெறும் தொழிலையும் வாணிகத்தையும் கட்டுப்படுத்துவதுதான் மத்திய அரசின் பொருளாதார அதிகாரமாய் அமைகிறது; இருப்பினும் மேற்கண்ட இனங்களை மேற்பார்வை செய்கின்ற பெயரில், தற்காலத்தில் கணக்கற்ற துறைகளில் மத்திய அரசு அதன் அதிகார எல்லையை அதிகரித்துக் கொண்டுவிட்டது. அமெரிக்க ஆஸ்திரேலியத் தலைமை நீதி மன்றங்கள் இதுபோன்று அதிகாரங்கள் விரிவடைவதை அனுமதித்திருக்கின்றன.

அமெரிக்காவில் 1887ஆம் ஆண்டில், காங்கிரஸ் 'மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகச் சட்டத்தை (Inter-State Commerce Act) இயற்றியதிலிருந்து, தேசிய அரசின் அதிகாரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்திருப்பது கவனிக்கத்தக்கது. 1887ஆம் ஆண்டின் சட்டம் நிறுவிய மாநிலங்களுக் கிடையேயான வர்த்தகக் குழு (Inter-State Commerce Commission) அச்சட்டத்தின் விதிகளை செயல்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. தொழிலும் வாணிகமும் இயல்பாக மாநிலங்களுக்கிடையேயும், அயல் நாடுகளோடும் பரவி வளர்வதைக் கட்டுப்படுத்தும் எண்ணத்தோடு இயங்கும் வாணிகக் கூட்டு நிறுவனங்களைத் (Trusts) தடைசெய்யும் சட்டமொன்றை(Sherman Anti Trust Act)காங்கிரஸ் 1890-ல்இயற்றியது குறிப்பிடத்தக்கது. ஆனால் 1936ஆம் ஆண்டில் F. D. ரூஸ்வெல்ட்டின் சமூகப் பொருளாதார திட்டத்தின் சில அம்சங்களைத் தலைமை நீதி மன்றம் செல்லத்தக்கன அல்ல என்று

வித்ததன் அடிப்படையில், அம்மன்றமானது தேசிய அரசின் அதிகாரங்கள் விரிவடைவதை எதிர்க்கிறது என்ற முடிவுக்கு வருவது தவறாகும். ஏனெனில் பிறகு அச்சீரமைப்புத் திட்டத்தின் பல பகுதிகள் தனித்தனிச் சட்டங்களாகக் காங்கிரசால் இயற்றப்பட்டதைத் தலைமை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதை நாம் பார்க்கிறோம். 1933ஆம் ஆண்டின் 'கடனீட்டும் பத்திரங்கள் சட்டம்' (Securities Act)—முதலீடு செய்வோர் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும் சட்டம் 1635ஆம் ஆண்டின் 'தேசியத் தொழில் உறவுகள் சட்டம்' (National Labour Relations Act)— கூட்டுப் பேரத்தையும் Collective Bargaining) வேலை நிறுத்தத்தையும் தொழிலாளர்களின் உரிமையாக்கிய சட்டம், 1938ஆம் ஆண்டின் 'நியாயமான தொழில் தரங்கள் சட்டம்' (Fair Labour standards Act)-அதிகபட்ச வேலை நேரத்தையும் குறைந்த பட்சக் கூலியையும் நிர்ணயிக்கும் சட்டம், 1938 ஆம் ஆண்டின் 'விவசாயச் சீரமைப்புச் சட்டம்' (Agricultural Adjustment Act) விவசாயப் பொருட்களின் விற்பனையை ஒழுங்குபடுத்தும் சட்டம், ஆகிய சட்டங்கள் தேசிய அரசுக்குச் சிறந்த பொருளாதார அதிகாரங்களை அளித்தன. டென்னசி ஆற்றுப் பள்ளத்தாக்கை வளமுடையதாக்க 'டென்னசி பள்ளத்தாக்கு' நிறுவனம் (Tennessee Valley Authority, 1933)ஒன்றையும், பொதுயியற் பணிகள் வாயிலாகப் பொருளாதாரத்துறையில் நாடு முன்னேற்றமடைய 'பொதுப் பணிகள் நிறுவனம்' (Public Works Administration, 1933) ஒன்றையும், அமெரிக்காவின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் 'பண்ணைப் பாதுகாப்பு நிறுவனம்' (Farm Security Administration, 1937) ஒன்றையும் தேசிய அரசு ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவில் பொது அரசுக்குப் போதுமானப் பொருளாதார அதிகாரங்கள் இல்லை என்ற கருத்தை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் அரசு கூட்டாட்சியாக அமைந்திருப்பதன் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என நினைப்பது பொருந்தாது. அரசியலமைப்பில் காணப்படும் இரு அம்சங்கள் இந்த நிலையைத் தோற்றுவித்திருக்கின்றன. முதலாவதாக, அரசியலமைப்பின் ஐந்தாவதுதிருத்தமும் பதினான்காவது திருத்தமும் எந்த மனிதனின் உயிரையோ, உரிமையையோ, உடைமையையோ சட்ட நடைமுறையின் அடிப்படையின்றி பறிக்கக்கூடாது' என அறிவிப்பது, மத்திய அரசைப் பல செயல்கள் செய்வதிலிருந்து கட்டுப்படுத்துகிறது. இரண்டாவதாக, அமெரிக்க அரசியலமைப்பு அதிகாரப் பிரிவினை கொள்கையின் அடிப்படையில் அமைந்திருப்ப

தால், சட்டமியற்றும் பணி முழுவதையும் காங்கிரசே செய்ய வேண்டி யிருக்கிறது. ஆனால் காங்கிரஸ் சில சமயங்களில் இந்தப் பொறுப்பைக் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கும் பொழுது, அச்செயல் தலைமை நீதிமன்றத்தால் சட்ட விரோதமான செயலாக அறிவிக்கப்படுகிறது. தலைவர் F. D. ரூஸ்வெல்ட்டின் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 'தேசியத் தொழில் மீட்பு சட்டம்' (National Industrial Recovery Act, 1933)-செல்லாததெனத் தலைமை நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்டதற்குக் காரணம், அது காங்கிரசினால் ஆட்சித்துறைக்கு ஒப்படைக்கபபட்ட அதிகாரத்தின் வாயிலாக இயற்றப்பட்டது என்பதாகும். எனவே அமெரிக்கா கூட்டாட்சியாக விளங்குவதால்தான் அதன் தேசிய அரசின் பொருளாதார அதிகாரங்கள் திருப்திகரமாய் இல்லை எனக் கருதுவது சரியாகாது. மேலும் அமெரிக்க மக்கள் உண்மையாக ஒரு வலுவற்ற அரசாங்கத்தையே விரும்புகிறார்கள் என்பதும்' இந்த விளைவுக்குக் காரணமாகும்.

ஈ. ஆஸ்திரேலியா

அமெரிக்காவைப் போல ஆஸ்திரேலியாவிலும் மத்திய அரசின் பொருளாதார அதிகாரங்கள் வியக்கத்தக்க அளவிற்கு அதிகமாக வளர்ந்திருக்கின்றன. அயல் நாடுகளோடும் மாநிலங்களுக்கிடையேயுமான தொழிலையும் வாணிகத்தையும் கண்காணிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அந்நாட்டின் மத்திய அரசு நிலம், நீர், வானம் ஆகிய வழிகளில் ஏற்றுமதி இறக்குமதி செய்தல், பொருட்களை விற்றல் வாங்கல், வியாபார ஒப்பந்தங்கள், வேலைகொடுப்போர்க்கும் வேலை செய்வோர்க்குமிடையேயான உறவுகள், தொழில் வர்த்தகத் துறைகளில் ஏகபோகத்தனி உரிமைகள் ஆகிய இனங்கள்மீது சட்டங்கள் இயற்றியிருக்கிறது. ஆஸ்திரேலியத் தலைமை நீதிமன்றம் தொழிலும் வாணிகமும் என்றத் தொடருக்கு எவ்வளவு விரிவாகப் பொருள் கூற முடியுமோ அவ்வளவு விரிவாகக் கூறி, தேசிய அரசின் பொருளாதார அதிகாரங்களை விரிவாக்கி இருக்கிறது.

அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவுக்கு மிடையே சில வேறுபாடுகள் இருப்பதைப் பார்க்கலாம். முதலாவதாக, அமெரிக்காவில் மாநிலங்களுக்கிடையே ஏராளமாக வியாபாரம் நடைபெறுவது போன்று ஆஸ்திரேலியாவில் நடைபெறுவதில்லை. எனவே, ஆஸ்திரேலியாவில் மாநிலங்களுக் கிடையேயான தொழிலும் வர்த்தகத்தையும் கட்டுப்படுத்த தேசிய அரசுக்கு அதிகம் வாய்ப்பு

இருப்பதில்லை. இரண்டாவதாக, மத்திய அரசுக்குத் தடையாக இருக்கும் விதிகளும் கொள்கைகளும் ஆஸ்திரேலிய அரசியலமைப்பில் அதிகம் காணப்படவில்லை. அதற்கு மாறாக, ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் பரவி இருக்கும் தொழில் தகராறுகளை சமரசமாகத் தீர்த்துவைக்க மத்திய அரசு சட்டம் இயற்றலாம் என அரசியலமைப்பு அறிவிக்கிறது. இந்த விதிகளை ஆதாரமாகக் கொண்டு தேசியப் பாராளுமன்றமானது 'சமரச நீதி மன்றம்' (Court of Arbitration and Conciliation) ஒன்றை நிறுவி யிருக்கிறது. மேலும் 1928 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'நீதி ஒப்பந்தத் திருத்தச் சட்டமானது, (Financial Agreement Amendment) தேசிய அரசின் பொருளாதார அதிகாரத்தைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்திருப்பது அறியத்தக்கதாகும்.

5. பொருளாதார நிருவாகத்தில் குறைபாடுகள்

இன்றைய கூட்டாட்சிகளில் பொருளாதார நிருவாகம் நடைபெறும் விதத்தைக் கவனித்தால், அதில் சில குறைபாடுகள் இருப்பது தெரிய வருகிறது. முதலாவதாக, பொருளாதாரப் பொறுப்புகளை நிருவாகம் செய்ய மத்திய அரசின் தரப்பிலும் ஒவ்வொரு மாநில அரசின் தரப்பிலும் தனித்தனி ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக ஆஸ்திரேலியாவில் அயல் நாடுகளோடும் மாநிலங்களுக்கிடையேயுமான கப்பல் போக்குவரத்தைக் கண்காணிக்க மத்திய அரசும், மாநிலத்துக்குள் நடைபெறும் கப்பல் போக்குவரத்தைக் கவனிக்க மாநில அரசும் தனித்தனி ஊழியர்களை நியமிக்கின்றன. அநாவசிய பொருட் செலவும், மனித சக்தி வீணாவதுமே இதன் விளைவுகளாகும். இரண்டாவதாக, பொருளியல் அதிகாரங்களை மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்வதில் குழப்பமும் ஐயப்பாடும் உண்டாகின்றன. உதாரணமாக கனடாவின் அரசியலமைப்பு தொழிலும் வர்த்தகமும் மத்திய அரசுக்கு உரிய இனங்கள் என்றும், சொத்துக்களும் சிவில் உரிமையும் மாநில அரசுகளுக்கு உரிய இனங்கள் என்றும் கூறுவது ஒரு தெளிவான பங்கீட்டை உருவாக்கவில்லை. மூன்றாவதாக, கூட்டாட்சி அரசியலமைப்புகளில் அதிகாரப் பங்கீட்டைத் திருத்துவது என்பது கடினமான செயலாக இருந்து வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட இனங்களை இன்று பொது அரசுக்கு ஒதுக்க வேண்டிய அவசியம் தோன்றினால், அவற்றை மாற்றி அளிப்பது என்பது எளிதான செயலாய் இருப்பதில்லை. கூட்டாட்சியில் மேற்கண்ட குறைகள் இருப்பதால் கூட்டாட்சி முறையே தேவையில்லை என யாரும் கூறு

வதில்லை; அக்குறைகளை எவ்வாறு தவிர்ப்பது என்பது இன்றும் பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

இரண்டாவது உலகப் போரின் விளைவாக ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவை நிவர்த்திசெய்ய ஆஸ்திரேலிய அரசாங்கம் அரசியலமைப்பு திருத்த மொன்றைக் கொண்டுவர முயன்றது. பொருட்களின் உற்பத்தியும் பங்கீடும், தேசியப் பொரியியல் பணிகள், வியாபார நிறுவனங்கள், வேலையும் வேலையின்மையும் போன்ற பதினைந்து இனங்கள் மீது சட்டமியற்றும் உரிமை ஐந்து ஆண்டு காலத்திற்கு தேசிய அரசுக்குத் தரப்பட வேண்டுமென்று இத் திருத்தம் கூறியது. மாநில அரசுகளின் பொருளாதார உரிமைகளை இது மிகவும் பாதித்ததால் இத்திருத்தம் தோற்றது. பிறகு 1946-லும், 1948-லும் மத்திய அரசின் பொருளாதார அதிகாரங்களை அதிகரிக்கும் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டன. இருப்பினும் இன்றைய கூட்டாட்சிகளில் மத்திய அரசுக்கு மேலும் சில பொருளாதார அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை யாரும் எதிர்க்கமாட்டார்கள். பொருளியல் நிருவாகமானது ஒருமுகப்படுத்தப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என எண்ணுவது நியாயமே.

7. கூட்டாட்சியும் சமுகப்பணிகளும்

(1) முன்னுரை (2) சமுகப்பணிகளை எந்த அரசு மேற்கொள்வது? (3) தேசிய அரசின் அதிகரித்துவரும் சமுகப்பணி பொறுப்புகள்: அ. அரசியலமைப்பு திருத்தங்கள் வாயிலாக; ஆ.நீதித் தீர்ப்புகள் வாயிலாக; இ. மானியங்கள் வாயிலாக; (4) மத்திய மாநில அரசாங்கங்களிடையே கூட்டுறவு (5) கல்வி (6) சமுகக் காப்பீடு (7) சுகாதாரம் (8) சட்டமும் ஒழுங்கும்.

1. முன்னுரை

தற்கால அரசுகள் சமுகப் பணிகளில் காட்டும் அக்கரையும், அவற்றிற்காகச் செலவிடும் தொகையும், வேறெந்த நூற்றுண்டில் இருந்ததைக் காட்டிலும் இந்த இருபதாம் நூற்றண்டில் அதிகம் என்பதில் ஐயமில்லை. மக்களின் வாழ்க்கை, வசதிகள் நிறைந்த வாழ்க்கையாக அமைவதற்கு, ஏழை நாடுகள் என எண்ணப்படும் நாடுகள் கூட ஏராளமான அளவிற்குப் பொருட்செலவு செய்கின்றன. அரசுகள் ஒன்ருேடொன்று போட்டி போட்டுக்கொண்டு நலம் நாடும் அரசுகளாக (Welfare States) மாறி வருவது, இன்றைய உலக அரசியலின் தலைசிறந்த அம்சமாக விளங்குகிறது. கல்வி, காவல்துறை, சுகாதாரம், முதுமை இயலாமை (Invalidity), வேலையின்மை, விபத்து ஆகியவற்றல் அவதியுறுவோருக்கு உதவி, தொழிலாளர் நலன் ஆகியவை தற்கால அரசுகள் செய்யும் சமுகப் பணிகளில் குறிப்பிடத்தக்கவையாகும். சமுகப் பணிகளை ஒற்றை ஆட்சிகளில் தலத் தாபனங்கள் மேற்கொள்வது போல, கூட்டாட்சிகளில் அவற்றை மாநில அரசுகள் மேற்கொள்வதே வழக்கமாகும்.

2. சமுகப்பணிகளை எந்த அரசு மேற்கொள்வது

இன்றையக் கூட்டாட்சிகளின் அரசியலமைப்புகளை ஆராய்ந்தால், அவை சமுக சேவைகளை மத்திய அரசுமீது சுமத்துவதில்லை

என்பது தெரிய வரும்; புதிய கூட்டாட்சிகளைக் காட்டிலும் பழைய கூட்டாட்சிகளில் இந்த நிலையை நன்றாகப் பார்க்க முடிகிறது. சமூக சேவைகளைப் பற்றி அமெரிக்க அரசியலமைப்பு குறிப்பிடு வதிலும் ஆஸ்திரேலிய அரசியலமைப்பு குறிப்பிடுவதிலும் சில வேறுபாடுகள் தென்படுகின்றன. இந்த இரு அரசியலமைப் புகள் வெவ்வேறு காலங்களில் தோன்றியமையும், அந்த இடைக் காலத்தில் சமூகப் பணியின் தேவை உணரப்பட்டமை யுமே இந்த வேறுபாட்டுக்குக் காரணமாகும். பொதுவாக போர், சமாதானம், உடன்படிக்கைகள், அயல் நாடுகளோடு வியாபாரம் போன்ற இனங்கள் மத்திய அரசிடமும், மக்களின் உயிர்-உரிமை-உடைமை ஆகியவற்றைப் பாதிக்கும் அம்சங்கள், உள்நாட்டில் ஒழுங்கு, நாட்டின் வளத்தைப் பெருக்குதல் போன்ற இனங்கள் மாநில அரசுகளிடமும் இருப்பதே விரும்பத்தக்கது என்பதாக அலெக்சாந்தர் ஹேமில்டன் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டார். அமெரிக்க அரசியலமைப்பு தேசிய அரசானது 'பொது நலத்துக்காக' (General Welfare) நிதி திரட்டி செலவு செய்யலாம் என பொதுப்படையாகக் குறிப்பிடுவதோடு நின்று விடுகிறது. சுவிட்சர்லாந்தின் 1848ஆம் ஆண்டின் அரசிய லமைப்பு, பல்கலைக் கழகம் ஒன்றையும், பல்தொழில் பள்ளி ஒன் றையும் பொது அரசே நடத்த அனுமதித்தது. கனடாவின் அரசிய லமைப்பு, சமூகப் பணிகள் மாநிலங்களின் பொறுப்பில் விடப்பட வேண்டியவை என்பதை அறிவிக்கின்ற வகையில், கல்வி, நீதி நிர்வாகம், மருத்துவ மனைகள், சிறைச்சாலைகள், சொத்துக்கள், சிவில் உரிமைகள் ஆகிய இனங்களை மாநில அரசுகளின் பட்டி யலில் சேர்த்திருக்கிறது. ஆஸ்திரேலிய அரசியலமைப்பு 'தொற்றுத் தடைகாப்பு' (Quarantine), மணம், மண விலக்கு ஆகிய இனங்களை மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்படுத்துவ தோடு, முதியோர், இயலாதோர் ஆகியோருக்கு ஓய்வு ஊதியம் வழங்கும் பொறுப்பையும் மத்திய அரசுக்கே உரிமையாக்கி இருக் கிறது.

தொடக்க முதலில் அரசியலமைப்புகள் சமூகப் பணிகளைப் பற்றிய அதிகாரங்களை மத்திய மாநில அரசுகளிடையே பிரித்தளித் திருந்த முறையில், மாறிவரும் சூழ்நிலைகளுக்குத் தக்கவகையில் சில மாற்றங்கள் இடம் பெற்றன. பொருளாதாரத் துறையில் எவ் வாறு மத்திய அரசின் அதிகாரங்கள் அதிகரித்தனவோ, அவ் வாறே சமூகப் பணித்துறையிலும் அதன் அதிகாரங்கள் அதி கரித்திருக்கின்றன; எந்த வழிகளில் பொருளாதார அதிகாரங்கள் பெருகினவோ, அநேகமாக அந்த வழிகளிலேயே சமூகப்பணி

அதிகாரங்களும் பெருகி இருக்கின்றன; பொருளாதார அதிகாரங்கள் மேலும் விரிவடையாமல் எந்த சக்திகள் தடுக்கின்றனவோ, அவையே சமூகப் பணி அதிகாரங்களும் இன்னும் விரிவடையாமல் தடுக்கின்றன. இதிலிருந்து பொருளாதார அலுவல்களின் வளர்ச்சியும் சமூகப் பணிகளின் வளர்ச்சியும் ஒரே விதமான காரணங்களால் பாதிக்கப்படுகின்றன என்பது தெரியவருகிறது.

3. தேசிய அரசின் அதிகரித்துவரும் சமூகப்பணி பொறுப்புகள்:
அ. அரசியலமைப்பு திருத்தங்கள் வாயிலாக.

அரசியலமைப்பு திருத்தங்கள், நீதித் தீர்ப்புகள், மானியங்கள் ஆகியவற்றைத் தேசிய அரசின் சமூகப் பணிப் பொறுப்புகள் அதிகரிக்கக் காரணமாயிருந்த அம்சங்கள் என குறிப்பிடலாம். அரசியலமைப்பு திருத்தங்கள் வாயிலாக மத்திய அரசின் அதிகாரங்கள் விரிவடைந்ததற்கு சுவிஸ் அரசியலமைப்பை சிறந்த உதாரணமாகக் கருதலாம். சாராயக் குடிவகைகளின் (Spirituous Liquors) உற்பத்தியும் விற்பனையும் தேசிய அரசின் ஏகபோக உரிமையானது (1885), உணவுப் பண்டங்களின் விற்பனையைச் சீராக்குவது அதன் வசம் ஒப்புவிக்கப்பட்டது (1897), தொற்று வியாதிகள், கொள்ளை நோய்கள் ஆகியவை பரவாமல் பார்த்துக் கொள்வது அதன் பொறுப்பானது (1913), சூதாட்டங்களை ஒழுங்கு படுத்துவது அதன் அதிகாரமானது (1928)—இவை அனைத்தும் அரசியலமைப்பு திருத்தங்கள் வழியாகவே நிகழ்ந்திருக்கின்றன.

ஆ. நீதித்தீர்ப்புகள் வாயிலாக

அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் நீதித்தீர்ப்புகளே தேசிய அரசின் சமூகப்பணி அதிகாரங்கள் அதிகரிக்கக் காரணமாக இருந்திருக்கின்றன. மத்திய அரசானது, மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்தை ஒழுங்கு படுத்தும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாநிலங்களை சேர்க்கும் இருப்புப் பாதைகளை பாதுகாப்புள்ளனவாக்கவும், வேலை நேரத்தை நிர்ணயிக்கவும், பரிசுச் சீட்டு முறையை ஒழுங்குபடுத்தவும், உணவுப் பண்டங்களும் மருந்துகளும் தூய்மையானவையாய் இருக்க ஏற்பாடு செய்யவும் சட்டம் இயற்றியிருப்பதை, தலைமை நீதிமன்றம் காங்கிரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட செயல்கள் என்பதாக அறிவித்திருக்கிறது. காங்கிரஸ் நாட்டின் பொது நலத்துக்காகச் சட்டம் செய்யக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, வயோதிகர்கள்,

குழந்தைகள், குருடர்கள், வேலையற்றோர் ஆகியோரின் பாதுகாப்புக்காகச் செய்த ஏற்பாடுகளையும் நியாயமானவையே எனத் தலைமை நீதிமன்றம் அறிவித்தது. மத்திய அரசு அஞ்சல் துறையைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் பெற்றிருப்பதின் அடிப்படையில், அஞ்சல் நிலையங்கள் வழியாக எந்தெந்த பொருட்களை அனுப்பலாம் எந்தெந்த பொருட்களை அனுப்பக்கூடாது எனத் தீர்மானித்ததை தலைமை நீதிமன்றம் முறையான செயலென்றே ஒப்புக் கொண்டது. மக்களின் நல் வாழ்வுக்கும் ஒழுக்கத்திற்கும் கேடு பயக்கும் பல பொருட்களை அஞ்சல் வழியாக அனுபபக் கூடாது என அறிவிப்பதன் பயனாக, மத்திய அரசு அமெரிக்க சமுதாயத்துக்குப் பாராட்டத்தக்க தொண்டு புரியும் நிலையில் இருக்கிறது என்பது அறியத்தக்கது. ஆஸ்திரேலியாவிலும் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பின் பல விதிகளுக்கு மத்திய அரசுக்குச் சாதகமான வகையில் பொருள் விளக்கம் கூறி அதன் சமூகப் பணி அதிகாரங்களை விரிவுபடுத்தி யிருக்கிறது. தொற்றுத் தடைகாப்பு அதிகாரம் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் பொருந்தும் என்றும், அது ஆஸ்திரேலியாவுக்கு வெளியிலிருந்து வருவோர்கு மட்டுமல்லாமல் மாநிலமொன்றிலிருந்து வேறொரு மாநிலத்துக்கும், ஒரு மாநிலத்துக்குள்ளேயே இடம் விட்டு இடம் பெயர்வோர்க்கும் பொருந்துமென்றும் தலைமை நீதி மன்றம் அறிவித்து தேசீய அரசின் அதிகார எல்லையை அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. தொழில் துறையில் தோன்றும் தகராறுகளை சமாதானமாகத் தீர்த்துவைக்கும் அதிகாரத்தின் அடிப்படையில், மத்திய அரசு, பல தொழில்களில் வேலைபற்றிய விதிகளை நிர்ணயம் செய்ததும், மக்களின் உடல் நலத்தைப் பாதிக்கும் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு அதன் வாணிக அதிகாரங்களைப் பயன்படுத்தியதும் சட்டத்துக்கு உட்பட்ட செயல்களாகவே அறிவிக்கப்பட்டன. 1946 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தமொன்று, ஆஸ்திரேலியாவில் தேசிய அரசின் பொறுப்புகளை மேலும் பெருக்கியது. தாய் சேய் நலம், மருத்துவ வசதிகள், மாணவர்களுக்கு உதவி, விதவைகளுக்கு வாழ்க்கைப் பணம் ஆகிய இனங்கள் மீது சட்டமியற்றும் உரிமை மேற்கண்ட திருத்தத்தால் மத்திய அரசுக்கு மாற்றிக்கொடுக்கப்பட்டது.

ஆனல் கனடாவின் போக்கு வேறுமாதிரியாக அமைந்திருக்கிறது. அங்கு மைய அரசின் சமூகப் பணிகள் அதிகரித்து வருவதாகக் கூறுவதற்கில்லை. மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்களுக்கு விரிவாக விளக்கம் காண்பது அரிதே வழக்க

மாக இருப்பதால், மத்திய அரசு அதன் அதிகாரங்களை அதிகம் வளர்த்துக்கொள்ள இயலாத நிலையில் இருக்கிறது. வேலையின்மைக் கெதிரான காப்புறுதி திட்டம் ஒன்றை வகுத்த வேலை வாய்ப்பு சமூகக் காப்புறுதி சட்டத்தை (Employment and Social Insurance Act) அது மாநிலங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் சிவில் உரிமை ஆகியவற்றைப் பாதிக்கின்றன என காரணம் கூறி, பிரிவி கவுன்சில் அதை 1937இல் செல்லாததெனை அறிவித்தது. முதியோர்க்கு ஊதியம் வழங்கும் அதிகாரத்தை, மத்திய அரசு 1951ஆம் ஆண்டின் அரசியலமைப்பு திருத்தமொன்றின் மூலமாக பெற்றது.

இ. மானியங்கள் வாயிலாக

அரசியலமைப்புத் திருத்தங்களும், நீதித் தீர்ப்புகளும் சமூகப் பணிகளைக் கூட்டாட்சியின் இரு அரசுகளிடையே பங்கிட்டளிப்பதில் முக்கியமான சக்திகளாய் விளங்குவதுபோல, மத்திய அரசு தரும் மானியங்களும் ஒரு முக்கியமான சக்தியாக விளங்குகிறது. அரசுகள் மேற்கொள்ள வேண்டிய சமூகப் பணிகள் எண்ணிக்கையிலும் தரத்திலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மாநில அரசுகளுக்கு அவற்றைச் சரிவரச் செய்து முடிக்கப் போதுமானப் பொருளாதார வசதி இருப்பதில்லை. மத்திய அரசு வழங்கும் மானியங்களே மாநில அரசுகள் செய்யும் சமூகப் பணிகளுக்கு ஆதாரமாய் அமைகிறது. அமெரிக்காவில் 1862ஆம் ஆண்டின் மோரில் சட்டம் (Morril Act) விவசாயக் கல்விக்கும், தொழில் நுட்பக் கல்விக்கும் மானியங்கள் வழங்கத் தொடங்கியதிலிருந்து பலவிதமான இனங்களுக்காக ஏராளமான தொகையை வழங்கி வருகிறது. F. D; ரூஸ்வெல்ட்டு குடியரசுத் தலைவராய்இருந்த காலத்தில் வியகத்தக்க அளவிற்குப் பொதுச்சுகாதாரம், முதியோர்க்கும் குருடருக்கும் உதவி, குடிசை மாற்று வேலைகள், முடமான குழந்தைகள் பராமரிப்பு ஆகியவற்றிற்காக மானியம் வழங்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் 1936-37இல் சமூகப் பணிகளுக்கென மாநிலங்கள் செய்த செலவில் மூன்றில் ஒரு பங்கை மத்திய அரசு மானியமாக அளித்ததென்றும், கனடாவில் 1937இல் சமூக சேவைகளுக்கான செலவில் ஏறத்தாழ பாதி பங்கை மத்திய அரசு ஏற்றது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்க செய்திகளாகும். சுவிட்சர்லாந்திலும் இதே போக்கினை பார்க்கலாம். கல்வி, காவல், புற்று நோய் தடுப்பு போன்ற இனங்களுக்காக மத்திய அரசு மாநிலங்களுக்குப் பொருள் வழங்கி உதவியது. ஆனால் மானியம் பெறுகின்ற மாநிலங்கள் அவற்றின் சுதந்திரத்தை ஓரளவுக்கு விட்டுக்

கொடுத்து மத்திய அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டியது அவசியமாகிறது என்பது முன்னரே குறிப்பிடப் பட்டது.

4. மத்திய மாநில அரசாங்கங்களிடையே கூட்டுறவு

சமூகப் பணிகளைப் பொருத்தவரை மத்திய மாநில உறவுகளில் சில குறிப்பிடத்தக்க அம்சங்கள் தென்படுவதை நாம் அறிந்துகொள்வது விரும்பததக்கதாகும். முதலாவதாக, சமூகப் பணிகள் தொடர்புடைய சட்டங்கள் இயற்றும்பொழுது, மத்திய அரசோ மாநில அரசுகளோ தனித்தியங்காமல், இரண்டும் ஒன்றையொன்று அனுசரித்து சேர்ந்து செயல்படுவதைக் காண்கிறோம். ஆஸ்திரேலியாவில், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படுவதும் மாநிலங்களுக்கிடையே விற்று வாங்கப்படுவதுமான உணவுப் பண்டங்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றின் தரங்களை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. ஆனால் மாநிலத்திற்குள் வியாபாரத்துக்குரிய மேற்கண்ட பொருள்களின் தரங்களை மாநில அரசே நிர்ணயிக்கிறது. இருப்பினும் மத்திய அரசும் மாநில அரசுகளும் வெவ்வேறான தரங்களை நிர்ணயிக்காமலிருக்க, இருதரப்பு அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் அடிக்கடி கலந்து பேசி, எந்த மாதிரியான தரங்களை நிர்ணயிப்பது எனத் தீர்மானித்த பிறகு, தத்தம் பாராளுமன்றம் சட்டமியற்ற வகை செய்கின்றனர்; இதைத் தான் 'சட்டமியற்றுதலில் கூட்டுறவு' (Legislative Co-operation) என்கின்றனர். அமெரிக்காவில் மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருவதில் மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சி பாராட்டப் படுகிறது. ஐக்கிய நாடுகளின் வீட்டு வசதி நிறுவனத்தோடு (United States Housing Authority) மாநில அரசாங்கங்களும் ஒத்துழைப்பதன் பயனாக குறைந்த வாடகையில் நிறைய வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இரண்டாவதாக, சமூகப் பணிகளைப்பற்றிய செய்திகளை மத்திய அரசாங்கம் சேகரிப்பதும், அவற்றின் அடிப்படையில் மாநில அரசாங்கங்கள் செயல்படுவதையும் காண்கிறோம். மத்திய அரசு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, புள்ளிவிவரத்தைத் தொகுத்து, யோசனைகள் தெரிவிக்க அவற்றை நிறைவேற்ற மாநில அரசுகள் சட்டங்கள் செய்யும் வழக்கம் தற்காலத்தில் வளர்ந்து வருகிறது. அமெரிக்காவில் கல்வி இலாகா (Office of Education), தொழில் துறை (Department of Labour), வணிகத் துறை (Department of Commerce) ஆகியவை சமூகப் பணிகளைப்பற்றிய சோதனைகளும் ஆராய்ச்சிகளும் செய்து, அவற்றின் பயனைத் தெரியவரும்

முடிவுகளை வெளியிட்டு, மாநில அரசுகளுக்கும் தலத்தாபனங்களுக்கும் தகுந்த ஆலோசனை கூறி, அவை தேவையான சட்டங்களை இயற்ற சிபாரிசு செய்து வருகின்றன. சமூகப் பணிகள் குறித்து சட்டங்கள் ஆக்குவது என்பது மாநில அரசுகளின் அதிகாரமாக இருந்தாலும் அவற்றை இயற்றுவதில் மத்திய அரசு நேரடியாக ஈடுபட முடியாது என்றாலும், மத்திய அரசானது மாநிலங்களுக்கு அறிவுரை வழங்கி அவை பயனுள்ள வகையில் செயல்படச் செய்கிறதென்பதை மறுப்பதற்கில்லை. பொது அரசு வழிகாட்ட, அந்த வழியில் வட்டார அரசுகள் நடப்பதே நல்லது என்ற கருத்து 'பிரதிநிதித்துவ அரசாங்கம்' (Representative Government) என்ற J. S. மில்லின் (J. S. Mill) நூலில் வற்புறுத்தப் படுவது இங்கு நினைவு கூறத்தக்க செய்தியாகும். மாநிலங்கள் அனைத்தும் மத்திய அரசு காட்டும் வழியைப் பின்பற்றி நடக்குமானால், நாடு முழுவதும் சமூகப் பணிகள் ஒரே சீரான தரமுடையனவாய் இருக்கும் என நம்பலாம்.

மூன்றாவதாக, சமூகப் பணிகளை நிர்வாகம் செய்வதில், மத்திய அரசும் மாநில அரசுகளும் அதனதன் ஊழியர்கள் மூலமாகச்செயல் படுவதைவிட, ஏதாவது ஒரு அரசின் ஊழியர்கள் மூலமாக செயல் படுவது விரும்பத்தக்கது என்பது அனுபவத்தால் உணரப்படுகிறது. ஒரு பொருள்பற்றிய எல்லாச் சட்டங்களையும், அவை இரு அரசுகளாலும் ஆக்கப்பட்டவையாய் இருப்பினும், ஏதாவது ஒரு அரசின் பொறுப்பில் விடுவதே சிறந்த ஏற்பாடாகும் என்ற கருத்து சமீப காலத்தில் வலிமையடைந்து வருகிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில மக்களின் ஆரோக்கியத்தைப் பேணும் பொறுப்பு இரு அரசுகளிடையே பிரித்தளிக்கப் படாமல் ஒருமுகமாக்கப்பட்டிருப்பது அறியத்தக்கது. இந்த முறையைத்தான் 'நிருவாகக் கூட்டுறவு' (Administrative Co-operation) என்கிறோம்; ஆனால் இந்த நல்ல ஏற்பாடு விரும்பத்தக்க அளவுக்கு இன்னும் வளரவில்லை.

5. கல்வி

இன்றைய கூட்டாட்சிகளில், கல்வி, சமூகப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் ஆகிய சமூக சேவைகளின் நிர்வாகம் நடைபெறும் விதத்தை அறிந்துகொள்வது நல்லதாகும். கல்வி மாநில அரசுகளின் கவனத்துக்குரிய பொருள் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கல்விக்கும் சிறுபான்மையோர் நலனுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதால், அதை மத்திய அரசு ஒழுங்குபடுத்துவதைவிட மாநில அரசுகள் ஒழுங்குபடுத்துவதே

பொருத்தமாகும். கனடாவில் கல்விப் பிரச்சினை பலவிதமான சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கிறது. அந்நாட்டு மக்களிடையே காணப்படும் சமய வேறுபாடுகளும், மொழி வேறுபாடுகளும், சிறு பான்மையோரின் கல்வி, கலாச்சார நலன்களுக்குத் தனிப்பட்ட உத்தரவாதம் அளிக்கப்படுவதை அவசியமாக்குகிறது. பள்ளிகளில் சமயப்பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமா கூடாதா என்பதும், அப்படிக் கற்பிக்கப்பட்டால் அது கட்டாயமாக எல்லோருக்குமா அல்லது விரும்புவோருக்கு மட்டுமா என்பதும், அச்சமயக் கல்வியைப் போதிப்பது சாதாரண ஆசிரியர்களா அல்லது மத குருமார்களா என்பதும், அதற்குரிய செலவை எல்லோரும் ஏற்பதா அல்லது அந்த சமயத்தைச் சார்ந்தோர் மட்டும் ஏற்பதா என்பதும் கனடாவில் கணக்கற்ற சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கின்றன. கல்வியைக் கண்காணித்துக் கொள்ளும் பொறுப்பை மாநிலங்களிடம் கொடுத்தாலும், சிறுபான்மையோரின் நலன்கள் பாதிக்கப்படாதவாறு காத்துக் கொள்ளும் பொறுப்பை மத்திய அரசு அதனிடம் வைத்துக் கொள்வதே நல்லதாகும். கனடாவைக் காட்டிலும் சுவிட்சர்லாந்தில் சிறுபான்மையோரின் பிரச்சினை சிக்கல் நிறைந்ததாகக் காணப்பட்டாலும், அதனால் எந்தவிதமான இடையூறுகளும் எழாதவாறு சுவிஸ் அரசாங்கம் கவனித்துக் கொள்கிறது. சமயப் பிரிவுகளைச் சார்ந்த பள்ளிகளைத் (denominational schools) தடை செய்யவும், அரசின் பள்ளிகளில் மட்டுமே எல்லா மாணவர்களும் படிக்கவேண்டும் என கட்டாயப்படுத்தவும், அப்பள்ளிகளில் எம்மாதிரியான மதபோதனையும் நிகழாமல் தடை செய்யவும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் இருப்பினும், மாநிலங்கள் பொதுவாக நிதானமாக நடந்து, மக்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு அவைகளின் கல்விக் கொள்கையை அமைத்துக்கொள்கின்றன; இந்த பெருந்தன்மையான போக்கு மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகும். பல மாநிலங்களில் அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிகளும் இருக்கின்றன; சமயக்கிளைகளால் நடத்தப்படும் பள்ளிகளும் இருக்கின்றன; சில மாநிலங்களில் பள்ளி நேரத்தில் சமயச் சார்பற்ற கல்வியும், பின் சமயக் கல்வியும் கற்பிக்கப்படுகிறது. பொதுவாகக் கூறுமிடத்து சமயச் சண்டைகள் இல்லாமல், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, சகிப்புத் தன்மையோடு நடந்துகொள்வதே சுவிட்சர்லாந்தில் காணப்படும் வழக்கமாகும்.

கல்வி மாநிலங்களுக்கு உரிய இனமாகக் கருதப்பட்டாலும், மத்திய அரசு அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதை ஊக்குவிப்பதற்கு தன்னாலியன்ற உதவியை செய்து வருவதை

எல்லா கூட்டாட்சிகளிலும் பார்க்கலாம். கல்வித் துறையில் யாருக்கும் அநீதி நேராமல் கவனித்துக் கொள்வதோடு, கல்வியை வளர்க்க சில நேரடியான நடவடிக்கைகளிலும் தேசிய அரசு ஈடு படுவதை இங்கே குறிப்பிடலாம். அமெரிக்காவில் விவசாயக் கல்விக்காகவும் தொழிற் கல்விக்காகவும் தேசிய அரசு ஏராளமாகப் பொருள் செலவு செய்து வருகிறது. ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பெராவில் (Canberra) தேசியப் பல்கலைக் கழகம் ஒன்றை நடத்துவதோடு, மாநிலங்கள் நடத்தும் பல்கலைக் கழகங்களுக்குப் பண உதவி செய்தும், ஏராளமான மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் கொடுத்தும் மத்திய அரசு கல்வியைப் பெருக்கி வருகிறது. சுவிட்சர்லாந்திலும் கனடாவிலும் இதே போக்கைப் பார்க்கலாம். சுவிஸ் தேசிய அரசு ஸூரிச்சில் (Zurich) ஒரு பல தொழில் பள்ளியை நடத்துவதோடுகூட, தொடக்கக் கல்விக்காகப் பெரும் பொருள் செலவு செய்கிறது. கனடாவிலும் தொழில் நுட்பக் கல்வி மத்திய அரசின் மானியத்தால் அபிவிருத்தி அடைந்துவருகிறது. வானொலி, தொலைக்காட்சி, நூல் நிலையங்கள், பொருட்காட்சிச் சாலைகள், கலைக்கூடங்கள் போன்ற சாதனங்கள் வாயிலாக இன்றையக் கூட்டாட்சிகளில் மத்திய அரசு கல்விக்காக செய்யும் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

6. சமூகக் காப்பீடு

சமூகப் பாதுகாப்பை சமூகப் காப்பீடு (Social insurance) என்றும் சமூக உதவி (Social assistance) என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். சமூகக் காப்பீடு என்பது அதில் சேர்வோரிடமிருந்து திரட்டப்படும் பணத்தின் அடிப்படையில் அவர்களுக்குத் தரப படும் உதவியாகும். வேலையின்மை, விபத்து, நோய் ஆகிய வற்றால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் ஊதியத்தி லிருந்து செலுத்தப்பட்ட தொகையிலிருந்து அளிக்கப்படும் உதவி சமூகக் காப்பீட்டில் அடங்கும். ஆனால் சமூக உதவி என்பது மக்களில் சிலருக்கு இனமாக அளிக்கப்படும் உதவியைக் குறிக்கும். இயலாதோர், முதியோர், விதவைகள், வறியோர், அனாதைகள் ஆகியோர் அரசிடமிருந்து பெறும் உதவியே சமுதாய உதவியாகும். நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் ஒரே மாதிரி யான சமூகப் பாதுகாப்பு இருப்பது விரும்பத்தக்கதாகும்; மாநிலத் துக்கு மாநிலம் அது வேறுபடுவது மக்களிடையே அதிருப்தியை உண்டாக்கும். மேலும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிறை வேற்றக் கூடிய பொருளாதார வசதி பொதுவாக மாநிலங்களுக்கு இருப்பதில்லை யாதலால், மத்திய அரசு அவற்றில் ஈடுபடுவதே விரும்பத்தக்க விளைவுகளைத் தரும். முழுமையான கூட்டாட்சியில்

சமூகப்பாதுகாப்போடு தொடர்புடைய அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடம் இருப்பதுதான் முறையென்றாலும், அந்த சுமையை மாநில அரசுகள் தாங்கக்கூடிய நிலையில் இருப்பதில்லை. சமூகப் பாதுகாப்பு நல்கும் சேவைகளில் அதிகம் செலவு பிடிக்காம லிருப்பவற்றை மாநில அரசாங்கங்கள் தங்கள் பொறுப்பில் வைத்துக் கொண்டு, மற்றவற்றை மத்திய அரசாங்கத்துக்கு விட்டு விடுவது நல்ல ஏற்பாடாகும். அதிகாரங்கள் மட்டும் மாநிலங்க ளிடம் இருந்து அவற்றை நிறைவேற்றக்கூடிய பொருளாதாரம் இல்லாமலிருப்பது கேலிக்குரிய நிலையாகும். சமூகப் பாதுகாப்பு இனங்களை இரு அரசுகளுக்கும் பொதுவானவையாய் (Concurrent) வைத்து, சூழ்நிலைக்கேற்றவாறு மத்திய அரசோ மாநில அரசோ அவற்றின் மீது சட்டங்கள் செய்ய இடமளிக்கும் முறையே நல்ல அமைப்பாகும் என்ற கருத்து சமீப காலத்தில் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

வேலையற்றோர்க்குக் காப்பீடும், உதவியும் வழங்கும் பொறுப்பு பொருள் செலவு மிக்கதொன்றாகும். எந்த மாநிலத்தில் வேலை யின்மை மிகுதியாகக் காணப்படுகிறதோ, அந்த மாநிலத்தில் அதைத் தீர்ப்பதற்குரிய வசதிகளும் குறைவாகக் காணப்படுவதே வழக்கம். அமெரிக்காவில் வேலையின்மை காப்பீட்டுச் செலவு களை மாநிலங்கள் மேற்கொள்ள, மத்திய அரசு பெருந்தொகையை மானியமாக வழங்குகிறது. மானியம் வழங்குவது மத்திய அரசாக இருந்தாலும், அதைத் தகுந்தவர்க்கு அளிக்க மாநில அரசுகளின் சட்டங்களே வகை செய்வதால், கூட்டாட்சியில் எத்தனை மாநி லங்கள் இருக்கின்றனவோ அத்தனை விதமான சட்டங்கள் இருப் பதைக் காணலாம். இதற்குச் சிறந்த உதாரணம் அமெரிக்கா வாகும். அமெரிக்காவில் தோன்றிய தொல்லைகள் கனடாவில் தோன்றக்கூடாது என்பதற்காகவே, அங்கு வேலையின்மை காப பீட்டை, 1940ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட் டத்தை (British North America Act) இயற்றி மத்திய அரசின் பட்டியலில் சேர்த்தனர்.

7. சுகாதாரம்

மக்களின் ஆரோக்கியத்தை வளர்ப்பதற்கான சேவைகளில் ஈடு படுவது தற்கால அரசுகளின் தலையாய பொறுப்புகளில் அடங்கும். சமூகப் பணிகளின் மற்ற அம்சங்களை மத்திய மாநில அரசுகள் அவைகளுக்கிடையே பகிர்ந்து கொள்வது போல, சுகாதாரப் பணியையும் பங்கிட்டுக் கொள்கின்றன. அயல் நாடுகளிலிருந்து

வருவோரின் மருத்துவப் பரிசோதனை, படை வீரர்களின் உடல் நலன், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பண்டங்கள், மருந்து பொருட்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை மத்திய அரசின் மேற்பார்வையிலும், மனித வாழ்க்கையின் அன்றாட சுகாதாரப் பிரச்சினைகள் மாநில அரசுகளின் மேற்பார்வையிலும் இருப்பதுமே பொதுவாக எல்லாக் கூட்டாட்சிகளிலும் காணப்படும் ஏற்பாடாகும். மக்களின் சுகாதாரத் தேவைகளை முழுமையாக உணர்ந்து, அவற்றை உடனடியாகப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருப்பவை மாநில அரசுகளேயாதலால், நாட்டின் சுகாதாரப் பணிகளில் பெரும்பாலானவை அவைகளிடமே ஒப்படைக்கப்படவேண்டும் என்ற கருத்து கனடாவில் 1940இல் நியமிக்கப்பட்ட மத்திய மாநில உறவுகள் குழுவின் (Royal Commission-on Dominion—Provincial Relations) அறிக்கையில் (Rowell—Sirois Report) தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரத்தின் சில அம்சங்களைப் பொருத்தவரை அவை நாடெங்கிலும் ஒரே மாதிரியாக இருப்பது நல்லதென்று நினைக்கத் தோன்றுகிறது. ஒருவர் மருத்துவராகப் பதிவு செய்து கொள்வதற்குரிய தகுதிகள் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியானவையாய் இருப்பது அவசியமாகும். மாநிலமொன்றில் மருத்துவராக தகுதியற்றவர் என ஒருவர் கருதப்பட்டால், அவர் வேறெந்த மாநிலத்திலும் மருத்துவராகிவிட முடியாத நிலையைத் தோற்றுவிக்க, எல்லா மாநிலங்களும் மருத்துவர்களுக்கு ஒரேவிதமான தகுதிகளை நிர்ணயிப்பதுதான் நல்லதாகும். உணவுப் பண்டங்களும், மருந்துப் பொருட்களும் நாடு முழுவதும் ஒத்த தரமுடையனவாய் இருக்கும்படி ஒழுங்குபடுத்தப்படுவது அவசியமாகும். இவ்வினங்கள் சுவிட்சர்லாந்தில் பொது அரசின் பொறுப்பில் இருக்கின்றன. ஆனால் இதர கூட்டாட்சிகளில் இவை இரு அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. உணவுப்பண்டங்களிலும் மருந்துபொருட்களிலும் மாநிலங்களுக்கிடையேயான வாணிகத்தை (Inter-State Commerce) மத்திய அரசும், மாநிலத்துக்குள் நடைபெறும் வாணிகத்தை (Inter-state Commerce) மாநில அரசுகளும் கண்காணித்து வருவதே அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகியக் கூட்டாட்சிகளில் காணப்படும் வழக்கமாகும்.

சுகாதாரச் சேவைகளை சரிவரச் செய்ய மத்திய மாநில அரசுகளிடையே ஒத்துழைப்பு அவசியமாகும். அமெரிக்கா, ஆஸ்தி

ரேலியா, கனடா ஆகிய மூன்று கூட்ட ாட்சிகளிலும் மத்திய அரசில் இருக்கும் உடல் நலத்துறை, மாநில அரசுகளில் இருக்கும் உடல் நலத்துறைகளோடு நெருங்கிய தொடர்புகொண்டு பல திட்டங் களை நிறைவேற்றி வருகிறது. மத்திய மாநில அரசாங்கங்களின் பிரதிநிதிகள் அடிக்கடி சந்தித்து, செய்திகளை பரிமாறிக்கொள்வ தோடல்லாமல் சுகாதாரத் திட்டங்களை மேற்கொள்வது பற்றியும் தீர்மானிக்கின்றனர். கனடாவிலுள்ள 'தேசிய சுகாதாரக் குழுவும்' (Dominion Health Council), ஆஸ்திரேலியாவிலுள்ள 'தேசிய சுகாதார மருத்துவ ஆராய்ச்சிக் குழுவும்' (National Health and Medical Research Council) மக்கள் உடல் நலத்தைக் காப்பதில் மத்திய மாநில அரசுகள் இணைந்து இயங்கும் நிறுவனங்களுக்கு உதாரணங்களாய் அமைகின்றன. தொழிற் சட்டங்களை இயற்று வதில்கூட இரு அரசுகளும் ஒன்றோடொன்று கலந்து பேசிய பிறகு எப்படிப்பட்டச் சட்டங்களை இயற்றுவது என்ற முடிவுக்கு வருவது நல்லதாகும். தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம், காற் ரோட்டம் போன்ற வசதிகள் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடு வதைக் காட்டிலும், எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியானவை யாய் இருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஆஸ்திரேலியாவில் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் சில பொதுக் கொள்கைகளின் அடிப்படையில் தொழிற் சட்டங்கள் இயற்றி வருவது அறியத்தக்கதாகும். ஆனல் கனடாவில் அது போன்ற 'கூட்டாண்மைக் கோட்பாட்டுக்கு'(Collectionism)அவ்வளவு செல் வாக்கு இருப்பதாகத் தோன்றவில்லை. அங்கு மாநிலங்கள் தத்தம் விருப்பப்படிச் செயல்பட விரும்புகின்றன; ஆனல் அங்குள்ள 'தொழிற் சட்ட ஆட்சியாளர்கள் சங்கம்' (Canadian Associaton of Administrators of Lalour Legislation) மத்திய மாநில அரசுக ளிடையே கூட்டுறவை வளர்க்க முயன்று வருகிறது.

8. சட்டமும் ஒழுங்கும்

இறுதியாக, கூட்டாட்சியில் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றின் பராமரிப்புக்குத் துணை செய்யும் சாதனங்கள் சிலவற்றின் நிரு வாகம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள் வோம். சிறைச்சாலை, காவல் துறை, குற்றயியல் சட்டம் ஆகிய வற்றின் நிர்வாகம் எல்லாக் கூட்டாட்சிகளிலும் ஒரே மாதிரியாக இல்லை. சுவிட்சர்லாந்தில் சிறைச்சாலைகள் மாநிலங்களின் கட்டுப் பாட்டில் இருக்கின்றன; அதன் விளைவாகக் கைதிகள் நடத்தப்படும் முறை மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுகிறது. ஆஸ்திரேலியாவில் இருக்கும் எல்லா சிறைச் சாலைகளும் மாநில அரசுகளால் நிறுவப்

பட்டவையே. மத்திய அரசின் சட்டங்களுக்கு எதிரான குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டோரும் மாநில அரசுகளின் சிறைச்சாலைகளில்தான் அடைக்கப்படுகிறார்கள். கனடாவில் நீண்டகாலத்தண்டனை பெறும் குற்றவாளிகள் மத்திய அரசின் சிறைச்சாலைகளிலும், குறைந்த காலத் தண்டனை பெறும் குற்றவாளிகள் மாநில அரசுகளின் சிறைச்சாலைகளிலும் தண்டனை அனுபவிக்கின்றனர். காவல் துறையைப் பொருத்தவரை சுவிட்சர்லாந்தில் இரு அரசுகளுக்கும் வெவ்வேறான துறைகள் இருக்கின்றன. கனடாவிலும் அவ்வாறு இருக்க அரசியலமைப்பு அனுமதித்தாலும், மாநிலங்களில் பெரும்பாலானவை பொது அரசின் காவல் துறையிடமே (Royal Canadian Mounted Police) அவைகளின் காவல் பொறுப்புகளை ஒப்படைத்திருக்கின்றன. ஒண்டாரியோ, க்வெபெக் ஆகிய இரண்டு மாநிலங்களில் மட்டுமே மாநில அரசாங்கங்களால் நிறுவப்பட்ட காவல் படைகள் செயல்படுகின்றன. மத்திய அரசின் காவல் துறையினை மாநில அரசுகள் பயன்படுத்திக் கொண்டு, அத்துறையின் நிருவாகத்திற்கான செலவை அதோடு பங்கிட்டுக் கொள்வதால் பொருட்செலவு குறைகிறது. ஆனால் அமெரிக்காவிலோ மத்திய மாநில அரசுகளுக்குத் தனித் தனி காவல் படைகள் இருக்கின்றன; அங்கு தேசியக் காவல் படையினரின் எண்ணிக்கை காலப் போக்கில் பெரிதும் வளர்ந்து விட்டது இரு அரசுகளுக்கும் வெவ்வேறான காவல்துறை இருந்தாலும் அவை ஒன்றோடொன்று ஒத்துழைத்தால்தான் குற்றங்களைக் கட்டுப்படுத்தமுடியும் என்பது அங்கு உணரப்படுகிறது.

குற்றயியல் சட்டங்களை நிறைவேற்றும் கடமை மாநிலங்களிடம் தரப்படுவதில் தவறில்லை என்றாலும், அமெரிக்காவில் அது சில சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கிறது. குற்றவாளிகள் ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்துக்குத் தப்பி ஓடிவிடும் பொழுது, அவர்களைக் கைது செய்து குற்றம் நிகழ்ந்த மாநிலத்துக்குக் கொண்டு வருவது (Extradition) என்பது கடினமான காரியமாய் இருக்கிறது. மாநிலங்கள் ஒன்றோடொன்று ஒத்துழைத்தால் தான், மாநிலம் விட்டு மாநிலம் ஓடும் குற்றவாளிகளைக் கைதுசெய்து தண்டிக்க முடியும். இது போன்ற ஒத்துழைப்பு இன்று அமெரிக்காவில் வளர்ந்து வருகிறது. அமெரிக்காவில் உள்ளது போன்று ஆஸ்திரேலியாவில் குறிப்பிடத்தக்க அளவுக்கு சிக்கல்கள் இல்லை, சமூகப் பணிகளில் பலவற்றின் சீரான இயக்கம் மத்திய மாநில அரசுகளிடையே நிலவும் கூட்டுறவைப் பொருத்தது என்ற கருத்து, குற்றயியல் சட்டங்கள் நிறைவேற்றப் படுதலுக்கும் பொருந்தும்.

8. கூட்டாட்சியும் வெளிநாட்டு அலுவல்களும்

(1) மத்திய அரசும் வெளிநாட்டு விவகாரமும் (2) அயல்நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்துகொள்வது (3) அமெரிக்காவும் உடன்படிக்கைகளும் (4) கனடாவும் உடன்படிக்கைகளும் (5) கனடாவிலுள்ள ஏற்பாட்டைப்பற்றிய வாதப் பிரதிவாதங்கள் (6) அமெரிக்க அரசியலமைப்பு மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் முறை (7) நிர்வாக ஒப்பந்தங்கள் [8] பாராளுமன்றமும் அயல்நாட்டு அலுவல்களும் [9] சுவிட்சர்லாந்தின் தனி நிலை.

1. மத்திய அரசும் வெளிநாட்டு விவகாரமும்

கூட்டாட்சியில் அயல் நாடுகளோடு தொடர்புகொள்ளும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் தனி உரிமை எனக் கருதப்படுகிறது. கூட்டாட்சியின் வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய அரசிடம் இருப்பதால் விளையும் நன்மைகளையும், மாநில அரசுகளிடம் இருந்தால் விளையக்கூடிய தீமைகளையும் விளக்கக் கூறத் தேவையில்லை. உள்நாட்டு அலுவல்களின் ஆட்சி முறையில் கூட்டாட்சியின் பல மாநிலங்கள், பல வழிகளைப் பின்பற்றினாலும், வெளிநாட்டு அலுவல்களில் நாடு முழுவதும் ஒரே வழியைப் பின்பற்றுவது அவசியமாகும். இன்றைய கூட்டாட்சிகள் எதிலும் மாநிலங்களுக்கு அயல்நாட்டு அலுவல்களை மேற்கொள்ளும் அதிகாரம் இருப்பதாகக் கூறமுடியாது; அப்படி இருப்பினும் அது மத்திய அரசின் கண்காணிப்புக்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கும். அமெரிக்க மாநிலங்கள் அவைகளுக்கிடையேயோ அல்லது அயல் நாடுகளோடோ எந்த விதமான அரசியல் உடன்பாட்டையும் செய்துகொள்ள முடியாது. அரசியல் தொடர்பற்ற உடன்பாட்டைச் செய்துகொள்வதற்கும் தேசிய காங்கிரசின் இணக்கம் தேவையாகும். ஒரு கூட்டாட்சி வேறொரு நாட்டோடு நட்புடனோ அல்லது பகைமையுடனோ

பழகும் பொழுது, அதன் கொள்கை பிளவற்ற ஒருமுகமான கொள்கையாக இருக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிற நாம், அந்தக் கொள்கையை வகுக்கும் அதிகாரம் மத்திய அரசு ஒன்றிடம் மட்டுமே தரப்படவேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்வது அவசியமாகிறது.

2. அயல் நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்துகொள்வது

கூட்டாட்சியானது அயல் நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்துகொள்ளும் செயலே அதன் வெளிநாட்டு அலுவல்களின் தலையாய அம்சமாக எண்ணப்படுகிறது. இன்றைய சர்வதேச சூழ்நிலையில் நாடுகள் தனித்து வாழமுடியாது என்பதும், அவை தங்களுக்கிடையே நேச உடன்பாடுகள் செய்து கொள்வது சாதாரண நிகழ்ச்சிகள் என்பதும் நாம் அறிந்த செய்திகளே. உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. முதலில் அயலரசோடு உடன்படிக்கையின் நிபந்தனைகளை முடிவு செய்துகொள்ளவேண்டும்; இரண்டாவதாக அவற்றை நிறைவேற்றும் பொருட்டு உள்நாட்டில் சட்டங்கள் இயற்றவேண்டும்; இவ்விரு செயல்களும் நிகழ்ந்த பிறகே உடன்படிக்கையானது உயிருள்ள ஏற்பாடுகளாய் கருதப்படும். கூட்டாட்சியில் வேறொரு நாட்டோடு உடன்பாடு ஒன்றைப் பேசி முடிக்கும் அதிகாரமும், அவ்வாறு பேசி முடித்த உடன்பாட்டை நாட்டு மக்களை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யும் அதிகாரமும் மத்திய அரசுக்கு மட்டும் உரிய அதிகாரங்களாக இருக்கின்றனவா அல்லது முதலாவது அதிகாரம் மத்திய அரசிடமும் இரண்டாவது அதிகாரம் மாநில அரசுகளிடமும் இருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும். இரு வகைப் பணிகளையும் மத்திய அரசிடம் ஒப்படைக்கும் கூட்டாட்சிக்கு அமெரிக்காவையும், ஒன்றை மத்திய அரசிடமும் மற்றொன்றை மாநில அரசுகளிடமும் ஒப்படைக்கும் கூட்டாட்சிக்குக் கனடாவையும் உதாரணமாகக் கூறலாம். இரு அதிகாரங்களையும் மத்திய அரசு மட்டும் அனுபவிப்பது சிறந்ததா, மத்திய மாநில அரசுகள் இரண்டும் பகிர்ந்துகொள்வது சிறந்ததா என்ற வினவுக்கு விடையளிப்பது கடினமான காரியமாகும்.

அயலரசுகளோடு உடன்படிக்கைகளை முதலில் முடிவு செய்து கொள்ளும் அதிகாரம் எல்லாக் கூட்டாட்சிகளிலும் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. ஆனால் அவற்றின் நிபந்தனைகளை நிறைவேற்றும் பொறுப்பு, அமெரிக்காவில் மத்திய அரசிடமும், கனடாவில் மாநில அரசுகளிடமும் தரப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக

உடன்படிக்கைகளைத் தீர்மானிக்கிற பொழுது எந்தப் பொருள் மீதும் உடன்பாட்டுக்கு ஏற்பாடு செய்து கொள்வதில் சிக்கல்கள் தோன்ருது; ஆனல் அடுத்த கட்டமாக அந்த உடன்பாட்டை மக்களிடையே செயல்படுத்தும் பொழுதுதான் கூட்டாட்சியின் அடிப்படையையே ஆட்டி அசைக்கும் சிக்கல்கள் தோன்றுகின்றன.

எந்த இனத்தின்மீது உடன்படிக்கை செய்துகொள்ளப் பட்டதோ, அந்த இனம் மத்திய அரசின் இனங்களில் ஒன்ருக அரசியலமைப்பால அறிவிக்கப்பட்டிருந்தால், அதைப்பற்றி மத்திய அரசு சட்டங்கள் இயற்றி உடன்படிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது. ஆனல் உடன்படிக்கைக் குரிய இனம் மாநில அரசுகளின் இனங்களில் ஒன்ருக அரசியலமைப்பால் அறிவிக்கப்பட்டிருந்தால், அதைப் பற்றிய சட்டங்களை மத்திய அரசு இயற்றுவதென்பது அது மாநிலங்களின் அதிகாரங்களில் தலையிடுவதாக பொருள்படாதா? மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் பொருட்கள்மீது உடன்படிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு சட்டங்களியற்றும் அதிகாரமானது மத்திய அரசிடம் இருப்பது முறையா அல்லது மாநில அரசுகளிடம் இருப்பது முறையா என்பதை ஆராய்ந்தறிவது அவசியமாகும். உடன்படிக்கைகளைப் பேசி முடிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும் மத்திய அரசானது, அவற்றை நிறைவேற்றுவதற்காக, உடன்படிக்கைக்குரிய பொருள் எதுவாக இருப்பினும், அதன்மீது சட்டமியற்றக்கூடிய அதிகாரம் பெறுவதுதான் முறை என்று ஒரு தரப்பில் வாதாடப்படுகிறது. உடன்படிக்கையைச் செய்யும் அரசு, அதைச் செயல்படுத்த முடியாத நிலையில் இருப்பதா என்று கேட்கப்படுகிறது. உடன்படிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு மாநில அரசுகளுக்கு உரிமையாக்கப்பட்டிருக்கும் இனங்கள்மீதும் மத்திய அரசு சட்டம் இயற்றக் கூடும் என்ருல் அது மாநில அரசுகளின் அலுவல்களில் மத்திய அரசு தலையிடுவதாக அமைவதாக மறுதரப்பில் வாதாடப்படுகிறது. அரசிலயமைப்பு வகுக்கும் அதிகாரப் பிரிவினை பயனற்றப் பகுதியா என்று கேட்கப்படுகிறது. எனவே, உடன்படிக்கைகளை நிறைவேற்றும் அதிகாரம் மத்திய அரசிடம் இருப்பதுதான் விரும்பத்தக்கது எனக் கருதுவோர் தரப்பிலும், உடன்படிக்கைக்குரிய பொருள் எந்த அரசுக்கு உரியதோ அந்த அரசிடம் இருப்பதுதான் விரும்பத்தக்கது எனக் கருதுவோர் தரப்பிலும் நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது. அமெரிக்காவிலும் கனடாவிலும் உடன்படிக்கைகள் எவ்வாறு செய்து கொள்ளப்படுகின்றன என்பதை இனிக் காண்போம்.

3. அமெரிக்காவும் உடன்படிக்கைகளும்

அமெரிக்க அரசியலமைப்பு சர்வதேச உடன்படிக்கைகளைப் பற்றிய முழு அதிகாரத்தையும் மத்திய அரசுக்கு உரிமையாக்குகிறது. குடியரசுத் தலைவர் செனட் சபையின் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையினரின் இணக்கத்தோடு செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் காங்கிரசின் சட்டங்கள் வழியாக நிறைவேற்றப்படும். அமெரிக்காவில் உடன்படிக்கைகள் அனைத்தும் அரசியலமைப்பின் விதிகளுக்கு நிகரான சட்டங்களென அறிவிக்கப்படுகின்றன. தேசிய அரசியலமைப்பை ஏற்று அதன்படி நடப்பது நாட்டிலுள்ள எல்லா நிறுவனங்களின் கடமையாகக் கருதப்படுவதுபோல, உடன்படிக்கைகளை ஏற்று அதன்படி நடப்பதும் எல்லா நிறுவனங்களின் கடமையாகக் கருதப்படுகிறது. மத்திய அரசரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் உடன்படிக்கைகளுக்கு எதிராக எந்த மாநில அரசும் இயங்க முடியாது. மாநிலங்களின் அரசியலமைப்புகளில்கூட தேசிய அரசின் உடன்படிக்கைகளுக்கு மாறான விதிகள் இருக்க முடியாது. அமெரிக்க அரசியலமைப்புத் தோன்றிய காலத்திலேயே, 1796ஆம் ஆண்டில், தலைமை நீதி மன்றமானது உடன்படிக்கைகளுக்கு உயர்வான இடமுண்டு என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. நூறு ஆண்டுகள் கழித்து 1890ஆம் ஆண்டிலும் தலைமை நீதிமன்றம் இந்தக் கருத்தை மீண்டும் உறுதி செய்தது. அரசியலமைப்பால் தடை செய்யப்பட்டிருக்கும் செயல்களையும், அரசாங்கத்தின் தன்மைக்கு மாறான செயல்களையும் தவிர, உடன்படிக்கைகளுக்காக அரசாங்கம் எந்தச் செயலையும் செய்யலாம் என நீதிபதி பீல்டு (Justice Field) தெரிவித்ததை இங்கு நினைவு படுத்திக்கொள்ளலாம்.

பொதுவாகக் கூறுமிடத்து, அமெரிக்க அரசாங்கமானது அயல் நாடுகளோடு எந்த மாதிரியான உடன்படிக்கையை வேண்டுமென்றாலும் செய்து கொள்ளலாம் என நினைக்கக்கூடிய அளவுக்கு அதன் வெளிநாட்டு அதிகாரங்கள் காணப்படுகின்றன. அரசியலமைப்பால் காங்கிரசுக்கு என அளிக்கப்பட்டிருக்கும் இனங்களோடு, எஞ்சிய இனங்கள் அதாவது, மாநிலங்களுக்கு உரியவை பற்றியும் உடன்படிக்கைகள் செய்துகொண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான சட்டங்களை தேசிய அரசு இயற்றலாம்; இன்றும் அது போன்று இயற்றிவருகிறது. 1920 ஆம ஆண்டில் தலைமை நீதிமன்றம் காங்கிரசின் எல்லைக்கு அப்பாற்பட்டச் செயல்களைக்கூட தேசிய அரசாங்கம் உடன்படிக்

கைகள் வாயிலாக செய்யலாம் என்பதாக அறிவித்தது. காங்கிரசின் சட்டங்கள் தேசீய அரசியலமைப்பின் அடிப்படையில் இயற்றப்பட்டால்தான் செல்லும் எனவும், ஆனால் உடன்படிக்கைகளோ அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குரிய அதிகாரத்தின் அடிப்படையில் இயற்றப்படுதலே அது செல்லுபடி யாவதற்குப் போதுமானதென்றும் நீதிபதி ஹோம்ஸ் (Justice Holmes) தெரிவித்தது கவனிக்கத்தக்க கருத்தாகும். தேசீய அரசாங்கம் உடன்படிக்கைகள் செய்து கொள்வதில் எவ்வளவு தூரம் செல்லலாம், எதற்குமேல் செல்லக்கூடாது, உடன்படிக்கை அதிகாரத்தின் உண்மையான எல்லைகள் எவை—இவை யெல்லாம் இன்றுவரை திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை; அப்படித் தீர்மானிப்பதற்கான பிரச்சினை இன்றுவரை எழுந்ததில்லை. உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதும், அவற்றைச் செயல்படுத்துவதும், தேசீய அரசின் மிகச் சிறந்த அதிகாரங்களில் ஒன்றெனக் கருதப்பட்டாலும், அந்த அதிகாரத்தின் எல்லைகள் இன்றுவரை வரையறை செய்யப்படாமல் தெளிவற்ற நிலையில் இருப்பது விரும்பத்தக்கதல்ல.

அமெரிக்காவில் இருக்கும் நிலைதான் ஏறத்தாழ ஆஸ்திரேலியாவிலும் இருக்கிறது. உடன்படிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, தேசீய அரசு, அதற்கென அளிக்கப்பட்டிருக்கும் இனங்களோடு மாநிலங்களுக்கென அளிக்கப்பட்டிருக்கும் இனங்கள்மீதும் சட்டமியற்றும் அதிகாரத்தை அனுபவித்து வருகிறது. சாதாரணமாக மத்திய அரசின் எல்லைக்கு அப்பாற்பட்டவை எனக் கருதப்படும் செயல்களில், அது தன் வெளிநாட்டு விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தலையிட்டு வந்திருப்பதைத் தவறு எனத் தலைமை நீதிமன்றம் தடை செய்ததில்லை. சுவிட்சர்லாந்தைப் பொருத்தவரை, அரசின் அயல்நாட்டுத் தொடர்புகளை நிர்ணயிப்பதில் இடர்ப்பாடுகள் எதுவும் தோன்றுவதில்லை எனக் கூறலாம். உலக அரசியலில் பல நூற்றாண்டுகளாக சுவிட்சர்லாந்து கூட்டுச் சேராத கொள்கையைப் பின்பற்றி வருகிறது. இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளால் சூழப்பட்டிருக்கும் சின்னஞ்சிறு சுவிட்சர்லாந்து, அதன் சுதந்திரத்தையும் ஒருமைப்பாட்டையும் காத்துக் கொள்ளவேண்டி, நடு நிலைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதே சிறந்த வழி எனக் கருதுவதில் வியப்பில்லை. சுவிட்சர்லாந்தின் அயல் நாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் மக்களும் பங்கேற்கின்றனர் என்பதும், அவர்களில் பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்படும் கொள்கையே அரசின் கொள்கையாய் அமையும்

என்பதும், சுவிட்சர்லாந்தை மற்ற நாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

4. கனடாவும் உடன்படிக்கைகளும்

உடன்படிக்கைகள் செய்து கொள்வதில் தற்கால கூட்டாட்சிகளில் கனடாவின் நிலை நம் கவனத்துக்குரியதாகும். கனடாவின் அரசாங்கம் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கனடா பிரிட்டிஷ் பேரரசின் ஒரு அங்கமாக விளங்குவதால், அப்பேரரசு செய்து கொள்ளும் உடன்படிக்கைகளை கனடாவைப் பொருத்தவரை நிறைவேற்றுவது, அதன் தேசீய அரசாங்கத்தின் பொறுப்பாகும். பேரரசின் உடன்படிக்கைகளைச் (British Empire Treaties) செயல்படுத்துவதற்காக, தேசீய அரசாங்கமானது மாநில அரசாங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இனங்கள் மீதும் சட்டமியற்றக் கூடிய உரிமை பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் 1918ஆம் ஆண்டிலிருந்து கனடா அதன் சொந்தப் பொறுப்பிலும் அயல் நாடுகளோடு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டது. இது போன்ற உடன்படிக்கைகளின் நிலை, முன்னர் கூறப்பட்ட உடன்படிக்கைகளின் நிலையைவிடத் தாழ்ந்ததாக இருப்பதைக் காணலாம். 1937ஆம் ஆண்டில் பிரிவி கவுன்சிலின் நீதிக்குழுவானது, கனடா அதன் தனிப் பொறுப்பில் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளை நிறைவேற்றும் அதிகாரமானது, அந்த உடன்படிக்கைக்குரிய பொருள் எந்த அரசாங்கத்துக்குச் சொந்தமானதோ, அந்த அரசாங்கத்துக்கே உரியதாகும் என அறிவித்தது. உடன்படிக்கைகளைப் பேசி முடிப்பது பொது அரசாங்கமாக இருந்தாலும் அதை நிறைவேற்றுவது எந்த அரசாங்கம் என்பது உடன்படிக்கைக்குரிய பொருளைப் பொருத்ததாக இருக்கும். மத்திய அரசின் இனமாக இருந்தால் அது எந்தவிதமான இடர்ப்பாடுமின்றி அதன் உடன்படிக்கைக்கு உயிரூட்டுவதற்கான சட்டங்களைச் செய்யலாம். மாநில அரசுகளின் இனமாக இருந்தால், ஒவ்வொரு மாநிலமும் அதன் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற வகையில் நிறைவேற்றுச் சட்டங்களை இயற்றவோ அல்லது இயற்ற மறுக்கவோ செய்யலாம்.

1935ஆம் ஆண்டில் சர்வதேச சங்கத்தின் (League of Nations) பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் (Inter-national Labour Organiqation) தீர்மானங்கள் சிலவற்றைச் செயல்படுத்தும் வகையில், கனடாவின் தேசீயப் பாராளுமன்றம் சில

சட்டங்களை இயற்றியது. தொழிலாளர் நிறுவனத்தின் முடிவுகளை கனடா அதன் தனிப் பொறுப்பில் ஏற்றுக்கொண்டதேயல்லாது, பிரிட்டிஷ் பேரரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள் என்ற காரணத்தால் அல்ல என்பது இங்கு அறியத்தக்கது. தொழிற்சாலை களில் வேலைநேரம் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும், வாராந்திர விடுமுறை தரப்பட வேண்டுமென்றும், குறைந்த பட்சக் கூலி நிர்ணயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டு மென்றும் கோரிய அத்தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான சட்டங்களை மத்திய அரசு இயற்றியது செல்லாதவை என நீதிக் குழுவால் அறிவிக்கப் பட்டது. மேலே கண்ட தீர்மானங்கள் 'சொத்துக்களும் சிவில் உரிமைகளும்' என்ற இனத்தைச் சார்ந்தவை என்றும், அந்த இனம்பற்றி சட்டமியற்றக்கூடிய உரிமை மாநில அரசுகளுக்கே உண்டு என்றும், எனவே அதன்மீதான மத்திய அரசின் சட் டங்கள் அதன் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டவையாய் இருக் கும் காரணத்தால் செல்லாதவை யாகின்றன என்றும் தீர்மானிக் கப்பட்டது கனடிய கூட்டாட்சியின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க தொரு நீதித் தீர்ப்பாகும். எனவே, கனடா அதன் தனிப்பொறுப் பில் மாநில அரசுகளுக்குரிய இனங்கள்மீது செய்துகொள்ளும் உடன்படிக்கைகளை நிறைவேற்றும் அதிகாரம், அல்லது நிறை வேற்ற மறுக்கும் அதிகாரம் மாநிலஅரசுகளுக்கு மட்டுமே உண்டு என்பதும், அதில் மத்திய அரசு தலையிட முடியாது என்பதும், கனடாவை அமெரிக்காவினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒத்துப்போனால் உடன் படிக்கைகள் செய்துகொள்வதில் இடர்ப்பாடு எதுவும் தோன்றாது என எதிர்பார்க்கலாம்.

5. கனடாவிலுள்ள ஏற்பாட்டைப்பற்றிய வாதப் பிரதிவாதங்கள்

உடன்படிக்கைகள் செய்துகொண்டு, அவற்றை நிறைவேற் றும் அதிகாரம் மத்திய மாநில அரசுகளிடையே பிரிந்திருப்பது திருப்திகரமான ஏற்பாடல்ல என்பதாக சிலர் குறைபட்டுக்கொள் கின்றனர். ஆனால் இந்த முறைதான் உண்மையான கூட்டாட் சிக்கு உகந்த முறையாக அமைகிறது. மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்கள்மீது சட்ட மியற்றும் உரிமை, அவைகளுக்கு மட்டுமே உரியதாக இருக்கவேண்டுமென்ற கருத்தை யாரும் மறுக்கமுடியாது. மத்திய அரசு அதன் வெளி நாட்டு அதிகாரங்களின் அடிப்படையில் மாநில அரசுகளின் அதி காரங்களை அபகரிப்பது என்பது கூட்டாட்சிக் கொள்கைக்கு விரோதமான செயலாகும். நாடுகள் கூட்டமைப்பில் சேரும்

பொழுது, எந்தெந்த இனங்கள்மீது அவை தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதைத் தெரிந்துகொண்டே சேருகின்றன; பிறகு அயல்நாட்டு அலுவல்களை மேற்கொள்ள, அந்த இனங்கள் மீதும் மத்திய அரசு சட்ட மியற்றலாம் எனக் கூறப்பட்டால், அரசியலமைப்பு வகுக்கும் அதிகாரப் பிரிவினையால் எந்த நன்மையும் விளையாது. மாநில அரசுகளின் உரிமைகள் எந்த சந்தர்ப்பத்திலும் காக்கப்படவேண்டும் என விரும்புவோர் கனடா பின்பற்றும் முறையையும், மாநில அரசுகளின் உரிமைகளில் மத்திய அரசு சில சந்தர்ப்பங்களில் தலையிடுவதில் தவறில்லை என எண்ணுவோர் அமெரிக்கா பின்பற்றும் முறையையும் சிறந்ததெனக் கருதுகின்றனர்.

கனடாவில் உடன்படிக்கைகளைப் பேசி முடிக்கும் அதிகாரம் மத்திய அரசிடமும், அவற்றை நிறைவேற்றும் அதிகாரம் பெரும்பாலும் மாநில அரசுகளிடமும் இருப்பது ஒழுங்கான ஏற்பாடாகத் தோன்றவில்லை என சிலர் குறைபட்டுக் கொள்கிறார்கள். உடன்படிக்கைகளைப் பேசிமுடிக்கும் அதிகாரமுடைய மத்திய அரசு அவற்றை நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதும், உடன்படிக்கை நிறைவேற்றக்கூடிய அதிகாரமுடைய மாநில அரசுகள் அவற்றைப் பேசி முடிக்க முடியாத நிலையில் இருப்பதும் திருப்திகரமான ஏற்பாடு என எவரும் கருதமுடியாது. ஆனால் இந்த குறைபாடு சில சமயங்களில் தவிர்க்கமுடியாத காரணங்களால் தோன்றியதாக இருக்கலாம். கூட்டமைப்பில் இணையும் நாடுகளிடையே காணப்படும் வேறுபாடுகள், அவைகளிடையே மாநிலப் பற்றினை வேரூன்றச் செய்திருக்கும். மத்திய அரசானது வெளிநாட்டு விவகாரங்களைக் கண்காணிக்கும் பொருட்டு, மாநில அரசுகள் தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க மறுக்கலாம். அவைகளின் உரிமைகளுக்கு எல்லா சந்தர்ப்பத்திலும் உத்தரவாதமளிப்பதாக உறுதி கூறுவதன் மூலமே கூட்டாட்சியை நிறுவ முடியும் என்ற நிலை தோன்றினால், அதைக் கனடாவில் காணப்படுவது போன்ற ஏற்பாட்டின் மூலமாகவே தீர்க்கமுடியும்.

கனடாவில் உடன்படிக்கைகளைப் பேசி முடிக்கும் அதிகாரமும் அவற்றை நிறைவேற்றும் அதிகாரமும் மத்தியஅரசு ஒன்றிடம் மட்டும் இருப்பதால், அந்த அதிகாரத்தை மத்திய அரசு தவறான வழிகளில் பயன்படுத்தும் என அஞ்சுவது சரியல்ல எனச் சிலர் கருதுகிறார்கள். எந்த அரசாங்கமும் பெரும்பாலான குடிமக்களின் எண்ணத்துக்கு எதிராக இயங்கத் துணியாது. பாராளுமன்றம் நாட்டு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பேரவையாக விளங்குகிறது என்பதும், அதனால் ஏற்றுக்கொள்ளப்படும் என நம்பப்படு.

கிற உடன்படிக்கைகள் மட்டுமே அரசாங்கத்தால் செய்துகொள்ளப்படும் என்பதும் நாம் அறிந்த செய்திகளாகும். கனடாவில் பொதுமக்கள் சபையே (House of Commons) உண்மையான பாராளுமன்றமாக இயங்கிவருகிறது; அதன் நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசாங்கமே நாட்டில் ஆட்சி நடத்த முடியும். பொதுமக்கள் சபையின் தீர்மானம் நாட்டிலுள்ள மக்களின் தீர்மானத்துக்குச் சமமாகும். இச்சபை மாநிலங்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதிக்கக்கூடிய வகையில் எதையும் செய்யாது என நம்பலாம். அவ்வாறு செய்யுமானால் அச்செயலுக்குக் காரணமாயிருக்கும் பெரும்பான்மைக்கட்சி, அடுத்த பொதுத் தேர்தலில் அதன் பெரும்பான்மையை இழந்து, பதவித் துறக்க நேரிடும். எனவே உடன்படிக்கையோடு தொடர்புடைய எல்லா அதிகாரங்களையும் மத்திய அரசிடம் கொடுக்கலாம் என்றும், அவற்றை அது துர்பிரயோகம் செய்யாமலிருக்க 'அரசியல் காப்பீடு' (Political Safeguard) வழி செய்கிறது என்றும் கூறுவோரின் வாதத்தில் நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது. 1935ஆம் ஆண்டில், வாக்காளர்களில் பெரும்பாலோரின் விருப்பத்துக்கு விரோதமாக, வேலை நேரம், வாராந்திர விடுமுறை, குறைந்த பட்சக்கூலி ஆகியவற்றைப்பற்றி கனடாவின் கன்சர்வேடிவ் (Conserrative) அரசாங்கம் சட்டங்கள் இயற்றியதற்கு மறுப்புத் தெரிவிக்கிற வகையில், அடுத்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் கன்சர்வேடிவ் கட்சியைத் தோற்கடித்து லிபரல் (Liberal) கட்சியை ஆளும் கட்சியாகத் தேர்ந்தெடுத்தது, மக்களின் விருப்பு வெறுப்புகள் மதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை உணர்த்துவதாய் அமைகிறது.

அமைச்சரவை அரசாங்கம் (Cabinetg overnment) நடைபெறும் கனடாவில், அது பொதுமக்கள் சபையின் கருத்துகளுக்கு ஏற்றவகையில் இயங்குவதால், அதை நல்ல அரசாங்கம் எனக்கூறலாம்; நல்ல அரசாங்கமாக இருப்பதால் அது கூட்டாட்சிக் கொள்கைக்கு உகந்த அரசாங்கமாகவும் அமையும் எனக் கூறமுடியாது. பொதுமக்கள் சபையில் சில பெரிய மாநிலங்களிலிருந்து வரும் பிரதிநிதிகளே பெரும்பாலோராய் இருக்கின்றனர். இச்சபையில் இருக்கும் 265 உறுப்பினர்களில், 160 உறுப்பினர்கள் ஒண்டாரியோ, க்வெபெக் ஆகிய இரு மாநிலங்களிலிருந்து வரும் உறுப்பினர்களாவார்கள்; எஞ்சியுள்ள எட்டு மாநிலங்களிலிருந்து 105 உறுப்பினர்களே வருகின்றனர். கூட்டாட்சியின் மத்திய அரசு சில பெரிய மாநிலங்களிலிருந்து வரும் பிரதி நிதிகளின் ஆதரவைக் கொண்டு இயற்றும் சட்டங்களுக்கெதிராக பல சிறிய மாநி

லங்களிலிருந்து வரும் பிரதிநிதிகள் ஒன்றும் செய்ய முடியாத நிலை யில் இருக்கின்றனர். எனவே இரு பெரிய மாநிலங்களின் கட்சி வெல்லவும், எட்டு சிறிய மாநிலங்களின் கட்சி தோற்கவும் இட மளிக்கும் கனடிய முறை கூட்டாட்சியின் அடிப்படைக்கு முரணா னது எனக் கருதப்படுவதில் வியப்பில்லை.

6. அமெரிக்க அரசியலமைப்பு மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் முறை

மாநிலங்கள் அரசியல் காப்பீடுகளை நம்பியிருப்பதைவிட சட்டக் காப்பீடுகளை (legal safeguards) நம்பி இருப்பதே அவை களின் உரிமைகளைக் காத்துக் கொள்வதற்குச் சிறந்த வழி என்ற கருத்தையும் நாம் ஆராயலாம். அமெரிக்க அரசியலமைப்பில் உடன்படிக்கைப் பற்றி காணப்படும் விதிகள், மற்ற கூட்டாட்சி அரசிலமைப்புகளில் காணப்படும் விதிகளைவிட மேலானவையாக விளங்குவதைக் காணலாம். மத்திய அரசே உடன்படிக்கைகளைப் பேசி முடிக்கவும் அவற்றை நிறைவேற்றவும் அதிகாரம் பெற்றிருந் தாலும், அந்த அதிகாரத்தை மாநிலங்களைப் பாதிக்கின்ற வகையில் அது பயன்படுத்தாதவாறு பார்த்துக்கொள்ள அரசி யலமைப்பு வகை செய்கிறது.

முதலாவதாக, ஆட்சித்துறைத் தலைவரான குடியரசுத் தலைவர் உடன்படிக்கைக்கான பேச்சு வார்த்தைகளை நடத்தி அதில் அமெரிக்காவின் சார்பாக கையொப்பமிடுகிறார். அவர் காங்கிரசுக்குக் கட்டுப்பட்டு இயங்கவேண்டிய அவசியமில்லை. காங்கிரசின் கீழ்ச்சபையான பிரிதிநிதிகள் சபை அவரைப் பதவியி லிருந்து விலக்கமுடியாது. பெரிய தொழில் மாநிலங்களான இல் லினாய், இண்டியானா, மிச்சிகன், நியூஜெர்ஸி, நியூயார்க், ஒகியோ, பென்சில்வேனியா ஆகிய ஏழு மாநிலங்களின் சார்பாக 174 பிரதி நிதிகள்கீழ்ச் சபைக்கு வந்தாலும், அப்பெரிய மாநிலங்களைத் திருப்தி செய்வதற்காக சிறிய மாநிலங்களைப் பாதிக்கும் செயல் எதையும் அவர் செய்ய வேண்டிய நிர்பந்தமில்லை. கனடாவில் காணப்படும் முறையைவிட, இந்தமுறை மாநிலங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்குமென நாம் நம்பலாம்.

இரண்டாவதாக, குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப்படும் உடன்படிக்கைகள், செனட் சபையின் மூன்றில் இருபங்கு உறுப் பினர்களின் இணக்கத்தைப் பெற்றால்தான் செல்லத்தக்கவை யாகக் கருதப்படும். செனட் சபையில் அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களுக்கும், மாநில மொன்றிற்கு இரண்டு அங்கத்தினர்கள்

என்ற கணக்கில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறதென்பது முன்பே கூறப்பட்டது. 'மாநிலங்களின் மன்றம்' என மதிக்கப் படும் இச்செனட் சபையின் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை யைப் பெறத்தவறும் எந்த உடன்படிக்கையையும் நிறைவேற்ற முடியாதாகையால், மாநிலங்களுக்குத் தக்க பாதுகாப்பு இருப்பது உறுதியாகிறது. அமெரிக்காவில் இருக்கும் முறையைச் சிறந்த தெனக் கூறுவதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். முதலா வதாக, உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும் அதிகாரம் மத்திய மாநில அரசுகளிடையே சிதறாமல், மத்திய அரசு ஒன் றிடம் மட்டுமே தரப்பட்டிருக்கிறது. மத்திய அரசு, தான் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளை நிறைவேற்ற, மாநில அரசுகளின் சட்டங்களை நம்பவேண்டிய அவசியமில்லை. இரண்டாவதாக, மாநில அரசுகளின் உரிமைகள், மத்திய அரசின் உடன்பாட்டு அதிகாரங்களால் பாதிக்கப்படும் என அஞ்சத் தேவையில்லை. அரசியலமைப்பாலேயே சிறப்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டி ருக்கும் செனட் சபை இருக்கும்வரை, மாநிலங்களின் விருப்பத் துக்கு மாறான உடன்படிக்கைகளை மத்திய அரசு செய்து கொள் வது என்பது இயலாத காரியமாகும்.

ஆனல் அமெரிக்காவில் உடன்படிக்கைகள் செய்துகொள் ளப்படும் முறையில் ஒரு பெரிய குறைபாடு இருப்பதை நாம் சுட் டிக்காட்டுவது அவசியமாகும். குடியரசுத் தலைவர் அயல்நாடு— களோடு உடன்படிக்கைகளைப் பேசி முடிக்கிருர்; ஆனல் பேச்சு வார்த்தைக் கட்டத்திலேயே உடன்படிக்கைகளை செனட் ஏற்கு மென உறுதிகூற முடியாது. 1919ஆம் ஆண்டில் தலைவர் உட்ரோ வில்சன் (Woodrow Wilson) ஒப்புக்கொண்ட வர்சேல்ஸ் உடன் படிக்கையை (Treaty of Versailles) செனட் சபை, ஏற்க மறுத்தது உலகறிந்த செய்தியாகும். செனட் உடன்படிக்கைகளை நிரா கரிப்பதென்பது எப்பொழுதாவது நடைபெறும் நிகழ்ச்சியாகும். 1789-க்கும் 1934-க்கும் இடைப்பட்ட காலத்தில் செனட் 682 உடன்படிக்கைகளை அங்கீகரித்தது என்பதும், 173 உடன்படிக் கைகளைத் திருத்திய பிறகு ஏற்றுக் கொண்டது என்பதும், 15 உடன்படிக்கைகளையே நிராகரித்தது என்பதும், உடன்படிக் கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரிய சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதை உணர்த்துகின்றன.

7. நிருவாக ஒப்பந்தங்கள்

செனட்டின் இசைவைப் பெற விரும்பும் குடியரசுத் தலை வர்கள், முன்னெச்சரிக்கையாக மேற்கொள்ளும் ஏற்பாடொன்று

தற்காலத்தில் வழக்கத்திலிருக்கிறது. உடன்படிக்கையானது பேச்சு வார்த்தைக் கட்டத்தில் இருக்கும்பொழுதே குடியரசுத் தலைவர், செனட் சபையின் செல்வாக்குமிக்கக் குழுக்களில் ஒன்றான வெளியுறவுக் குழுவோடு (Foreign Relations Committee) கலந்தாலோசித்து, அதனுடைய கருத்துக்களை அனுசரித்த வகையில் உடன்படிக்கையைப் பேசி முடிப்பது, அதற்கு செனட்டில் நல்ல வெற்றி வாய்ப்பைத் தேடித்தருகிறது. பொதுவாக இக்குழுவின் சிபாரிசுபடியே செனட்டானது உடன்படிக்கையை ஏற்பதா மறுப்பதா என்பதை முடிவு செய்யும். செனட்டில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையைப் பெறுவதென்பது கடினமான காரியமாய் இருப்பதைக் காணும் குடியரசுத் தலைவர்கள், அயல் நாடுகளோடு உடன்படிக்கைகளுக்குப் பதிலாக 'நிருவாக ஒப்பந்தங்கள்' (Executive agreements) செய்துகொள்கின்றனர். இவற்றைச் செனட்டுக்கு அனுப்பவேண்டிய அவசியமில்லை. 1940ஆம் ஆண்டில் F. D. ரூஸ்வெல்ட், பிரிட்டனுக்குச் சொந்தமான பிரதேசங்களில் போர்த்தளங்கள் அமைத்துக்கொள்ள ஐம்பது நாசகாரி கப்பல்களைக் (destroyers) கொடுத்து உடன்பாடு செய்து கொண்டதும், 1941ஆம் ஆண்டில் ஐஸ்லாந்தை (Iceland) ஆக்கிரமித்துக் கொள்ளவும், கிரீன்லாந்தில் (Greenland) போர்த் தளங்கள் அமைத்துக் கொள்ளவும், டென்மார்க்கோடு (Denmark) உடன்பாடு செய்துகொண்டதும், நிருவாக ஒப்பந்தங்கள் வாயிலாகவே நிகழ்ந்தன என்பது அறியத்தக்கது. இது போன்ற ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள செனட்டின் ஒப்பம் தேவையில்லை என்றாலும், ஒப்பந்தங்களின் நிபந்தனைகளை நிறைவேற்ற காங்கிரசின் சட்டங்கள் தேவை யென்றால், அவை இயற்றப்பட்டாலொழிய ஒப்பந்தங்களை செயல்படுத்த வழியில்லை. அமெரிக்காவின் வெளிநாட்டு விவகாரங்களைத் தன் விருப்பப்படி இயக்குவதற்குரிய நிலையில் குடியரசுத் தலைவர் இருப்பதாகக் கூறப்பட்டாலும், புதிதாகத் தோன்றும் அரசுகளை அங்கீகரிப்பதா இல்லையா என்பதை அவரே முடிவு செய்யமுடியும் என்றாலும், தன்னுடைய பிரதிநிதிகளை (Personal agents) அயல்நாடுகளுக்கு அனுப்பி தன் கொள்கைகளை அவைகளுக்கு விளக்க முடியும் என்றாலும், அவருடைய உடன்படிக்கை அதிகாரங்கள் செனட்டின் அங்கீகாரத்துக்குக் கட்டுப்பட்டவை என்பதை மறுப்பதற்கில்லை.

8. பாராளுமன்றமும் அயல்நாட்டு அலுவல்களும்

கூட்டாட்சியில் அரசின் அயல்நாட்டு அலுவல்கள் பாராளுமன்றத்தின் அனுமதியோடு நடப்பதே நல்லதாகும். ஒற்றை ஆட்சி நடைபெறும் பிரிட்டனில், ஆட்சித் துறையினரே பொதுவாக

உடன்படிக்கைகளைச் செய்துகொள்கின்றனர் என்றும், பிறகு பாராளுமன்றம் அவற்றை முறைப்படி அங்கீகரிக்கிறது என்றும் கூறப்படுகிறது. பிரிட்டனில் ஆட்சித்துறையினர் பாராளுமன்றத்தின் எண்ணத்துக்கு எதிராக எதையும் செய்ய மாட்டார்கள் என உறுதியாகக் கூறலாம்; பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழக்கும் ஆட்சித்துறை பதவியிலிருந்து நீக்கப்படுமாதலால், அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் விருப்பத்துக்கு உகந்த வகையில்தான் உடன்படிக்கைகள் செய்து கொள்வார்கள் எனத் திண்ணமாக நம்பலாம். எனவே பிரிட்டனைப் பொருத்தவரை அங்கு பின்பற்றப்படும் முறை சரியானதாகவே தோன்றுகிறது. அது சரியான முறைதான் எனக் கூறுவதற்கு மற்ரெரு காரணத்தையும் காட்டலாம். வெளிநாடுகளோடு செய்துகொள்ளப்படும் உடன்படிக்கைகள் கூடுமானவரை இரகசியமாக வைத்துக் கொள்ளப்படவேண்டும் என்பதும், அவை பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அலசி ஆராயப்படுவது விரும்பத்தக்கதல்ல என்பதுமே அந்த காரணமாகும்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய மூன்று கூட்டாட்சிகளிலும் உடன்படிக்கைகள் ஓரளவுக்கு பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையாய் இருப்பதைக் காணலாம். செனட்டின் சம்மதமில்லாமல் அமெரிக்காவில் உடன்படிக்கைகள் தோன்றமுடியாது என்பது முன்பே கூறப்பட்டது. கனடாவிலும் 1918ஆம் ஆண்டிலிருந்து ஆட்சித்துறையானது பாராளுமன்றத்தின் கருத்தை அறிந்து அதற்குத்தக்க வகையில் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டுமென்ற மரபு வளர்ந்து வருகிறது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனிக்கு எதிராக கனடா போரில் இறங்கவேண்டுமா என்பது பற்றிய முடிவு பாராளுமன்றத்தினுல்தான் எடுக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவிலும் ஏறத்தாழ இதே நிலை இருப்பதைப் பார்க்கலாம்.

9. சுவிட்சர்லாந்தின் தனிநிலை

சுவிட்சர்லாந்தில் நாட்டு மக்களே வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் கலந்து கொள்ளும் உரிமை பெற்றிருப்பது இன்றைய உலக அரசியலில் ஒருபுதுமையாகும். சர்வதேச சங்கத்தில் சுவிட்சர்லாந்து சேர்வதா இல்லையா என்பதைப்பற்றி 1920ஆம் ஆண்டில் ஒரு குடியொப்பம் நடத்தி, அதில் சேர வேண்டுமென்று பெரும்பாலோர் வாக்களித்த பிறகே சங்கத்தில் சுவிட்சர்லாந்து சேர்ந்ததென்பது அறியத்தக்கது. கால வரை

யறை யின்றியோ, பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவோ நீடிக்கக் கூடிய உடன்படிக்கைகள் 30,000 வாக்காளர்களாலோ அல்லது எட்டு கேண்டன்களாலோ வேண்டிக்கொள்ளப்பட்டால் குடியொப்பத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். சுவிட்சர்லாந்தில் வெளிநாட்டு விவகாரங்கள்பற்றி குடியொப்பம் நடத்திய மக்களின் கருத்துகளை அறிவது எளிதான செயல். அங்கு சிக்கலான வெளிநாட்டு விவகாரங்களைத் தீர்மானிக்கும் அவசியம் எழுவதில்லை. அந்நாட்டுக்கு வெளிநாட்டுக் கொள்கை என்பதே இல்லை எனக் கருதக்கூடிய அளவுக்கு அங்கே நடுநிலைக்கொள்கை பின்பற்றப்படுகிறது. ஆனால் அமெரிக்கா போன்ற பெரிய வல்லரசுகள் உலக விவகாரங்களில் தலையிடுவதென்பது தவிர்க்க முடியாததாகிறது. அது ஒரு முனைப்பான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதால், அதனால் எழும் பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய அவசியம் எழுகிறது.

9. கூட்டாட்சியும் போர்களும்

[(1) தேசிய அரசும் போர் அதிகாரமும் (2) போர் அறிவித்தல் (3) படைகளை இயக்குதல் (4) படைகளைத் திரட்டுதல் (5) அமெரிக்காவிலும் சுவிட்சர்லாந்திலும் மாநிலங்களின் படைகள் (6) போர்க் காலங்களில் தேசிய அரசின் அதிகாரங்கள் அதிகரித்தல் (7) அரசு கூட்டாட்சியாக இருந்தால் போர்ச் செயல்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது (8) போர்ச் செயல்கள் கூட்டாட்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பது.]

1. தேசிய அரசும் போர் அதிகாரமும்

நாடு முழுவதும் அமைதி நிலவும் காலத்தில் கூட்டாட்சி செம்மையாகச் செயல்படும். ஆனால் போர்க்காலம் அதற்கு ஒரு சோதனைக் காலமாகும். ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமையையும், ஒருமைக்குப் பதிலாகப் பன்மையையும் பிரதிபலிக்கும் கூட்டாட்சியானது போரை எப்படி சமாளிக்கும் என நாம் அறிவது அவசியமாகும். ஒற்றை ஆட்சியில் நாட்டின் ஆற்றலை ஒன்று திரட்டிப் போரிடுவது போன்று கூட்டாட்சியில் செய்ய முடியுமா என பலர் சந்தேகப்படுகின்றனர். கூட்டாட்சிகளின் வரலாறுகளை கவனித்தால், அவைகளின் போர்ப்பணிகள் தங்கு தடையின்றி மேற்கொள்ளப்பட்டிருப்பது விளங்கும். இருப்பினும் போர்க்காலங்களில் பல பிரச்சினைகள் கூட்டாட்சிகளைத் தொல்லைக் குள்ளாக்கும் என்பதில் ஐயமில்லை; அவற்றிற்கெல்லாம் தீர்வு காண்பது எளிய காரியமல்ல. கூட்டாட்சிகளில் நாட்டின் பாதுகாப்பு மத்திய அரசின் பொறுப்பில் இருப்பதே வழக்கமாகும்; அது தனித்தனி மாநிலங்களின் பொறுப்பில் இருப்பதைவிட, எல்லோருக்கும் பொதுவான தேசிய அரசின் பொறுப்பில் இருப்பதே விரும்பத்தக்கதாகும் என்பதைப்பற்றி அரசியல் அறிஞர்களிடம் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நான்கு கூட்டாட்சிகளிலும், நாட்டைப் பாதுகாக்கும்

பணியே மத்திய அரசின் பணிகளில் மிகப் பெரியதாகக் கருதப் படுகிறது.

2. போர் அறிவித்தல்

கூட்டாட்சியில் போர் அறிவிக்கும் அதிகாரம் யாருடையது? எல்லாக் கூட்டாட்சிகளிலும் அது மத்திய அரசின் அதிகார மாகவே இருக்கிறது. மாநில அரசுகள் போர் அறிவிக்கக் கூடிய அதிகாரத்தைப் பெறுவது, நாட்டை எந்த விதமான ஆபத்துக் கெல்லாம் உள்ளாக்கும் என்பதை நினைத்துப் பார்த்தால் அந்த ஏற்பாட்டின் தீமைகள் நமக்குத் தோன்றும். எனவே, எல்லாக் கூட்டாட்சிகளிலும் போர் அறிவிக்கும் உரிமையை மத்திய அரசின் உரிமையாக ஏற்றுக் கொள்ளப்படுவதில் வியப்பில்லை. அமெரிக்கா விலும் சுவிட்சர்லாந்திலும் தேசியப் பாராளுமன்றமே போர் அறி விக்கலாம்; ஆனால் கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் இவ்வதி காரம் ஆட்சித் துறையினரிடம் தரப்பட்டிருக்கிறது; ஆட்சித்துறை பாராளுமன்றத்தின் விருப்பத்துக்கு மாறான வகையில் போர் பிர கடனம் செய்யாது என நம்பலாம். எனவே, எல்லாக் கூட்டாட்சி களிலும், போர் தொடங்கி விட்டதாகக் கூறும் அதிகாரம் பாராளு மன்றத்துக்கே உண்டு என்பதும், சில அரசியலமைப்புகள் இதை நேரடியாகக் கூறுகின்றன என்பதும், சில அரசியலமைப்புகள் மறைமுகமாக உணர்த்துகின்றன என்பதும் அறியப்படுகிறது. போர் அறிவிக்க பாராளுமன்றத்தின் இணக்கம் தேவை யென்றால், அது மாநிலங்களின் இணக்கம் தேவை எனக் கூறுவதற்குச் சம மாகும். பாராளுமன்றத்தின் மேலவையில் எல்லா மாநிலங்களுக் கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதும், அந்தப் பிரதிநிதித்துவம் கனடாவைத் தவிர மற்ற கூட்டாட்சிகளில் சரிசமமான பிரதி நிதித்துவமாக இருப்பதும், பெரும்பாலான மாநிலங்களின் சம்மத மில்லாமல் போர் அறிவிக்க முடியாது என்ற உண்மையை உணர்த்துகிறது.

அமெரிக்காவில் காங்கிரஸ்தான் போர் அறிவிக்கலாம் என அரசிலமைப்பு கூறினாலும், சில சமயங்களில் குடியரசுத் தலை வரும் அந்த அதிகாரத்தை அனுபவித்திருப்பதைப் பார்க்கிறோம். குடியரசுத் தலைவர் முதற்பெரும் படைத்தலைவராக (Commander-in-Chief) இருக்கும் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, காங்கிரஸ் முறையாகப் போர் பிரகடனம் செய்வதற்கு முன்பாகவே, போரில் இறங்கியதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட உதாரணங்களைக் காட்ட லாம். 1861 ஆம் ஆண்டில் தொடங்கிய உள்நாட்டுப் போரானது லிங்கனால் அறிவிக்கப்பட்டதே யல்லாது பாராளும் மன்றத்தால்

அறிவிக்கப்படவில்லை. அவர் தாக்குதலைத் தாக்குதலால் எதிர்க்கலாம்; அவ்வாறு எதிர்ப்பது அவருடைய கடமையும் கூட; அதற்காக காங்கிரசின் அறிவிப்புக்காக அவர் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அமெரிக்காவின் பாதுகாப்பைப் பாதிக்கும் செயல்களை அடக்க, குடியரசுத் தலைவர் காங்கிரசின் அனுமதியைப் பெருமல் போரில் இறங்குவது தவருகாது என்பதாகத் தலைமை நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. லிங்கன் காலத்திலிருந்து, இந்தக் கொள்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

3. படைகளை இயக்குதல்

போர்ப்படைகளை இயக்கும் அதிகாரம், குடியரசுத் தலைவருக்கு உரிய அதிகாரமாகும். அவர் இதை பகைவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி, போர் நிலவரத்தை உண்டாக்கி விட்டால், காங்கிரஸ் போரைத் தொடர்ந்து நடத்துவதைவிட வேறு எதையும் செய்வதற்கில்லை. தலைவரின் இச்செயலை காங்கிரஸ் வரவேற்ருலும் வரவேற்காவிட்டாலும், போரை வெற்றிகரமாக முடிக்க அது தலைவரோடு ஒத்துழைப்பது தவிர்க்கமுடியாததாகும். தலைவர் போல்க் (Polk) யாருக்குச் சொந்தமானது என்ற பிரச்சினைக்குரிய பிரதேசத்துக்குள் அமெரிக்கப் படைகளை அனுப்பி, 1846இல் மெக்சிகோவோடு போர் துவக்கியதும், தலைவர் மெக்கின்லி (Mckinley) ஹவானுத் துறைமுகத்துக்கு (Harana Harbour) அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்றை அனுப்பி ஸ்பெயினோடு (Spain) போர்த் துவக்கியதும், தலைவர் F. D. ரூஸ்வெல்ட்டு ஐஸ்லாந்தை 1941இல் கைப்பற்றிக் கொண்டதன் மூலம், இரண்டாம் உலகப் போரில் இறங்கியதும், குடியரசுத் தலைவர்களால் செய்யப்பட்ட செயல்களே யல்லாது காங்கிரசால் செய்யப்பட்டவையல்ல என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் தலைவர் இது போன்று போர்களுக்குக் காரணமாகிவிடுவதை காங்கிரஸ் எதிர்த்து வருகிறது. தலைவர்களின் செயல்களால் காங்கிரசின் அதிகாரம் பாதிக்கப்படுவதால், காங்கிரஸ் அவர்களின் செயல்களைக் குறித்து அதிருப்தி தெரிவிப்பது இயற்கையே. குடியரசுத் தலைவரின் போரதிகாரங்கள் காலப்போக்கில் அதிகரித்து வந்திருக்கின்றன; ஆனுல் இந்த வளர்ச்சியைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியமில்லை. போர்க் காலங்களில் அவசர நடவடிக்கைகள் தேவைப்படும்; ஒவ்வொன்றையும் காங்கிரஸ் ஆராய்ந்து தீர்மானிப்பது என்பது இயலாத காரியமாகும். நாட்டின் பாதுகாப்புதான் முக்கியம் எனக் கருதுவோர், குடியரசுத் தலைவரின் அதிகரித்து வரும் அதிகாரங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள் என நம்பலாம்.

4. படைகளைத் திரட்டுதல்

அடுத்தபடியாக, போருக்கு வேண்டிய படைகளைத் திரட்டுவது பற்றி அறிந்துகொள்ளவேண்டும். ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் மத்திய அரசே தரைப்படை, கடற்படை, விமானப் படை ஆகிய முப்படைகளைத் திரட்ட முடியும். மாநிலங்களுக்குப் படைதிரட்டும் பணியில் எந்தவிதமான தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அமெரிக்காவிலும் சுவிட்சர்லாந்திலும் நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது. சுவிட்சர்லாந்தின் பழைய அரசியலமைப்பான 1848ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் மாநிலங்களுக்கு இருந்த ஏராளமான படைத் துறை அதிகாரங்கள், அந்த அரசியலமைப்பு 1874ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப் பட்டபொழுது குறைக்கப்பட்டன; இருப்பினும், சுவிஸ் மாநிலங் களுக்கு இன்னும் குறிப்பிடத்தக்க அளவுக்கு போர்த்துறை தொடர்புடைய அதிகாரங்கள் இருப்பது கவனிக்கத்தக்கது. வேறெந்தக் கூட்டாட்சியின் மாநிலங்களுக்கும், சுவிஸ் மாநிலங் களுக்கு இருக்குமளவு போர் அலுவல்கள் பற்றிய அதிகாரங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. சுவிட்சர்லாந்தில் தேசிய அர சாங்கம் நிலைப்படை (Standing army) எதையும் வைத்திருக்க வில்லை. தேவை ஏற்படும்பொழுது போர்ப்பயிற்சி பெற்ற குடி மக்கள் படையை அது பயன்படுத்திக்கொள்கிறது. ஆனால் ஒவ் வொரு மாநிலமும் 300 பேருக்குக் குறைவான நிலைப்படை ஒன்றை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது; மத்திய அரசின் அனு மதியோடு இன்னும் பெரிய படைகளைக்கூட மாநிலங்கள் வைத்துக் கொள்ளலாம். ஆனால் மாநிலங்கள் பராமரிக்கும் படைகள் உள் நாட்டுக் குழப்பங்களைத் தடுப்பதற்கே யல்லாது, வெளிநாடுக ளோடு போர் தொடுப்பதற்கல்ல என்பது அறியத்தக்கது. போர்க் காலங்களில் படைகள் பற்றி தேசிய அரசு பிறப்பிக்கும் சட்டங் களை மாநில அரசுகளே நிறைவேற்ற வேண்டும்; போர் வீரர்களுக்கு வேண்டிய உடைகளையும் படைக்கலங்களையும் மாநிலங்களே தர வேண்டும்; ஒவ்வொரு படைப் பிரிவிலுமுள்ள வீரர்கள் கூடுமான வரை ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்; அவர்களின் ஊதியம்கூட மாநிலங்களால்தான் அளிக்கப்பட வேண்டும்; 'கேப்டன்' (Captain) பதவி வரையிலுள்ள அதிகாரி களை மாநில அரசுகளே நியமிக்கும். படை ஒன்றுதான்; அது தேசிய அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுதான் இயங்குகிறது; இருந்தாலும் மாநிலங்களுக்கு அதன் நிர்வாகத்தில் இருக்கும் பங்கு, சுவிஸ் படையை மாநிலங்களின் படை எனக் கூறக்கூடிய அளவுக்குக் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

5. அமெரிக்காவிலும் சுவிட்சர்லாந்திலும் மாநிலங்களின் படைகள்.

அமெரிக்க அரசியலமைப்பு மத்திய மாநில அரசுகள் இரண்டிற்குமே படைதிரட்டும் உரிமையை வழங்கி இருக்கிறது; பொதுப் பாதுகாப்புக்கென படைகளை உருவாக்கவும், அவற்றின் பராமரிப்புக்கான தொகையை வரியாக வசூலிக்கவும், அத்தொகையை செலவு செய்யவும் காங்கிரஸ் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசியலமைப்பு மாநிலங்களை 'குடிப்படைகள்' (militia) வைத்துக்கொள்ள அனுமதிக்கிறது. மாநில கவனரே அதன் குடிப்படையின் தலைவராவார். இப்படைகளுக்குப் பயிற்சி அளிப்பதும், அதிகாரிகளை நியமிப்பதும் மாநிலங்களின் பொறுப்பாகும். ஆனால் இக்குடிப்படைகளின் நிருவாகத்தில் தேசீய அரசு தலையிடலாம். அவற்றின் அமைப்பு, ஒழுக்கம் ஆகியவற்றைக் குறித்து சட்டம் செய்யவும், தேசீய அரசின் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் குடிப்படைகளை நிருவாகம் செய்யவும் தேசீய அரசுக்கு அதிகாரமுண்டு. தேசீய அரசின் சட்டங்களை நிறைவேற்றும் படியும், கிளர்ச்சிகளை ஒடுக்கும்படியும், தாக்குதல்களை முறியடிக்கும் படியும் மத்திய அரசு மாநிலப் படைகளுக்கு உத்தரவிடலாம். அமெரிக்கா, சுவிட்சர்லாந்து ஆகிய இரண்டு கூட்டாட்சிகளிலும், மத்திய மாநில அரசாங்கங்கள் இரண்டிற்கும் தனித்தனி படைகள் இருப்பது விரும்பத்தக்கதுதானா என்ற சந்தேகம் தோன்றுவது இயற்கையே. மாநிலங்களுக்குப் படைகள் இருப்பது அவைகளிடையே, அளவுக்கு மீறிய அஞ்சாமையையும் தன்னம்பிக்கையையும் வளர்த்து மத்திய அரசுக்கு எதிராகக்கூட இயங்கலாம் என்ற எண்ணத்தை வளர்க்காதா? மாநிலங்கள் படை வலிமை பெற்றிருப்பது, அவை கூட்டாட்சியிலிருந்து பிரிந்து செல்ல முயன்றாலும் முயலும் என்ற அச்சத்துக்கு இடம் கொடுக்கிறது.

சுவிட்சர்லாந்திலும் அமெரிக்காவிலும் மாநிலப் படைகளைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வது, மேற்கண்ட அச்சத்திற்கு ஆதாரம் உண்டா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தும். சுவிட்சர்லாந்தில் மத்திய அரசின் அனுமதியின்றி எந்த மாநிலமும் அதன் படை பலத்தைப் பயன் படுத்த முடியாது. மாநிலங்களுக்கிடையே தோன்றும் பூசல்களைப் போரின் வழியாகத் தீர்த்துக்கொள்வதை அரசியலமைப்பு அனுமதிக்கவில்லை. ஒரு மாநிலம் மற்றொரு மாநிலத்தால் அச்சுறுத்தப்பட்டாலோ, அல்லது உள்நாட்டுக் குழப்பம் வெளியார் படையெடுப்பு ஆகிய தொல்லைகளுக்கு உள்ளானாலோ, பாதிக்கப்படும் மாநிலம் உடனடியாக மத்திய

8

அரசின் உதவியைக் கோரவேண்டுமேயல்லாது, அதனுடைய படைகளை உபயோகிக்கக்கூடாது. உள்நாட்டுக் குழப்பத்தாலோ, வெளிநாட்டுப் படையெடுப்பாலோ பாதிக்கப்படும் மாநிலமொன்று மத்திய அரசின் உதவியை நாடவில்லை யென்றாலும், மத்திய அரசு தானாகவே தலையிட்டு நிலைமை சீர் செய்யலாம்; அவ்வாறு செய்வது அதன் கடமையுமாகும். எனவே, மத்திய அரசுக்கு எதிராகப் படைகளைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் சுவிஸ் மாநிலங்கள் இல்லை என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

அமெரிக்காவில், மாநிலங்களுக்குக் குடிப்படைகள் இருப்பது, அதன் கூட்டாட்சி அமைப்புக்கு ஆபத்தானது என எண்ணுவதற்கு இடமில்லை. குடிப்படைகள் கூட்டாட்சியானது கலைந்து விடக் காரணமாயிருக்கலாம் என்ற பயத்திற்கு அவர்களுடைய வரலாறு இடமளிக்கவில்லை. லிங்கன் காலத்தில் நடந்த உள்நாட்டுப் போரில், பிரிவினை வேண்டி போரிட்ட தெற்கு மாநிலங்கள் குடிப்படைகளைப் பயன்படுத்தியதாகத் தோன்றவில்லை! பிரிவினைப் பிரச்சினையைப் பற்றி தெற்கு மாநிலங்களும் வடக்கு மாநிலங்களும் பல ஆண்டுகள் பேசி வந்த போதிலும், குடிப்படைகளை நன்கு தயார் செய்து, அவைகளைப் போரில் இறக்கி தங்களின் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள தெற்கோ வடக்கோ முயன்றதாகக் கூறமுடியாது. எனவே, மாநிலங்களின் குடிப்படைகள், பிரிவினைப் போராட்டத்தில் பிரிந்து செல்ல விரும்பிய மாநிலங்களுக்குச் சாதகமாகவும், தேசிய அரசுக்குப் பாதகமாகவும் போரில் கலந்து கொள்ளாதிருந்தது, அவைகளைப் பற்றி அச்சப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை உணர்த்துகிறது. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு குடிப்படை இருப்பதும், அதற்கு மாநில கவர்னரே தலைவராக இருப்பதும், அப்படை மாநிலத்தின் சின்னமாக விளங்குவதும், மக்களிடையே மாநிலப்பற்றை வளர்க்கும் என்பதை மறுப்பதற்கில்லை; ஆனால் குடிப்படை மட்டுமே மாநிலப்பற்றையும் சுதந்திர மனப்பான்மையையும் வளர்க்கின்றன எனக் கூறமுடியாது. குடிப்படைகள் இல்லாத கூட்டாட்சிகளில் மக்கள் அவரவர் மாநிலங்கள்பால் விசுவாசம் இல்லாமலா இருக்கிறார்கள்? எனவே, பிரிவினைக் கிளர்ச்சிகளுக்கு மாநிலப் படைகள் தான் காரணம், அவை இல்லாவிட்டால் பிரிவினைப் போராட்டங்கள் தோன்ற வழியில்லை என நினைப்பது தவறாகும். அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில், தேசியப்படையின் மொத்த அதிகாரிகளில் மூன்றில் ஒரு பங்கினரல்லவா தென் மாநிலங்களின் போராட்டத்தை முன்னின்று நடத்தினர்! மாநிலப்

படைகள் இருந்த இடம் தெரியவில்லையே! எனவே, மாநிலப் படைகள் கூட்டாட்சி அமைப்பை முறிக்க முதற்காரணமாய் அமையும் என்ற அச்சம் ஆகாரமற்றது என்பதை மீண்டும் வற்புறுத்தலாம்.

அமெரிக்க மாநிலங்களின் குடிப்படைகளை தேசீய அரசின் நிலைப்படைக்குப் போட்டி நிறுவனமாகக் கருதுவதும் பொருந்தாது. குடிப்படைகள் காலப்போக்கில் தேசீயப் படைகளோடு இணைந்து செயல்பட்டு வருவதைப் பார்த்தால், எதிர் காலத்தில் மாநிலப் படைகள் மத்தியப் படைகள் இரண்டும் ஒன்றாகக் கலந்து நாட்டுப் படைகளாகத் தோன்றினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. மத்திய அரசின் தேவைகளுக்கு முதல் சலுகை தரவேண்டும் என்ற எண்ணத்தோடு, மாநிலங்கள் அவற்றின் உரிமைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கும் நிலை இன்று வளர்ந்திருப்பதைப் பார்க்கலாம். தலைமை நீதிமன்றங்கூட மத்திய அரசின் இராணுவத் தேவைகளுக்கு உகந்த வகையில் மாநிலக் குடிப்படைகள் இயங்கவேண்டும் என்பதாக முதல் உலகப் போரின் போது தீர்ப்பளித்தது. குடிப்படை என்ற பெயர் 'தேசீய பாதுகாப்புப் படை' (National Guard) என மாற்றப்பட்டதும், ஒவ்வொரு மாநிலத்திலும் தேசீயப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் 'ஐக்கிய நாடுகளின் தேசியப் பாதுகாப்புப் படை' (National Guard of tle United States) என்ற நிறுவனத்தின் அங்கத்தினர்களாகக் கருதப்படுவதும், அவர்கள் மத்திய அரசின் பணியில் ஈடுபடும்பொழுது மாநில அரசுகள் அவர்களின் சேவையைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதும், மாநிலக்குடிப் படைகளுக்கு ஒரு தேசீய அமைப்பைத் தருகிறது என்பது அறியத்தக்கது. மேலும், குடிப்படைகள் மத்திய அரசு வழங்கும் மானியத்தால் பராமரிக்கப்படுகின்றன. 1940ஆம் ஆண்டில் குடிப்படைகளுக்காக மத்திய அரசு 4,20,00 000 டாலர்களையும், மாநில அரசுகள் 1,20,00,000 டாலர்களையும் செலவு செய்தன என்பதிலிருந்து குடிப்படைகளின் இயக்கம் எந்த அளவுக்கு மத்திய அரசின் தயவுக்கு உட்பட்டது என்பது தெரியவருகிறது. குடிப்படைகளுக்குத் தேவையான படைக்களங்களும் மானியத்திலிருந்துதான் வாங்கப்படுகிறது; பயிற்சி பெறும் வீரர்களும் மத்திய அரசின் அதிகாரிகளிடமிருந்துதான் தங்கள் பயிற்சிக்கால ஊதியத்தைப் பெறுகின்றனர்; தேசீய அரசின் அதிகாரிகள் குடிப்படைகளின் அலுவல்களைக் கண்காணிக்க அனுப்பப் படுகின்றனர். எனவே, இது வரைக் கூறப்பட்ட செய்திகளிலிருந்து, மாநிலப் படைகள் மத்திய

அரசைப் பாதிக்கும் வகையில் நடப்பது இயலாத காரியம் என்பது தெளிவாகிறது.

6. போர்க் காலங்களில் தேசிய அரசின் அதிகாரங்கள் அதிகரித்தல்.

மத்திய அரசின் கரங்களில் படை பலம் குவிந்திருந்தால் மட்டும் அது போரில் வெற்றியைத் தேடிக்கொடுக்க முடியாது. போர்க்காலங்களில் பல துறைகளும் அதோடு ஒத்துழைத்தால் தான், அதன் முயற்சிகள் வெற்றியடைய வாய்ப்பிருக்கும். சாதாரண காலங்களில் செய்ய முடியாத பல காரியங்களையும் அது போர்க் காலங்களில் செய்யக்கூடிய நிலையில் இருந்தால்தான் அதன் எண்ணங்கள் நிறைவேற முடியும். கூட்டாட்சிகளின் அனுபவங் களை ஆராய்ந்தால், அவை போர்க்காலங்களில் நாட்டு மக்களின் பொருளாதார சமுதாய வாழ்க்கையைப் பாதிக்கும் கணக்கற்றச் செயல்களைச் செய்திருப்பது நம்மை வியப்படையச் செய்கிறது. சாதாரணமாக மத்திய அரசின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட வையாய் கருதப்படும் காரியங்கள் பலவற்றை அது போர்க்காலங் களில் செய்ய அனுமதிக்கப்படுவது, நெருக்கடி காலங்கள்ல் கூட் டாட்சி அரசுகள் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை உடையனவாய் இருப்பதை நமக்கு உணர்த்துகிறது.

அமெரிக்காவில் முதல் உலகப் போரின்பொழுதும், இரண்டா வது உலகப் போரின்பொழுதும் காங்கிரஸ் இயற்றிய சட்டங் களில் பல அவற்றின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டவையாய்த் தோன்றினுல் கூட, தலைமை நீதி மன்றமானது அச்சட்டங்களை நாட்டின் பாதுகாப்புக்காக இயற்றப்பட்டவைகளாகக் கருதி, அவற்றை நியாயமானவை என ஏற்றுக்கொண்டது. தேசிய அரசு எல்லாத் தொலை பேசிப் பாதைகளையும் அதன் பொறுப்பில் எடுத்துக்கொண்டதையும், எரி பொருளின் விலையைக் கட்டுப் படுத்தியதையும், தொழிற்சாலைகளில் போர்க்கருவிகளை உற் பத்திச் செய்யும்படி வற்புறுத்தியதையும், இரயில் கட்டணங்களை நிர்ணயித்ததையும், அது போருக்காகவே செய்ததென்று கூறி, தலைமை நீதிமன்றம் அதன் சட்டங்களை அங்கீகரித்தது. போரோடு நேரடியாகத் தொடர்புடைய அலுவல்களில் ஈடுபட்டதோடல்லா மல், மறைமுகமானத் தொடர்புடைய அலுவல்களில் ஈடுபட்ட தைக்கூட நீதிமன்றம் தவறென்று கூறவில்லை. மத்திய அரசு மாநில அரசுகளின் அலுவல்களில் முதல் உலகப் போரின் பொழுது தலையிட்டதைவிட, இரண்டாவது உலகப்போரின்

பொழுது அதிகமாகத் தலையிட்டாலும், அது தவிர்க்க முடியாத காரணங்களால் நிகழ்ந்ததென்பதும், சாதாரணமாக அது போல நிகழ்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் போன்றே ஆஸ்திரேலியத் தலைமை நீதிமன்றமும் போர்க்காலத்தில் மத்திய அரசு செய்யும் செயல்களைப் பரந்த மனப்பான்மையோடு நோக்குகிறது. மத்திய அரசு முதலாவது உலகப் போரின்பொழுது ரொட்டியின் உயர்ந்த பட்ச விலையை நிர்ணயித்ததையும், சொத்துக்களை சேதப்படுத்துவதையும் அழிப்பதையும் குற்றமென அறிவித்ததையும், போர்க் காலத்தில் பகைவர்களின் சொத்துக்களைக் கைபபற்றி அவற்றின் நிருவாகத்துக்கு ஏற்பாடு செய்ததையும், தலைமை நீதிமன்றம் சட்ட ரீதியான செயல்கள் என ஏற்றுக்கொண்டது. இரண்டாவது உலகப் போரின்பொழுது மத்திய அரசாங்கம் தலையிடாதத் துறையே இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு, அது பல துறைகளை ஒழுங்குபடுத்த முயன்றது. வருமானவரி வசூல் செய்யும் உரிமையை மாநில அரசுகளிடமிருந்து மத்திய அரசு பறித்துக் கொண்டதைக்கூட தலைமை நீதி மன்றம் சரி என்றே ஏற்றுக் கொண்டது. ஆனால் போருக்குத் தயாராக இருப்பதற்காக என்று கூறி, போரோடு தொடர்பில்லாத காரியங்களை அது செய்யும் பொழுது, தலைமை நீதிமன்றம் அவற்றைத் தடுப்பதற்குத் தயங்குவதில்லை. போருக்கு வேண்டிய பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடாத தொழிற்சாலைகளில்கூட தொழிலாளர்கள் விடுமுறையின்றி வேலை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியதை தலைமை நீதி மன்றம் சட்ட விரோதமான கட்டளை எனத் தீர்மானித்தது. 1943ஆம் ஆண்டில் தலைமை நீத மன்றமானது, தேசிய அரசின் சட்டங்களில், மூன்றினை சட்ட விரோதமானவை எனஅறிவித்தது. போர்ச் செயல்களுக்கான நியாயமான அதிகாரங்களைத் தலைமை நீதிமன்றம் அங்கீகரிக்கத் தவறியதில்லை என்று கூறுகின்ற பொழுது, போரோடு தொடர்பற்றச் செயல்களை அது நிராகரிக்கத் தயங்கியதில்லை என்பதையும் கூறவேண்டியது அவசியமாகிறது.

கனடிய அரசாங்கமும் போர்க் காலங்களில் ஏராளமான அதிகாரங்களை அனுபவித்தது. 1914ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட போர் நடவடிக்கைகள் சட்டமானது (War Measures Act), சாதாரண காலங்களில் தேசிய அரசு செய்ய முடியாத பல காரியங்களைப் போரின் பொருட்டு செய்ய வகை செய்தது. உணவுப் பண்டங்களின் உற்பத்தி, பாதுகாப்பு, பங்கீடு ஆகியவற்றை மத்திய அரசே மேற்கொண்டது. எல்லா விதமான தொழில் வர்த்தக நிறு

வனங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரமுடைய 'போர் வாணிகக் குழு' (War Trade Board) ஒன்றை அது நிறுவியது. இந்தச் செயல்கள் அனைத்தும் போர் நெருக்கடியைச் சமாளிக்கத் தேவையான செயல்கள்தான் என்பதை பிரிவி கவுன்சிலின் நீதிக் குழு ஏற்றுக்கொண்டது. மேற்கண்ட செயல்களை மத்திய அரசு சாதாரண காலங்களில் செய்திருந்தால், அவை மாநிலங்களின் இனங்களான சொத்துக்களையும் சிவில் உரிமைகளையும் பாதிப்பதாகக் கூறி, நீதி மன்றங்கள் அவற்றை அரசியலமைப்புக்கு மாறான செயல்கள் என அறிவித்து, அச்சட்டங்கள் செல்லாதவை எனத் தீர்மானித்திருக்கும். முதலாவது உலகப் போரின் பொழுது இயற்றப்பட்ட போர் நடவடிக்கைகள் சட்டத்தைப் பயன்படுத்தி, இரண்டாவது உலகப்போரின் பொழுதும் தேசிய அரசு மக்கள் வாழ்க்கையின் பல துறைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றது. நாட்டின் பாதுகாப்பே ஆபத்தான நிலையில் இருக்கும் சமயத்தில், மாநிலங்கள் அவற்றின் உரிமைகளை ஓரளவுக்கு மறந்து மத்திய அரசின் கரங்களைப் பலப்படுத்த முன்வர வேண்டியது அவைகளின் கடமையாகும்; நாட்டுப் பற்றுக்கு அதுவே சிறந்த அடையாளமாகும்.

சுவிட்சர்லாந்திலும் இதே நிலையைப் பார்க்கிறோம். முதலாவது உலகப் போரிலும் சரி, இரண்டாவது உலகப் போரிலும் சரி, சுவிட்சர்லாந்து அதன் நடு நிலைமைக் கொள்கையிலிருந்து சிறிதும் விலகவில்லை; போரில் இறங்கவேண்டிய நிர்பந்தமும் அதற்கு ஏற்படவில்லை; இருப்பினும் போருக்கு எப்பொழுதும் ஆயத்தமான நிலையில் அது இருந்தது. சுவிட்சர்லாந்து போருக்கிழுக்கப்பட்டு அதில் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதன் தேசிய அரசாங்கம் எந்த விதமான அதிகாரக் குறைவாலும் அவதியுறக் கூடாது என்பதற்காக 1939இல், 'சுவிட்சர்லாந்தின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும், நடு நிலைமையையும் பேணவும், பொருளாதார நலன்களைப் பாதுகாக்கவும், உணவுப் பண்டங்கள் தருவித்தலைப் பார்த்துக்கொள்ளவும்' தேசிய ஆட்சித் துறையான கூட்டாட்சிக் குழு (Federal Council) தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரமளிக்கப் பட்டது. அமைதியான காலங்களில் இது போன்ற அதிகாரத்தை மத்திய அரசு அனுபவிக்க மாநிலங்கள் உடன்பட மாட்டா; ஆனால் போர் என்ற உடன் மக்கள் எல்லாவிதமான தியாகங்களுக்கும் தயாராகி விடுகிறார்கள்.

நாடு, உண்மையாகவே போர் அபாயத்தால் பாதிக்கப்படும் பொழுதுதான் மத்திய அரசின் அதிகாரங்கள் அளவுகடந்தன

வாய் இருக்கின்றன. போரால் பாதிக்கப்படாமல் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில், போருக்குத் தன்னைத்தயார் செய்து கொள்வதற்காக அசாதாரண அதிகாரங்களைத் தேசிய அரசாங்கம் பெற முயல்வதை நீதி மன்றங்கள் வரவேற்பதில்லை. போர்க் காலங்களில் போரிடுவதற்காக என்றும், அமைதியான காலங்களில் போருக்குத் தயார் செய்து கொள்வதற்கு என்றும் மத்திய அரசாங்கம் எல்லையற்ற அதிகாரங்களை அனுபவித்தால், மாநிலங்களின் நிலை கேலிக்குரியதாகும். அரசியலமைப்பால் வகுக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பங்கீடு கூடுமானவரை மதிக்கப்பட்டால்தான் கூட்டாட்சி. அரசாங்கம் பயனுள்ளதாய் இருக்கும். எனவே, போர்க் காலத்தில் மத்திய அரசை வலுப்படுத்த விரும்பும் நீதி மன்றங்கள், சாதாரண காலங்களில் அது தன்னுடைய அதிகார எல்லையை மீறுமல் பார்த்துக்கொள்ளத் தவறுவதில்லை. படை திரட்டுவது ஒன்று மட்டுமே அமைதியான காலத்தில் மத்திய அரசு செய்யக்கூடிய போர் பற்றிய செயல் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டதும், டென்னஸி பள்ளத்தாக்கு நிறுவனம் (Tennesse Valley Authority) நிறுவப்பட்டதும், போர் அதிகாரத்தின் அடிப்படையில் சமாதான காலத்தில் செய்யப்பட்டாலும், தலைமை நீதிமன்றம் அவற்றை முறையான செயல்கள் என்றே ஏற்றுக்கொண்டது. ஆனால், பொதுவாகக் கூறுமிடத்து, சாதாரண சமயங்களில் போர் அதிகாரத்தின் அடிப்படையில் செய்யப்படும் செயல்களை நீதி மன்றம் மிகக்கவனமாக ஆராய்ந்த பிறகே அங்கீகரிக்கும் என்பது அறியத் தக்கது. முதல் உலகப்போரின்பொழுது கனடாவில் காகிதத்தின் மீது விதிககப்பட்டக் கட்டுப்பாட்டை, போர் முடிந்த பிறகுகூட தொடர்ந்து நீடிப்பதில் தவறில்லை என நீதிக்குழு அறிவித்தது; போர் முடிந்தாலும் அதன் விளைவுகள் சிறிது காலம் நீடிப்பதால் அவற்றைக் கட்டுப்படுத்த போர்க்காலச் சட்டங்கள் தொடர்ந்து நீடிப்பது சரி என்பதாக அது தீர்மானித்தது. ஆனுல் அதே நீதிக் குழு, பதுக்கல் (Hoarding), பெரும் வணிக நிறுவனங்கள் (Combines) ஆகியவற்றைத்தடை செய்து 1919இல் இயற்றப்பட்ட சட்டமொன்றைச் செல்லாது என அறிவித்தது. அந்தச் சட்டம் போர் முடிந்த பிறகு இயற்றப்பட்டதென்றும், எவ்வளவு காலத்துக்கென்று காலம் குறிப்பிடாமல் இருக்கிறதென்றும், கனடா முழுவதையும் பாதிக்கக்கூடியதாய் அமைகிறதென்றும், போர் முடிந்த பிறகு இது போன்ற முக்கியமான சட்டத்திற்கு அவசியமில்லை என்றும், நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மட்டுமே இந்த

மாதிரியான சட்டத்தை இயற்றுவது சாத்தியமென்றும் கூறி, 1919ஆம் ஆண்டின் சட்டத்தை செல்லாது என அறிவித்தது. ஆஸ்திரேலியத் தலைமை நீதி மன்றமும் அமைதியான காலங்களில் போர் அதிகாரத்தின் போர்வையில் தேசீய அரசு செய்த காரியங்களை சட்டரீதியானவை என ஒப்புக்கொள்ள மறுத்திருக்கிறது. கப்பல்கள் கட்டுவதற்குப் பயனுடையதாய் இருக்கும் எனக் கூறி, சாதாரண காலங்களில், தேசீய அரசு தொழில் தொடங்கியதை நீதிமன்றம் தேசீய அரசின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட செயலாய் அறிவித்தது. பொதுவுடைமைக் கொள்கை (Communism) ஆஸ்திரேலியாவில் பரவுவதைக், கட்டுப்படுத்தும் வகையில் 1951இல் இயற்றப்பட்ட சட்டத்தை, அது போன்றவை அமைதியான காலத்தில் இயற்றப்பட வேண்டிய அவசியமில்லை எனக் கருதி அதையும் தலைமை நீதி மன்றம் நிராகரித்தது. இதுவரை கூறப்பட்ட செய்திகளிலிருந்து, கூட்டாட்சி அரசாங்கங்கள் போரை சமாளிக்கக் கூடிய நிலையில் இருக்கின்றன என்பதும், மாநிலங்களின் உரிமைகள் போர் முயற்சிகளை தடுக்கின்ற வகையில் வற்புறுத்தப்படுவதில்லை என்பதும், போர் நடவடிக்கைகள் மட்டுமே மத்திய அரசு சிறப்பான அதிகாரங்களை அனுபவிக்க இடம் கொடுக்கும் என்பதும், சாதாரண சமயங்களில் மாநிலங்கள் அவற்றின் உரிமைகளைக் கட்டுபாடின்றி அனுபவிக்க எந்தத் தடையும் இருக்காது என்பதும் தெளிவாக்கப்பட்டது.

7. அரசு கூட்டாட்சியாக இருந்தால் போர்ச் செயல்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது

இனி, கூட்டாட்சி அரசானது போரதிகாரம் செயல்படுவதை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பார்ப்போம். அரசு கூட்டாட்சியாக இருப்பது, போர்த்துறையில் சில நன்மைகளையும் சில தீமைகளையும் உண்டாக்குகிறது. நன்மைகளைத் தெரிந்துகொள்ள அமெரிக்காவின் அனுபவங்களை அறிவது போதுமானது. இரண்டு உலகப்போர்களிலும் போருக்கு வேண்டிய ஆட்களை எடுத்தது மாநிலங்களேயாம். மேலும், போர்க் காலங்களில் பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் (Civil defence) அனைத்தையும் மாநிலங்களே செய்தன. இரண்டாவது உலகப்போரின்பொழுது 'மாநில கவர்னர்களின் மாநாடு' (Conference of State Governors) மூலமாகவும், 'மாநில அரசாங்கங்களின் குழு' (Council of State Governments) மூலமாகவும், மாநிலங்கள் மத்திய அரசோடு ஒத்துழைத்து, அதன் சுமையைக் குறைத்தன. நாடெங்கிலும் சட்டத்

தையும் ஒழுங்கையும் பராமரிப்பதில் எல்லா மாநிலங்களும் மத்திய அரசுக்கு துணை நின்றன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் மாநில அரசாங்கங்கள் இல்லாதிருந்தால், போர்க் காரியங்களைக் கவனிப்பதற்காக அவற்றை உருவாக்க வேண்டியது அவசியமாக இருந்திருக்கும் எனக் கூறக்கூடிய அள வுக்கு மாநிலங்கள் மத்திய அரசுக்கு உதவி இருக்கின்றன. போர்ச் செயல்கள் அனைத்தையும் ஒரே தேசிய அரசு செய்வ தென்பது இயலாத காரியமாகும். அது செய்ய வேண்டிய செயல்கள் பலவற்றை மாநில அரசுகளிடம் கொடுத்து அதன் பளுவைக் குறைத்துக் கொண்டது.

ஆனல் அரசு கூட்டாட்சியாக இருப்பது சில சமயங்களில் தீமைகளுக்குக் காரணமாயிருப்பதும் உண்டு. மாநிலங்களுக் கிடையே காணப்படும் வேறுபாடுகள், அவைகளை ஒன்றோடொன்று ஒத்துழைக்காவண்ணம் தூண்டலாம். கனடாவில், முதலாவது உல கப் போரின்பொழுதும் இரண்டாவது உலகப் போரின் பொழுதும் பணிக்குக் கட்டாயமாக ஆள் எடுக்கப்பட்டதை (Conscription) க்வெபெக் மாநிலம் எதிர்த்தது. ஆங்கில மொழி பேசும் கனடியர் அதை வரவேற்றனர்; ஆனல் பிரெஞ்சு மொழி பேசும் கனடியர் அதை எதிர்த்தனர். ஆங்கிலம் பேசிய மக்களுக்கு பிரிட்டனிட மிருந்த பற்று, பிரெஞ்சு மொழி பேசிய மக்களுக்கு இல்லை. பிரிட் டன் சார்பாக கனடிய போர்வீரர்கள் ஆயிரக்கணக்கான மைல் களுக்கப்பாலுள்ள ஐரோப்பாவிற்குச் சென்று போரிடுவதைக் கண் டித்தனர். இவ்வாறு கனடாவில் இரு இனத்தினருக்கிடையே காணப்பட்ட வேறுபாடு நாட்டின் போர் முயற்சிகளைப் பாதித்தது என்பதில் ஐயமில்லை. ஆனல் இந்தக்குறை, கனடா கூட்டாட்சி யாக இருந்ததனல் தோன்றிய குறை என்று கூறமுடியாது. ஆரம் பத்தில் பிரெஞ்சு குடியேற்றமாக இருந்த கனடா, ஏழாண்டுப் போருக்குப் பிறகு, பிரிட்டிஷ் குடியேற்றமாக மாறியதால் பழைய பிரெஞ்சுக்காரர்களும் புதிய பிரிட்டிஷ்காரர்களும் ஒரே நாட்டில் அருகருகே வசிக்க வேண்டியது அவசியமாகிவிட்டதால் தோன்றி யதே இக்குறையாகும். கனடாவை தென் ஆப்பிரிக்காவோடு ஒப் பிட்டுப் பார்த்தால், கனடாவின் தொல்லைகள் அது கூட்டாட்சி யாக இருப்பதால் ஏற்பட்டவையல்ல என்பது தெரியும். தென் ஆப்பிரிக்காவை ஒரு கூட்டாட்சி என்று கூறமுடியாது; ஆனல் அங்கு டச்சு (Dutch) தென் ஆப்பிரிக்கர்களுக்கும் பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்கர்களுக்கு மிடையே வேறுபாடு காணப்படுகிறதே! எனவே, இன்றைய கூட்டாட்சிகளில் அரசாங்கங்களுக்குப் போது மான போர் அதிகாரங்கள் இல்லை என யாராவது கருதினல்,

அதற்கு நாடு கூட்டாட்சியாக இருப்பதைக் காரணமாகக் காட்ட முடியாது.

8. போர்ச்செயல்கள் கூட்டாட்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பது

அடுத்து, போர் அதிகாரமானது கூட்டாட்சியின் இயக்கத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் பார்ப்போம். போர்க்காலங்களில் தேசீய அரசு ஏராளமான பொருள் செலவு செய்யவேண்டியிருப்பதால், மாநிலங்களின் வருவாய்க்குரிய இனங்களைக்கூட அது கவர்ந்துகொள்கிறது; ஒரு முறை மாநிலங்களுக்குரிய வருவாயை அபகரிக்கும் தேசீய அரசு, அதற்குப் பிறகு அதை விட்டுக் கொடுக்காது தொடர்ந்து அதன் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ளும் வழக்கத்தை இன்று அனேகமாக எல்லாக் கூட்டாட்சிகளிலும் பார்க்கலாம். போர்கள், நிருவாகத் துறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. அச்சமயங்களில் மத்திய அரசின் அதிகாரங்கள் அதிகரிப்பதையும், குறிப்பாக மத்திய அரசின் ஆட்சித்துறையின் அதிகாரங்கள் ஏராளமாக அதிகரிப்பதையும் காணலாம். முதலாவது உலகப் போரின் பொழுது அமெரிக்க மக்களின் அன்றாட வாழ்க்கையின் அம்சங்கள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப் பட்டதை அறிந்துகொள்வது அவசியமாகும். 1917 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'லீவர் உணவு மற்றும் எரிபொருள் கட்டுப்பாட்டுச் சட்டம்' (Lever Food and Fuel Control Act), குடியரசுத் தலைவருக்கு இன்றியமையாத பொருட்களின் இறக்குமதி, உற்பத்தி, சேமிப்பு, பங்கீடு ஆகியவற்றை ஒழுங்கு படுத்தவும், தொழிற்சாலைகள், தூய்மிகள் (Refinaries), குழாய்ப் பாதைகள் (Pipe lines), சுரங்கங்கள் ஆகியவற்றை தானே எடுத்து நடத்தவும், நிலக்கரி, சுட்ட நிலக்கரி (Coke) ஆகியவற்றின் விலையை நிர்ணயித்து அவற்றின் உற்பத்தி, விற்பனை, வினியோகம் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ளவும் அதிகாரம் இருந்தது, அவரை ஏறத்தாழ ஒரு சர்வாதிகாரியின் நிலைக்கு உயர்த்தியது. இரண்டாவது உலகப் போரின்பொழுது அவருக்கு மேலும் அதிகமான அதிகாரங்கள் தரப்பட்டன. குடியரசுத் தலைவர் போருக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்வதற்காக எந்தத் தொழிற்சாலையின் நிருவாகத்தையும் மேற்கொள்ளவும், அமெரிக்காவிலுள்ள அயல் நாட்டவர்களின் சொத்துக்களைத் தற்காலிகமாக பறிமுதல் செய்து மேற்பார்வை செய்யவும், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்

பொருட்கள் தருவிக்கப்படுதலையும், அவற்றின் உற்பத்திப் பொருட்கள் விற்கப்படுவதையும் கட்டுப்படுத்தவும், விலைவாசி ஏறாமல் இறங்காமலிருக்குமாறு பார்த்துக்கொள்ளவும் அதிகாரமளிக்கப்பட்டது. 1941 இல் காங்கிரஸ் இயற்றிய 'குத்தகைக் கடன் முறைச் சட்டம்' (Lend-Lease Act); குடியரசுத் தலைவருக்கு வழங்கிய அதிகாரம், அமெரிக்க வரலாற்றில் ஈடு இணையற்றதாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவின் பாதுகாப்பு பிறநாடுகளின் பாதுகாப்பைப் பொருத்ததாக இருந்தால், அந்நாடுகளின் பாதுகாப்புக்காகக் குடியரசுத் தலைவர் எந்த ஆயுதத்தையும் பொருளையும் உற்பத்திச் செய்தோ அல்லது தருவித்தோ அவைகளுக்கு அளிக்கலாம் என்றும், அவ்வாறு அளிக்கப்படும் உதவியின் நிபந்தனைகளை அவரே நிர்ணயிப்பார் என்றும், அந்த உதவிக்குப் பதிலாகப் பணத்தையோ பலன்களையோ பெறுவதைப்பற்றி அவரே தீர்மானிப்பார் என்றும் அச்சட்டம் கூறியது, அவர்மீது காங்கிரஸ் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தது என்பதைக் காட்டுகிறது. கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் போர்க் காலங்களில் ஆட்சித் துறையில் அதிகாரங்கள் பெருகுவதைப் பார்க்கலாம். ஆனால் அங்கு எக்காலத்திலும் அமைச்சரவை ஆட்சியே இயங்கி வருவதால், போர்க்காலங்களில் அதன் அதிகாரங்கள் வழக்கத்துக்கு மாறாக விரிவடைவதை மக்கள் பொருட்படுத்துவதில்லை.

போர் முடிந்த பிறகு, மத்திய மாநில அரசாங்கங்களை அவற்றின் பழைய நிலைக்குக்கொண்டு செல்வது சற்று கடினமான காரியமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. போரை அடுத்துவரும் ஆண்டுகள் மத்திய மாநில அரசுகளின் உறவுகளுக்கு ஒரு சோதனைக் காலமாகும். 1942 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் தொழிற்கட்சி (Labour Party) அரசாங்கம், போரால் ஏற்பட்ட குழப்பங்களுக்குத் தீர்வு காண, மாநில அரசுகளுக்கு உரிய சில இனங்கள்மீது சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற முயன்றது; இந்த அதிகாரம் ஐந்து ஆண்டு காலத்திற்கு மட்டும் மத்திய அரசிடம் இருப்பது போதுமானது எனக் கூறப்பட்டது. போரிலிருந்து விலகியோரின் மறு சீரமைப்பு (rehabilitation of ex servicemen), கொள்ளை இலாபம், பொருட்களின் உற்பத்தி, பங்கீடு, விலைகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றை ஒழுங்கு படுத்த மத்திய அரசாங்கம் முயன்றது பாராட்டத்தக்கதாகும். ஆனால் மேற்கண்ட அதிகார மாற்றத்திற்கு இடமளிக்கும் வகையில் அரசியலமைப்பைத் திருத்த முயன்றபொழுது, அம்முயற்சி தோற்றது. மாநில அரசுகளின் அதிகாரங்களை மத்திய அரசுக்கு மாற்றிக் கொடுத்துதான் போரால் விளைந்த சேதத்தை

சரி செய்யலாம், வேறு வழியில்லை என எண்ணக்கூடாது. போர்க் காலத்தில் மத்திய மாநில அரசுகள் ஒத்துழைக்கின்ற மாதிரி, அதற்குப் பிறகும் ஒத்துழைத்தால் பிரச்சினைகளில் பலவற்றைத் தீர்ப்பது எளிதாய் இருக்கும். மேலும், கனடாவைத் தவிர, மற்ற கூட்டாட்சிகள் அனைத்திலும் தேசிய அரசாங்கமானது அதற்கு வழக்கமாக உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தியே நிலையை சீர் செய்ய முடியும்; சிறப்பான அதிகாரங்கள் அவசியம் என வற்புறுத்தக்கூடிய அளவுக்கு அவற்றின் பழைய அதிகாரங்கள் குறைவாக இல்லை.

10. கூட்டாட்சி அரசியலமைப்புகள் உண்மையில் நெகிழாதனவையா?

[(1) கூட்டாட்சி அரசியலமைப்புகள் எங்தெங்த வழிகளில் திருத்தப் படுகின்றன என்பது. (2) அரசியலமைப்பை முறைப்படி திருத்துவது: அ. சுவிட்சர்லாந்து ஆ. ஆஸ்திரேலியா இ. அமெரிக்காக ஈ. கனடா (3) நீதித் தீர்ப்புகள்: அ. அமெரிக்கா ஆ. ஆஸ்திரே லியா இ. கனடா ஈ. 'நீதிபதிகளால் ஆக்கப்படும் அரசியல மைப்பு' (4) வழக்காறுகளும் மரபுகளும் (5) அரசாங்கங்கள் ஒன்றோடொன்று ஒத்துழைத்தல்: அ. மத்திய மாநில அரசாங்கங்களிடையே கூட்டுறவு ஆ. மாநிலங்களிடையே கூட்டுறவு (6) அதிகார மாற்றம்.]

1. கூட்டாட்சி அரசியலமைப்புகள் எங்தெங்த வழிகளில் திருத்தப் படுகின்றன என்பது.

கூட்டாட்சி அரசியலமைப்புகள் பொதுவாக நெகிழா அரசியலமைப்புகளாக இருப்பதாகக் கூறப்படுகின்றன. அவற்றை திருத்துவது கடினமான காரியமாக இருக்கிறது என்பதும், மக்கள் எண்ணங்களில் தோன்றுகின்ற மாற்றங்களுக்குத் தகுந்த வகையில் அவ்வரசியலமைப்புகள் மாறுவதில்லை என்பதும், அவை சமுதாயத்தின் உண்மையான விருப்பு வெறுப்புகளை பிரதிபலிப்பதில்லை என்பதும், மக்களின் புதிய தேவைகளைப் பூர்த்திசெய்ய பல தடைகளைத் தாண்டவேண்டி இருக்கிறது என்பதும், கூட்டாட்சி அரசிலமைப்புகளின் குறைகளாகக் கருதப்படுகின்றன. இன்று நல்ல கூட்டாட்சிகளாக மதிக்கப்படும் அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நான்கு கூட்டாட்சிகளின் அரசியலமைப்பகளில் முதலாவது 18-வது நூற்றுண்டின் பிற்பகுதியிலும், மற்ற மூன்றும் 19-வது நூற்றுண்டின் பிற்பகுதியிலும் தோன்றின; ஆனல் அவற்றின் அரசியலமைப்புகளை இந்த இருப

தாம் நூற்றுண்டின் அரசியல், பொருளாதார, சமுதாயக் கருத்துக் களுக்கு ஒவ்வாத அரசியலமைப்புகள் எனக் கூறுவது பொருத்த மாகாது. கூட்டாட்சி அரசியலமைப்புகள் நெகிழா அரசிய லமைப்புகள்தான்; அவற்றைத் திருத்துவது என்பது எளிதாயிருப்ப தில்லை; அவற்றை விளையாட்டாக மாற்ற முடியாது; அவற்றைத் திருத்த பெரும் முயற்சி தேவை— இவற்றை சிந்தித்துப் பார்த்தால், அரசியலமைப்புகள் நெகிழாதிருப்பது அவற்றின் சிறப்பாகக் கருதப்படவேண்டுமே யல்லாது குறையாகக் கருதப்படக்கூடாது என நினைக்கத் தோன்றுகிறது. கூட்டாட்சி அரசியலமைப்புகளின் மாற்றத்திற்கு பல வழிகள் பயன்படுகின்றன. அரசியலமைப்பில் நிர்யணயிக்கப்பட்டிருக்கும் வழியை ஒட்டி அது முறையாகத் திருத் தப்படலாம் (formal amendments); நீதிமன்றங்கள் அரசியலமைப் பின் விதிகளோடு தொடர்புடைய வழக்குகளுக்குத் தீர்ப்பளிக்கும் பொழுது, அதன் பழைய விதிகளுக்குப் புதிய பொருள் கூறி (Judicial interpretations) அதற்கு புத்துயிர் ஊட்டலாம்; அல்லது, அரசியலமைப்பின் விதிகள் எப்பொழுதும் இருக்கின்ற மாதிரியே இருக்கட்டும் என்று விட்டு விட்டு, சில பழக்க வழக்கங்களை (Conventions and usages) மேற்கொண்டு அதைத் திருத்தாமல் திருத்தலாம்.

2. அரசியலமைப்பை முறைப்படி திருத்துவது: அ சுவிட்சர் லாந்து.

பிரைஸ் பிரபு 'வரலாறு, சட்ட இயல் பற்றிய ஆராய்ச்சிகள்' (Studies in History and Jurisprudence) என்ற நூலில் நெகிழா அரசியலமைப்புக்குக் கூறியிருக்கும் இலக்கணப்படி, எல்லா கூட்டாட்சிகளின் அரசியலமைப்புகளும் நெகிழா அரசியலமைப்பு களாகத்தான் கருதப்படவேண்டும். ஆனால் அரசிலமைப்புகளின் நெகிழாத் தன்மையின் தரம் எல்லாக் கூட்டாட்சிகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதும், அது கூட்டாட்சிக்குக் கூட் டாட்சி மாறுபடுகிறது என்பதும் அறியத்தக்கது. சுவிட்சர்லாந் தின் அரசிலமைப்பைக் கவனித்தால் அதை மாற்றுவது சிக்கலான செயலென நினைக்கத் தோன்றும். ஒவ்வொரு திருத்தமும் குடி யொப்பத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு பெரும்பாலான வாக்காளர்க ளாலும், பெரும்பாலான மாநிலங்களில் பெரும்பாலான வாக் காளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகே சட்டமாக முடியும். அரசியலமைப்பைத் திருத்துகின்ற முறை மலைப்பூட்டுவதாக தோன்றினாலும், அங்கு திருத்தங்கள் தோன்றாமலில்லை. மற்ற கூட்டாட்சிகளில் நிகழ்ந்திருக்கும் திருத்தங்களைவிட சுவிட்சர்

லாந்தில் நிகழ்ந்திருக்கும் திருத்தங்கள் அதிகம் என்பதில் ஐய மில்லை. 1874ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை அரசியலமைப்பைத் திருத்துவதற்காக 126 தடவைகள் குடியொப் பங்கள் நடைபெற்றன; இவற்றில் 64 திருத்தங்கள் தேசீயப் பாராளுமன்றத்தால் மக்கள் தீர்ப்புக்கு விடப்பட்டதில் 49 திருத் தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. வாக்காளர்கள் அவர்களுக்கி ருக்கும் 'தொடக்க உரிமை'யின் (initiative) அடிப்படையில் முன் மொழிந்த 49 திருத்தங்களில் 7 திருத்தங்களே ஏற்றுக்கொள்ளப் பட்டன. மற்ற 13 குடியொப்பங்களில், மக்கள் தொடக்க உரிமை யைத் தழுவி முன்மொழிந்த திருத்தங்களுக்கும் அவற்றிற்குப் பதி லாக பாராளுமன்றம் சிபாரிசு செய்த திருத்தங்களுக்குமிடையே வாக்களித்த பொழுது, பாராளுமன்றம் கூறிய திருத்தங்களே 9 தடவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதுவரை கூறப்பட்ட விவரங்களிலிருந்து, சுவிஸ் அரசியலமைப்பை மாற்றும் முறை இடர்பாடுகள் நிறைந்த முறையாக இருப்பினும் அதை அடிக்கடி மாற்றிக்கொண்டு வந்திருப்பது தெளிவாகிறது. K. C. வியர் கூறு வது போன்று 'சுவிஸ் அரசியலமைப்பு நெகிழா அரசியலமைப்பாக இருந்தாலும், சுவிஸ் மக்கள் நெகிழ்கின்றவர்களாக இருக்கிறார்கள். மாற்றும் முறை கடினமானதா எளிதானதா என்பது முக்கியமல்ல; மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்களா விரும்பவில்லையா என்பது தான் முக்கியமாகும்.

ஆ. ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய அரசியலமைப்பைத் திருத்தும் முறை சுவிஸ் அரசியலமைப்பைத் திருத்தும் முறையை ஒத்ததே. வாக்களிப்பில் கலந்துகொள்ளும் வாக்காளர்களில் பெரும்பாலோராலும், பெரும் பாலான மாநிலங்களில் பெரும்பாலான வாக்காளர்களாலும் திருத் தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால்தான் அவை செல்லுபடியாகும். ஆஸ்திரேலியாவில் 1901-லிருந்து 1963-வரை பன்னிரண்டு தடவைகளில் சமர்ப்பிக்கப்பட்ட இருபத்திநான்கு திருத்தங்களில் 1906, 1910, 1928, 1946 ஆகிய ஆண்டுகளில் முன்மொழியப் பட்ட நான்கு திருத்தங்கள் மட்டுமே இறுதியாக ஏற்றுக்கொள் ளப்பட்டன என்பதும், அவற்றில் மத்திய மாநில அரசுகள் திரட்டும் கடன் 'கடன் குழுவின்' கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தாய் இருக்கவேண்டும் எனக் கூறும் 1928ஆம் ஆண்டின் திருத் தம், தாய் சேய் நலம், மருத்துவ வசதி, கைம்பெண்களுக்கு உத வித்தொகை போன்ற சமூகப்பணிகளைப்பற்றி சட்டம் செய்வதை மத்திய அரசின் அதிகாரமாக்கிய 1946ஆம் ஆண்டின் திருத்தம்

ஆகிய இரண்டு மட்டும் முக்கியமான திருத்தங்களாகக் கருதப்படலாம் என்பதும், ஆஸ்திரேலிய அரசியலமைப்பை முறைப்படி திருத்துவதென்பது எளிதான செயலல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்றன. மத்திய அரசின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படுவதை ஆஸ்திரேலிய மக்கள் விரும்பவில்லை; அதற்கு அதிகப்படியான அதிகாரங்கள் அளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட திருத்தங்களில் பல தோற்றதில் வியப்பில்லை. நாடு முழுவதும் தொழிலையும் வாணிகத்தையும் ஒழுங்குபடுத்துவது, தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பது, கூலி, வேலை நிபந்தனைகள் ஆகியவற்றை நிர்ணயிப்பது, அத்தியாவசியப் பணிகளைப் (essential services) பராமரிப்பது, பெரும் வர்த்தக நிறுவனங்களையும் (Corporations) ஏகபோக தனி உரிமைகளையும் (monopolies) கண்காணிப்பது, கொள்ளை இலாபத்தைத் தடுத்து விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது, வேலையின்மையைப் போக்கி வேலைவாய்ப்பளிப்பது, பொதுவுடைமைக் கொள்கைகள் பரவுவதைத் தடுப்பது—ஆகிய செயல்களை மத்திய அரசாங்கம் செய்ய அனுமதிக்கப்படவேண்டும் எனக் கோரிய திருத்தங்கள் தோற்றது குறிப்பிடத்தக்கது. தோற்றுப்போன திருத்தங்களில் பெரும்பாலானவை, பெரும்பாலான மாநிலங்களில் பெரும்பாலான வாக்காளர்களின் இணக்கத்தைப் பெறத்தவறியதோடல்லாமல், தேர்தலில் வாக்களித்த மொத்த வாக்காளர்களில் பெரும்பாலோரின் இணக்கத்தையும் பெறத் தவறின என்பது நாட்டு மக்களில் பெரும்பாலோர் மத்திய அரசின் அதிகாரங்கள் மேலும் விரிவடைவதை விரும்பவில்லை என்ற உண்மையை உணர்த்துகிறது. மத்திய அரசின் அதிகாரங்கள் பெருகவேண்டுமா பெருகவேண்டாமா என்பதைப்பற்றி சுவிஸ் மக்களின் கருத்தும் ஆஸ்திரேலிய மக்களின் கருத்தும் வேறான கருத்துக்களாய் இருப்பதைக் காண்கிறோம்.

இ. அமெரிக்கா

அமெரிக்காவில் மத்திய அரசின் அதிகாரங்கள் அரசியலமைப்பு திருத்தங்களின் வாயிலாக அதிகரித்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. 1913 ஆம் ஆண்டின் பதினாறாவது திருத்தம் தேசிய அரசு வருமான வரி வசூலிப்பதை எளிதாக்கியதைத் தவிர, வேறு எந்தத் திருத்தமும் அதன் அதிகாரத்தை நேரடியாக அதிகரித்ததாகக் கூறுவதற்கில்லை. ஆனால் பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினெட்டு ஆகிய திருத்தங்கள் 'தேவையான சட்டங்கள் மூலமாக இந்த விதியை நிறைவேற்ற காங்கிரசுக்கு அதிகாரமுண்டு' என அறிவிப்பதால், காங்கிரசின் அதிகாரங்கள்

மறைமுகமாக அதிகரித்தன. அடிமை முறையை நீக்கிய பதின்மூன்ருவது திருத்தம், அதை நீக்குவதற்கான அதிகாரத்தை காங்கிரசுக்கு வழங்கியது. எந்த மாநிலமும் குடிமகனின் உயிரையோ, உரிமையையோ, உடைமையையோ சட்டரீதியான நடவடிக்கைப்படியல்லாமல் பறிக்கக்கூடாது என அறிவிக்கும் பதினுன்காவது திருத்தம், மாநிலங்கள் அவ்வாறு நடக்கத் தவறினுல் மக்கள் பாதுகாப்புக்கான சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை காங்கிரசுக்கு அளிக்கிறது. சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பினைத் திருத்தும் முறையைவிட அமெரிக்க அரசியலமைப்பினைத் திருத்தும் முறை சிக்கல் நிறைந்தது எனக் கூறமுடியாதென்ருலும், சுவிட்சர்லாந்தில் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுக்கு அமெரிக்காவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதில் ஐயமில்லை. அடிக்கடி திருத்தங்கள் நிகழாததற்குக் காரணம் அவற்றைக் கொண்டுவரும் முறையிலுள்ள இடர்பாடுகள் தான் எனக்கூறுவதை விட, அந்நாட்டு மக்களின் மனப்பான்மை தான் காரணம் எனக் கூறுவதே பொருந்தும். காங்கிரசால் முன்மொழியப்படும் திருத்தங்களில் பெரும்பாலனவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அரசியலமைப்பு தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை இயற்றப்பட்டிருக்கும் திருத்தங்கள் அனைத்தும் காங்கிரசால் முன்மொழியப்பட்டவையே யாகும். காங்கிரசின் தலைமையை ஏற்று நடக்க பெரும்பாலான மாநிலங்கள் தயாராக இருக்கின்றன என்ற உண்மையை அமெரிக்க அனுபவம் உணர்த்துகிறது.

ஈ. கனடா

கனடாவின் அரசியலமைப்பை மாற்றும் அதிகாரமானது 1949வது ஆண்டு வரை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திடம் இருந்தது; 1949இல் இந்த அதிகாரத்தின் பெரும் பகுதி கனடாவுக்கே மாற்றப்பட்டுவிட்டாலும், அதிகாரப் பங்கீட்டைப் பாதிக்கும் விதிகளைத் திருத்தும் அதிகாரம் இன்றும் கடல் கடந்த பிரிட்டிஷ் பாராளுமன்றத்திடமே இருக்கிறது; இது திருப்திகரமான ஏற்பாடல்ல என்பதில் துளியும் ஐயமில்லை. கனடாவின் அரசியலமைப்பு தோன்றிய ஆண்டான 1867லிருந்து 1962-வரை, அது பதினுன்கு தடவைகள் திருத்தப்பட்டிருந்தாலும், அவற்றில் இரண்டு மட்டுமே அதிகாரப் பங்கீடு தொடர்புடைய திருத்தங்களாகும். பிரிட்டிஷ் பாராளுமன்றம் இது போன்ற திருத்தங்களைச் செய்ய மத்திய அரசு கேட்டுக்கொண்டால் மட்டும் போதுமா, மாநில அரசுகளும் கேட்டுக்கொள்ள வேண்டுமா என்பதைப் பற்றி எந்தச் சட்டமும்

இல்லை. இப்பொழுது கனடாவில் இருக்கக்கூடிய நிலவரத்தை அனுசரித்து ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டு மென்றால், மாநிலங்களில் மிகப் பெரியவையான க்வெபெக், ஒண்டாரியோ ஆகிய இரண்டுமோ, அல்லது இரண்டில் ஒன்றோ எதிர்க்கும் எந்தத் திருத்தமும் சட்டமாகாது எனக் கூறலாம். கனடாவில் பத்து மாநிலங்கள் இருப்பினும், இரண்டு மாநிலங்கள் அல்லது அவற்றில் ஒன்று மற்ற பெரும்பாலான மாநிலங்களால் விரும்பப் படும் திருத்தங்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய நிலையில் இருப்பது கூட்டாட்சி முறைக்கு ஏற்றதல்ல. இந்தக் குறையை நீக்குகின்ற வகையில், அரசியலமைப்பைத் திருத்துவதற்கு திருப்திகரமான தொரு முறையை ஏற்படுத்துவது உடனடியான தேவையாகும்.

3. நீதித் தீர்ப்புகள் : அ. அமெரிக்கா

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய கூட்டாட்சி களில் மத்திய மாநில அரசுகளின் உறவுகளில் ஏற்பட்ட மாற்றங் களில் பெரும்பாலானவை அரசியலமைப்பு முறையாகத் திருத்தப் பட்டதன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களல்ல; அவை நீதி மன் றங்களின் தீர்ப்புகளால் விளைந்தவையாகும். காலப் போக்கில் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மத்திய அரசின் அதி காரங்கள் பெருகியதற்கும், கனடாவில் மாநில அரசுகளின் அதி காரங்கள் பெருகியதற்கும் நீதிபதிகளின் முடிவுகளே காரணமா யிருந்திருக்கின்றன. முந்திய கூட்டாட்சிகளில் மத்திய அரசின் அதிகாரங்களும், பிந்திய கூட்டாட்சியில் மாநில அரசுகளின் அதிகாரங்களும் இடைவிடாது தொடர்ச்சியாக வளர்ந்து வந்திருக் கின்றன எனக் கூறுவது உண்மையாகாது என்றாலும், சென்ற நூற்றாண்டைவிட இந்த நூற்றாண்டில் அமெரிக்காவிலும் ஆஸ்தி ரேலியாவிலும் மத்திய அரசின் செல்வாக்கும், கனடாவில் மாநில அரசுகளின் செல்வாக்கும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந் திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. பழங்காலத்து அரசிய லமைப்புகளுக்கு, புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவகையில் பொருள் கூற நீதி மன்றங்கள் முன்வந்தமையால், இம்மாற்றங்கள் இடம் பெற்றன. அரசியலமைப்பில் காணப்படும் விதிகளின் சொற்கள் மாற்றப்படாமல் எப்பொழுதும் இருந்தது போல இப்பொழுதும் இருந்தாலும், அவற்றிற்குத் தரப்படும் விளக்கங்கள் (Interpretations) காலத்துக்கு ஏற்றவாறு மாறுகின்றன. அரசியலமைப் பின் விதிகளிலிருந்து எதையும் நீக்காமல், எதையும் சேர்க்காமல், எதையும் மாற்றாமல் காலத்துக் கேற்றவாறு அவற்றிற்குப் பொருள் காண்பது சிறப்பான செயலாகும்.

அமெரிக்காவின் பொது நலத்தைப் பேண காங்கிரஸ் நிதி திரட்டவும், நிதி ஒதுக்கவும் செய்யலாம் என அரசியலமைப்பு அறிவிக்கிறது; ஆனால் இதற்கு மேடிசனும் ஹாமில்டனும் கூறிய விளக்கங்கள் வேறுபட்டன. தேசிய அரசின் கவனத்துக்குரிய இனங்கள் அரசியலமைப்பில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன என்றும், அவற்றில் காணப்படும் பொருட்களை மட்டும் பாதிக்கின்ற வகையில்தான் காங்கிரஸ் பொது நலத்துக்காக வரவு செலவு செய்ய முடியும் என்றும் மேடிசன் கூறினார். பொது நலத்துக்காக வரவு செலவு செய்வதென்பது ஒரு தனி அதிகாரம் என்றும், அது தேசிய அரசின் மற்ற அதிகாரங்களைத் தழுவி அமைய வேண்டிய அவசியமில்லை என்றும், பொதுநலத்தை வளர்க்க எந்த இனத்தையும் பாதிக்கக்கூடிய வகையில் அதன் வரவு செலவு மேற்கொள்ளப்படலாம் என்றும் ஹாமில்டன் கூறினார். அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் 1936ஆம் ஆண்டில் 'ஐக்கிய நாடுகளுக்கு எதிராக பட்லர்' (United States Vs Butler) என்ற வழக்கில் தீர்ப்பளிக்கையில், ஹாமில்டனின் கருத்தை ஒட்டியே தீர்ப்பளித்தது. இவ் வழக்கில் 'மத்திய அரசின் விவசாயச் சீரமைப்புச் சட்டம்' (1933) மாநிலத்தின் இனமான விவசாயத்தைப் பாதிப்பதால் செல்லாததாகும் என வாதாடப்பட்டாலும், தலைமை நீதிமன்றமானது, அச்சட்டம் பொது நலத்துக்காக இயற்றப்பட்டதென்றும், அதற்காக எந்த இனத்தையும் அது மாநிலத்துக்குரிய இனமானாலும்) பாதிக்கக்கூடிய வகையில் வரி வசூல் செய்யவும் வரிப் பணத்தைச் செலவு செய்யவும் உரிமை உண்டென்றும் அறிவித்தது. 1937-ஆம் ஆண்டில் தேசிய அரசின் 'சமூகப் பாதுகாப்புச் சட்டம்' (1935) பற்றிய வழக்கொன்றில் தீர்ப்பளிக்கும் பொழுது, பொது நலத்துக்காக காங்கிரஸ் எந்தவிதமான சட்டத்தையும் இயற்றலாம் என்பதாகக் கூறி, தலைமை நீதி மன்றம் அதன் முந்திய தீர்ப்பில் மத்திய அரசுக்கு அளித்த உரிமையை விட அதிகப்படியான உரிமையை இப்பொழுது அளித்தது. காங்கிரசால் இயற்றப்பட்ட குறைந்தபட்சக் கூலிச் சட்டம் ஒன்றை 1923-ல் தலைமை நிதி மன்றம் செல்லாது என அறிவித்தது; வேலையை விற்கவோ வாங்கவோ உள்ள சுதந்திரத்தில் மத்திய அரசு தலையிடுவது முறையாகாது என அப்பொழுது நீதிபதிகள் கருதினர். ஆனால் 1937-ல் தலைமை நீதிமன்றம் அதனுடைய பழைய தீர்ப்பு தவறென்று கூறி, குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அரசியலமைப்புக்கு மாறானதல்ல என்றும், எனவே செல்லத் தக்கதுதான் என்றும் அறிவித்தது. அரசியலமைப்பானது சமுதாயத்தின் சுதந்திரத்தைக் குறிப்பிடுவதாகவும், மக்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு, ஒழுக்கம், இன்னலம் ஆகியவற்றிற் கெதிரான

தீங்குகளிலிருந்து சமுதாயத்தைப் பாதுகாப்பது அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குச் சமமாகும் என்பதாகவும் நீதிமன்றம் கூறியது.

ஆ. ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய தலைமை நீதிமன்றம் ஆரம்ப காலத்தில் மாநில அரசுகளின் இயக்கம் மத்திய அரசின் ஆணைகளால் பாதிக்கப்படக் கூடாது என்பதாகவும், மத்திய அரசின் இயக்கம் மாநில அரசுகளின் ஆணைகளால் பாதிக்கப்படக்கூடாது என்பதாகவும் நினைத்தது. ஆனால் 1920லிருந்து அதன் போக்கில் ஒரு திருப்பத்தையும் பார்க்க முடிகிறது. தேசிய அரசு செய்யக்கூடாதென அரசியலமைப்பு திட்டவட்டமாக தடை செய்திருந்தாலொழிய, அதன் கட்டளைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென நீதிமன்றம் கூறியது. தெற்கு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தேசிய அரசு (South Australia Vs The Commonwealth) என்றவழக்கில் 1942ல்தீர்ப்பளிக்கும்பொழுது, மத்திய அரசு அதன் பாதுகாப்பு அதிகாரத்தின் கீழ் வருமான வரிவசூல் ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானித்தது; ஆனால் அடுத்த ஆண்டில் அதே நீதிமன்றம் மத்திய அரசானது தற்காப்பு அதிகாரத்தின் கீழ் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை ஒழுங்குபடுத்த அதற்கு அதிகாரமில்லை என அறிவித்தது.

இ. கனடா

கனடாவில் அதிகாரம் பங்கீடு பற்றிய வழக்குகளுக்கு இறுதியாகத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் பெற்றிருந்த பிரிவி கவுன்சிலின் நீதிக்குழு. ஆரம்பகாலத்தில் மத்திய அரசுக்குச் சாதகமாக அரசியலமைப்பின் விதிகளுக்குப் பொருள் கூறினாலும், போகப்போக மாநில அரசுகளுக்குச் சாதகமாகப் பொருள் கூறும் வழக்கத்தை மேற்கொண்டது. அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அரசியலமைப்பின் 91, 92 ஆகிய விதிகளுக்கு நீதிமன்றங்கள் காணும் பொருள் மத்திய மாநில அரசுகளின் அதிகார எல்லையை நிர்ணயிக்கும். கனடாவில் அமைதி, ஒழுங்கு, நல்ல அரசாங்கம் ஆகியவற்றை நிறுவ தேசிய அரசு சட்டமியற்றலாம் எனக்கூறும் 91 ஆம் விதி, மாநிலங்களுக்கு ஒதுக்கப்படாத இனங்களைப் பாதிக்கும் வகையில் மேற்கண்ட சட்டங்கள் அமைய வேண்டும் எனக் கூறுகிறது. மாநிலங்களின் இனங்கள் 92-ஆம் விதியில் கூறப்படுகின்றன; சொத்துக்களும் சிவில் உரிமைகளும் என்பது அவற்றின் முக்கியமான இனங்களில் ஒன்றாகும். மதுவகைகளின் விற்பனையைப்

பற்றி தேசிய அரசு இயற்றிய சட்டமொன்றும் செல்லுமா செல்லாதா என நீதிக் குழு முடிவு செய்ய 1882-ல் அவசியம் ஏற்பட்டது. மது பானங்கள் விற்பனை என்பது சொத்துக்களும் சிவில் உரிமைகளும் என்ற தொடரில் அடங்கும் என்றும், அதைப் பற்றி மாநிலங்கள் மட்டுமே சட்டம் செய்யலாம் என்றும் ஒரு தரப்பில் கூறப்பட்டது. ஆனால் அது சட்டத்தையும் ஒழுங்கையும் குலைத்துவிடாமலிருக்க அதன் மீது தேசிய அரசு சட்டம் செய்யலாம் என மறு தரப்பில் கூறப்பட்டது. தேசிய அரசின் கரங்களுக்கு வலுவூட்டுகிற வகையில், நீதிக் குழுவானது, அதன் சட்டம் செல்லுமென அறிவித்தது. ஆனால் பதினைந்து ஆண்டுகட்கு பிறகு 18?6-ல் ஒண்டாரியோ மாநிலம் அதே இனத்தைப் பற்றி இயற்றிய சட்ட மொன்றை ஏற்பதா மறுப்பதா என்பதை அது முடிவு செய்ய வேண்டியிருந்தது. நீதிக்குழுவானது, அதன் முந்தியத் தீர்ப்புக்கு மாறாக, மாநிலங்களின் இனங்களைப் பாதிக்காத வகையில்தான் மத்திய அரசு அமைதியையும் ஒழுங்கையும் காக்க சட்டமியற்றலாம் என அறிவித்தது. தேசிய அரசு நல்ல அரசாங்கத்திற்கு வழி செய்வதாகக் கூறிக்கொண்டு, மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்களையும் ஒழுங்கு படுத்துவது கூட்டாட்சிக் கொள்கைக்கு எதிரான காரியமாகக் கருதப்படுகிறது. அரசியலமைப்பின் அதிகாரப் பங்கீடு மதிக்கப்பட்டால்தானே கூட்டாட்சி உண்மையான பயனுள்ள கூட்டாட்சியாக இயங்க முடியும்!

மத்திய அரசின் அதிகாரங்களைக் கூறும் 91ஆம் விதிக்கு விரிவாகவும், மாநில அரசுகளின் அதிகாரங்களைக் கூறும் 92ஆம் விதிக்கு அளவோடும் பொருள் கூறும் வழக்கத்தை நீதிக்குழு மேற்கொண்டிருந்தால், அதன் விளைவு மத்திய அரசுக்குச் சாதகமாகவும், அதே சமயத்தில் மாநில அரசுகளை அதிகம் பாதிக்காமலும் அமையும். ஆனால் அமைதி, ஒழுங்கு, நல்ல அரசாங்கம் ஆகியவற்றை நிலைநாட்ட சட்டம் செய்யும் அதிகாரத்தை தேசிய அரசு நெருக்கடிகளை சமாளிக்கமட்டும் பயன்படுத்த வேண்டும் என்று கூறி அந்த அதிகாரத்தை குறுகிய எல்லைகளுக்குள் அடக்கியும், சொத்துக்கள் சிவில் உரிமைகள் என்ற தொடருக்கு விரிவாகப் பொருள் கூறியும், நீதிக்குழு மத்திய அரசை சற்று கட்டுப்படுத்தியும், மாநில அரசுகளுக்குச் சில சலுகைகளைக் காட்டியும் வந்திருக்கிறது. எது நெருக்கடி என்பதைத் தீர்மானிப்பதில் கூட நீதிக்குழு தாராளமாய் இருந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை, 1930ஐ அடுத்து நிலவிய பொருளாதார சீர் குலைவை ஒரு நெருக்கடி என அது ஏற்க மறுத்தது. தேசிய அரசு அதை நெருக்கடியாகக் கருதி

அதற்குத் தீர்வுகாண இயற்றிய பல சட்டங்களை நீதிக் குழு அரசு யலமைப்பிற்கு அப்பாற்பட்டவை என அறிவித்தது.

ஈ. 'நீதிபதிகளால் ஆக்கப்படும் அரசியலமைப்பு'

'நீதித் தீர்ப்புகளைப்பற்றி இரண்டு செய்திகளை இங்குக் குறிப் படுவது அவசியமாகும். முதலாவதாக, அரசியலமைப்பின் சில பகுதிகள் தெளிவில்லாமல் இருப்பதால், நீதிபதிகள் அப்பகுதி களுக்கு அவர்கள் நினைக்கின்றபடி விளக்கம் கூறுகின்றனர்; இந்த நிலை தவிர்க்க முடியாததாகும். அவ்வாறு கூறப்படும் விளக்கங் களும்தீர்ப்புகளும் நீதிபதிகளின் கல்வி, அறிவு, அனுபவம், விருப்பு வெறுப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படும். எனவே தலைமை நீதி மன்றங்களில் மிகச் சிறந்த மனிதர்களே நீதிபதிகளாக அமர்த்தப் படுவது அவசியமாகும். நாட்டின் தலையாய சட்டமான அரசிய லமைப்புக்குப் பொருள் கூறும் பொறுப்பு எவ்வளவு பெரிய பொறுப்பு எனக் கூறத் தேவையில்லை. நீதிபதிகளே அரசியலமைப் புக்கு உயிரூட்டிக் கொண்டு வருவதால் அமெரிக்க அரசிய லமைப்பை 'நீதிபதிகளால் ஆக்கப்படும் அரசியலமைப்பு' (a Judgemade constitution) என அழைக்கின்றனர்.

நீதிமன்றங்கள் அரசியலமைப்பின் விதிகளுக்குப் பொருள் கூறும் பொழுது மிகவும் கவனமாக இருப்பது அவசியம் என்பதை எத்தனை முறை வேண்டுமென்றாலும் வற்புறுத்திக் கூறலாம். அவை அரசியலமைப்புக்குப் 'பொருத்தமான வகையில் பொருள் கூறலாம்; ஆனால் அதை மாற்றிவிடக் கூடாது. அவை நல்லறி வின்படி நடக்கலாம்; ஆனால் வெறும் சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வாறு நடக்கக்கூடாது. அவற்றிற்கென கருத்துக்கள் இருக்கலாம்; ஆனால் அவைக் கட்சி சார்புடையனவாக இருக்கக்கூடாது. அவை அரசியலமைப்பை ஒரு 'உயிருள்ள சட்டத் தொகுப்பாக' (Living instrument) நினைக்க விரும்பலாம்; ஆனால் முதலில் அதை அரசியலமைப்பாக நினைக்க வேண்டும்' என K. C. வியர் கூறி யிருப்பது, நீதிபதிகள் எவ்வளவு நிதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. 'நீதிமன்றங்கள் சிறிது மாற்றி அமைக்கலாம்; ஆனால் அவை ஒன்றை அகற்றிப் பிறி தொன்றைப் புகுத்தக் கூடாது. புதிய சான்றுகள், புதிய கருத்துக் களுக் கேற்ற வகையில் அவை அவற்றின் பழைய விளக்கங்களைத் திருத்திக் கொள்ளலாம்; சந்தேகத்துக்குரிய இடங்களில் இந்தத் தரப்பிற்கோ, அந்தத்தரப்பிற்கோ அவைத் தீர்ப்பளிக்கலாம். ஆனால் அவை மீறக்கூடாத எல்லைகள் உண்டு; ஒருவருக்குத் தெளிவாக ஒதுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை, அவை மறுப்பீ

கீடு செய்ய முடியாது. உள்ள அதிகாரங்களுக்கு அவை விரிவாக விளக்கம் கூறலாம்; ஆனால் ஐயத்திற்கு இடமற்ற வகையில் ஒன்றிற்குத் தரப்பட்டிருக்கும் அதிகாரங்களை அவை மற்றொன்றுக்கு ஒதுக்க முடியாது' என டாக்டர் O. D. ஸ்கெல்டன் (O.D. Skelton) கூறியிருப்பதை K. C. வியர் மேற்கோள் காட்டுவது நீதிமன்றங்கள் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இயங்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

4. வழக்காறுகளும் மரபுகளும்

முறையான திருத்தங்களும், நீதிமன்றத் தீர்ப்புகளும் அரசியலமைப்பின் சட்டங்களைத் திருத்தியமைக்கும் ஆற்றல் உடையனவாக இருப்பது போல, வழக்காறுகளும் மரபுகளும் அரசாங்கத்தின் நடைமுறைகளைத் திருத்தியமைக்கும் ஆற்றல் உடையனவாக இருக்கின்றன. இவை அரசியலமைப்பின் சட்டத்தைப் பாதிக்கவில்லை என்றாலும், செயல் முறையில் அதன் இயக்கத்தைப் பாதிக்கின்றன என்பதில் ஐயமில்லை. வழக்காறுகளும் மரபுகளும், அரசியலமைப்பால் ஒரு அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை வேறொரு அரசுக்கு ஒதுக்க முடியாது என்ற உண்மையை ஒப்புக்கொள்கிறோம்; ஆனால் மத்திய மாநில அரசுகள் ஒன்றுக்கொன்று இணங்கித் தோழமையோடு இயங்க இவை பெரிதும் துணை செய்கின்றன. மத்திய அரசுக்கோ மாநில அரசுகளுக்கோ, வழக்காறுகளும் மரபுகளும் புதிய அதிகாரங்களைத் தர முடியாத நிலையில் இருந்தாலும், அவை தங்களுக்கு சட்டப்படி உரிய அதிகாரங்களில் சிலவற்றை வற்புறுத்தாமல் விட்டுக் கொடுப்பது நல்லது என்ற எண்ணத்தை அவைகளிடம் வளர்க்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, இவை மத்திய அரசின் அதிகாரங்களின் வலிமையை சற்று தளர்த்தி, மாநில அரசுகளின் உரிமைகள் நலிந்து போகாமல் காக்கின்றன எனக்கூறலாம். சில வழக்காறுகளும் மரபுகளும் மத்திய அரசின் செல்வாக்கை உயர்த்த பயன்பட்டாலும், பல மாநிலங்களுக்கே நன்மை செய்திருக்கின்றன.

அரசியலமைப்புப்படி அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் யாரை வேண்டுமென்றாலும் தன் அமைச்சராக நியமிக்கலாம்; ஆனால் தெற்கு மாநிலங்கள், மத்திய பேற்குமாநிலங்கள் (Middle-Western States), விவசாய மாநிலங்கள் ஆகியவற்றிற்கு அமைச்

சரவையில் அவசியம் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டுமென வழக்காறுகளும் மரபுகளும் வற்புறுத்துகின்றன. கனடாவிலும் அமைச்சர்கள் எல்லா மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் (சின்னஞ்சிறு மாநிலமான பிரின்ஸ் எட்வர்டு தீவை வேண்டுமென்றால் விட்டு விடலாம்), அவர்களில் பிரெஞ்சுக் கனடியரும் ஆங்கிலேயக் கனடியரும், கத்தோலிக்கர்களும் பிராடஸ்டண்டுகளும் கட்டாயமாக இடம்பெற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் அமைச்சரவை நியமிக்கப்படும் பொழுதும் எந்த மாநிலமும் பிரதிநிதித்துவம் இல்லாமல் விடப்பட்டு விடக்கூடாது என விரும்பப்படுகிறது. எனவே, தேசிய அரசின் அமைச்சரவை கூடுமான வரை எல்லா மாநிலங்களையும் மதிக்கின்ற வகையில், அவற்றிற்குத் திருப்தியளிக்கும் வகையில் அமைய வழக்காறுகளும் மரபுகளும் உதவி செய்வது புலனாகிறது. அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் மாநிலங்களில் அதிகாரிகளை நியமிக்கும் பொழுது, அந்நியமனங்களுக்கு குறிப்பிட்ட மாநிலத்திலிருந்து செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தன் கட்சி அங்கத்தினர்களின் இசைவை முன்கூட்டிப் பெறவேண்டும் என செனட் எதிர்பார்க்கிறது; இந்த மரபையே 'செனட்டர்களுக்கு காட்டும் மரியாதை' (Senatorial Courtesy) என அழைக்கின்றனர். மேலும், தலைவர் அயல் நாடுகளோடு பேசி முடிக்கும் உடன்படிக்கைகளை செனட்டின் அயல்நாட்டு உறவுகள் குழுவோடு பேச்சு வார்த்தைக் கட்டத்திலேயே கலந்தாலோசிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த இரண்டு உதாரணங்களும் மாநிலங்கள் சபையான செனட் சபைக்குக் காட்டப்படும் சலுகைகளாகக் கருதப்படவேண்டும். ஏற்கனவே அரசியலமைப்பின் சட்டங்களே செனட்டிற்கு மேலான இடத்தை அளித்திருக்கின்றன; வழக்காறுகளும் மரபுகளும் அதை இன்னும் மேல் நிலைக்கு உயர்த்தி மாநிலங்களுக்கு பெருமை செய்கின்றன. கனடா அதன் பாராளுமன்றத்தின் சம்மதமில்லாமல் எந்த உடன்படிக்கையும் செய்து கொள்ளக்கூடாது என்றும், போரில் ஈடுபடக்கூடாது என்றும் வழக்காறுகளும் மரபுகளும் வற்புறுத்துவது, அந்நாட்டு அமைச்சரவை அதன் சொந்த விருப்பு வெறுப்புப்படி இயங்காமல் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதை அவசியமாக்குகிறது. இந்தக் கட்டுப்பாடு மத்திய அரசின் வேகத்தைச் சிறிது அடக்குகிறது என்றும், அவ்வாறு அது அடக்கப்படுவது கூட்டாட்சிக்கு நல்லதென்றும் கருதப்படுகின்றது.

கனடாவின் அரசியலமைப்பில் காணப்படும் அதிகாரப் பங்கீடானது திருப்திகரமாக இருப்பதாகக் கூறுவதற்கில்லை. பொது

அரசு விரும்பினால் மாநிலங்களை அதன் விருப்பத்திற்குக் கட்டுப் பட்டு நடக்கும்படிக் கட்டாயப்படுத்தக்கூடிய அதிகாரத்தை அது பெற்றிருக்கிறது. மாநில அரசாங்கங்களின் சட்டங்களை ஏற்றுக் கொள்ள மறுத்து அவற்றைத் தடை செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு இன்றும் சட்ட ரீதியாக இருக்கின்றது. ஆனால் இவ்வதி காரம் பயன்படுத்தப்படுவது கூட்டாட்சிக்குப் பொருந்தாது என்ப தால், வழக்காறுகளும் மரபுகளும் இது கூடுமானவரைப் பயன் படுத்தப்படாமலிருக்க வழி செய்கின்றன. மாநிலங்களின் சட் டங்கள் அவற்றின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டவை எனக் கூறியோ, அல்லது அவை அநியாயமானவை எனக்கூறியோ அல்லது அவை பொருத்தமற்றவை எனக்கூறியோ, ஆரம்ப காலத்தில் ரத்து செய்யப்பட்ட மாதிரி இப்பொழுது நடப்பதில்லை. 1867-க்கும் 1900-க்கும் இடைப்பட்ட முப்பத்திநான்கு ஆண்டு களில் எழுபத்திரண்டு மாநிலச் சட்டங்கள் தடை செய்யப்பட்டன; ஆனால் 1900 க்கும் 1939-க்கும் இடைப்பட்ட முப்பத்தொன்பது ஆண்டுகளில் முப்பத்தைந்து மாநிலச் சட்டங்களே தடைசெய்யப் பட்டன. சட்ட ரீதியாகப் பார்த்தால் மாநிலங்களின் வரவு செலவுத் திட்டங்களைக்கூட மத்திய அரசு மறுக்கலாம். ஆனால் நடைமுறை யில் அவ்வாறு நடைபெறுவதில்லை; இந்த நடைமுறைதான் கன டாவை ஒரு கூட்டாட்சியாக மாற்றி யிருக்கிறது என்பது அறியத் தக்கது.

கனடாவின் அரசியலமைப்பான பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டத்தைத் (1867) திருத்தும் முறையும் வழக்காறுகளாலும் மரபு களாலும் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அதிகாரம் பங் கீடு தொடர்புடைய விதிகளை பிரிட்டிஷ் பாராளுமன்றம் திருத்த முடியும். பிரிட்டிஷ் பாராளுமன்றமோ தன் சொந்த விருப்பு வெறுப் புப்படி இந்தப் பணியை செய்வதில்லை. கனடா எப்படி திருத்தம் வேண்டுமென்று கேட்கிறதோ அப்படிச் செய்து கொடுப்பதையே பிரிட்டன் வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறது. கனடாவால் விரும்பப்படும் திருத்தங்கள் மத்திய அரசால் மட்டும் கேட்கப்பட் டால் போதுமா, அல்லது மாநில அரசுகளால் மட்டும் கேட்கப்பட் டால் போதுமா, அல்லது இரண்டு அரசுகளாலும் கேட்கப்பட வேண்டுமா எவ்வாறு கேட்டால் அந்தத் திருத்தத்தை செய்து கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றித் திட்டவட்டமாக ஒன்றும் கூற முடியாத நிலையில் இருக்கிறோம். பொதுவாகக் கூறப்போனால் மாநிலங்களால் மட்டும் கோரப்படும் திருத்தங்களும், மத்திய அர சால் கோரப்பட்டு மாநிலங்களில் பெரும்பாலானவற்றால் எதிர்க்கப் படும் திருத்தங்களும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இசைவைப்

பெறுது என கூறலாம். சமீப காலத்தின் அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு ஒரு முடிவுக்கு வருவதென்றால், அதிகாரப் பங்கீட்டைப் பாதிக்கும் அரசியலமைப்புத் திருத்தங்களை கொண்டுவர விரும்பும் தேசிய அரசு எல்லா மாநில அரசுகளின் இணக்கத்தைப் பெற்றாலொழிய வெற்றிபெறுது என நினைக்கத் தோன்றுகிறது.

5. அரசாங்கங்கள் ஒன்றுடொன்று ஒத்துழைத்தல்

வழக்காறுகளும் மரபுகளும் கூட்டாட்சியின் அரசாங்கங்களிடையே நல்ல தொடர்புகளை உண்டாக்கத்துணை செய்கின்றன. மத்திய அரசாங்கம் ஒன்றையும் மாநில அரசாங்கங்கள் சிலவற்றையும் கொண்டு இயங்கும் அமைப்பே கூட்டாட்சி என்பது பலமுறை கூறப்பட்டது. ஆனால் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் தனித்தனி உலகங்களாக இயங்க முயன்றால் எந்த அரசாங்கமும் விரும்பத்தக்க விளைவுகளைத் தோற்றுவிக்க முடியாது. அரசாங்கங்களுக்கிடையே போட்டியும் பொறுமையும் வளராமல் கூட்டுறவும் நட்பும் வளருவது அவசியமாகும். மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களோடும், மாநில அரசாங்கங்கள் ஒன்றோடொன்றும் தோழமைத் தொடர்புகளை வளர்த்துக்கொண்டு செயல்பட்டால் அரசின் பணிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். கூட்டாட்சிக்கு இன்றியமையாதது எனக் கூறப்படும் அதிகாரப் பங்கீட்டால் அரசின் அதிகாரங்கள் மத்திய மாநில அரசாங்கங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது; ஒரே இனத்தின் பல அம்சங்களில் சில மத்திய அரசிடமும் சில மாநில அரசுகளிடமும் தரப்படுவதுண்டு; அது போன்ற இனங்களைப்பற்றி பயனுள்ள சட்டங்கள் இயற்ற மத்திய மாநில அரசாங்கங்கள் கலந்து பேசுவது நல்லதாகும். மாநிலங்களுக்காகத் தரப்பட்டிருக்கும் இனங்களைப்பற்றி சட்டமியற்றும் பொழுது கூட, பல்வேறு மாநில அரசாங்கங்களும் கலந்து பேசுவது சிறந்ததாகும். ஒரே இனத்தைப்பற்றி வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு மாதிரியான சட்டங்கள் காணப்படுவது விரும்பத்தக்கதல்ல. அரசு என்பது ஒரு முழு மொத்த உரு; அதற்குப் பொதுவான சில நோக்கங்கள் உண்டு; அந்த நோக்கங்களை நிறைவேற்ற எல்லா அரசாங்கங்களும் கடமைப்பட்டிருக்கின்றன. முதலாவதாக மத்திய மாநில அரசாங்கங்களும், இரண்டாவதாக மாநில அரசாங்கங்களும் ஒன்றோடொன்று ஒத்துழைத்தால்தான் அரசின் எண்ணங்கள் நிறைவேற முடியும். இன்றைய கூட்டாட்சிகள் அரசாங்கங்களிடையே கூட்டுறவை வளர்க்கப் பின்பற்றும் முறைகளை இனிக்காண்போம்.

அ. மத்திய மாநில அரசாங்கங்களிடையே கூட்டுறவு

முதலாதாக, மத்திய அரசாங்கங்கள் ஒன்றோடொன்று ஒத்துழைக்கத் (inter-governmental co-operation) துணை செய்யும் நிறுவனங்களைப் பற்றி தெரிந்து கொள்வோம். ஆஸ்திரேலியாவில் இயங்கி வரும் 'முதல்வர்கள் மாநாடு' (Premiers' Conference) குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததொரு அமைப்பாகும். அரசியலமைப்பு தோன்றிய நாட்களிலிருந்து அநேகமாக ஒவ்வொரு ஆண்டும் கூடும் இம்மாநாட்டில் மத்திய அரசின் முதலமைச்சரும் மாநில அரசுகளின் முதலமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர். ஆனால் இம்மாநாட்டிற்கென சட்டதிட்டங்களோ தனியாக ஒரு அலுவலகமோ இல்லை. நாடு முழுவதற்கும் பொருந்தும் சில முக்கியமான இனங்களை இம்மாநாடு அவ்வப்பொழுது ஆராய்ந்திருக்கிறது. 1927ஆம் ஆண்டின் நிதி ஏற்பாட்டை மாநிலங்களை ஏற்கும்படிச் செய்தது இம்மாநாட்டின் செயலேயாகும். 1930-ஐ அடுத்த சில ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவைப் பாதித்த பொருளாதார மந்தத்திற்கு தீர்வுகாண இம்மாநாடு கூறிய யோசனைகள் எல்லா அரசாங்கங்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டன. 'முதல்வர்களின் திட்டம்' (Premiers' Plan) என அழைக்கப்பட்ட இதன் யோசனைகள், இம் மாநாட்டின் சாதனைகளில் மிகச் சிறந்ததெனக் குறிப்பிடப்படுகிறது. இம்மாநாடு ஆஸ்திரேலியாவின் மற்றொரு முக்கியமான நிறுவனமான கடன் குழுவோடு இணைந்து செயல்பட்டது, அதன் செயல்களை எளிதாக்கியது. மத்திய அரசின் நிதி அமைச்சரும் மாநில அரசுகளின் நிதி அமைச்சர்களும் அங்கம் வகிக்கும் கடன் குழுவின் சிபாரிசுகளை முதல்வர்கள் மாநாடு நிறைவேற்றத் தவறுவதில்லை. முதல்வர்கள் போன்றே நிதி அமைச்சர்களும் அரசியல் வாதிகள்; முதல்வர்களின் கருத்துகளும் நிதி அமைச்சர்களின் கருத்துகளும் பொதுவாக ஒரே மாதிரியானவையாய் இருக்கும். எனவே இவ்விரு நிறுவனங்களும் நெருக்கமான தொடர்புகொண்டு பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் வியப்பில்லை. கடன் குழு அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டதொரு நிறுவனமாகும். ஆனால் முதல்வர்கள் மாநாடு பழக்க வழக்கத்தின் அடிப்படையில் மட்டுமே இன்று வரையில் இயங்கி வருகிறது. இவ்விரு அமைப்புகளில் ஒவ்வொன்றும் மத்திய மாநில அரசுகளிடையே கூட்டுறவை வளர்க்கின்றன என்ற உண்மையை ஒப்புக் கொள்வதோடு, இரண்டும் ஒன்றோடொன்று ஒத்துழைத்து, மத்திய மாநில உறவுகளை மேலும் வளர்க்கின்றன என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மத்திய மாநில அரசுகளிடையே கூட்டுறவை வளர்க்க கனடாவில் 'மத்திய-மாநில மாநாடு' (Federal-Provincial Conference) என்னும் அமைப்பு இருக்கிறது. ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத்தான் இது இயங்கி வருகிறது. அரசியலமைப்புத் திருத்தம், மத்திய மாநில அரசாங்கங்களிடையே நிதித் தொடர்புகள், போக்குவரத்து, வேலையற்றோருக்கு உதவி, விவசாயம், சமூகப் பணிகள், போன்ற பல பொருட்கள் இம் மாநாட்டால் ஆராயப் பட்டிருக்கின்றன. பல சமயங்களில் இதன் முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மிருக்கின்றன. மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்குத் தரவேண்டிய மானியங்களைப் பற்றி 1906ல் இம்மாநாடு எடுத்த முடிவும், கனடாவின் சார்பாக வெஸ்ட் மின்ஸ்டர் சட்டத்தில் (Statute of westminster) இடம் பெற வேண்டி விதிகளைப் பற்றி 1931-ல் இது செய்த சிபாரிசும், வேலையற்றோருக்கு காப்பீடு வழங்குவது மத்திய அரசின் பொறுப்பில் இருக்கவேண்டுமென இது 1940-ல் கூறிய யோசனையும் சட்டங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. கனடாவில் மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஆராய்ந்த குழு, இம் மாநாடு குறிப்பிட்ட காலங்களில் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றும், அதற்கு நிரந்தரமானதொரு அலுவலகம் இருக்கவேண்டுமென்றும், இம்மாநாடு அரசியலமைப்பால் நிறுவப்படும் நிறுவனங்களில் ஒன்றாய் அமைய வேண்டுமென்றும் சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் இது போன்ற அமைப்புகள் ஒண்டாரியோ, க்வெபெக் போன்ற பெரிய மாநிலங்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் பயனுள்ள வகையில் செயல்பட முடியாது என்பது திண்ணம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அமெரிக்காவிலும் 'கவர்னர்கள் மாநாடு' (Governors' Conference) என்னும் நிறுவனம் மத்திய மாநில அரசாங்கங்களிடையே நல்லுறவை வளர்க்க பாடுபட்டு வருகிறது. 1908-ல் முதன் முதலாவதாக குடியரசுத் தலைவர் தியோடோர் ரூஸ்வெல்ட்டால் (Theodore Roosevelt) கூட்டப்பட்டதிலிருந்து வருடா வருடம் இம் மாநாடு நடைபெற்று வந்திருக்கிறது. கருத்து வேறுபாட்டுக் குரியன வல்லாத சாதாரணப் பொருட்களைப் பற்றி விவாதித்துவந்த இம்மாநாட்டில், 1931-ல் முக்கியமான பிரச்சினைகளை விவாதிக்கும் பழக்கமும் ஆரம்பமாகியது; ஆனால் இப்பழக்கம் தொடர்ந்து நீடிக்கவில்லை. கவர்னர்கள் மாநாடு அவர்களுக்கு ஒரு பொழுது போக்கு வாய்ப்பாக மாற ஆரம்பித்தது. மாநாட்டில் கலந்துகொண்ட கவர்னர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு குறைய ஆரம்பித்தது. F. D. ரூஸ்வெல்ட் தலைவரான பொழுது இம்மாநாட்டைப் பய

னுள்ள தொடர் நிறுவனமாக்க அவர் பெரிதும் முயன்றார். ஆனால் இன்றைய நிலையில் இந்த அமைப்பைப்பற்றி புகழ்ந்து பேசுவதற்கு ஆதாரமில்லை; இன்னும் சிறப்பாகச் செயல்படுவது விரும்பத் தக்கது.

ஆ. மாநிலங்களிடையே கூட்டுறவு

இரண்டாவதாக, மாநிலங்களுக்கிடையே கூட்டுறவை வளர்க்கவும் சில நிறுவனங்கள் முயன்று வருகின்றன. மேலே கூறப்பட்ட முதல்வர்கள் மாநாடு, மத்திய-மாநில மாநாடு, கவர்னர்கள் மாநாடு ஆகிய மூன்றும் மத்திய மாநில அரசுகளுக்கிடையே நெருக்கமான தொடர்புகளை வளர்த்ததோடல்லாமல், மாநிலங்களுக்கிடையேயும் நல்ல உறவுகளை வளர்த்தன. அமெரிக்காவில் கவர்னர்கள் மாநாடு என்பது உண்மையில் மாநிலங்களின் மாநாடு தான்; குடியரசுத் தலைவர் அதை ஆரம்பித்து வைப்பதோடு வேறு வகையில் அதில் கலந்து கொள்வதில்லை. அரசாங்கங்களின் தலைவர்கள் கூடிப்பேசுவதோடல்லாமல், மற்ற அமைச்சர்களும் அதிகாரிகளும் கூடிப்பேசும் வழக்கமும் இக்காலத்தில் வளர்ந்திருக்கிறது. ஆஸ்திரேலியாவில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் அமைச்சர்களும் அதிகாரிகளும் அடிக்கடி சந்தித்துத் தங்கள் மாநிலங்களின் பிரச்சினைகளை ஆராய்கின்றனர். கனடாவில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான தொழிற்சட்டங்களைக் கொண்டுவர 'தொழிற் சட்ட அலுவலர்களின் தேசிய மாநாடு' (National Conference of Labour Administrators) ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கிடையே கூட்டுறவை வளர்க்க அமெரிக்காவில் ஏராளமான அமைப்புகள் இயங்கி வருகின்றன. மாநிலங்களின் விவசாயத்துறை, அரசு வங்கிகள், விமானப் போக்குவரத்து, கல்வித்துறை போன்றவற்றின் அதிகாரிகள் அடிக்கடி சந்தித்து விவாதிக்கின்றனர். மத்திய மாநில அரசாங்கங்களில் ஒவ்வொரு துறையையும் சேர்ந்த அமைச்சர்கள் அவர்கள் கலந்து பேசுவதற்கான நிறுவனங்களை அமைத்திருக்கின்றனர். அவை 'அமைச்சர்களின் தேசியச் சங்கங்கள்' (National Associations of secretaries of state) என அழைக்கப்படுகின்றன. ஆனால் மேற்கண்ட அமெரிக்கக் கூட்டுறவு நிறுவனங்கள் அவற்றின் பிரச்சினைகளை உணர்ந்திருந்தாலும், அவற்றைப்பற்றி விவாதித்தாலும், அவற்றிற்குத் தீர்வு காண்பதில் அவ்வளவாக வெற்றி காண்பதில்லை எனக் கூறப்படுகிறது. அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கத்தால் (American Bar Association) 1892-ல் நிறுவப்பட்ட "சீரான மாநிலச் சட்டங்களுக்கான குழுக்களின் தேசிய மாநாட்டை" National

Conference of Commissions on Uniform of State Laws) ஓரளவுக்கு வெற்றிகரமாக இயங்குவதாகக் கருதலாம். ஒவ்வொரு மாநிலத்திலும் அதன் கவர்னரால் நியமிக்கப்படும் சட்டக் குழுவின் உறுப்பினர்கள் ஆண்டுக்கு ஒருமுறை கூடி மாதிரிச் சட்டங்களைத் தீர்மானிக்கின்றனர். மாநில சட்ட மன்றங்கள் இம்மாதிரி சட்டங்களை ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளப்படும். ஆனால் பெரும்பாலான மாநிலங்கள் இந்நிறுவனத்தின் வேண்டுகோள்களுக்கு இணங்குவதாகத் தோன்றவில்லை. 1940-ல் தீர்மானிக்கப்பட்ட சட்டங்களில் ஒன்றே ஒன்றுதான் எல்லா மாநிலங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாம்; எட்டுச் சட்டங்கள் பாதி மாநிலங்களாலும், இருபத்திமூன்று சட்டங்கள் கால்வாசி மாநிலங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாம்.

அமெரிக்காவில் மாநிலங்கள் ஒன்றோடொன்று ஒத்துழைக்க உதவும் மற்றொரு நிறுவனம் 'மாநில அரசாங்கங்களின் குழு'வாகும் (Council of State Governments). எல்லா மாநிலங்களின் பிரதிநிதிகளையும் கொண்டிருக்கும் இவ்வமைப்பு 1937-ல் தொடங்கப்பெற்றதாகும். மாநிலங்கள் ஒன்றையொன்று அணுகவேண்டிய முறையையும், அவை மத்திய அரசை அணுகவேண்டிய முறையையும் தீர்மானிப்பதைத் தன் நோக்கமாகக் கொண்டிருக்கும் இக்குழு, 'மாநில அரசாங்கம' (State Government) என்ற மாத இதழ் ஒன்றை வெளியிட்டு மாநிலங்களுக்கிடையே நட்பை வளர்க்க முயல்கிறது. இரண்டாவது உலகப் போரின்பொழுது நாட்டின் சக்தியை ஒன்று திரட்ட இந்த அமைப்பு பெரிதும் உதவியது. 'அமெரிக்கச் சட்டம் செய்வோரின் சங்கம்' (American Legislators Association) என்ற மற்றொரு அமைப்பும் குறிப்பிடத்தக்கதாகும். எல்லா மாநில சட்ட மன்றங்களின் அமைப்பாகக் கருதப்படும் இச்சங்கம், அவற்றின் பொதுப் பிரச்சினைகளை ஆராய்கிறது. ஆனால் இது ஒது பெரிய நிறுவனமாக இருப்பதால் பயனுள்ள வகையில் செயல்பட முடியாமல் இருந்து வருகிறது.

மத்திய மாநில அரசுகளிடையே கூட்டுறவையும் ஒரே வகையான போக்கையும் வளர்க்க மேற்கண்ட நிறுவனங்களைவிட, மத்திய அரசின் மானியங்கள் பயனுள்ளதாகத் தோன்றுகிறது. மானியமளிக்கும் மத்திய அரசு, அதைப் பெற விரும்பும் மாநிலங்கள் சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்துவதனால், மாநிலங்களின் சட்ட திட்டங்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியானவையாய் அமைகின்றன. F. D. ரூஸ்வெல்டின் புதியப் பொருளாதாரத் திட்டமானது மாநிலங்களின் செயல்களில்

ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்க முயன்றது. சமூகக் காப்பீட்டுத் துறையில் எல்லா மாநிலங்களிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதற்கு ரூஸ்வெல்டின் திட்டமே காரணமாகும். வேலையின்மைக்கெதிரான காப்பீட்டுத் திட்டமொன்றை மாநிலங்கள் அனைத்தும் நிறைவேற்ற புதிய முறை ஒன்றை அவர்கையாண்டார். வேலைக்கு ஆட்களை அமர்த்தியிருக்கும் முதலாளிகள்மீது வரிவிதிக்கப்பட்டது; ஆனால் அரசாங்கத்தின் வேலையின்மைக் காப்பீட்டுத் திட்டத்திற்குப் பணம் செலுத்தும் முதலாளிகளுக்கு, அவர்கள் செலுத்தும் வரித்தொகையில் 90சதவிகிதம் திருப்பித் தரப்பட்டது; எனவேமுதலாளிகளில் எவரும் அத்திட்டத்தில் பங்கேற்கத் தயங்கவில்லை, இத்திட்டத்தின் பயனாக நாடு முழுவதும் வேலையின்மைக் கெதிரான காப்பீடுமுறை செயல்பட்டது. நிதித்துறையில் மேல் நிலையில் இருக்கும் மத்திய அரசு, மானியங்கள் வழங்கும் வாயிலாக, மாநிலங்கள் ஒரே சீரான வழிகளைப் பின்பற்ற வேண்டுமென வற்புறுத்தக்கூடிய நிலையில் இருப்பது, அமெரிக்காவுக்கு மட்டுமல்லாது மற்றும் ஆஸ்திரேலியா, கனடா, சுவிட்சர்லாந்து ஆகியக் கூட்டாட்சிகளுக்கும் பொருந்தும்.

6 அதிகார மாற்றம்

கூட்டாட்சியில் மத்திய மாநில அரசுகளிடையே கூட்டுறவை வளர்க்க 'அதிகார மாற்றம்' (Delegation of Powers) என்ற முறையைக்கூட பின்பற்றப்படலாம். மத்திய அரசு அதற்கு உரிய அதிகாரங்களை மாநிலங்களுக்கு மாற்றிக்கொடுத்தோ, அல்லது மாநில அரசுகள் அவைகளுக்குரிய அதிகாரங்களை மத்திய அரசுக்கு மாற்றிக்கொடுத்தோ, அரசின் பணிகளை செம்மையாகவும் சீக்கிரமாகவும் செய்து முடிக்க முயலலாம். இந்த ஏற்பாடு அரசியலமைப்பானது தற்காலிகமாகத் திருத்தப்படுவதற்குச் சமமாகும். மாநிலங்கள் மத்திய அரசுக்குத் தங்களின் அதிகாரங்களை மாற்றிக் கொடுக்கும்பொழுது, எல்லா அரசுகளும் சேர்ந்து அவ்வாறு செய்யவேண்டுமென்பது கட்டாயமல்ல; ஓரிருஅரசுகள்கூட அவைகளைப் பொருத்தவரை அவ்வாறு செய்யலாம்; அதிகாரங்கள் நீண்ட காலத்துக்கோ, குறுகிய காலத்துக்கோ மாற்றித் தரப்படலாம். மாற்றித் தரப்பட்டிருந்த அதிகாரங்கள் குறிப்பிட்ட காலகெடு முடிந்தவுடன் உரிய அரசுக்கு வந்து சேரும். இது போன்ற அதிகார மாற்றத்திற்கு ஆஸ்திரேலிய அரசியலமைப்பு மட்டுமே இடமளிக்கிறது. மாநிலமொன்றின் பாராளுமன்றமோ, அல்லது மாநிலங்கள் சிலவற்றின் பாராளுமன்றங்களோ தேசியப் பாராளுமன்றத்தைச் சில இனங்கள் மீது சட்ட மியற்ற வேண்டும் எனக்

கேட்டுக் கொண்டால், அது அவ்வாறு செய்யலாம். ஆனால் இந்த விதி ஏட்டளவில்தான் இருக்கிறதேயொழிய, நடைமுறையில் பயன்படுத்தப்படுவதாகத் தோன்றவில்லை. மாநிலங்களின் அதிகாரங்களில் சில, மைய அரசுக்கு மாற்றப்பட வேண்டுமென இரண்டாவது உலகப்போரின்பொழுது வற்புறுத்தப்பட்டது. போரினால் தோன்றிய சமுதாயப் பொருளாதாரக் குழப்பத்தைத் தவிர்க்க, வேலை வாய்ப்பு, வேலையின்மை, கொள்ளை இலாபம், விலைவாசி, பொருட்களின் உற்பத்தியும் வினியோகமும், விமானப் போக்குவரத்து போன்ற இனங்கள் மீது சட்டமியற்றக்கூடிய அதிகாரம், எல்லா மாநிலங்களாலும் ஐந்து ஆண்டுகளுக்கு மைய அரசுக்கு மாற்றித் தரப்படவேண்டுமென டாஸ்மானியாவின் (Tasmania) முதல்வர் யோசனை கூறினார். இந்த யோசனை இருபத்திநான்கு உறுப்பினர்களைக் கொண்ட பேரவை ஒன்றால் வரவேற்கப்பட்டது; இப்பேரவையில் தேசியப் பாராளுமன்றத்தின் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளாகப் பன்னிரண்டு பேரும், ஆறு மாநிலங்களின் சார்பாக ஒவ்வொன்றின் முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் இடம் பெற்றனர். இருப்பினும் இந்த யோசனைகள் மாநிலங்களின் சட்ட மன்றங்களின் ஆதரவைப் பெறத் தவறின. முதலில் அதிகார மாற்றம் நிகழலாம் என்ற நம்பிக்கை இருந்தபோதிலும், கடைசியில் மாநிலங்கள் தங்களின் அதிகாரங்களை மாற்றிக் கொடுக்க மறுத்துவிட்டன.

ஆஸ்திரேலியாவின் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு பார்த்தால், மேற்கண்ட முறை மாநிலங்களுக்கு மனநிறைவளிக்கும் முறையல்ல என்பது தோன்றுகிறது. இதை மாநிலங்கள் வரவேற்கவில்லை என்றாலும், இது நல்ல பயனைத் தரக்கூடிய முறை என்பதில் சந்தேகமில்லை. சில பின்தங்கிய மாநிலங்கள் அவற்றின் பணிகளைச் சரியாக செய்ய முடியாத நிலையில் இருந்தால், அவற்றின் பொறுப்புகளில் சிலவற்றைத் தற்காலிகமாக மத்திய அரசிற்கு மாற்றிக்கொடுக்க இம்முறை வகை செய்கிறது. கனடாவில் மத்தி மாநில உறவுகளை ஆராய்ந்த குழு, கூட்டாட்சி அரசியலமைப்புகளில் அதிகார மாற்றத்திற்கு இடமளிக்கப்படுவது அவசியம் என்பதாகக் குறிப்பிடுகிறது. மத்திய மாநில அரசுகளுக்கிடையே ஒன்றின் அதிகாரங்கள் மற்றொன்றிற்கு மாற்றித் தரப்பட இடமிருப்பது, அரசியலமைப்பை நெகிழும் தன்மை யுடையதாக்குகிறது. மீன் பிடித்தல் பற்றி சட்டங்கள் செய்யும் அதிகாரம் தேசிய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு மாற்றித் தரப்படுவதும், முதியோர் ஊதியம் பற்றி சட்டங்கள் செய்யும் அதிகாரம் மாநிலங்களிட மிருந்து தேசிய அரசுக்கு மாற்றித் தரப்படுவதும் அவசியம் என்பதாக அக்குழு சிபாரிசு செய்தது.

11. கூட்டாட்சியின் போக்கும் எதிர்காலமும்

1. மத்திய அரசின் அதிகாரங்கள் சிறிது சிறிதாக வளர்ந்திருத்தல் 2. மத்திய அரசின் வளர்ச்சிக்குத் துணை செய்தவை 3. மாநிலங்களும் வளர்ந்திருத்தல் 4. மத்திய அரசின் பொருளாதார மேம்பாடு 5. கூட்டாட்சியின் சிறப்பு.

1 மத்திய அரசின் அதிகாரங்கள் சிறிது சிறிதாக வளர்ந்திருத்தல்

அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய கூட்டாட்சிகள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை மத்திய மாநில அரசுகளின் வளர்ச்சியைக் கவனித்தால், எல்லாக் கூட்டாட்சிகளிலும் மத்திய அரசின் அதிகாரங்கள் காலப் போக்கில் வளர்ந்திருப்பதைக் காணலாம். அரசியலமைப்புகள் ஆரம்பத்தில் வகுத்த அதிகாரப் பிரிவினை மத்திய அரசுக்கு அனுசரணையாக மாறி வந்திருக்கிறது என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. அரசியலமைப்புகள் முறைப்படி திருத்தப்பட்டதன் விளைவாகவே இந்த மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன எனக் கூறமுடியாது. சுவிட்சர்லாந்தில் மட்டும் மத்திய அரசின் அதிகாரங்கள் அரசியலமைப்பின் திருத்தங்களால் பெருகியிருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் 1928, 1946 ஆகிய ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு திருத்தங்களும், கனடாவில் 1940, 1951 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட இரண்டு திருத்தங்களும், அமெரிக்காவில் 1868, 1913, 1920 ஆகிய ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட மூன்று திருத்தங்களும் தேசிய அரசின் அதிகாரங்களை அதிகரித்தன எனக்கூறலாம். நீதித் தீர்ப்புகள்கூட அதன் அதிகாரங்கள் பெருக ஓரளவுக்கு உதவியிருக்கின்றன. அரசியலமைப்பால் மத்திய மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும்

இனங்களில் சந்தேகத்துக்குரிய இனங்கள்பற்றி பொருள் கூறும் பொழுது, நீதிமன்றங்கள் மத்திய அரசுக்குச் சாதகமாகத் தீர்ப் பளிக்கலாம்; ஆனால் மாநில அரசுக்குரிய இனமொன்றை மத்திய அரசுக்குரியதாக அவை ஒருபொழுதும் கூறமுடியாது. அரசிய லமைப்பானது மத்திய அரசுக்கு ஒதுக்கிய இனங்களை, அது ஆரம்ப காலத்தைவிட இக்காலத்தில் முழுமையாக அனுபவிப்ப தால், அதன் அதிகாரங்கள் அதிகரித்திருப்பதாகத் தோன்றுகிறது. மத்திய அரசின் அதிகாரங்கள் பெருகி யிருக்கின்றன எனக் கூறும் பொழுது, அது மாநில அரசுகளின் அதிகாரங்களை அபகரித்துக் கொண்டதால் ஏற்பட்ட விளைவு என எண்ணக்கூடாது. அதற் குரிய அதிகாரங்கள் அனைத்தையும் அது பயன்படுத்திக் கொள்வ தனால் அதன் அதிகாரங்கள் கூடியிருப்பதாகக் கருதப்படுகிறது. அனேகமாக எல்லாக் கூட்டாட்சிகளிலும் மத்திய அரசுகளே புதிதாக நிறுவப்பட்டவையாகும்: அவைகளுக்குத் தரப்பட்ட பணிகளை அவை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்ய ஆரம்பிக்கவே, அவை நிறுவப்பட்ட காலத்தில் அவைகளுக்கு இருந்த அதிகாரங் களைவிட இன்று இருக்கும் அதிகாரங்கள் அதிகமானவையாய்த் தோன்றுகின்றன.

2. மத்திய அரசின் வளர்ச்சிக்குத் துணை செய்தவை

மத்திய அரசானது மாநில அரசுகளைவிட மேலான நிலையில் இருப்பதற்குச் சிலகாரணங்களைக் கூறலாம். முதலாவதாக, நாட்டின் பாதுகாப்பு மத்திய அரசின் இனமாக அமைவதால், அது வலு வுள்ள அரசாகக் காட்சியளிக்கிறது. கூட்டாட்சியில், படைபல மில்லாத மாநில அரசுகளைவிட படைபலமுள்ள மத்திய அரசு உயர்ந்ததாகக் கருதப்படுவது இயல்பே. சண்டைக்குச் செல்லும் அதிகாரமும் சமாதானம் செய்துகொள்ளும் அதிகாரமும் படை பலத்தைச் சார்ந்த அதிகாரங்களேயாகும். மாநிலங்கள் அவற்றின் பாதுகாப்புக்கும் இப்படைகளையே நம்பியிருக்கின்றன, இரண் டாவதாக, வெளி நாட்டு விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு மத்திய அரசின் பொறுப்பாக இருக்கிறது. உலக நாடு களில் எந்தெந்த நாட்டோடு எந்தெந்த விதமான தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை மத்திய அரசே தீர்மானிக் கிறது. அயல் நாடுகளோடு மாநிலங்களின் ஏற்றுமதி இறக்கு மதி வர்த்தகத் தொடர்புகளைக்கூட மத்திய அரசே நிர்ணயிப்பதால், அதன் நிலை மேலானதாக அமைகிறது. மூன்றாவதாக, நிதித்துறை யில் மத்திய அரசின் செல்வாக்கு சந்தேகத்துக்கு இடமற்ற வகை யில் உயர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது; இதற்கு அரசிய

லமைப்பின் திருத்தங்கள் ஓரளவுக்குக் காரணமாய் இருந்தன. இருப்பினும் அரசியலமைப்பின் பழைய விதிகளின் அடிப்படையில் தான்—அவற்றை இப்பொழுது முழுமையாக அனுபவிக்கும் பழக் கத்தால்—இந்த அதிகாரம் வளர்ந்திருக்கிறது.

கூட்டாட்சியில் மத்திய அரசின் அதிகாரங்கள் பெருகிவரும் வேகத்தைப் பார்த்தால் அவை ஒற்றை ஆட்சிகளாக மாறினாலும் மாறலாம் என்று சிலர் அஞ்சுகின்றனர். இதுவரை எந்தக் கூட் டாட்சியும் ஒற்றை ஆட்சியாக மாறியதில்லையாதலால், இந்த அச் சத்திற்கு இடமில்லை எனத் தள்ளிவிடலாம். கூட்டாட்சியாகத் தோன்றிய அரசுகள் கலைந்திருக்கின்றன; ஆனால் அது எந்த இடத்திலும் ஒற்றை ஆட்சியாக மாறியதாகக் கூறமுடியாது. கூட் டாட்சியில் இணையும் மாநிலங்கள் அவற்றின் சுதந்திரத்தைக் காத்துக்கொள்வதில் மிகவும் விழிப்போடு இருக்கின்றன. அவை மத்திய அரசு ஓரிரு இனங்களில் மேல் நிலையில் இருப்பதை அனு மதித்தாலும், அது தங்களை விழுங்கிவிடாமல் பார்த்துக் கொள் வதில் கவனமாக இருக்கின்றன.

கூட்டாட்சிகளில் நாளுக்கு நாள் மத்திய அரசின் அதிகாரங் கள் அதிகரித்து வருவதற்கு நான்கு விதமான சக்திகள் காரண மாக இருக்கின்றன என்பதாகப் பேராசிரியர் K. C. வியர் கருது கிறார். போர், பொருளாதார மந்தம் ஆகிய இரண்டும் மத்திய அரசின் அதிகாரங்கள் பெருகுவதற்குத் துணை செய்கின்றன. போருக்கும் பொருளாதார மந்தத்திற்கும் தீர்வுகாண அரசின் அதி காரங்கள் மையம் நோக்கிக் குவிவது இன்றியமையாததாகும்; மைய அரசின் கரங்கள் பலப்படுத்தப்பட்டால்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும். இவை இரண்டாலும் பாதிக்கப்படாத நாடு களில் தான் உண்மையான கூட்டாட்சி நிலவ முடியும். அமைதி யும் சுபிட்சமும் எந்த நாட்டில் நிலவுகிறதோ, அங்குதான் கூட் டாட்சியும் நிலைபெறும். எனவே, போரையும் பொருளாதார மந்தத் தையும் கூட்டாட்சியின் முதல் எதிரிகளாகக் கருதுவது பொருத் தமேயாம். முதலாவது உலகப்போரும் இரண்டாவது உலகப் போரும், இரண்டு போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய பொருளாதார மந்தமும் ஆஸ்திரேலியாவில் மத்திய மாநில உறவுகளைப் பெரிதும் பாதித்தன. இனி ஒரு முறை பெரும் போரோ அல்லது பொருளாதார மந்தமோ தோன்றினால், அது ஆஸ்திரேலியாவில் கூட்டாட்சி அமைப்பை அழித்தாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை.

இக்காலத்தில் பெருகிவரும் சமூக சேவைகளும் மத்திய அரசின் அதிகாரங்கள் அதிகரிக்க உதவுகின்றன. போரும் பொருளாதார மந்தமும் நிலவுகின்ற காலங்களில் அவற்ருல் பாதிக்கப்படும் மக்களின் தொல்லைகளை நீக்க சில சமூகப் பணிகளைப் மேற்கொள்ளும் அரசாங்கம், சாதாரண காலங்களிலும் சில சமூகப் பணிகளை மேற்கொள்கிறது. சமூகப் பணிகள் பணச் செலவு பிடிக்கும் செயல்களாகும். மாநில அரசுகளைவிட மத்திய அரசே அவற்றை செய்யக்கூடிய பொருளாதார வசதியைப் பெற்றிருக்கிறது. பல கூட்டாட்சிகளில் சமூகப்பணிகளை செய்ய வேண்டிய பொறுப்பு மாநிலங்களின் பொறுப்பாகவே இருக்கிறது; அவ்வாறு இருப்பினும் அதற்குரிய செலவினைத் தாங்கக் கூடிய சக்தி அவைகளுக்கு இருப்பதில்லை. அதிகாரமிருந்தும் அதை அனுபவிக்க முடியாத நிலையில் அவை இருக்கின்றன. நாட்டின் வருவாயை மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் முறையை சிறிது மாற்றி அமைத்தால் மேற்கண்ட குறையைத் தவிர்க்கலாம். மாநிலங்கள் மத்திய அரசின் மானியங்களை நம்பியிருப்பதற்குப் பதிலாக, அரசியலமைப்பே உறுதியான ஏற்பாடொன்றைச் செய்தால் மாநிலங்கள் சுதந்திரமாக இயங்கக்கூடிய நிலையை அடையும். பொதுவாக, போரும் பொருளாதார மந்தமும் சர்வதேச நிகழ்ச்சிகளின் பயனாக ஏற்படக்கூடிய விளைவுகளாகும்: அவை தோன்ருமல் பார்த்துக் கொள்வது என்பது எளிதான காரியமல்ல; ஆனல் நாட்டின் வருவாயை மத்திய மாநில அரசுகள் அதனதன் தேவைகளுக்கேற்றவாறு பங்கிட்டுக் கொள்ள அரசியலமைப்பு சிறிது மாற்றியமைக்கப்படுவது கடினமான செயலல்ல; இது எல்லாக் கூட்டாட்சிகளிலும் உடனடியாக செய்யப்பட வேண்டிய காரியமாகும்.

போக்குவரத்துத் துறையிலும் தொழில் துறையிலும் ஏற்பட்டிருக்கும் புரட்சிகரமான மாற்றங்கள், மத்திய அரசின் அதிகாரங்களை அதிகரித்த சக்திகளில் நான்காவதாகும். இந்த விஞ்ஞான யுகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மாநிலங்களுக்கிடையேயுள்ள தூரத்தைக் குறைத்து, அவற்றைப் பின்னிப்பிணைத்து விட்டன. தொழில்களும் போக்கு வரத்துச் சாதனங்களும் பெருகிவரும் வேகத்தைப் பார்த்தால், மக்கள் வாழ்க்கையின் அம்சங்களின் பெரும்பாலனவை தனி ஒரு மாநில அரசோடு தொடர்பு கொண்டிருப்பதை விட பல, மாநில அரசுகளோடு தொடர்பு கொண்டிருப்பது விளங்கும். அவற்றை யெல்லாம் மாநில அரசைவிட மத்திய அரசு கண்காணிப்பதே சிறந்ததாகத் தோன்றுகிறது. இத்துறையில் மத்திய அரசின் அதிகாரங்கள் பெருகிவிட்டன என்பதோடு. இனியும்

பெருகிக் கொண்டே போகும் எனவும் கூறலாம்; இந்த பெருக்கத்தைத் தடுக்க முடியும் எனத் தோன்றவில்லை; தடுத்தால் அது நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கலாம். இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

3. மாநிலங்களும் வளர்ந்திருத்தல்

இதுவரை மத்திய அரசின் அதிகாரங்கள் வளர்ந்திருக்கும் செய்தி விளக்கிக் கூறப்பட்டது. மாநில அரசுகளின் அதிகாரங்களும் ஓரளவுக்கு அதிகரித்திருக்கின்றன. இரு தரப்பிலுள்ள அரசுகளின் வளர்ச்சியை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது, மாநில அரசுகளைவிட மத்திய அரசின் அதிகாரங்கள் அதிகமாகப் பெருகி யிருப்பதாகக் கூறலாம். ஆனால் இந்த உண்மை மாநிலங்களும் வளர்ந்திருக்கிற செய்தியை நம் மறக்கத் தூண்டும். கூட்டாட்சிகள் தோன்றிய காலத்தில் செய்ததைவிட, பல துறைகளில் இன்று மாநிலங்கள் அதிகமான செயல்களைச் செய்து வருகின்றன. கல்வி, காவல், சுகாதாரம், வறியோர்க்கு உதவி போன்றவற்றிற்காக இன்றைய மாநிலங்கள் ஏராளமாகப் பொருள் செலவு செய்கின்றன. நூறு ஆண்டுகளுக்கு முன்பு மாநிலங்கள் இவ்வாறு இயங்கியதாகக் கூற முடியாது. இந்த காலத்து அரசுகள் மக்களின் வாழ்க்கை வசதிகளை எந்த அளவுக்குப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்க வேண்டும் என விழைவதாலும், அதைச் செய்வதற்கு மாநில அரசுகளே தகுந்த அரசுகளாக இருப்பதாலும் அவற்றின் பணிகள் அதிகரித்து விட்டன. மத்திய அரசு வளரும் வேகத்தைக் கண்டு பொறுமைப்பட்டு, அதற்குப் போட்டியாக மாநில அரசுகள் தங்களை வளர்த்துக் கொண்டதாகக்கூட கூறலாம். மத்திய அரசு வளர்ந்து கொண்டே போனால், மாநில அரசுகள் இருந்தஇடத்தில் இருக்குமானால் அவை தேவையற்றவையாய் போனாலும் போய் விடும் என்ற அச்சம் மாநிலங்களைப் பாதித்திருக்கலாம். ஆஸ்திரேலியாவில் மத்திய அரசு வளர்ந்த வேகத்தைக் கண்டு அஞ்சிய மாநிலங்கள், கூட்டமைப்பிலிருந்து அவை விலகப் போவதாகத் தெரிவித்தன. மேற்கு ஆஸ்திரேலியா இந்த இயக்கத்தை ஆரம்பித்தும், தெற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மானியா போன்ற மாநிலங்களும் அதற்கு ஆதரவு தெரிவித்தன. கனடாவிலும் மாநிலங்களின் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் தேசிய அரசின் அதிகாரங்கள் அதிகரித்து வருவதாக அதன் மாநிலங்கள் நம்புகின்றன. எந்த மத்திய அரசாவது இது போன்ற எதிர்ப்புகளை அலட்சியப்படுத்துகிற வகையில் அதன் அதிகாரங்களைக் கூட்டிக்கொண்டே போகுமானால், மாநிலங்கள் அந்தக் கூட்டமைப்பிலிருந்து விலகுவது

உறுதி. மாநிலங்கள் எந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் கூட்டாட்சியில் சேர்க்கப்பட்டனவோ, அந்த உத்தரவாதமே சிறிது சிறிதாக மறைந்தால், மாநிலங்கள் அது போன்ற அமைப்பில் இருக்க வேண்டிய அவசியமில்லை. சுவிஸ் மாநிலங்கள் அவற்றின் இனம், மொழி, சமயம் ஆகியவற்றின் தனித்தன்மைகளைக் காத்துக்கொள்ள விரும்புகின்றன; ஆனால் மைய அரசோ மாநிலங்களின் வளர்ச்சிக்கு வேண்டிய வாய்ப்புகளைத் தரமறுத்தால், மாநிலங்கள் அந்த அமைப்பை விட்டு விலக விரும்புவது தவிர்க்க முடியாததாகும். மாநிலங்கள் கூட்டாட்சியில் சேரும்பொழுது அவற்றின் உரிமைகளில் கண்ணும் கருத்துமாய் இருந்ததுபோல் இன்று இல்லை என்பது உண்மைதான்; ஆனால் மாநிலங்களின் உரிமைகளை மத்திய அரசு தனதாக்கிக்கொள்ள முயலும்பொழுது மாநிலங்கள் எதிர்க்கின்றன. கூட்டாட்சி ஒன்றிலுள்ள மாநிலங்களில் பல அவற்றின் உரிமைகளைப் பற்றி விழிப்போடு இல்லாதிருக்கலாம்; ஆனால் ஒரு சில மாநிலங்கள் அவற்றின் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ள விரும்புவது, மற்ற மாநிலங்களின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்பாய் அமைகிறது. 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பது இங்கு நினைவுக்கு வருகிறது. தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடத் தயாராயிருக்கும் மாநிலங்கள் சிலவேனும் இருக்கும் எந்தக் கூட்டாட்சியிலும், மத்திய அரசு அதன் மேலாட்சியை நிறுவுவது என்பது இயலாத காரியமாகும். இது போன்ற ஓரிரு மாநிலங்களே கூட்டாட்சியின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கின்றன.

4. மத்திய அரசின் பொருளாதார மேம்பாடு

மத்திய அரசு, இன்று மட்டுமல்ல, எதிர் காலத்திலும் கூட மாநில அரசுகளைக் காட்டிலும் மேலான நிலையில் இருக்கும் என நினைப்பதற்கு ஒரு முக்கியமான காரணத்தைக் காட்டலாம். மாநிலங்கள் அவற்றின் பணிகள் அனைத்தையும் சரிவர செய்து முடிப்பதற்கான பொருளாதார வசதியற்ற நிலையில் இருக்கின்றன. அவை மத்திய அரசிடமிருந்து அடிக்கடி நிதி உதவியை நாடுவதைத் தவிர்க்க முடியாமல் தவிக்கின்றன. எனவே மாநிலங்களின் இயக்கம் ஓரளவுக்கு மத்திய அரசின் தயவைப் பொருத்து அமைவது அவசியமாகிறது. மாநிலங்கள் நிதிப் பற்றுக் குறையால் பாதிக்கப்பட்டாலும், அவற்றின் இனங்களை மத்திய அரசுக்கு மாற்றிக் கொடுக்கத் தயங்குகின்றன. மத்திய அரசும் அதன் வருவாயில் ஒரு பங்கை மாநிலங்கள் நிரந்தரமாக அனுபவிக்கும்படி மாற்றிக் கொடுக்கத் தயங்குகிறது. இருநிரப்பு அரசுகளில் ஒவ்வொன்றும்

அதற்கு இப்பொழுது இருக்கும் மேல் நிலையை விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை. பணம் படைத்த அரசுதான் பலமுள்ள அரசாக இருக்கும் என்பதில் ஐயமில்லை யாதலால், மத்திய அரசே வலுவுள்ள நிலையில் இருக்கிறது. மத்திய அரசானது மாநிலங்களுக்கு மானியம் வழங்கும்பொழுது சில நிபந்தனைகளை நிர்ணயிக்கிறது. மானியம் பெற விரும்பும் அரசுகள் அந்த நிபந்தனைகளை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை. நிபந்தனைகளை ஏற்கும் மாநிலங்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது என்பதை மறுக்க முடியாது. இந்த ஏற்பாடு கூட்டாட்சித் தத்துவத்துக்குப் பொருத்தமான ஏற்பாடல்ல. இந்த ஏற்பாட்டால் விளையும் குறைகளைத்தவிர்க்கவே மத்திய மாநில அரசுகளிடையே கூட்டுறவு வளர்க்கப்பட வேண்டுமென தற்காலத்தில் வற்புறுத்தப்படுகிறது. மத்திய மாநில அரசுகளிடையே கூட்டுறவு என்பது குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை; அதற்குக் காரணம் இரு அரசுகளும் தங்களுக்குரிய அதிகாரங்களை விட்டுக் கொடுக்க விரும்பாமையே யாகும்.

5. கூட்டாட்சியின் சிறப்பு

இன்று உலகில் ஒவ்வொரு நாடும் சமூகப் பொருளாதார துறைகளில வேகமாக முன்னேறி வருகின்றன என்றும், கூட்டாட்சி அரசோ இந்த வேகத்தைத் தடுக்கும் கை கட்டு கால் கட்டாக அமைகிறது என்றும் சிலர் கருதுகின்றனர். அதிகாரங்கள் மையம் நோக்கிக் குவிவது நாட்டின் வளர்ச்சியைத் துரிதப் படுத்த உதவும் என்றும், அவை பிரிந்திருப்பது அரசாங்கத்தின் விரைவான இயக்கத்தைப் பாதிக்கிறது என்றும் கூறப்படுகிறது. கூட்டாட்சியில் அரசாங்கம் ஒன்றுய் இருப்பதற்குப் பதிலாக பலவாக இருப்பது, நாட்டை ஒன்று படுத்தும் சக்திகளை வளர்ப்பதற்குப் பதிலாகபிரிவினைச் சக்திகளை வளர்க்கிறதுஎன்றும் நம்பப்படுகிறது. ஆனல் இந்தக் கருத்தை உண்மையான மதிப்பீடாக ஏற்றுக் கொள்ள முடியாது. கூட்டாட்சி வேற்றுமையை வளர்க்கிறது எனக் கூறுவதைவிட, வேற்றுமையிலும் ஒற்றுமையை வளர்க்கிறது என்றும், பன்மை மனப்பான்மையை ஊக்குவிக்கிறது எனக் கூறுவதைவிட பன்மையிலும் ஒருமையை ஊக்குவிக்கிறது எனக் கூறுவதே கூட்டாட்சியைப் பற்றி உண்மையானதும் நியாயமானதுமான மதிப்பீடாகும். ஒருமைப்பாடு இருப்பது அவசியம்தான்; ஆனல் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஒருமைப்பாடு வேண்டும் என வற்புறுத்தக்கூடாது. இந்தியாவில் எத்தனையோ

விதமான புணபாடுகள் காணப்படுகின்றன; இவை இந்நாட்டை கவர்ச்சி மிக்கதானதொரு நாடாக்குகின்றன; அவற்றைப்பற்றி இந்நாடு எப்பொழுதும் பெருமைப்படலாம்; அவற்றை என்றென்றும் காப்பது ஆள்வோரின் கடமையாகும். ஒருமைப்பாடு வேண்டிய இடங்களில் ஒருமைப்பாட்டையும், வேறுபாடு வேண்டிய இடங்களில் வேறுபாட்டையும் காப்பது கூட்டாட்சியில் மட்டுமே சாத்தியமாகும்.

மேற்கோள் நூற் பட்டியல்

கூட்டாட்சித் தத்துவம்

1. Bowie R. R. and Friedrich C. J. (Eds)—Studies in Federalism.

2. Clark J. The Rise of a New Federalism.

3. Dicey A. V.—Introduction to the study of the Law of the Constitution.

4. Freeman E. A.—A History of Federal Government in Greece and Italy.

5. Karve D.—Federations

6. Macmahon A. W. (Ed) Federalism, Mature and Emergent.

7. Mogi S.—The Problem of Federalism, a study in the History of Political Theory (volumes I & II)

8. Venkatarangaiya M.—Federalism in Government.

9. Wheare K. C.—Federal Government.

கூட்டாட்சிகள்

அமெரிக்கா

10. Beard C. A.—American Government and Politics.

11. Munro W. B.—The Government of the United States.

12. Ogg and Ray—Essentials of American Government.

கனடா

13. Dawson R. Mc. G—The Government of Canada.

14. Kennedy W. P. M—The Constitution of Canada.

15. Rowell—Siroi's Report—Books I, II and III

சுவிட்சர்லாந்து

16. Cudding G. A.—The Federal Government of Switzerland.

17. Mughes C.—The Federal Constitution of Switzerland.

18. Rappard W. E.—The Government of Switzerland.

ஆஸ்திரேலியா

19. Portus G. V. (Ed)—Studies in the Australian Constitution

20. Report of the Royal Commission on the constitution (of Australia)

21. Wynes W. A.—Legislative, Executive and Judicial powers in Australia

கலைச் சொற்கள்

A

Abdication — முடி துறப்பு, அரசு துறத்தல்
Absolute Monarchy — வரம்பில்லா முடியாட்சி
Absolute veto — முழு மறுப்பாணை
Act — சட்டம்
Adjournment — ஒத்திவைப்பு
Administration — ஆட்சி, நிருவாகம்
Administrative court — ஆட்சித்துறை நீதிமன்றம்
Administrative Law — ஆட்சித்துறைச் சட்டம்
Admiralty and Maritime — கப்பல்துறை சார்ந்த
Adult Franchise — வயது வந்தோர் வாக்குரிமை
Amnesty — அரசியல் குற்ற மன்னிப்பு
Appeal — மேல் முறையீடு
Armed Forces — போர்ப் படைகள்
Assembly — சபை
Attorney-General — தலைமை வழக்கறிஞர், சட்டத் துறைத் தலைவர்
Audit — தணிக்கை
Auditor-General — தலைமைத் தணிக்கையாளர்
Autonomy — சுயஆட்சி
Aviation — வானப் போக்குவரத்து

B

Backward class — பின்தங்கிய வகுப்பு, பிற்பட்ட வகுப்பு

Balance of Power	—	செல்வாக்குச் சமநிலை, அதிகாரச் சமநிலை
Ballot	—	இரகசிய வாக்களிப்பு
Banking and currency	—	பாங்கியலும் பணவியலும்
Basic Law	—	ஆதாரச் சட்டம், அடிப்படைச் சட்டம்
Bill	—	மசோதா
Bribery	—	கைக்கூலி கொடுத்தல்
Budget	—	வரவு செலவுத் திட்டம்
Bureau	—	நிலையம், நிறுவனம்
Bureacuracy	—	அதிகாரவர்க்கம்
Bye-election	—	இடைத் தேர்தல்

C

cabinet	—	அமைச்சரவை
canton	—	சுவிஸ் மாநிலம்
case Law	—	தீர்ப்பு வழிச்சட்டம்
casting vote	—	முடிவுசெய் வாக்கு
censure	—	கண்டனம்
census	—	குடிக் கணக்கு
centralization	—	மையம்நோக்கிய ஆட்சியமைத்தல்
chairman	—	அவைத் தலைவர்
chancellor	—	தலைவர், முதல்வர்
chief justice	—	தலைமை நீதிபதி
checks and Balances	—	சம நிலைத் தடையீடுகள்
church	—	திருச் சபை
citizenship	—	குடிமை
civil Law	—	உரிமைச் சட்டம்
civil Defence	—	படைத்துறைசாரா பாதுகாப்பு ஏற்பாடு
civil Rights	—	மக்களுரிமை
civil war	—	உள்நாட்டுப் போர்
civil service	—	பொதுத்துறை அலுவல், அரசு பணி
coalition cabinet	—	கூட்டு அமைச்சரவை
code	—	சட்டத் தொகுப்பு
collectivism	—	கூட்டாண்மைக் கோட்பாடு

colony — குடியேற்ற நாடு
committee — குழு
commonwealth of nations — குடியரசு நாடுகள்
communism — பொதுவுடைமைக் கோட்பாடு
community — சமுதாயம்
compensation — இழப்பீடு
compromise and conciliation — சமரசம்
concurrent subjects — பொது இனங்கள்
confederation — ஐக்கியப்பட்டவர்கள் கூட்டம்
congress — காங்கிரஸ், பேராயம்
conscription — கட்டாயப் படைச்சேர்ப்பு
consent — இசைவு, இணக்கம், ஒப்புதல்
conservatism — பழமையில் பற்று
constituency — தொகுதி
consituent Assembly — அரசியற் புனைசபை, அரசியல் நிர்ணயசபை
constitution — அரசியலமைப்பு
—, written — எழுதப்பெற்ற அரசியலமைப்பு
—, unwritten — எழுதப்பெறுத அரசிலமைப்பு
—, flexible — நெகிழும் அரசியலமைப்பு
—, rigid — நெகிழா அரசியலமைப்பு
constitutionalism — அரசியல் முறைமைக்குட்படுகை
constitutional Amendment — அரசியலமைப்புத் திருத்தம்
constitutional Law — அரசியலமைப்புச் சட்டம்
convention — பேரவை
conventions and usages — வழக்காறுகளும் மரபுகளும்
co-ordinate — ஒத்த தரமுடைய
council of Ministers — அமைச்சரவை
council of states (swiss) — மாநிலங்கள் சபை
covenant — ஒப்பந்தம்
criminal Law — குற்றவியல் சட்டம்
crown — அரசு
customs and Excise — சுங்கமும் ஆயமும்

D

Decentralization — அதிகாரத்தைப் பன்முகப்படுத்

Declaration — அறிக்கை
Democracy — மக்களாட்சி, ஜனநாயகம்
Despotism — எதேச்சாதிகாரம், கொடுங் கோன்மை
Devolution — தளர்ந்த ஒற்றை ஆட்சி
Dictatorship — வல்லாட்சி சர்வாதிகாரம்
Diplomacy — அரசியல தந்திரம், தூதாண்மை
Direct Democracy — நேரடி மக்களாட்சி
Direct Election — நேர் முகத் தேர்தல்
Dissolution — கலைத்தல்
Divided sovereignty — பகுபட்ட அரசுரிமை
Division of Powers — அதிகாரப் பங்கீடு
Doctrine of Implied Powers — குறிப்பதிகாரக் கொள்கை
Doctrine of seperation of Powers — அதிகாரப் பிரிவினை கொள்கை
Dominton status — டொமினியன் அந்தஸ்து
Double citizenship — இரட்டைக் குடியுரிமை

E

Economic Depression — பொருளாதார மந்தம்
Election — தேர்தல்
Electorate — வாக்காளர் தொகுதி
Electoral college — தேர்தல் குழு
Emergency — நெருக்கடி
Emigration — குடியேற்றம்
Empire — பேரரசு
Enumerated subjects — வரையறுக்கப்பட்ட இனங்கள்
Equality — சமத்துவம்
Equal Representation — சமமான பிரதிநிதித்துவம்
Executive — ஆட்சித் துறை
Executive Agreements — நிருவாக ஒப்பந்தங்கள்
Expulsion — வெளியேற்றுதல்
External Affairs — வெளிநாட்டு விவகாரங்கள்
Extradition — தப்பியோடும் குற்றவாளியை அவரரசிடம் ஒப்படைத்தல்
Extra-ordinary Powers — சிறப்பதிகாரங்கள்

F

Fait Accompli — செய்து முடிக்கப்பட்ட செயல்
Federal Court — கூட்டாட்சி நீதிமன்றம்
Federalism — கூட்டாட்சித் தத்துவம்
Federation — கூட்டாட்சி
Foreign Policy — அயல்நாட்டுக் கொள்கை
Franchise — வாக்குரிமை
Freedom — உரிமை, சுதந்திரம்
Fundamental Rights — அடிப்படை உரிமைகள்

G

Government — அரசாங்கம்
—central — மைய அரசாங்கம், மத்திய அரசாங்கம்
—state — மாநில அரசாங்கம்
—National — தேசிய அரசாங்கம்
—Regional — வட்டார அரசாங்கம்
Governor — ஆளுனர், கவர்னர்
Governor-General — தலைமை ஆளுனர்,
Grant — மானியம்

H

Hoarding — பதுக்கல்
House of Commons (U. K) — பொதுமக்கள் சபை
,, (Canada) — பொதுமக்கள் சபை
House of Lords (U K) — பிரபுக்கள் சபை
House of Representatives (U.S.A.) — பிரதிநிதிகள் சபை
,, (Australia) — பிரதிநிதிகள் சபை

I

Immigration — குடியிறக்கம்
Impeachment — குற்ற விசாரணை
Imperialism — ஏகாதிபத்தியம்
Import and Export — இறக்குமதியும் ஏற்றுமதியும்

Independence — விடுதலை, சுதந்திரம்
Indirect Election — மறைமுகத் தேர்தல்
Industrial Revolution — தொழிற் புரட்சி
Initiative — தொடக்க உரிமை
International Treaty — சர்வதேச உடன்படிக்கை
Interpretation — பொருள் விளக்கம்
Inter-state — மாநிலங்களுக்கிடையே
Intra-state — மாநிலத்துக்குள்

J

Judgement — நீதித் தீர்ப்பு
Judicial Review — நீதிப் புனராய்வு
Judiciary — நீதித் துறை
Jurisdiction — அதிகார எல்லை
Jurisprudence சட்ட இயல்
Justice — நீதிபதி
Justice — நீதி, நியாயம்

K

King — அரசன்
Kingdom — அரசன் ஆளுகைக்கு உட்பட்ட நாடு
Kingship — அரச பதவி

L

Labour Legislation — தொழிற் சட்டம்
Law — சட்டம்
League of Nations — சர்வதேச சங்கம்
Legislation — சட்டமியற்றல்
Legislature — சட்டத்துறை, சட்ட சபை
Liberalism — முற்போக்குக் கொள்கை
Liberty — சுதந்திரம்
Loan Council — கடன் குழு
Local Government — தல ஆட்சி, ஊராட்சி
Lower House — கீழ்ச் சபை
Loyalty — பற்று, விசுவாசம்

M

Majority — பெரும்பான்மை
Manifesto — அறிக்கை
Martial Law — இராணுவச் சட்டம்
Maternity and child welfare — தாய் சேய் நலன்
Migration — குடிப்பெயர்ச்சி
Militia — குடிப் படை
Ministerial Responsibility — அமைச்சரவைப் பொறுப்பு
Ministry — அமைச்சரவை
Minority — சிறுபான்மை
Minorities — சிறுபான்மை வகுப்புகள்
Monarchy — முடியாட்சி
Monopoly — ஏகபோக உரிமை
Movement — இயக்கம்
Multi Party system — பல கட்சி ஆட்சிமுறை

N

Nationality — நாட்டினம்
National council (swiss) — தேசிய அவை
Neutrality — நடுநிலைமை
New Deal — புதியப் பொருளாதார சமூகச் சீரமைப்பு ஏற்பாடு
Null and void — முற்றிலும் செல்லாது

O

ordinance — அவசரச் சட்டம்
organization — நிறுவன அமைப்பு

P

Pardon — குற்ற மன்னிப்பு
Parliament — பாராளுமன்றம்
Parliamentary Government — பாராளுமன்றம் சார்ந்த அரசாங்கம்
Party system — கட்சி முறை
Plebiscite — பொதுக்கருத்து அறிவிப்பு
Political institutions — அரசியல் நிறுவனங்கள்

Political parties — அரசியல் கட்சிகள்
Politics — அரசியல்
Polity — ஆட்சி அமைப்பு
Poor Relief — வறியோர்க்கு உதவி
Preamble — முகப்பு
President — குடியரசுத் தலைவர்
Presidential Government — தலைவர் முறை அரசாங்கம்
Prerogative — சிறப்புரிமை
Pressure Groups — செல்வாக்குக் குழுக்கள்
Prime Minister — பிரதம மந்திரி, முதலமைச்சர்
Privy council — மேல்சபை
Proclamation — பிரகடனம், பேரறிக்கை
Proportional Representation — விகிதப் பிரதிநிதித்துவம்
Public Finance — பொது நிதி
public Health — பொதுச் சுகாதாரம்
Public opinion — பொதுமக்கள் கருத்து

Q

quarantine — தொற்றுத் தடை காப்பு
quasi-federation — அரைக் கூட்டாட்சி

R

Recall — மீட்புரிமை
Recruitment — ஆள்சேர்த்தல்
Referendum — குடியொப்பம்
Regionalism — வட்டார உணர்வு
Repeal — சட்ட ரத்து
Representative — பிரதிநிதி
Representation — பிரதிநிதித்துவம்
Republic — குடியரசு
Residuary subjects — எஞ்சிய இனங்கள்
Review — மறு நோக்கு, மறு ஆய்வு
Revolution — புரட்சி
Rule of Law — சட்டத்தின் ஆட்சி, சட்ட ஆதிக்கம்

S

secession — மாநிலம் பிரிதல்
second chamber — மேல் சபை
secretariat — செயலகம்
self-Government — சுய ஆட்சி
senate (Canada) — செனட் சபை
,, (USA) —
social security — சமூகக் காப்பீடு, சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு
social service — சமூகப் பணி
sovereignty — இறைமை
speaker — சபாநாயகர், அவைத் தலைவர்
standing Army — நிலைப் படை
state — நாடு
state — அரசு
state — மாநிலம்
statute — சட்டம்
supremacy — ஆதிக்கம், மேம்பாடு
supreme court — தலைமை நீதிமன்றம்

T

Taxation — வரிவிதிப்பு
Trade Union — தொழிற் சங்கம், தொழிலாளர் சங்கம்
Tradition — மரபு
Treason — அரசத் துரோகம், மன் பகை
Treaty — உடன் படிக்கை
Two-Party systems — இரு கட்சி முறை